வரு. 76 இல. 01

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

தினகரன்

வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி

2024 ஜனவரி 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

January 07 Sunday, 2024

28 பக்கங்கள் 100/-

டிஜிட்டல் எதிர்காலம்
ஒரு மில்லியன் வேலைவாய்ப்பு
வளமான இலங்கை

டிபி சிலிக்கன் வெலி ஐ.டி ஒபிஸ் , உத்தகந்த

“ திஸ்ஸமஹாராமவில் உள்ள உத்தகந்த ரஜமஹா விகாரையில், 10/1/2024 அன்று தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒரு மில்லியன் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் அறிவிக்கப்படும்...”

டிபி எடியுகேஷன்

ධම්මික පෙරේරා

டிபி எடியுகே'ன் உடன் இணைத்து உங்கள் கனவுகளை வெற்றி கொள்ளுங்கள்

UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY

Ministry of Education

STUDENT ENROLMENT STARTED

Bachelor's Degree Programmes 2023/2024 (NVQ Level 7)

The Leading State University Open Exclusively for NVQ 5/6 Holders

Apply Now to Secure Your 100% Scholarship

Limited Number of Opportunities Available for A/L Students

Faculty of Information Technology

Network Technology
Software Technology
Multimedia & Web Technology

Faculty of Engineering Technology

Mechatronics Technology
Manufacturing Technology
Building Services Technology
Construction Technology & Resource Management

JOIN UoVT

Faculty of Education

English Language Teaching

Faculty of Industrial Technology

Hotel Management
Quantity Surveying
Food Process Technology
Industrial Management Technology
Media Arts Production Technology
Film and Television Production Technology



SCAN FOR INFORMATION & REGISTRATION

Closing Date of Applications : 12th February 2024

Please Visit for More Details and Application Procedure

https://portal.uovt.ac.lk

0112 63 07 77/ 78

admission2024@uovt.ac.lk

Vice Chancellor
University of Vocational Technology
No. 100, Kandawala, Ratmalana.

www.uovt.ac.lk

Students' Services Unit: 0112 630 701
Fax: 011-2630705

07th January 2024

University of Vocational Technology_ official

வரு. 76 இல. 01 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

100/-

தினகரன்
வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி

2024 ஜனவரி 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

January 07 Sunday, 2024

/ Thinakaran.lk / ThinakaranLK



ஒரே திட்டத்தின் கீழ் அடுத்த 05 வருடங்களில் வடமாகாணத்தில் முழுமையான அபிவிருத்தி

மேல் மாகாணத்தை போன்றே ஏனைய மாகாணங்களின் பங்களிப்புடன் நாட்டை துரித அபிவிருத்திக்கு இட்டுச் செல்வோம்

கொழும்பு, கண்டி, வடக்கு நாட்டின் மூன்று பிரதான கல்வி கேந்திர நிலையங்களாக உருவாக்கப்படும்

விவசாய கல்விக்காக நாட்டை தயார்படுத்தும் வேளை, வடமாகாண விவசாயிகள் மீது அதிக நம்பிக்கை கொண்டுள்ளோம்

ஒரே திட்டத்தின் கீழ் அடுத்த 05 வருடங்களில் வடமாகாணம் முழுமையான அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்லப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு 50 வீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை வழங்கும் மேல் மாகாணம், நாட்டு பொருளாதாரத்தின் இயந்திரமாக இயங்குகிறதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களையும் அதனுடன் இணைத்துக்கொண்டு 05 பிரதான இயந்திரங்களுடன் இந்நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வவுனியா மாவட்ட கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் (05) நடைபெற்ற வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கான விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் கல்வி, சுகாதாரம், மீள்குடியமர்த்தல், காணி, மின்சாரம், குடிநீர், சுற்றுலாத்துறை, வனவள பாதுகாப்பு, கடற்றொழில் துறைகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதோடு, சில பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஜனாதிபதி அவ்விடத்திலேயே அறிவித்தார்.

கொழும்பு, கண்டி, வடக்கு இந்நாட்டின் மூன்று பிரதான கல்வி கேந்திர 06

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

யாழ். மாவட்ட சர்வமதத் தலைவர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று சந்தித்தார். யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது சிவசேனை அமைப்பின் தலைவரும் எழுத்தாளருமான மறவன் புலவு சச்சிதானந்தன், ஜனாதிபதியுடன் உரையாடும் போது பிடிக்கப்பட்ட படம். சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன் எம்.பி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வடக்கு ரயில் பாதை புனரமைப்பு

மஹவ–அநுராதபுரம் வரையான ரயில் பாதை இன்று மூடப்படும்

அந்நிய செலாவணியை ஈட்டும் புதிய இலக்கை நோக்கி ரயில்வே திணைக்களம்

மஹவ முதல் அநுராதபுரம் வரையான வடக்கு ரயில் பாதை முழுமையான புனரமைப்புக்காக இன்று (07) முதல் மூடப்படுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன யாழ். நகரில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, யாழ். ரயில் நிலையத்துக்கு விசேட கண்காணிப்பு விஜயத்தையும் மேற்கொண்டிருந்தார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆண்டில், ரயில்வே திணைக்களம் வடக்கு ரயில்வேக்கு சிறப்பு முன்னுரிமை அளித்து, பெரும் முதலீட்டை மேற்கொண்டது. 06

ஜனாதிபதியுடன் கில்மிஷா சந்திப்பு

இந்தியாவின் 'Zee Tamil' சரி கம ப 'Little Champs 2023' போட்டியில் மகுடம் சூடிய சிறுமி கில்மிஷா உதயசீலன் தனது குடும்பத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார். 06

ஓய்வூதியம் பெறுவோருக்கு வருமான வரி விலக்களிப்பு

எனினும் Taxpayer Identification Number பெறுவது கட்டாயம்

இலங்கையில் சுமார் 07 இலட்சத்துக்கும் அதிகமான ஓய்வூதியம் பெறுவோரின் ஓய்வூதியத்துக்கு வருமான வரியோ அல்லது உழைக்கும்போது செலுத்தும் வரியோ அறவிடப்படமாட்டாதென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இதன்படி, சுமார் 7,05,000 ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் வருமான வரி மற்றும் ஏனைய வரியிலிருந்து விலக்களிக்கப்படும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் கே. ஜி. ஆர். ஜெயநாத்திடம் இது தொடர்பாக கேட்டபோது, நாட்டில் சுமார் 7,05,000 ஓய்வூதியம் பெறுவோர் இருப்பதாகவும், அவர்களில் 55 வீதம் முதல் 60 வீதமானவர்கள் ஆண்கள் என்றும் 40 வீதம் முதல் 45 வீதமானவர்கள் பெண்கள் என்றும் கூறினார். இருப்பினும், 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களையும் வருமான வரிக்கு பதிவு செய்யும் அரசின் கொள்கையின்படி, ஓய்வூதியம் பெறுவோர் தங்களது ஏனைய பரிவர்த்தனைகளுக்காக (TIN) 06

06 தாதியர் பயிற்சிக்கு மாணவர் நேர்முகப் பரீட்சை 13 – 18 வரை

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

எங்கள் கருத்து...

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

கலாசாரப் பிறழ்வுக்கு இடமளித்தல் ஆகாது!

தமிழ் சினிமாவும், தொலைக்காட்சி நாடகங்களும் இன்று உலகையே ஆக்கிரமித்திருக்கின்றன. தமிழ்பேசும் ரசிகர்கள் மாத்திரமன்றி, தமிழ்மொழி புரியாத ஏனையோரும் தமிழ் சினிமாவுக்கும், தொலைக்காட்சி நாடகங்களுக்கும் அடிமையாகிப் போயுள்ளனர்.

தொலைக்காட்சியில் நாடகங்கள் ஒளிபரப்பப்படுகின்ற நேரத்தை அடிப்படையாக வைத்தே வீடுகள் பலவற்றில் அன்றாட காரியங்களை வகுத்துக் கொள்பவர்கள் பலர் இருக்கின்றார்கள். இவர்களில் அநேகர் பெண்களாவர்.

அதுமாத்திரமன்றி, தொலைக்காட்சி நாடகங்கள் ஊடாக எமது நாட்டுக்குப் பரிச்சயமில்லாத ஏராளமான புதிய கலாசாரங்களும் நமது மக்களுக்குள் ஊடுருவி விட்டன. வன்முறைக் கலாசாரமும் இதற்குள் அடங்குகின்றது.

மறுபுறத்தில், குடும்பத்தில் உள்ளவர்களுடன் மனம்விட்டு உரையாடுவது, அவர்களது கருத்துகளுக்குச் செவிமடுப்பது, பயனுள்ள வாசிப்பு, பிள்ளைகளின் கல்வி, குடும்ப அந்நியோன்யம் போன்ற ஏராளமான நல்ல அம்சங்களை தொலைக்காட்சி என்ற மாயை சீரழித்து விட்டதென்ற வேதனை புத்திஜீவிகள் மத்தியில் இல்லாமலில்லை. 06

06 முதல் 09 மாத குழந்தைகளுக்கு

சின்னம்மை தடுப்பூசி ஏற்றல் முதற்கட்டம் நேற்று ஆரம்பம்

WHO, UNICEF ஒத்துழைப்பு

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) இலங்கையில் சின்னம்மை நோய்க்கான மேலதிக தடுப்பூசிகளை வழங்கும் செயற்பாட்டை துரிதப்படுத்த சுகாதார அமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறது. தடுப்பூசியை வழங்கும் செயற்பாட்டின் 06

பெப்ரவரி முதல் வாரத்தில் மின் கட்டணம் குறையும்

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் உரிய தரவுகள் சமர்ப்பிப்பு

மின்சாரக் கட்டணத்தை குறைப்பதற்கான உரிய தரவுகள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி பெப்ரவரி மாதம் 06

நுளம்புகள் பரவும் இடங்கள் உட்பட

டெங்கு தகவல் அறிய விசேட தொலைபேசி எண்

டெங்கு நோயை தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவது தொடர்பாக பொதுமக்கள் விபரங்களை அறிந்துகொள்ளும் நோக்குடன் தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு 06

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானின் முயற்சியில்

இலங்கையில் முதன்முறையாக ஜல்லிக்கட்டு வீர விளையாட்டு

திருகோணமலை, சம்பூரில் களைகட்டியது

தமிழ் மக்களின் பாரம்பரியத்தையும் வீரத்தையும் பறைசாற்றும் வகையில் தமிழ்நாட்டில் காலம்காலமாக நடத்திவரும் ஜல்லிக்கட்டு வீர விளையாட்டை, இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான செந்தில் தொண்டமான் கிழக்கு 06

இந்தியாவுக்கான இலங்கையின்

உயர்ஸ்தானிகராக சேனுகா கடமை பொறுப்பேற்பு

வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளரான சேனுகா திரேனி செனவிரத்ன, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை (05) தனது நற்சான்றிதழ்களை இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவிடம் கையளித்தார். இது தொடர்பாக இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு தனது (எக்ஸ்) டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். 06

விக்கல் வீராச்சாமி

"ஐயா, எல்லா விருதுகளை–யும் நீங்களே வெண்டு அள்ளிக் கொண்டு போய் விட்டீங்க, வாழ்த்துகள்....."

"வெண்டோ..? வெளியால சொல்லிப் போடாதையும் தம்பி வெக்கம், நாங்க நடுவர்களா எங்கட ஆட்களையே போட்டு கேம கொடுத்திட்டோமெல்லோ....!!!"

ஜனாதிபதியின் வடக்கு விஜயம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஜனாதிபதி

யாழ். மாவட்ட தொழில் வல்லுனர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி

'சரிகமப' வெற்றியாளர் கில்மிஷாவின் குடும்பத்தினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

"வன்னி கெசு" முந்திரி உற்பத்தி நிறுவனத்தை ஜனாதிபதி பார்வையிட்டார்

வவுனியா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குச் செல்கையில்

பூநகரி கோட்டையை பார்வையிட்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

பூநகரி நகர அபிவிருத்தித் திட்டம் ஜனாதிபதியின் மேற்பார்வைக்கு

இலங்கையில் ஜல்லிக்கட்டு வீர விளையாட்டு

வரலாற்று சாதனை படைத்த கிழக்கு ஆளுநர் செந்தில்!

தமிழ் மக்களின் பாரம்பரியத்தையும் வீரத்தையும் பறைசாற்றும் ஜல்லிக்கட்டு இலங்கை வரலாற்றில் முதல் முறையாக கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானின் முயற்சியில் இலங்கையில் நடைபெற்றது. நேற்று 6ஆம் திகதி திருகோணமலை சம்பூரில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற்றன. தமிழருடைய பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு தமிழ் நாட்டைத் தாண்டி வேறு ஒரு நாட்டில் நடைபெறுவது இதுவே முதல்முறையாகும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மலேசியா பாராளுமன்ற உறுப்பினர் டட்டுக் ஸ்ரீ முருகன் மற்றும் நடிகர் நந்தா ஆகியோர் பங்குகொள்ள சிறப்பு விருந்தினர்களாக ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நல சங்க தலைவர் ஒண்டிராஜ், செயலாளர் ராஜா ஆகியோர் கலந்துகொண்டதுடன் இந்தியா உட்பட பல நாடுகளை சேர்ந்த விசேட அழைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நல சங்கத்தின் வழிகாட்டலில் ஜல்லிக்கட்டு இடம் பெற்றது.

இதன் போது காளைகள் சீறிப்பாய்ந்ததுடன், காளைகளுக்கும் காளைகளை அடக்கிய வீரர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்பட்டன.

நாட்டின் கல்வித்துறை வளர்ச்சிக்கு 'சயீடா' அமைப்பு தொடர்ந்தும் உதவும்

சயீடா அமைப்பின் ஸ்தாபகர் சலீம் யூசுப் தெரிவிப்பு

(அஜ்வாத் பாஸி)

துபாய், சயீடா அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் சலீம் யூசுப் கடந்த புதன் கிழமை (03) இலங்கைக்கு நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டார்.

சயீடா அமைப்பின் நிதியுதவியில் இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராயவே அவர் இந்நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

சயீடா அமைப்பின் இலங்கை இணைப்பாளர் நௌஸர் பௌஸியின் அழைப்பில் வருகை தந்துள்ள அவர், கொழும்பு, பாத்திமா மகளிர் கல்லூரியில் (04) இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டதோடு அவருக்கு பாடசாலை சமூகத்தினால் மகத்தான வரவேற்புமளிக்கப்பட்டது.

இவ்வைபவத்தின்போது, சயீடாவின் நிதியுதவியில் கொழும்பு மாவட்டத்திலுள்ள சுமார் 10 பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கட்டட நிர்மாண பணிகள் தொடர்பில் 'புரொஜெக்டர் திரை' மூலம் அவருக்கு ஏற்பாட்டாளர்களினால் காண்பிக்கப்பட்டது. மேற்படி 10 பாடசாலைகளில் முஸ்லிம், தமிழ், கிறிஸ்தவம் மற்றும் சிங்கள பாடசாலைகள் உள்ளடங்குவதென்பது விசேட அம்சமாகும்.

மேற்படி நிகழ்வு தொடர்பாக கருத்து தெரிவித்த சயீடாவின் இலங்கை இணைப்பாளர் நௌஸர் பௌஸி; சயீடாவின் ஸ்தாபகர் இலங்கைக்கு வருகை தந்ததையிட்டு நாம் பெரு மகிழ்ச்சியடைகிறோம் என்றார்.

இந்நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி உட்பட 10 பாடசாலைகளினதும் அதிபர்கள், உப அதிபர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

வெளிவரவில்லை

வாராவாரம் வெளிவரும் 'படித்ததும் பகர்வதும்' மற்றும் 'துப்பாக்கி முனையில் துர்கா' ஆகிய தொடர்கள் இவ்வாரம் வெளிவரவில்லை. ஆர்

"கீத்ராத் 60"

13 ஆம் திகதி மாலை 6.30 க்கு ஜே. ஆர். மண்டபத்தில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி, சக்தி தொலைக்காட்சி ஊடக அனுசரணையில் ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் "கீத்ராத் 60 "எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு அக்கரைப்பற்று தேசமான்ய ஏ. பி. அப்துல் கையூம் தலைமையில், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக பிரபல தொழிலதிபர் செல்லமுத்து ரவீந்திரன் கலந்து சிறப்பிக்கின்றார். பிரபல கலைஞர்கள் பஸால் ஜின்னா, அயாஸ் சவாஹிர், ஹரிதாஸ் கண்ணா, எஸ். ஆனந்த ராஜா ஆகியோர் இசை வழங்குகிறார்கள். சிறப்பு பாடகராக சிங்கப்பூர் பஃரிஹுல்லாஹ் கலந்துகொள்கிறார்.

கிண்ணத்திற்கான ஓட்டம் 2027

வீழ்ந்தோம்... அடிமட்டத்திற்கே வீழ்ந்தோம்! ஆயினும் எழுவோமேயானால், உலகையே வெற்றிகொள்ளும் பலமும் உறுதியும் இந்த மண்ணின் மைந்தர்களுக்கு உண்டு என்பதை நாம் நன்கறிவோம். நாட்டின் எட்டு திசைகளிலும் இருந்து தோன்றி வரும் ஆற்றல் வாய்ந்த கிரிக்கட் வீரர்களை கண்டறிந்து, அவர்களை மென்மேலும் திறமைகளால் வலுப்படுத்தி சர்வதேச களத்திற்கு ஏற்ற வகையில் உருவாக்கிட நாம் தயாராக உள்ளோம்.

தாய் மண்ணின் பலத்துடன் 2027 கிரிக்கட் உலகக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொள்ளும்

நான்கு ஆண்டு இலட்சியம் - இன்றே தயாராகுவோம்!

வீழ்ந்த கிரிக்கட் இனை கட்டியெழுப்பும் தூரநோக்குடனான ஓர் நிகழ்ச்சித்திட்டம்

விளையாட்டுத்துறை அமைச்சு
நாட்டிற்காக களத்தில்

Sri Lanka Cricket

உகண்டாவில் மாநாடு; இலங்கை பிரதிநிதிகள் பங்கேற்பு

உகண்டா தலைநகர் கம்பாலாவில் பொதுநலவாய நாடுகளின் சபாநாயகர்களுக்கும் பாராளுமன்ற அமர்வுகளுக்கு தலைமை தாங்குவோருக்குமான மாநாடு கடந்த வியாழக்கிழமை (03) ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர். கம்பாலாவின் முனியொன்யோ தளத்தில் அமைந்துள்ள பிரமாண்டமான மண்டபத்தில் நடைபெறும் இம்மாநாட்டுடன் இணைந்ததாக செயலமர்வுகளும் நடைபெறுகின்றன.

பொதுநலவாய நாடுகளுக்கு மத்தியில் நிலவும் ஒத்துழைப்பு, புரிந்துணர்வை வலுப்படுத்துதல் ,பாராளுமன்ற செயற்பாடுகளை மேலும் வினைத்திறன் உள்ளவையாக ஆக்குதல் தொடர்பாக ஆராய்வதே இதன் நோக்கமாகும்.

பொதுநலவாய நாடுகளின் பிரஸ்தாப மாநாட்டில் பங்குபற்றும் இலங்கை பிரதிநிதிகளில் ஒருவரான ரவூப் ஹக்கீம் எம்.பி., 1994ஆம் ஆண்டிலிருந்து 6 ஆண்டுகள் குழுக்களின் பிரதித் தலைவராக பதவி வகித்து, பாராளுமன்ற அமர்வுகளுக்கு தலைமை தாங்கியிருக்கின்றார்.

தெஹிவளை ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா

ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா, கொழும்பு, தெஹிவளை அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது. ஸ்ரீஆஞ்சநேயர் ஜெயந்தி விழாவையிட்டு கடந்த 30ஆம் திகதி கணபதி ஹோமத்துடன் விழா ஆரம்பமாகியது. இவ்வாலயத்தில் அன்று முதல் 12 நாட்களுக்கு விஷேட பூஜைகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 09ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 10ஆம் திகதி ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி விழாவுக்கான சங்காபிஷேகம் நடைபெறும்.

நாளை மறுதினம் (09) காலை 6.00 மணிக்கு வசந்தமண்டப பூஜையுடன் தேர்த்திருவிழாவும் 10ஆம் திகதி அதிகாலை 5.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். 15ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு தைப்பொங்கலன்று சபரிவாசன் (தர்மசாஸ்தா) அலங்கார பூஜையும் மகரஜோதி தரிசனமும் நடைபெறும். 16ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு வைரவர் மடையுடன் விழா நிறைவுறும்.

அமரர் அருள்சாமியின் 5ஆவது ஆண்டு சிரார்த்த தினம்

(ஹட்டன் சுழற்சி நிருபர்)

மலையக மக்களின் மனங்களில் என்றும் நீங்கா இடம்பிடித்த புரட்சியாளர் அமரர் அருள்சாமியின் ஐந்தாவது ஆண்டு சிரார்த்த தினம் நேற்றாகும் (06).

மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவராகவும் அமரர் அருள்சாமி விளங்கினார். மத்திய மாகாணத்தில் 1988ஆம் ஆண்டு முதலாவது மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற இவர், அடுத்து வந்த மாகாணசபைத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றதுடன், மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சராக பணியாற்றினார்.

காத்திருப்பு பட்டியல் மூலம் பாராளுமன்ற அங்கத்தவராக அங்கம் வகித்ததுடன், இ.தொ.கா. தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானால் 2018ஆம் ஆண்டு பெருந்தோட்ட மனிதவள நிறுவனத் தலைவராகவும் அருள்சாமி நியமிக்கப்பட்டார். கலை, கலாசார ரீதியாகவும், சமூக மேம்பாட்டு விடயங்களிலும் அக்கறை கொண்டு செயற்பட்டு வந்திருக்கின்றார்.

பேராதனை பல்கலையின்

பழைய மாணவர் ஒன்றுகூடல்

பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தின் கொழும்பு பிரிவினுடைய வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இம்மாதம் 21ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மத்தேகொட சப்பர்ஸ் லீஷர் பேயில் நடைபெறவுள்ளது.

நேரடி இசை நிகழ்ச்சிகள், மதிய போசனத்துடன் பொழுது போக்கு நிகழ்வுகள் நடைபெறும். 0777741616 என்ற அலைபேசி இலக்கத்தினூடாக முன்பதிவு செய்து கொள்ளுமாறும் நிகழ்வு இடம்பெறும் நாளில் நுழைவாயிலிலும் டிக்கெட்டுகள் கிடைக்குமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

செவிப்புலன் குறைபாடுடைய சிறுவனுக்காக உதவி கோரல்

அவிசாவளையை சேர்ந்த செவிப்புலன் குறைபாடுடைய 11 வயதுச் சிறுவனுக்கு உதவுமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிறவியிலிருந்து கேட்கும் திறனற்ற ஜி.ஜோதிலக்மான் எனும் சிறுவனின் செவிப்புலன் குறைபாட்டை சீர்செய்வதற்காக கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் ஏ.டி.கே.எஸ். என்.யசவர்தனவின் வைத்திய ஆலோசனைக்கமைய கேட்கும் திறன் இயந்திரத்தை பொருத்த வேண்டியுள்ளது.

இந்த இயந்திரத்தை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் 32 இலட்சம் ரூபாவுக்கும் பெற்றுக்கொள்ள முடியும். இல்லையெனில், 45 இலட்சம் ரூபாவுக்கே பெற்றுக் கொள்ள முடியுமென்று உரிய நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சிறுவனுக்காக உதவ விரும்புவோர் 100 ஏக்கர் எலிஸ்டன் தோட்டம், மேல்பிரிவு புவக்பிடிய, அவிசாவளை எனும் முகவரியிலுள்ள சிறுவனின் பெற்றோருடன் 0726660387 எனும் தொலைபேசி இலக்கமூடாகவோ தொடர்பு கொண்டு விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

பண உதவி செய்ய விரும்புவோர் எம்.குணேந்திரன் எனும் பெயரில் அவிசாவளை இலங்கை வங்கியின் (BOC) 1209856 கணக்கு இலக்கத்தில் வைப்பிலிட முடியுமெனவும், சிறுவனின் பெற்றோர் தெரிவித்தனர்.

டெங்கு தகவல்...

கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் அனர்த்த முன்னெச்சரிக்கை மற்றும் பதிலளிப்பு பிரிவில் நேற்று (06) முதல் நிறுவப்பட்டுள்ள 0117 966 366 என்ற தொலைபேசி இலக்கத்துடன் சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்கள் உட்பட காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை டெங்கு நோய் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளவும் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை பற்றிய விபரங்களையும் தெரியப்படுத்தலாமென்றும் அவர் அறிவித்துள்ளார்.

கோழி இறைச்சி

விலை 40 ரூபாவால் குறைப்பு

கோழி இறைச்சியின் விலை 40 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயிருள்ள கோழி ஒன்றின் விலை ஒரு கிலோ 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 1,200 ரூபாவாகவும், கறிக் கோழி இறைச்சியின் விலை 1,000 ரூபாவாகவும் மற்றும் தோல் உரித்த கோழி இறைச்சியின் விலை 980 ரூபாவாகவும் நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு கிலோ மாட்டிறைச்சியின் விலை 2,000 ரூபாவாகவும், ஒரு கிலோ ஆட்டிறைச்சியின் விலை 3,200 ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

தாதியர் பயிற்சிக்கு மாணவர் நேர்முகப் பரீட்சை 13 - 18 வரை

விபரங்களுக்கு www.health.gov.lk இல்

தாதியர் பயிற்சிக்கு மாணவர்களை தேர்ந்தெடுப்பதற்கான முதற்கட்ட தகுதி தேர்வு நேர்முகப் பரீட்சை தொடர்பான அனைத்து விவரங்களும் இப்போது சுகாதார அமைச்சின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் (https://www.health.gov.lk/) வெளியிடப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகள் இணையதளத்தை பார்த்து, நேர்முகப் பரீட்சையின் திகதி, இடம் மற்றும் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சு அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் அறிவித்துள்ளது.

2019/2020 க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களில் சித்தியடைந்த 4,000 க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து மாணவர் தாதியர் பயிற்சியை தெரிவு செய்வதற்காக இம்மாதம் 13ஆம் திகதி முதல் பெப்ரவரி 18ஆம் திகதிவரை ஆரம்பநிலை தகுதி தேர்வு நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

சின்னம்மை தடுப்பூசி...

முமுதலாவது கட்டம் 09 மாவட்டங்களில் 1,600 சிகிச்சை நிலையங்கள் ஊடாக நேற்று (06) சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. 2023ஆம் ஆண்டு மே மாதம் முதல் 700க்கும் மேற்பட்ட சின்னம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளதையடுத்து, இலங்கையில் இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சின்னம்மை நோய்க்கான மேலதிக தடுப்பூசி வழங்கும் திட்டத்தை சுகாதார அமைச்சு நடைமுறைப்படுத்த, உலக சுகாதார ஸ்தாபனத்துடன் (WHO) இணைந்து ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) ஒத்துழைப்பு வழங்குகிறது.

மேலதிக தடுப்பூசி செயற்பாடு இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளதுடன், இதன் முதலாவது கட்டம் அதிக சனத்தொகையை கொண்ட அடையாளம் காணப்பட்ட ஒன்பது மாவட்டங்களில் 06 09 மாத குழந்தைகளை இலக்கு வைத்து நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல் மற்றும் கல்முனை ஆகிய பகுதிகளில் சின்னம்மை நோய் பதிவுகள் அதிகம் காணப்படுவதால் இந்தப் பகுதிகளில் முதற்கட்டம் தடுப்பூசி திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இரண்டாவது கட்டம் ஜனவரி 20ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருப்பதுடன், இது நாடு முழுவதிலுமுள்ள ஏனைய வயதுப் பிரிவினருக்கு விஸ்தரிக்கப்படும்.

மேலதிக தடுப்பூசி செயற்பாடு குறித்து அறிவிக்கும் முகமாக அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கிரிஸ்டின் ஸ்கூக் குறிப்பிடுகையில்,

"இலங்கையில் தேசிய தடுப்பூசி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியன பல ஆண்டுகளாக சுகாதார அமைச்சுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றி வருகிறது. அதிகமானவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டாலும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத குழந்தைகள் மத்தியில் குறிப்பாக பிராந்தியத்தில் தொற்று அதிகரித்திருப்பதால் சின்னமுத்து ஏற்படலாம். சின்னமுத்து நோயாளர்கள் தொடர்பில் எண்ணிக்கை குறைவானதாக இருந்தாலும் இது குறித்து நாம் கவனம் செலுத்துவது அவசியம். இதனால்தான் சுகாதார அமைச்சு இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது" என்றார்.

20202021 காலப்பகுதியில் கொவிட் 19 தொற்று காணப்பட்ட சந்தர்ப்பத்தில் தடுப்பூசிகளின் தரத்தை பராமரிப்பதற்கு குளிரூட்டல் உபகரணக் கட்டமைப்பிலுள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கும், அதன் ஊடாக பயனுள்ள நோய்த்தடுப்பு நடவடிக்கையை சந்தேகத்துக்கிடமின்றி நடைமுறைப்படுத்துவதற்கும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் ஒத்துழைப்பு வழங்கியதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் தடுப்பூசித் திட்டம் குறித்து நம்பிக்கையை வெளியிட்டுக் கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி பாலித மஹிபால குறிப்பிடுகையில், "உலகில் எந்தவொரு நாடும் 99 வீதம் நோய் தடுப்பு வழங்கலை அடையவில்லை. ஆனால், இலங்கை இதனைப் பெற்றுள்ளது என்பதை நான் எந்தவித தயக்கமும் இன்றி உறதியாகக் கூறுவேன். எனவே, இந்த மேலதிக தடுப்பூசி வழங்கல் செயற்பாடானது சின்னமுத்து நோயைக் குறைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது" என்றார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி வைத்திய கலாநிதி அலாகா சிங் குறிப்பிடுகையில், "இந்த நோயினால் இதுவரை பாதிக்கப்பட்டவர்கள் குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள பதிவுகள் குறைவாக இருப்பதுடன், இதுவரை எந்த உயிரிழப்புக்களும் பதிவாகவில்லை. இருந்தபோதும், சின்னமுத்து நோய் சிறுவர்கள் மத்தியில் ஏற்படக்கூடிய பாரிய நோயாக மாறலாம் என்பதால், இது தடுக்கப்பட வேண்டும். இதற்கமைய, சுகாதார அமைச்சானது தனது வலுவான ஆரம்ப சுகாதாரக் கட்டமைப்புக்களின் ஊடாக இரண்டு கட்டங்களில் விரைவான மேலதிக தடுப்பூசி செயற்பாட்டை முன்னெடுப்பதில் களமிறங்கியுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனம் என்ற ரீதியில் நாம் இந்த வேலைத்திட்டத்திற்கு எங்களது முழு ஆதரவை வழங்குவதுடன், இலங்கையின் ஒட்டுமொத்த மீட்சியும் முன்னோக்கிச் செல்வதையும் வலியுறுத்துகின்றோம்" என்றார்

உயர்ஸ்தானிகராக...

முன்னராக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக மிலிந்த மொரகொட பதவி வகித்திருந்தார். அவரது பதவிக்காலம் நிறைவடைந்தையடுத்து, சேனுகா திரேனி செனவிரத்னவுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுவோருக்கு...

Taxpayer Identification Number இலக்கத்தை பெற வேண்டும்.

பொதுச் செலவினங்களைப் பொறுத்தவரை, அரசாங்கத்தின் மொத்த வரி வருவாயில் 72% அரசு ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் வழங்குவதற்கும் ஒதுக்கப்படுகிறது.

2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த வரி வருமானம் 1,751 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. இதில் 1,265 பில்லியன் ரூபா அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியத்துக்காக ஒதுக்கப்பட்டது. சமுர்த்தி கொடுப்பவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 506 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது.

ஒரே திட்டத்தின் கீழ்...

நிலையங்களாக உருவாக்கப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில், "எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு 50% பங்களிப்பு மேல் மாகாணத்திலிருந்தே பெறப்படுகிறது.

மற்றைய மாகாணங்களிலிருந்து கிடைக்கும் பொருளாதார பங்களிப்பு மந்தமான நிலையிலேயே உள்ளது. நாடு என்ற வகையில் முன்னேறிச் செல்வதற்கு மற்றைய மாகாணங்களின் பொருளாதாரத்தையும் பலப்படுத்த வேண்டும். அதற்காக சில மாகாணங்கள் அறியப்பட்டுள்ளன.

வடக்கு,மேற்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு பெருமளவான பங்களிப்பை வழங்கும் மாகாணங்களாக மேம்படுத்தப்பட வேண்டும்.

தற்போது நிதி பலமும் இருப்பதால் இடைநிறுப்பட்ட வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்க முடியும்.

அதேபோல் வெளிநாட்டு நிதியில் முன்னெடுக்கப்படும் திட்டங்களை தொடர்வதற்கான உதவிகளும் கிடைக்கப்பெறவுள்ளன.

வடமாகாணத்திடமிருந்து நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

வடமாகாணத்திலிருந்து காற்று மற்றும் வெப்பநிலை காரணமாக மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தயாரிப்புக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

வடமாகாணத்தில் தயாரிக்கூடிய மின்சாரத்தின் அளவை கணக்கிட்டு பார்க்கும் போது எஞ்சிய தொகையை இந்தியாவுக்கு விற்பனை செய்து பணம் பெறக்கூடிய நிலையும் உள்ளது.

அதற்கான பேச்சுவார்தைகள் தற்போதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் முதன்...

மாகாணத்தில் நடத்தியுள்ளார். நேற்று (06) திருகோணமலையின் சம்பூரில் ஜல்லிக்கட்டு வீர விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.தமிழரின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு தமிழ்நாட்டை தாண்டி வேறொரு நாட்டில் நடைபெறுவது இதுவே முதன்முறையாகும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மலேசிய பாராளுமன்ற உறுப்பினர் டட்டுக் ஸ்ரீ முருகன் மற்றும் நடிகர் நந்தா, சிறப்பு விருந்தினர்களாக ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நல சங்க தலைவர் ஒண்டிராஜ், செயலாளர் ராஜா ஆகியோர் கலந்துகொண்டதுடன், இந்தியா உட்பட பல நாடுகளை சேர்ந்த விசேட அழைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியுடன் கில்மிஷா சந்திப்பு...

14 வயதான சிறுமி கில்மிஷா உதயசீலன் யாழ்ப்பாணத்தில் வசிப்பவர் என்பதோடு, இலங்கை சிறுமியொருவர் இந்திய தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் வெற்றி பெற்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

சிறுமி கில்மிஷா உதயசீலன் நாட்டுக்கு தேடித்தந்த புகழுக்காக அவருக்கு வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி, அவரது கல்வி செயற்பாடுகள் மற்றும் இசை வாழ்விலும் வெற்றி பெற ஆசிகளை தெரிவித்தார்.

இதன்போது கில்மிஷா ஜனாதிபதி முன்னிலையில் பாடல் ஒன்றையும் பாடினார். அத்துடன், தனது குடும்பத்தாருடன் சந்தித்து ஷெல்பியும் எடுத்துக்கொண்டார். யாழில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்ற நிகழ்வின் போதே, கில்மிஷாவை நேரில் அழைத்து பாராட்டி தனது வாழ்த்துக்களையும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பெப்ரவரி முதல் வாரத்தில்...

முதல் வாரத்தில் மின்சாரக் கட்டணம் மீளாய்வு செய்யப்படும் எனவும் மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

புதிய உற்பத்தித் திட்டத்தின்படி, 2024ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியிலிருந்து சுமார் 600 மெகாவாட் மின்சாரம் பெறப்படும் என்று இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (05) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த,

"2023ஆம் ஆண்டு மின்சாரத் துறையில் பல்வேறு வெற்றிகளைப் பெற்றுள்ளோம். தற்போதுள்ள மின்சார சட்டத்தில் உள்ள குறைபாடுகளை சரி செய்து வாடிக்கையாளர்களுக்கு உயர்தர சேவையை வழங்க புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை தொடர்பான விடயங்கள் புதிய சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

மின் உற்பத்தியில் மேலும் புதுப்பிக்கத்தக்க வலுசக்திகையை பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலம் 70% மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்து மின் உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தின்படி 2024ஆம் ஆண்டில் சுமார் 600 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைப் பெற்றுக்கொள்ள நாம் எதிர்பார்க்கிறோம்.

மஹவ – அநுராதபுரம்...

இதன் கீழ் அநுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையிலான ரயில் பாதை மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் வகையில் நவீனமயமாக்கப்பட்டு மக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இன்று முதல் ஆரம்பிக்கப்படும் மஹவ தொடக்கம் அநுராதபுரம் வரையிலான ரயில் பாதையின் நவீனமயமாக்கல் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் அடுத்த 50 ஆண்டுகளுக்கு புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என அமைச்சர் சுட்டிக்காட்டினார். வடக்கு ரயில் பாதை புனரமைப்பு பணிகள் இன்று முதல் மூடப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் பாரிய செலவில் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் நிறைவடைந்த பின்னர், பொருட்கள் மற்றும் பயணிகள் மற்றும் சுற்றுலா செலவுகளை பிரதிபலிக்கும் விலைக் கொள்கையின் கீழ் கட்டண முறையை ஏற்படுத்துவது மிகவும் முக்கியமானதென அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் சரக்கு போக்குவரத்து சேவைகளை ஆரம்பித்தல், கோதுமை மா போக்குவரத்து, சுற்றுலா வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் போன்ற அந்நிய செலாவணியை ஈட்டும் புதிய வழிகளில் கவனம் செலுத்துவதன் மூலம் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளை வழங்குவதற்கு ரயில்வே திணைக்களம் பங்களிக்க முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தினர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், யாழ். நிலைய அதிபர் எச்.எம்.கே.டபிள்யூ.பண்டார உட்பட ரயில்வே திணைக்கள அதிகாரிகள் குழுவும் இதில் கலந்துகொண்டனர்.

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

எங்கள் கருத்து...

கலாசாரப் பிறழ்வுக்கு இடமளித்தல் ஆகாது!

சினிமா மோகமும் சாதாரணமானதொன்றல்ல... இந்திய மக்களின் வாழ்க்கைக் கோலம் அந்நாட்டின் சினிமாவுடன் இரண்டறக் கலந்ததென்பது புதிய விடயமல்ல. தமிழகத்தின் முதலமைச்சர்களில் அநேகமானவர்கள் சினிமா ஊடாகவே நேரடியாகவும், மறைமுகமாகவும் மக்களின் செல்வாக்கைப் பெற்றவர்களென்பது வெளிப்படையான உண்மை. தமிழகத்தின் அயல்மாநிலங்களிலும் இவ்வாறான 'சினிமா பித்து' உள்ளதை நாம் காண்கின்றோம்.

சினிமா நடிகர்களைப் போற்றுவது, அவர்களை அரசியல் தலைவர்களாக்குவது, அவர்களுக்குக் கோயில் நிர்மாணித்து வழிபடுவது போன்ற அபத்தமான காரியங்கள் இந்தியாவில் தாராளம். இவையெல்லாம் அறியாமை அல்லது அறிவுப்பக்குவமின்மையின் வெளிப்பாடுகள் என்பதைத் தவிர வேறெதுவுமில்லை.

இந்திய 'சினிமாப் பித்து' என்பது ஒருபுறமிருக்கட்டும்!

அவ்வாறான பிற்போக்குக் கலாசாரமொன்று இலங்கைச் சமூகத்தினுள்ளும் படிப்படியாக ஊடுருவி வருவதை நாம் காண்கின்றோம். சினிமா ஹீரோக்களின் பாணியில் இளைஞர்கள் தங்களை அலங்கரித்துக் கொள்கின்றனர். தங்களின் ஹீரோவின் திரைப்படம் வெளியிடப்படுகின்ற நாளில் அவரின் உருவத்துக்கு பாலாபிஷேகம் செய்கின்றனர், பட்டாசு கொளுத்துகின்றனர், தோரணம் கட்டுகின்றனர்.

அத்துடன் திரையரங்குகளின் முன்பாக மக்கள் வெள்ளம் முண்டியடிக்கின்றது. போதாக்குறைக்கு ஹீரோக்களின் எதிரும்புதிருமான ரசிகர்கள் வடபகுதியில் அடிதடியிலும் இறங்கிய செய்தியொன்றை நாம் கேள்வியுற்றிருந்தோம்.

எமது நாட்டினதும், மக்களினதும் முன்னேற்றத்துக்கு இவ்வாறான 'சினிமா, தொலைக்காட்சி மோகம்' ஒருபோதும் உதவப் போவதில்லை. சிறப்பான கலாசாரப் பாரம்பரியத்துக்கு ஏற்பட்டுள்ள தவறான பிறழ்வு என்றே இவற்றைக் கருத முடிகின்றது. அறிவும், உழைப்பும்தான் மக்களுக்குப் பலம் என்பதை இளவயதினர் ஒருபோதுமே மறந்துவிடலாகாது.

Repeat Your ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
தேசிய விளையாட்டுத்துறை விஞ்ஞான நிறுவனம்

தேசிய விளையாட்டுத்துறை விஞ்ஞான நிறுவனமானது 1979ஆம் வருடத்திலிருந்து விளையாட்டுக் கல்வித் துறையில் பாடநெறிகளை நடத்தும் முன்னணி நிறுவனமாகும்

விளையாட்டுப் பயிற்சி தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கு (வாரஇறுதி) விண்ணப்பம் கோரல்

யாருக்காக?

2019ஆம் வருடத்தில் கல்வி அமைச்சினால் ஆட்சேர்க்கப்பட்ட பாடசாலை விளையாட்டுப் பயிற்சியாளர்களுக்காக இந்த பாடநெறி நடாத்தப்படுகின்றது.

இந்த பாடநெறியில் சித்தியடைவது விளையாட்டுப் பயிற்சியாளர்களின் வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடைவதற்கு ஏதுவாகலாம்.

பாடநெறிக்கு ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்:
கல்வி அமைச்சினால் ஆட்சேர்க்கப்பட்ட பாடசாலை விளையாட்டுப் பயிற்சியாளராகவிருத்தல் வேண்டும்.

பாடநெறிக்கு தெரிவு செய்தல்:
எழுத்துமூலம் மற்றும் செயல்முறை பரீட்சையின் ஊடாக பயிற்சிபெறுநர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

பாடநெறிக் காலம்:
இரண்டு வருடங்கள் (வார இறுதியில் சனி / ஞாயிறு 100 தினங்கள் பாடநெறி இடம்பெறும்)

பாடநெறிக் கட்டணம்: ரூபா 75,000.00 (பாடநெறிக் கட்டணத்தை மூன்று பகுதிகளாக செலுத்தலாம்)

விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை

இந்த பாடநெறிகள் தொடர்பான விண்ணப்பப் படிவங்களை வார நாட்களில் மு.ப. 9.00 இலிருந்து பி.ப. 4.00 மணி வரை தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனத்திற்கு வருகைதந்து அல்லது **NissSrilanka** முகநூல் பக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024 ஜனவரி மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், தேசிய விளையாட்டுத்துறை விஞ்ஞான நிறுவனம், 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு: விண்ணப்பப் படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் ''விளையாட்டுப் பயிற்சி தொடர்பான டிப்ளோமா பாடநெறி (வார இறுதி)'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

தேசிய விளையாட்டுத்துறை விஞ்ஞான நிறுவனம்,
100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு-07.
தொலைபேசி: 011 2684921 தொலைநகல்: 011 2667709
இணையதளம்: www.niss.gov.lk முகநூல்: NissSrilanka

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலைவாய்ப்பில் இருக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்களைப் பகிர்ந்தளித்தல் – 2023

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து கொண்டு தொழில்வாய்ப்புக் கருதி வெளிநாடு சென்ற/ சென்றுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு வழங்கும் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் www.slbfe.lk என்ற பணியக இணையதளத்தினூடாக (ONLINE) தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

தகைமைகள்

அ) 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

1) குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் தாய்/தந்தை 2017.12.18 ஆம் திகதியிலிருந்து 2022.12.18 ஆம் திகதி வரையில் இவ் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் தொழில் புரிந்திருத்தல் வேண்டும்.
2) 2022 ஆம் ஆண்டிற்கான 05 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் மாவட்ட வெட்டுப் புள்ளியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தரவேற்றப்பட வேண்டிய (upload) ஆவணங்கள்
- விண்ணப்பதாரியின் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தின் மூலப்பிரதி.
- கல்வி அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட பரீட்சை பெறுபேற்று அட்டவணையின் மூலப்பிரதி.
- புலம்பெயர் தாய்/தந்தையின் கடவுச்சீட்டின் புகைப்படமுள்ள பக்கத்தின் பிரதி.

முக்கிய குறிப்பு :-
பிள்ளையின் பரீட்சைச் சான்றிதழ்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ் என்பவற்றின் பிரதியை பிள்ளை கல்வி பயிலும் பாடசாலை அதிபர் மூலம் சான்றுப்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவதுடன் பதிவேற்றம் செய்யும் போது பெறப்படும் தொடர் இலக்கத்தை (Reference Number) ஆவணத்தின் வலது பக்க மேல் மூலையில் குறிப்பிடுமாறு தயவாய் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ) **க.பொ.த – (சா/தர) புலமைப்பரிசில்**

1) குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் தாய்/தந்தை 2017.05.23 ஆம் திகதியிலிருந்து 2022.05.23 ஆம் திகதி வரையில் இவ் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் தொழில் புரிந்திருத்தல் வேண்டும்.
2) 2021 ஆம் ஆண்டிற்கான க.பொ.த (சா/த) பரீட்சையில் குறைந்தபட்சம் கணிதம் உள்ளிட்ட 06 பாடங்களில் சித்திபெற்று அதில் 03 பாடங்களில் திறமைச் சித்தியுடன் க.பொ.த (உ/தர) கற்பவராக இருத்தல் வேண்டும்.

தரவேற்றப்பட வேண்டிய (upload) ஆவணங்கள்
- விண்ணப்பதாரியின் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தின் மூலப்பிரதி.
- கல்வி அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட க.பொ.த–(சா/த) பரீட்சை பெறுபேற்று சான்றிதழின் மூலப்பிரதி.
- விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை.
- புலம்பெயர் தாய்/தந்தையின் கடவுச்சீட்டின் புகைப்படமுள்ள பக்கத்தின் மூலப்பிரதி.

முக்கிய குறிப்பு :-
பிள்ளையின் பரீட்சைச் சான்றிதழ்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ் என்பவற்றின் பிரதியை பிள்ளை கல்வி பயிலும் பாடசாலை அதிபர் மூலம் சான்றுப்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவதுடன் பதிவேற்றம் செய்யும் போது பெறப்படும் தொடர் இலக்கத்தை (Reference Number) ஆவணத்தின் வலது பக்க மேல் மூலையில் குறிப்பிடுமாறு தயவாய் தெரிவித்துக் கொள்கிறேன்.

இ) **க.பொ.த– (உ/தர) புலமைப்பரிசில்**

1) குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் தாய்/தந்தை 2017.02.07 ஆம் திகதியிலிருந்து 2022.02.07 ஆம் திகதி வரையில் இவ் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் தொழில் புரிந்திருத்தல் வேண்டும்.
2) 2021 ஆம் ஆண்டு க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்து தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரச அல்லது தனியார் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பு அல்லது க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து தேசிய தொழிநுட்பக் கல்லூரி அல்லது பிற கல்வி நிறுவனங்களில் இரண்டு வருடங்களுக்கு மேல் டிப்ளோமா பாடநெறிகளை கற்பவராக இருத்தல் வேண்டும்.

தரவேற்றப்பட வேண்டிய (upload) ஆவணங்கள்
- விண்ணப்பதாரியின் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தின் மூலப்பிரதி.
- கல்வி அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட க.பொ.த– (உ/த) பரீட்சை பெறுபேற்று சான்றிதழின் மூலப்பிரதி.
- விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை.
- குறிப்பிட்ட கல்வி நிறுவன பதிவாளரினால் மாணவர் தகுதியை உறுதிப்படுத்திய கடிதத்தின் மூலப்பிரதி.
- புலம்பெயர் தாய்/தந்தையின் கடவுச்சீட்டின் புகைப்படமுள்ள பக்கத்தின் மூலப்பிரதி.

முக்கிய குறிப்பு :-
பிள்ளையின் பரீட்சைச் சான்றிதழ்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ் என்பவற்றின் பிரதியை பிள்ளை கல்வி பயிலும் பாடசாலை அதிபர் மூலம் சான்றுப்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவதுடன் பதிவேற்றம் செய்யும் போது பெறப்படும் தொடர் இலக்கத்தை (Reference Number) ஆவணத்தின் வலது பக்க மேல் மூலையில் குறிப்பிடுமாறு தயவாய் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக முக்கியமானவை:
★ ஒரு பிரிவுக்கு ஒரு முறை மாத்திரமே உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கலாம்.
★ விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி : 2024.02.29

தொலைபேசி இல: 0112365471
தகவல்களுக்கு : www.slbfe.lk

தலைவர்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

முகவரி :
முகாமையாளர் (நலன்புரி)
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
இல. 234, டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்த,
பத்தரமுல்லை

அரசியல் அரங்கம்

அர்ஜுன்

நாட்டின் இன்றைய பொருளாதார முன்னேற்றத்தை தொடருவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவை

சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரணவுடன் சந்திப்பு

பொருளாதார ரீதியில் நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியம் என்று சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார். நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து அவர் எம்முடன் கருத்துகளை பகிர்ந்து கொண்டார்.

கே: இன்றைய அரசாங்கத்தின் வழிகாட்டலுக்குப் பொறுப்பான ஒரு மூத்த அமைச்சர் என்ற வகையில், நமது பொருளாதாரத்தின் தற்போதைய நிலைமை குறித்து உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில்: நமது நாடு ஒரு சவாலான பொருளாதாரப் பயணத்தை மேற்கொண்டுள்ளது. பொருளாதார சீர்திருத்தத்திற்கான சர்வதேச நாணய நிதியத்தின் தலையீட்டால், நாம் ஸ்திரத்தன்மை மற்றும் மீட்சியைக் கண்டு வருகின்றோம். 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்திற்கு மூல தனம், முதலீடு இல்லாமல் இருந்தது. குறிப்பாக கடன் மறுசீரமைப்பு மற்றும் தீர்வுக்கான அதன் முயற்சிகளை அரசாங்கம் வழிநடத்தியது. நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடைவதால், 2024 இல் திட்டமிடப்பட்ட அரசாங்க மூலதன முதலீடுகளைப் பெறமுடிந்துள்ளது. விரைவில் பொருளாதாரம் சாதகமான நிலைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கே: பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், மக்களின் அதிருப்தி அதிகரித்து வருகிறது. இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில்: பொருட்களின் விலைகள் அதிகரிப்பதற்கு இரண்டு காரணிகள் பங்களிக்கின்றன. முதலாவதாக, கடந்த பண்டிகைக் காலத்தில் பொருட்களின் விலைகள் அதிகரித்தன. சில வியாபாரிகள் அதிக விலைக்கு பொருட்களை விற்பதில் ஈடுபட்டுள்ளனர். இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, நுகர்வோர் விவகார அதிகாரசபை தலையிட்டு தகுந்த நடவடிக்கைகளை எடுப்பது மிகவும் முக்கியமானது.

அதேசமயம் கேள்விக்கும் விநியோகத்துக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வுதான் பண்டங்களின் விலை உயர்வுக்கு முக்கிய காரணியாக உள்ளது. நமது உற்பத்தித் திறன்களை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. வரலாற்று ரீதியாக எமது நாட்டில் பொருட்களின் உற்பத்தியில் சவால்கள் உள்ளன. உரம் கிடைப்பதால் அரிசி உற்பத்தி அதிகரித்துள்ளதைக் குறிப்பிடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இருப்பினும் பெரிய அளவிலான வியாபாரிகள் அரிசியை பதுக்கி வைத்திருப்பதால், விலை உயரும் நிலை உள்ளது. இந்தச் சூழ்நிலையில் அரசு தீவிரமாகத் தலையிட்டு நடவடிக்கை எடுத்து வருகிறது.

குறிப்பாக, அரிசியை இறக்குமதி செய்வதன் மூலம் விலையை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, மேலும் முட்டைகளை இறக்குமதி செய்வதன் மூலம் ஏகபோகங்களுக்கு சவால் விடும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இறக்குமதியை நம்புவது நமது நாட்டிற்கு உகந்த தீர்வாகாது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. நமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான திறவுகோல் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதும், வலுவான உற்பத்திப் பொருளாதாரத்தை வளர்ப்பதுமேயாகும்.

கே: மக்களுக்கு சலுகைகளை வழங்குவதில் அரசாங்கம் அலட்சியம் காட்டுவதாகவும், பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டதாகவும், மாறாக தேர்தலுக்கான முயற்சிகள் மற்றும் அதிகாரத்தைக் காப்பாற்றுவதில் கவனம் செலுத்துவதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உங்கள் பதில் என்ன?

பதில்: மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தும் முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். அஸ்வெசும போன்ற சிறப்பு நிவாரண நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக குறைந்த வருமானம் பெறுபவர்களை இலக்காகக் கொண்டு சமுர்த்தி மானியங்களைப் பெறுபவர்களில் கணிசமான பகுதியினர் இந்த நிவாரண நடவடிக்கைகளால் பயனடைவார்கள்.

இதன் விளைவாக, அரசாங்கம் சமுர்த்தி மானியத்தை தொடர்ந்து அமுல்படுத்துவதற்கு மேலதிகமாக இந்த நிவாரண நடவடிக்கைகளின் மூலம் குறிப்பிட்ட குடும்பங்கள் இரட்டிப்பு நன்மைகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

கே: இலங்கையின் டொலர் கையிருப்பில் அதிகரிப்பு மற்றும் சுற்றுலாப் பயணிகளின் கணிசமான வருகையைப் பதிவு செய்த போதிலும், உணரப்பட்ட பொருளாதார முன்னேற்றத்தில் ஏற்றத்தாழ்வு இருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பொருளாதார விரிவாக்கத்தின் எதிர்காலப் பாதைக்கான எதிர்பார்ப்புகள் என்ன?

பதில்: நிச்சயமாக, நாட்டின் பொருளாதாரம் மீட்சிக்கான பாதையில் உள்ளது. வரவிருக்கும் ஆண்டில், அரசு நிறுவனங்களின் தீவிர ஈடுபாட்டுடன் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எதிர்பார்க்கிறோம். ஒட்டுமொத்தமாக, 2022 மற்றும் 2023 ஐ விட 2024 மிகவும் நம்பிக்கைக்குரிய ஆண்டாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கே: அண்டை நாடுகளாக நமது நாடுகளுக்கு இடையே உள்ள நெருங்கிய உறவைக் கருத்தில் கொண்டு, இந்திய உயர்ஸ்தானிகர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியாவுடனான நமது எதிர்காலத் தொடர்புகளில் என்ன எதிர்பார்ப்புகள் அல்லது நிவாரணங்களை எதிர்பார்க்கிறோம்?

பதில்: பொருளாதார நெருக்கடியின் போது எங்களுக்கு உதவுவதில் இந்தியா முக்கிய பங்கு வகித்தது. சுமார் 4 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்கள் மற்றும் மானியங்கள் வடிவில் குறிப்பிடத்தக்க ஆதரவை வழங்கியது. பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான நமது கூட்டு முயற்சிகளுக்கு இந்த உதவி ஆதரவாக உள்ளது.

நமது வலுவான மற்றும் வேகமாக வளர்ந்து வரும் அண்டை நாடான இந்தியா, கணிசமான பொருளாதார வளர்ச்சியை வெளிப்படுத்தி, உலகளாவிய வல்லரசாக உருவெடுத்து வருகிறது என்பதை ஒப்புக்கொள்வது முக்கியம். இந்தியாவுடன் நேர்மறை மற்றும் கூட்டுறவு உறவை வளர்ப்பது பரஸ்பர நன்மை மற்றும் இணக்கமான பிராந்திய இயக்கவியலுக்கு முக்கியமானது.

இந்தியாவிற்கும் நமக்கும் இடையே சாத்தியமான பலன்கள் மற்றும் பரஸ்பரம் உள்ளன. இருதரப்பிலும் உள்ள நன்மைகளை ஒப்புக் கொள்ளும் அதேவேளையில், நமது தேசிய நலன்கள் மற்றும் உலகளாவிய தொடர்புகளில் முக்கிய பங்கு வகிக்கும் வலுவான வெளிநாட்டு உறவுகளைப் பேணுவதன் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பது மிகவும் முக்கியமானது.

கே: சமூக ஊடகங்களை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டமூலம் விரைவில் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துதல் என்ற போர்வையில் பேச்சுச் சுதந்திரத்தின் மீதான மீறல் இடம்பெற மாட்டாதா?

பதில்: சமூக ஊடக பயன்பாட்டில் பொறுப்புணர்வையும் பொறுப்பையும் உறுதிசெய்வதற்காக அவற்றை ஒழுங்குபடுத்துவதில் மட்டுமே கவனம் செலுத்தப்படுகிறது. மக்களுக்கு துல்லியமான தகவல்களை வழங்குவதே எங்களின் பொறுப்பு. அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரலாற்று ரீதியாக, அனைத்து அரசாங்கங்களும் இலவச சுகாதார வசதிகள் மற்றும் கல்வியை வழங்கியுள்ளன என்பதை அங்கீகரிப்பது அவசியம். நாடு முழுவதும் உள்ள விரிவான உள்கட்டமைப்பு ஆதரவின் மூலம் சுமார் 1.8 மில்லியன் குடும்பங்கள் நிவாரணம் பெறுகின்றன. 1.5 மில்லியன் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள கொடுப்பனவுகள் போன்ற வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

சுமார் 600,000 ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் சவாலை நாங்கள் எதிர்கொள்கிறோம், இது இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு ஒரு குறிப்பிடத்தக்க பணியாகும். முன்னோக்கிப் பார்க்கும்போது, இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கான முக்கியமான படி, நமது நாட்டின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதாகும். இந்த இன்றியமையாத இலக்குக்கு பங்களிக்க அனைத்து குடிமக்களிடமிருந்தும் ஒரு கூட்டு அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது. இருந்தபோதிலும், சமூகப் பாதுகாப்பு முயற்சிகளுக்கு நாங்கள் உறுதியாகவும் முன்னுரிமை கொடுக்கவும் இருக்கிறோம்.

கே: நீங்கள் சுகாதார அமைச்சுப் பொறுப்பை அண்மையில் பெற்றுக் கொண்டிருந்தீர்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: சுகாதார அமைச்சானது சிறந்த உள்கட்டமைப்பு மற்றும் தகுதி வாய்ந்த அதிகாரிகள் குழுவைக் கொண்டுள்ளது. கடந்த கொவிட்19 தொற்றுநோய்களின் போது பல சவால்களை எதிர்கொண்ட போதிலும், அவற்றை வெற்றிகரமாக முறியடித்து தற்போது முன்னேறி வருகின்றோம். இந்த அமைச்சின் விவகாரங்களை நிர்வகிப்பது, எங்களின் அனுபவம் மற்றும் திறன்களைக் கருத்தில் கொண்டு, முன்னோக்கி நகர்வது ஒரு சிக்கலாக இருக்காது.

இறக்குமதியை நம்புவது நமது நாட்டுக்கு உகந்த தீர்வாகாது! உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதும், வலுவான உற்பத்திப் பொருளாதாரத்தை வளர்ப்பதுவுமே தீர்வு

பிரதமர் மோடியின் தமிழக வருகையினால் உறக்கத்தை இழந்த திராவிடக் கட்சியினர்!

தமிழ்மொழியும், தமிழரும் நரேந்திர மோடிக்கு நெருக்கமான சொந்தங்கள்!

பல்வேறு திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்காக தமிழ்நாடு, திருச்சிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை வருகை தந்திருந்த பிரதமர் நரேந்திர மோடியின் தமிழ் மற்றும் தமிழர் பற்றிய பேச்சு, திராவிடக் கட்சியினருக்கு உறக்கத்தை தொலைக்க வைத்துள்ளது.

'தமிழ்மொழி, தமிழர், தமிழகம் என்றாலே நாங்கள் மட்டும்தான்' என்று மொத்த குத்தகைக்கு எடுத்தது போல் திராவிடத் தலைவர்கள் எப்போதும் பேசுவது வழக்கம்.

தமிழ் பற்றியும் தமிழர் பற்றியும் அவர்கள் வேறு யாரையும் பேசவும் விட மாட்டார்கள். ஆனால் அவர்களின் எண்ணத்தை பிரதமர் நரேந்திர மோடி புண்ணாக்கிவிட்டார். திருச்சி பன்னாட்டு விமான நிலைய புதிய முனையத்தின் திறப்பு விழாவில் மோடி பேசிய பேச்சு, பாஜ.கவுக்கு புதிய பரிமாணத்தை அளித்துள்ளது.

அந்த விழாவில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, எடுத்த எடுப்பிலேயே "வணக்கம்... தமிழ்க் குடும்பங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகள்" என்று பேச்சை ஆரம்பித்தார். அதைக் கேட்டு அங்கு கூடியிருந்த கூட்டம் ஆரவாரம் செய்தது. மேடையில் அமர்ந்திருந்த முதல்வர் ஸ்டாலின் இலேசாக சிரித்துக்கொண்டார்.

ஆரம்பத்திலேயே கூட்டத்தை தன்வயப்படுத்துவார் மோடி என்று முதல்வர் எதிர்பார்க்கவில்லை. அதோடு பிரதமர் விடவில்லை. பேச்சுக்குப் பேச்சு அடிக்கடி, "என் குடும்ப உறவுகளே, சொந்தங்களே, எனது தமிழ்க் குடும்பமே" என்று குறிப்பிட்டார்.

"இது நமது பாணியல்லவா? பிரதமர் இப்படி நமது ஆயுதத்தை கையில் எடுத்து விட்டாரே! தமிழை சொல்லித்தானே வாக்குகள் வாங்குகிறோம். அதற்கும் இந்த மனிதர் ஆப்பு வைத்து விட்டாரே!" என்ற அதிர்ச்சியில் அங்கு கூடியிருந்த தி.மு.கவினர் ஸ்தம்பித்துப் போய் அமர்ந்திருந்தனர்.

"தமிழ் உங்களுக்கு மட்டுமா சொந்தம்? எங்களுக்கும் அது சொந்தம் தானே" என்று மோடி சொல்லாமல் சொல்லி விட்டார். அவ்வார்த்தை திராவிட கொள்கையாளர்களை கிள்ளாமல் கிள்ளியது. முன்னாள் முதல்வர்கள் அண்ணாதுரை, கருணாநிதியின் 'ஸ்டைல்' அங்கு பரிதாபமாக சிதறியது.

"தமிழ், தமிழர் என்று பேசினால் தமிழக மக்கள் மனதில் இடம் பிடித்து விடலாம்" என்ற எளிய தத்துவம், அங்கு இலகுவாக கடைவிரிக்கப்பட்டது.

தமிழின் மொத்த வியாபாரிகள் அங்கு சில்லறை வியாபாரிகளாக சிதறிப் போனார்கள்.

அதுமட்டுமன்றி, மாணவர்களிடம் உரையாடிய பிரதமர் நரேந்திர மோடி "எனது மாணவக் குடும்பமே" என்று தமிழில் அடிக்கடி குறிப்பிட்டு திராவிடக் கட்சிகளின் அடிவயிற்றில் நெருப்பை வைத்தார்.

பிரதமர் மோடியின் இந்த பாணிக்கு மாணவர்கள் கரகோஷம் செய்தனர். இந்தக் கரகோஷம் சில திராவிடத் தலைவர்களின் காதுகளில் ஈயத்தை காய்ச்சி ஊற்றியது.

முன்பெல்லாம் தமிழ் பற்றி பலமுறை நரேந்திர மோடி பேசியிருந்தாலும், இம்முறை அவர் தமிழர்கள், தமிழ்க் குடும்பங்கள் என பேச்சுக்குப் பேச்சு குறிப்பிட்டு தன்னையும் தமிழர்களில் ஒருவராகக் காட்டிக் கொண்டார்.

இது மோடியின் முன்னைய பேச்சிலிருந்து நிறைய மாறுபட்டது. அவரது இந்தப் புதிய அணுகுமுறை தமிழகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமா என்று திராவிடக் கட்சிகளை புலம்ப வைத்தது. இந்த தாக்கம் இருக்குமா என்பது எதிர்வரும் தேர்தலில் தெரிந்து விடும்.

"தமிழ்ப் பண்பாட்டைப் பற்றி நான் பேசாத நாளே இல்லை. தமிழ்ப் பண்பாடு உலகெங்கும் பரவ வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் உள்ளது" என்றும் பிரதமர் மோடி அங்கு பேசினார்.

திருச்சி விமானநிலையத்தில் இரண்டாவது முனையம் ரூபா 1112 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இதன் திறப்புவிழாவில் கலந்துகொண்டு புதிய முனையத்தை திறந்து வைத்த இந்தியப் பிரதமர், "இந்த ஆண்டில் எனது முதல் நிகழ்ச்சியே தமிழகத்தில் நடப்பதை பாக்கியமாகக் கருதுகிறேன். தமிழக மக்களுக்காக ரூபா 20 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டங்களை கொண்டுவந்துள்ளோம். இந்தத் திட்டங்களால் தமிழகம் மேலும் வளர்ச்சியடையும். தொடங்கப்பட்ட திட்டங்களால் ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாகும்.

கடந்த ஆண்டின் இறுதியில் தமிழக மக்கள் அதிக வலிகளை அனுபவித்தீர்கள். மாநிலத்தில் அண்மையில் பலத்தமழையால் உயிரிழப்பும், உடைமைகள் இழப்பும் அதிகம் ஏற்பட்டன. இத்தகைய சூழ்நிலையில் மத்திய அரசு தமிழகத்துக்கு உறுதுணையாக இருந்து வருகிறது" என்றார் அவர்.

அதேசமயம் நடிகரும், அரசியல்வாதியுமான விஜயகாந்த் மறைவுக்கும் அவர் இதயபூர்வமான அனுதாபம் தெரிவித்தார்.

"கடந்த சில தினங்களுக்கு முன்பு விஜயகாந்தை இழந்தோம். அவர் சினிமாவில் மட்டுமல்ல அரசியலிலும் 'கப்டன்'. திரைப்படங்களில் தன்னுடைய செயற்பாடுகள் வாயிலாக மக்களின் உள்ளங்களை கொள்ளை கொண்டிருக்கிறார் விஜயகாந்த். அரசியல்வாதியாக அவர் மக்கள் நலனை முன்னிறுத்தி வந்திருக்கிறார். அவருடைய மறைவுக்கு என்னுடைய இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் மறைவும் மிகவும் வேதனையை ஏற்படுத்தியது. சேர் சி.வி.ராமன் போன்ற அறிஞர்களின் பங்கு நாட்டின் வளர்ச்சியில் அளப்பரியது. அந்த திறமைசாலிகளை உருவாக்கியது தமிழக மண். மேலும், திருவள்ளுவர், பாரதியார் போன்ற ஞானிகள் அற்புதமான இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

(22ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...✍

தமிழ்ப் பண்பாட்டைப் பற்றி நான் பேசாத நாளே இல்லை. தமிழ்ப் பண்பாடு உலகெங்கும் பரவ வேண்டும் என்பதே என் விருப்பம்!

இந்தியா ஒரு நோக்கு
வாராந்த அலசல்

நந்தவனம் சந்திரசேகரன்

அரசியல் மாற்றத்திற்கானதா அயோத்தி கொண்டாட்டம்?

இந்தியாவில் உத்திரபிரதேச மாநிலம் அயோத்தியில் இராமருக்கு கோயில் கட்டப்பட்டு ஜனவரி 22 ஆம் திகதி குடமுழுக்கு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் சிறப்பாக நடந்துவருகிறது. 550 ஆண்டுகளுக்குப் பிறகு போராட்டத்துக்கு தீர்வு கிடைத்துள்ளாதாக இந்து அமைப்பினர் இதைக் கொண்டாடி வருகின்றனர்.

பாரதிய ஜனதா கட்சியின் தலைமையிலான ஒன்றிய அரசின் ஒத்துழைப்புடன் கட்டப்பட்ட இராமர் கோயில் இந்துக்களின் மிகப்பெரிய புனிதத்தலமாக கடைப்பிடிக்க வேண்டும், குடமுழுக்கு அன்று இந்தியாவின் 140 கோடி மக்களின் வீடுகளிலும் விளக்கேற்ற வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்திருக்கிறார். இது எவ்வாறு சாத்தியமாகும் என்று மக்களிடம் அதிர்வலையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் என்று மூன்று மதத்தினரும் வாழும் இந்தியாவில் அவரவருக்கு என்று வழிபாட்டு முறைகள் இருக்கும்போது அனைவரும் விளக்கேற்றவேண்டும் என்பது எவ்வாறு சாத்தியமாகும் என்ற வினாவும் எழுந்துள்ளது. வேற்றுமையிலும் ஒற்றுமையாக வாழும் இந்திய தேசத்தில் இப்படியான வலியுறுத்தல்கள் குழப்பத்தையும், இனவாதத்தையும் தூண்டிவிடாதா? என்ற அச்சமும் ஏற்படுகிறது

இராமர் கடவுளா? கதாபாத்திரமா? என்ற சர்ச்சைகள் இங்கே இருக்கும் போது 140 கோடி இந்தியர்களும் இராமரை கடவுளாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது நியாயமா? அயோத்தியில் இராமர் கோயிலை கட்டியுள்ளது அரசியலுக்கானதா? என்ற வினாவும் அரசியல் நோக்கர்களிடம் எழுந்துள்ளது. உலகில் இஸ்லாமிய நாடு, கிறிஸ்தவ நாடு என்று இருப்பது போல இந்தியா இந்து நாடு என்ற பார்வையில் உலகம் பார்க்க வேண்டும் என்பதற்கான முன்னெடுப்பாகவே இராமர் கோயில் சித்தரிக்கப்படுகிறதா? என்ற நோக்கத்திலும் இதைப் பார்க்கத் தோன்றுகிறது. மத அடிப்படையில் அரசியலை வழிநடத்தப் பார்ப்பது சரியானதா? என்ற வினாவும் பொதுவானவர்களிடம் எழுந்துள்ளது.

இன்னும் ஆறு மாதத்தில் ஒன்றிய அரசுக்கான தேர்தல் வர இருப்பதால் அதற்கான பரப்புரைத் திட்டமாகவும் இதை எடுத்துக்கொள்ளலாமா? என்ற வினாவும் எழுவதை மறுக்க முடியாது. இராமர் கோயிலை முன்வைத்து அயோத்தி நகரம்

மிகப்பெரிய சுற்றுலாத் தலமாக மாறிவருகிறது. அயோத்தியில் உள்ள தொடர்வண்டி நிலையம், விமான நிலையம் எல்லாம் மிகப்பெரிய பொருட்செலவில் நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இதுவரவேற்கக் கூடியது என்றாலும் அரசியல் கண்ணோட்டத்துடன் கொண்டு செல்வதின் உள்நோக்கத்தையும் புரிந்துகொள்ள வேண்டும். இராமாயன கதை என்பது அயோத்திலிருந்து இலங்கை வரையில் பரவியிருக்கிறது. இலங்கையில் சீதைக்குக் கோயில் கட்டப்பட்டுள்ளது. அது வழிபாட்டுத் தலமாகவும், சுற்றுலாத் தலமாகவும் பாவிக்கப்படுகிறது. ஆனால் இலங்கையில் பௌத்தம்தானே கடைப்பிடிக்கப்படுகிறது. இவ்வாறு இருக்கும்போது இராமரை வைத்து இந்தியாவில் இந்துத்துவத்தை தூக்கிப் பிடிப்பது அரசியல் நோக்கம் என்பதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?.

தற்போது ஆட்சியில் இருக்கும் பாரதிய ஜனதா கட்சியின் தலைமையிலான அரசு மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதற்கான தேர்தல் பரப்புரையில் இராமர் கோயிலும் ஒன்று.

இதில் புனிதம் என்று சொல்லிக்கொள்ள ஒன்றுமில்லை. இந்தியாவின் தென் பகுதியை விட வட பகுதியில் இது போன்ற இந்துத்துவ கொள்கையை வைத்து ஓட்டுவேட்டை நடத்துவது எளிது. அதற்கான முயற்சியை இந்திய பிரதமர் முதற்கொண்டு முக்கிய அமைச்சர்கள் வரையில் தங்களின் தேர்தல் வியூகங்களை வகுத்து வருகின்றனர். தற்போதைய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பத்து ஆண்டுகளுக்கு முன்பாக பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்ட போது தனது முதல் பரப்புரையை திருச்சிராப்பள்ளியில் இருந்துதான் தொடங்கினார். அதனால் வெற்றியும் பெற்றார்.

அதேபோல மூன்றாவது முறையும் வெற்றி பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, திருச்சிராப்பள்ளியில் ஜனவரி 2ஆம் திகதி பன்னாட்டு விமான நிலைய திறப்பு விழாவை தேர்தலுக்கான பரப்புரையாகவும் பயன்படுத்திக் கொண்டுள்ளார். தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சியை வலுப்படுத்த வேண்டும் என்ற முன்னெடுப்பில் அடிக்கடி மேடைகளில் பிரதமர் நரேந்திர மோடி தமிழின் பெருமையைப் பேசி வருகிறார். மேலும் தான் உலகம் முழுவதும் செல்லும் போது தமிழின், தமிழ்க் கலாசாரத்தின் பெருமையையும் பேசி வருகிறேன் என்றும் பேசியிருக்கிறார்.

தமிழ்மொழி மீதும், தமிழ்க் கலாசாரத்தின் மீதும் பற்றுவைத்துள்ள பிரதமர், தமிழ்மொழி வளர்ச்சிக்காக நிதி வழங்குவதில் கவனம் செலுத்துவது இல்லையே ஏன்? இந்தி தான் தேசிய மொழி. இந்தியாவில் இருந்தால் அவசியம் இந்தி கற்றுக் கொள்ள வேண்டும் என்று தமிழர்களிடம் விதண்டாவாதம் செய்பவர்களை எச்சரிக்கை செய்யாமலும் அலுவல்மொழிகளில் இந்திக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பதும் ஏன்? என்ற வினாவும் தமிழர்களிடம் இருப்பதை பிரதமர் உணரவில்லை என்ற ஆதங்கமும் தமிழ் நாட்டில் இருக்கிறது.

தென்மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியைப் பிடித்த விட வேண்டும் என்பதன் முயற்சியாகத்தான் காசித் தமிழ்ச் சங்க முன்னெடுப்பும் கலாசார பயணமும். தற்போது அயோத்தியில் வீதிகளில் தமிழில் பெயர்ப்பலகைகள் வைக்கவும் ஏற்பாடு செய்ய இருப்பதாக ஆலோசிக்கப்படுகிறது.

என்ன முன்னெடுப்புகள் செய்தாலும் தமிழ் நாட்டில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியமைப்பது முடியாத காரியம் ஏனென்றால் இது பெரியார் மண். இங்கே சிந்தனையாளர்களும், சிந்திக்கக் கூடியவர்களும் அதிகம் இருக்கிறார்கள், தற்போது தமிழ்நாட்டில் இராமர் கோயில் குடமுழுக்குக்கான அழைப்பிதழை கட்சி பேதமில்லாமல் வீடுகள் தோறும் வழங்கிவருகிறார்கள்.

இதை தமிழக மக்கள் ஆன்மிகப் பார்வையாக மட்டுமே பார்ப்பார்கள். அரசியலுக்கான பார்வையாக பார்க்க மாட்டார்கள் என்பதை உறுதியாக நம்பலாம். எனினும் அயோத்தி இந்தியாவின் அரசியல் களமாக மாறியுள்ளது என்பதையும் மறுக்க முடியாது.

சென்னையில் இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா

இலங்கையின் முன்னணி சிறுகதை எழுத்தாளர்களான தெளிவத்தை ஜோசப் எழுதிய 'தெளிவத்தை ஜோசப் கதைகள்', சிங்களத்தில் சாலிய குணவர்த்தன எழுதி தமிழில் மலரன்பன் மொழிபெயர்த்த தொகுப்பான 'கொலுஷா' (பிறமொழிச் சிறுகதைகள்) ஆகிய இரண்டு சிறுகதை தொகுதிகளின் வெளியீட்டு விழா தமிழ்நாடு, டொக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மண்டபத்தில் 09ஆம் திகதி (09.01.2024) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு சென்னை மாநகர நூலக ஆணைக்குழு தலைவர் கவிஞர் மனுஷ்ய புத்திரன் தலைமையில் நடைபெறும். இவ்வெளியீட்டு விழாவில் முன்னணி கவிஞர் சல்மா முன்னிலை வகிக்க, பிரதம விருந்தினராக தமிழ்நாடு அரசின் இலங்கை தமிழர் நலன் ஆலோசனைக்குழு உறுப்பினரும், மூத்த பத்திரிகையாளருமான கோவி.லெனின் மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி கலை அறிவியல் கல்லூரி முதல்வர் டாக்டர் குமார் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மலையக சமூக கலை இலக்கிய செயற்பாட்டாளர்களான மு.நித்தியானந்தன், எச்.எச்.விக்கிரமசிங்க ஆகியோரது ஏற்பாட்டில் கலைஒளி முத்தையா பிள்ளை நினைவுக்குழு சார்பில் இந்நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழகத்தின் முன்னணி எழிலினி பதிப்பக கோ.ஒளிவண்ணன், 'தெளிவத்தை ஜோசப் கதைகள்' என்ற தொகுதியையும், அட்டன் யூனிவர்சல் பிரின்டர்ஸ் அன்ட் பப்ளிஷர், எம்.மெய்யநாதன், 'கொலுஷா' என்ற தொகுதியையும் பதிப்பித்துள்ளனர்.

இவ்வெளியிட்டு விழாவிற்கான ஏற்பாடுகளை கலைஒளி முத்தையா பிள்ளை நினைவுக்குழு செயலாளர் எச்.எச்.விக்கிரமசிங்க, எம்.ஜி.ஆர் ஜானகி கலை அறிவியல் கல்லூரி அலுவலக சிரேஷ்ட அதிகாரி கவிதா ஆகியோர் ஏற்பாடு செய்துவருகின்றனர். இதன் மற்றுமொரு வெளியீட்டு விழா சென்னை புத்தகக் கண்காட்சியில் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எஸ்.மரதன் கிருஸ்ணன்

ஐரோப்பாவுக்கு மின்சார மோட்டார் சைக்கிள் தயாரிக்கும் இலங்கை திறமையாளர்கள்

மின்னல் வேகத்தில் செல்லல் என்று ஒரு கூற்று ஒன்றுண்டு. அதாவது மிக வேகமாக செல்வதையே குறிப்பிடலாம். கடந்த ஆண்டு BMICH இல் நடந்த கைத்தொழில் கண்காட்சியில், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பல மின்சார வாகனங்களை காணக்கூடிய கடுமையான பற்றாக்குறை காணப்பட்டது. நான் நீர்கொழும்பில் பிறந்தேன். ஐரோப்பாவில் மோட்டார் சைக்கிள் தயாரிப்பு நிறுவனத்தை நடத்தி வருகிறேன். தற்போது நான் இத்தாலியில் வசிக்கிறேன். எனது தாய்நாட்டுக்கு சேவை செய்ய இலங்கையில் மின்சார மோட்டார் சைக்கிள் வியாபாரத்தை ஆரம்பிக்க பெரும் தொகையை முதலீடு செய்துள்ளேன்.

இலங்கையில் Made In Sri Lanka மின்சார மோட்டார் சைக்கிள்களை உள்நாட்டு சந்தை மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்து இலங்கைக்கு பாரிய அந்நிய செலாவணியை கொண்டு வர முடியும் என தம்மிக்க கூறுகிறார். தம்மிக்காவின் கூற்றுப்படி, ஐரோப்பிய பைக் சந்தையைக் கைப்பற்றிய அவருக்கு இலங்கை சந்தை மிகவும் சிறியதாக இருப்பதைக் கண்டோம். தம்மிக்க இலங்கையில் மின்சார மோட்டார் சைக்கிள்களை மட்டும் உற்பத்தி செய்யவில்லை. அவர் வித்தியாசமான பைக்கையும் தயாரிக்கிறார். பேருந்தில் கூட பைக்கை மடித்து எடுத்துச் செல்ல முடியும் என்பது இதன் சிறப்பு. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் இந்த பைக் ஐரோப்பிய சந்தையில் முக்கியமாக இத்தாலி, ஜெர்மனி, ருமேனியா மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

"இப்போது, முழு ஐரோப்பாவும் electric vehicle கருத்தை நோக்கி நகர்கிறது. தற்போது பெட்ரோல் மாஃபியாவை உலகமே நிராகரிக்கிறது. பல ஐரோப்பிய நாடுகள் 2030ஆம் ஆண்டுக்குள் பெட்ரோல் பயன்பாட்டை படிப்படியாக நிறுத்த முடிவு செய்துள்ளன. இந்த ஸ்மார்ட் வாகனங்கள் தொடர்பில் இலங்கை மக்களுக்கு விரிவான புரிதல் வழங்கப்பட வேண்டும். இலங்கையில் முதல் 'எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிள்' தொழிற்சாலையில் பெரும் தொகையை முதலீடு செய்தேன். ஆனால், நாட்டுக்காகச் செய்த முதலீடு சரியாக மதிப்பிடப்படவில்லை என்ற பெரும் சோகம் என் இதயத்தில் உள்ளது. நாங்கள் அரசிடம் எந்த நிதி உதவியும் கேட்கவில்லை. இந்த பைக் பற்றிய கருத்தை உருவாக்க எங்களுக்கு அரசாங்கத்தின் சட்ட ஆதரவு தேவை." அரசாங்க ஆதரவு கிடைத்தால் 70% க்கும் அதிகமான மோட்டார் சைக்கிள் உதிரிபாகங்களை 5 வருடங்களுக்குள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய முடியும் என்று தம்மிகா கூறுகிறார்.

தம்மிக்க பெரேராவின் கூற்றுப்படி, தற்போது இலங்கையின் கே. டி. ரைஸ் எலக்ட்ரிக் மோட்டார் நிறுவனம் உட்பட பல நிறுவனங்கள் உள்நாட்டில் மோட்டார் சைக்கிள்களை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளன. தற்போது 25 வீதமாக உள்ள உள்ளூர் உதிரிபாக உற்பத்தி வீதத்தை அதிகரிக்க அரசாங்கம் தலையிட்டால் அல்லது உள்ளூர் உதிரிபாக உற்பத்தி வீதத்தை 70 வீதமாக உயர்த்தினால் 5 வருடங்களுக்குள் மோட்டார் சைக்கிள்களை முற்றாக உற்பத்தி செய்ய முடியும் என தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார். மின்சார இரு சக்கர வாகனங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அமைச்சரவையில் முன்வைத்த பிரேரணையின் நடைமுறைச் செயற்பாடே இது எனவும் தம்மிக்க பெரேரா மேலும் தெரிவித்தார்.

இந்த கே.டி. ரைஸ் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட லீடர் ஸ்கூட்டர் இலங்கை வாகன வரலாற்றில் தனித்துவமான வாகனமாகும் KA எனும் செஸி இலக்கத்துடன் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட முதலாவது மின்சார ஸ்கூட்டர் இது என கைத்தொழில் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளம் உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் மின்சார வாகனங்களின் முக்கிய பிரச்சினை அதன் மின்கலமாகும். ஒரு நிறுவனம் மின்சார வாகனங்கள் அல்லது எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிள்களை கொண்டு வந்து அவை விற்று தீர்ந்தவுடன் காணாமல் போவது அடிக்கடி நடக்கும் சம்பவமாகும். கடைசியில், எலக்ட்ரிக் வாகனங்கள் அல்லது மோட்டார் சைக்கிள்களை வாங்கிய வாடிக்கையாளர்கள், சார்ஜ் செய்யப்பட்ட பேட்டரிகளைத் தேடி, அதனை அறிமுகப்படுத்திய நிறுவனத்தை பல மாதங்களாகத் திட்டி, மனம் தளரும்போது, 'யாரும் எலெக்ட்ரிக் பைக்கை வாங்காதீர்கள்' என்றே ஆலோசனை வழங்கப்படும்.

"நாங்கள் இந்த மின்சார பைக்குகளை இலங்கையில் மிக உயர்ந்த தரத்தில் தயாரிக்கிறோம் மற்றும் பேட்டரி குறித்து சிறப்பு கவனம் செலுத்துகிறோம். பேட்டரி மின்சார பைக்கின் இதயம் போன்றது. நாங்கள் லித்தியம் அயன் பொஸ்பேட் பேட்டரிகளைப் பயன்படுத்துகிறோம். இது பாரம்பரிய லித்தியம் அயன் பேட்டரி போன்றதல்ல. நாம் பயன்படுத்தும் பேட்டரி நீண்ட ஆயுள் கொண்டது. அந்த பேட்டரிகளை பயன்படுத்திய பின்னர் மீளவும் சார்ஜ் செய்வதை எங்கள் முக்கிய பொறுப்பாக நாங்கள் கருதுகிறோம். "இலங்கையின் மின்சார வாகனங்களுக்கு ஜப்பான் போன்ற நாடுகள் பேட்டரிகளை வழங்காததற்குக் காரணம், இலங்கையில் முறையான மீள்சுழற்சி திட்டம் இல்லாததாலா?" என தம்மிகாவிடம் கேட்டேன்.

"அதனால் தான் எமது நிறுவனம் இந்த மின்சார மோட்டார் சைக்கிள்களில் இருந்து அகற்றப்பட்ட பேட்டரிகளை மீள்சுழற்சி செய்வதற்கான முறையான திட்டத்தை செயல்படுத்துகிறது என்று நான் சொல்கிறேன்." என தம்மிக்க கூறினார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இந்த மின்சார மோட்டர் சைக்கிள் தயாரிப்பு முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதுடன், ISO 9001/ 2015 தரச் சான்றிதழுடன் CE சான்றிதழையும் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் பிரபலமான EV concept அல்லது Electrical Vehicle கருதுகோளின் படி இலங்கையில் தயாரிக்கப்படும் மின்சார கார் தான் தனது அடுத்த இலக்கு என்று தம்மிக தனது எதிர்கால இலக்குகள் குறித்து குறிப்பிட்டார். கடந்த வருட அமைச்சரவை முடிவு அறிவிப்பில், மின்சார கார்களுக்கு இதுபோன்ற அமைச்சரவை முடிவு அறிவிக்கப்பட்டது. "தற்போதுள்ள முதலீட்டுச் சபை மறு முதலீட்டிற்கான முதலீட்டாளர்களை தக்கவைத்தல் மற்றும் விரிவாக்கத் திட்டம்" மற்றும் "முதலீட்டு சபையின் 100 தகவல் தொழில்நுட்ப அதிகாரம் பெற்ற தகவல் சேவை நிறுவனங்களின் திட்டம்" ஆகியவற்றின் கீழ் முதலீட்டை ஈர்ப்பதற்கான தகுதி அளவுகோல்களை பூர்த்தி செய்யும் திட்டங்களுக்கு, காப்புறுதியும் கப்பல் கட்டணப் பெறுமதியும் 30,000 அமெரிக்க டொலர்களுக்கு மேற்படாத ரீசார்ஜ் செய்யக்கூடிய மின்சார வாகனங்களை சுங்க வரியில்லா அடிப்படையில் கப்பல் கட்டணத்துடன் இறக்குமதி செய்வதற்கு நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சராக ஜனாதிபதி அவர்கள் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. .

"தற்போது இறக்குமதி செய்யப் போகும் இந்த மின்சார வாகனத்தை இலங்கையில் தயாரிக்க முடியாது என்கிறீர்களா?"

"அரசாங்க ஆதரவு கிடைத்தால் அந்த மின்சார வாகனத்தை இலங்கையில் தயாரிக்கலாம். எவ்வாறாயினும் , இத்தாலியில் ஐரோப்பாவிற்கான மின்சார வாகனம் தயாரிக்க நாங்கள் ஏற்கனவே திட்டமிட்டுள்ளோம். இலங்கையில் தயாரிக்கப்பட்டால், அந்த மின்சார வாகனத்தை 25,000 டொலர்களுக்கும் குறைவான விலையில் தயாரிக்க முடியும்.

முழுமையாக பொருத்தப்பட்ட மின்சார மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வதே தனக்கு முக்கிய அச்சுறுத்தலாக இருப்பதாக தம்மிக்க கூறுகிறார். அரசாங்கத்தின் தலையீட்டின் ஊடாக இந்த உள்ளூர் மோட்டார் சைக்கிள்களின் உற்பத்திக்குத் தேவையான இறக்குமதி மூலப்பொருட்களுக்கு விதிக்கப்படும் வரிகளை குறைப்பதே அரசாங்கம் செய்ய வேண்டியது என தம்மிக்க கூறுகிறார். ஒவ்வொரு மாதமும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின்சார மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு போதுமான திறன் தனது தொழிற்சாலைக்கு இருப்பதாக தம்மிக கூறுகிறார். முழுமையான மின்சார மோட்டார் சைக்கிள்களை 'இறக்குமதி' செய்ய அனுமதிப்பது ஏற்கனவே உள்நாட்டில் மோட்டார் சைக்கிள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு 'மரண அடி' கொடுப்பது போன்றது என்பது தம்மிக்காவின் கருத்து. அவரது அடுத்த திட்டம் இந்த மின்சார கார்களுக்கு பேட்டரியை தயாரிப்பதாகும். உலகிலேயே சிறந்த கிராஃபைட் இலங்கையில் உள்ளது. இது முழு உலகத்திற்கும் பேட்டரிகளை தயாரித்து இலங்கையில் உள்ள அனைத்து டொலர் பிரச்சினைகளையும் தீர்க்க முடியும்.

தற்போது உள்நாட்டு மோட்டார் சைக்கிள் பொருத்தும் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால் என்னவென்றால், 'ரெடிமேட் இறக்குமதி செய்யப்பட்ட எலக்ட்ரிக் ஸ்கூட்டர்களுக்கு' வரி மிகவும் குறைவாக உள்ளது. உள்ளூர் மோட்டார் சைக்கிள் உற்பத்தியாளர்கள் தற்போது இலங்கையில் பெரும்பாலான உதிரிபாகங்களை உற்பத்தி செய்து ஆயிரக் கணக்கானோருக்கு வேலை வாய்ப்புகளை வழங்குகின்றனர். சில அத்தியாவசிய உதிரிபாகங்களை மட்டுமே இறக்குமதி செய்கின்றனர். இந்த உதிரிப் பாகங்களுக்கு விதிக்கப்படும் இறக்குமதி வரி மிக அதிகமாக இருப்பதுதான் நெருக்கடி. ஆனால் இறக்குமதி செய்யப்பட்ட ரெடிமேட் மோட்டார் சைக்கிள்களுக்கு விதிக்கப்படும் வரி மிகக் குறைந்த அளவில் இருப்பது உள்ளூர் மோட்டார் சைக்கிள் தொழிலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இறுதி முடிவு என்னவென்றால், உள்நாட்டில் பொருத்தப்படும் மோட்டார் சைக்கிளின் விலை, தயாரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்படும் மோட்டார் சைக்கிளின் விற்பனை விலையை விட அதிகமாகும்.

ஆனால் இந்த இறக்குமதி மின்சார மோட்டார் சைக்கிள்களுக்கு இலங்கையில் தர பரிசோதனை எதுவும் செய்யப்படுவதில்லை என்பதோடு, பேட்டரிக்கும் எவ்வித உத்தரவாதமும் இல்லை. முழுமையான இறக்குமதி செய்யப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் விரைவில் மூடப்படுவதால், அவற்றை வாங்கிய வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் இந்த உள்நாட்டில் பொருத்தப்படும் மோட்டார் சைக்கிள்களுக்கு உத்தரவாத காலம் உள்ளது. அவர்களிடம் ஏராளமான உதிரி பாகங்கள் உள்ளன.

இந்த மின்சார மோட்டார் சைக்கிள்களுக்கு நிதி வசதி செய்து தருவதில் தயக்கம் ஏன் என பலரும் கேட்கின்றனர்.

இந்த மின்சார மோட்டார் சைக்கிள்களுக்கு தவணைக் கட்டணத்தை எவ்வாறு திரும்பப் பெறுவது என்று ஒரு நிதி நிறுவனம் கேட்டது. பைக்கின் முழு விலையையும் பேட்டரி மற்றும் முழு மின்சார மோட்டார் சைக்கிளுக்கும் தருகிறேன் என்றேன். இது கே.டி. ரைஸ் உள்ளூர் மின்சார மோட்டார் சைக்கிள் தொழிற்சாலை 300 க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. தனது வாழ்நாளின் பெரும்பகுதியை ஐரோப்பிய நாட்டில் வாழ்ந்ததாக தம்மிக்க கூறுகிறார்.

தமிழில் வீ.ஆர்.வயலட்
புகைப்படங்கள் – துஷ்மந்த மாயாதுன்ன

வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு 3 வேளை உணவு

அதன் பின்னரே தேசிய பிரச்சினைக்குத் தீர்வு - பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க

"ஜனாதிபதி தேர்தலே என்னுடைய இலக்கு. நான் ஆட்சிக்கு வந்தால் முதலில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு 3 வேளை உணவு. பின்னரே தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வு" என தன்னுடைய அரசியல் பிரவேசம் தொடர்பான அறிவிப்பை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். அவர் வழங்கிய செவ்வி வருமாறு,

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து அரசாங்கம் வெளியேற்றியமை தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கடமையை அதன் தலைவராக அப்போது நான் முன்னெடுத்திருந்தேன். இருந்தபோதிலும் அரசியல் ஊழல்களால் எனக்கெதிராக பிரேரணை கொண்டு வரப்பட்டு வெளியேற்றப்பட்டேன். இந்த விடயத்தில் ஆணைக்குழுவின் தலைவர் ஒருவரை பதவி நீக்குவதற்கு அரசாங்கம் உரிய படிமுறைகளை பின்பற்றியிருந்தாலும் அதற்காக முன் வைக்கப்பட்ட காரணங்களை அரசாங்கம் உறுதிப்படுத்தத் தவறியுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவராக மின் கட்டணத்தில் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டுமென இவ்வாண்டின் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தேன். ஆனால் அரசாங்கம் அதை கண்டுகொள்ளவில்லை. ஆனால் தற்போது அரசாங்கமே அடுத்த ஆண்டு மின்கட்டணத்தில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவித்திருக்கின்றது. எது எப்படியோ நாட்டு மக்களின் நிலை அறிந்து அரசாங்கம் செயற்பட வேண்டியது கட்டாயம்.

தேர்தலில் களமிறங்க வேண்டுமென்ற தங்களின் தீர்மானத்துக்கு என்ன காரணம்?

அரசியலுக்கும் எனக்கும் கிட்டத்தட்ட 20 வருடகால தொடர்பு காணப்படுகின்றது. இந்த 20 வருட அனுபவத்தில் நான் எத்தனையோ அரசியல்வாதிகளையும் அரசியல் கட்சிகளையும் பார்த்துவிட்டேன். இங்கு யாருமே ஜனநாயக அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மாறாக வாக்குகளை மாத்திரமே மக்களிடம் எதிர்பார்க்கின்றனர். இந்த நிலையில் ஒரு நடுத்தர குடும்பத்திலிருந்து வந்த கிராமத்து நபரான நான் பாமர மக்களின் தேவைகளை நன்கறிந்தவன் என்ற ரீதியில் மக்கள் எதிர்பார்க்கும் தகைமைகளுடன் அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க தீர்மானித்துள்ளேன். என்னுடைய அரசியல் வறுமைக் கோட்டுக்குள் வாழும் பாமர மக்களுக்கானதாகவே நிச்சயம் அமையும்.

ஜனாதிபதி தேர்தலில் யாருடன் இணைவதாக உத்தேசம் ?

என்னுடைய அரசியல் பிரவேசம் மக்களுக்கானது. இதில் அரசியல் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடப் போவதில்லை. என்னுடைய தேர்தல் குறித்த அறிவிப்பை அடுத்து பல அழைப்புகள் வந்த வண்ணமாகவே இருக்கின்றன. ஆனால் நான் யாருடனும் இணையப் போவதில்லை. மக்களில் ஒருவனாக மக்களுக்காக தேர்தலில் களமிறங்குவேன்.

கடந்த காலங்களில் நீங்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுடன் இணைந்து செயற்பட்டீர்கள். இந்த நிலையில் தேர்தலில் மக்கள் ஆதரவு எந்தளவு உங்களுக்கு கிடைக்குமென நினைக்கின்றீர்கள்?

தற்போது இலங்கை வாழ் மக்கள் ஒரு விடயத்தை நன்கு உணர்ந்துக்கொண்டுள்ளார்கள். சரியான ஒரு படித்த தலைமைத்துவம் அமையாவிட்டால் அவர்களின் நிலை இன்னும் மோசமாகிவிடும் என்பதில் தெளிவாக இருக்கின்றார்கள். இதனால் நாட்டு மக்கள் அரசியல் களத்தை அலசி ஆராய்ந்து நோட்டமிட்ட வண்ணமுள்ளனர். இலங்கைக்கும் அப்படியொரு தலைமைத்துவமே ஏற்புடையதாக அமையும். இதனால் விரும்பியோ விரும்பாமலோ சரியான தலைமைத்துவம் எங்கிருக்கின்றதோ அந்த தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ள நாட்டு மக்கள் தயாராகவுள்ளனர்.

எனவே மக்களில் ஒருவராக மக்களுக்காக சேவையாற்ற காத்திருக்கும் எனக்கு மக்களின் ஆதரவு நிச்சயம் கிடைக்கும்.

இலங்கையின் தேர்தல் முறைமையில் மாற்றம் வேண்டுமென்ற கருத்து தற்போது வலுப்பெற்றுள்ளது. இது தொடர்பான தங்களின் அபிப்பிராயம்?

இலங்கையின் தேர்தல் முறைமை மாற்றப்பட வேண்டுமென தற்போது சகலராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. அதை நானும் ஏற்றுக்கொள்கின்றேன். இலங்கையின் தேர்தல் முறைமை டிஜிட்டல் மயப்படுத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது. இலங்கைக்கு அடுத்தாண்டு தேர்தல் காலமாக அமையப்போகிறது. இந்த நிலையில் தேவையற்ற தேர்தல் செலவுகளால் நாடு இன்னும் பொருளாதார சுமைக்கு முகம்கொடுக்க வேண்டிய ஒரு நிலையும் ஏற்படும். அதேநேரம் ஒரு நாட்டின் தேர்தல் முறைமையை மாற்றியமைப்பது என்பது இலகுவான விடயமும் அல்ல. ஆனாலும் முன் கூட்டியே மாற்றங்களை அரசாங்கம் மேற்கொண்டிருக்க வேண்டும்.

21 பக்கம் பார்க்க...

திருச்சியில் இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ள இனிய நந்தவனம் 27ஆவது ஆண்டு விழாவுக்காக இலங்கயிலிருந்து திருச்சிக்கு வருகை தந்த இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், துபாய் தொழிலதிபர் அப்துல் வஜித் ஆகியோர் திருச்சி விமான நிலையத்தில் வரவேற்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். உடன் திருச்சி பாட்சா பிரியாணி சென்டர் உரிமையாளர் முகம்மது அபுபக்கர் சித்திக், இனிய நந்தவனம் மக்கள் தொடர்பாளர் தனபால் ஆகியோர் உள்ளனர்.

'அகண்ட தமிழ் உலகம்' சர்வதேச மாநாடு

அகண்ட தமிழ் உலகம் என்ற தொனிபொருளில் சர்வதேச மாநாடொன்று கோயம்புத்தூர் அம்ரிதா விஸ்வா வித்யாபீட பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று ஆரம்பமாகியது. இரண்டு நாட்களாக நடைபெறும் நிகழ்வின் ஆரம்ப வைபவத்தில் பா.ஜ. கவின் முன்னாள் தேசிய செயலாளரும் நாகலாந்து மாநிலத்தில் தற்போதைய ஆளுநருமான எல் கணேசன், மலேசியா அரசின் பிரதி அமைச்சர் சரஸ்வதி கந்தசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர். தமிழ் மொழி கலாசார பண்பாட்டு விழுமியங்களை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துக் செல்வது என்பதைப்பற்றி ஆராயும் முகமாக பல்வேறு அமர்வுகள் இடம்பெறுகின்றன. இந்தியவின் பல்வேறு மாநிலங்கள், இலங்கை மலேசியா சிங்கப்பூர் தென்னாப்பிரிக்கா, மத்தியகிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் பேராளர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் பிரதி அமைச்சர் சரஸ்வதி கந்தசாமியை சந்தித்திருப்பதை படத்தில் காணலாம்.

1000 பேருக்கு சவூதி மன்னரின் இலவச உம்றா வாய்ப்பு

உலகளாவிய ரீதியில் சவூதி அரேபிய அரசாங்கம் அறபு நாடுகள், இஸ்லாமிய நாடுகள் என்ற எவ்வித பாகுபாடுமின்றி பல்வேறு வகையான உட்கட்டமைப்பு வசதிகள், மனிதாபிமான உதவிகளை காலகாலமாக செய்து வருகின்றமை வெளிப்படையான விடயமாகும்.

அதன் ஓர் அங்கமே "சவூதி அரேபிய மன்னரின் ஹஜ் மற்றும் உம்றாவுக்கான விஷேட விருந்தாளிகள்" எனும் திட்டமாகும்.

இதனை சவூதி அரசாங்கம் பல வருடங்களாக முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் கீழ் இவ்வருடம் (2024ஓ) உலகலாவிய ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 பேருக்கு "இலவச உம்றா" வாய்ப்பினை வழங்குவதற்கு அந்த நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வருடமும் இலங்கை மக்களும் உள்வாங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த இத்திட்டம் வருடா வருடம் சவூதி அரேபிய இஸ்லாமிய அலுவல்கள், அழைப்பு மற்றும் வழிகாட்டல் அமைச்சின் மேற்பார்வையுடன் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது.

அஷ்ஷெய்க் ஏ.டப்ளியு.எம். அல்தாப் (மதனி)

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

மோட்டார் வாகனங்கள்

127 வாகன உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகள் விற்பனைக்கு

RD28 நிசான் 6 சிலிண்டர் ஓட்ட நிலையில் காணப்படும் என்ஜின் கியர் அமைப்புடன் விற்பனைக்கு. LKR 250,000/- பேசித் தீர்க்கலாம். 0 77 6741628. 001894

வேலைவாய்ப்பு

310 வெற்றிடங்கள் எழுது வினைஞர்/ செயலாளர்கள்

எமது புறக்கோட்டையில் அமைந்துள்ள காகிதாதிகள் விற்பனை நிலையத்திற்கு 25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட களஞ்சிய உதவியாளர் பில் கிளார்க் பெண் பில் கிளார்க் தேவை. அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம். தொடர்பு 077 1255062. 001848

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கொழும்பு தலவதுகொட வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பெண் தேவை. சம்பளம் 35,000 40,000 அனுபவத்தின் அடிப்படையில் வயது 55 இற்கு குறைந்த வர்கள். 077 775849 61, 0777 456579. 001831

323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

ஹோமாம கொடகம பழைய இருப்புப் பொருட் கடைக்கு இரும்பு வெட்டுதல் லொறிகளுக்கு இரும்பு ஹட் அடித்தலுக்கு ஆண் ஊழியர்கள் தேவை காலை, பகல், இரவு உணவு தங்குமிடம் இலவசம். சம்பளம் பேசத் தீர்க்கலாம். லசிரு ஸ்டீல், கொட க ம. 0777 542910. 001341

325 தொழில்துறை பொது

அலுமினியம் தச்சு பைப் வெல்டிங் பெயின்ட் வேலை தெரிந்தவர்கள் மற்றும் கையுதவியாட்கள் வீடமைப்பு தொகுதி வேலைக்குத் தேவை. இல. 36பீ, வைத்தியசாலை வீதி, களுபோவில. 0777 126910, 071 9126910. 001477

கொழும்பில் அமைந்துள்ள ஜுவல்லரி நிலையத்திற்கு சிற்றூழியர் தேவை. அழையுங்கள் 070 1228888. 001289

காணி/தோட்டம்

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

அவசர விற்பனைக்கு பேலியகொட 15AK கட்டு நாயக்க 69 பேர்ச் 222 போச் மஹரகம 10 போச் 7 போச் வாதுவ 10 போச் அங்கொட 6 போச் 076 3330006. 001723

ராஜகிரிய மெதவெலிக்கட வீதி, போதிராஜ மாவத்தையில் இரண்டு படுக்கையறை மற்றும் இரண்டு குளியலறை பொரிய இடவசதியுடைய ஓய்வு பிரதேசம் மற்றும் சாப்பாடு பிரதேசம் புதிதாக அமைக்கப்பட்ட பென்றி கபோட்டகளுடன் சமையலறை கொண்ட வீடு. தொடர்பு 070 2425950. 001571

621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

077728 2147 புத்தாண்டிற்கு கண்டியில் வீடு, காணி, ஹோட்டல் தோட்டம், தற்போது நடத்திச் செல்லப்படும் வியாபார நிலையங்கள் நம்பமுடியாத விலையில் சகல வசதிகளுடன் விற்பனைக்கு/ குத்தகைக்கு உண்டு. 0777438169084067

641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

03 ரூம்ஸ், ஹோல், (2) பாத்ரூம், பாக்கிங். சென் ரீட்டா ரோட், கல்கிசை. வாடகை 65/= காலி வீதி க்கு அருகாமை. 077307 3796. 001914

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 011 2 129 347
011 2 429 383 011 2 429 342/343

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI
BUDGET
ADZ
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

අමානෝ වැහිපිලි සහ සෙවිලි
දිවයිනේ අඩුම මිල ගණන් යටතේ විවිධ වර්ණයෙන් විවිධ හැඩයෙන් පුළුවන් ඔබට අවශ්‍ය ප්‍රමාණයින්. දකුණු කොරියාවෙන් ආනයනය කරන ලද
(Zinc Aluminium Sheet) රු.175/- සිට
වැහිපිලි සහ සෙවිලි
0777 394 679 | 070 663 33 88

Kandy House for Sale

Kandy Aruppola within the Kandy Municipalty limits. 2.5 Km from the City Centre
3 storied house built on 8.4 perches having floor area of 3000 sqft 5 bedrooms, 3 living areas, 3 bathrooms with hot water one servant bathroom, pantry, dining area, roof terrace with panoramic view, 2 parking space, and boundary wall with remote controlled roller gate.
Price 37 Mn (Negotiable)
Genuine buyers only / No Brokers Please
077 7 583 099

காணியொன்று விற்பனைக்கு
பேலியகொட நகரசபைக்கு முகப்பாக பராக்கிரம ஒழுங்கையில் (பிரதான வீதிக்கு 15மீ தூரம்) 43 பேர்ச் காணியொன்று விற்பனைக்குண்டு.
விசாரணைகள்: 077 20 32 739

UNAWATUNA
98 PERCH LAND FOR SALE
Discover the epitome of elegance with our exquisite 98-perch land for sale! Whether you dream of crafting a luxurious city hotel, an exclusive private villa, or a captivating apartment project. this prime real estate is your canvas for success.
CALL US FOR MORE INFORMATION ON
0776 996 403

HOUSE FOR SALE
KADAWATHA
FACING TO PADDY FIELDS WITH GREENERY ENVIRONMENT.
Total Square Feet 2828., Ground floor 1776 sq.ft., 1st floor 1052 sq.ft., Bedrooms 4, Bathrooms 2 (1 partially Completed), Tiled floor (Rocell), Finishing roof with I panel ceiling, Kitchen with a new pantry
20 perch
21 Million
0710 47 00 48

BEAUTIFUL PROPERTY FOR SALE IN HANWELLA
63 perch beautiful property, landscaped and well maintained garden, 2000 Squre feet renovated fully tiled house which includes 4 bedrooms and 2 bathrooms. 25 metres to the main road and 1km away from the Hanwella town, An hours drive from Colombo, Including fully grown coconut, Jack, Mango and Rambutan trees. Highlight of the property is the beautiful Garden, one of the very few properties in the area in this calibre. Quiet and peacefull environment.
EXPECTING 36.5 MILLION BUT NEGOTIABLE WITH SERIOUS BUYERS
PLEASE CALL ANIL ON 0773 505 774
FOR MORE INFORMATION AND VIEWING APPOINTMENT

LAND FOR SALE IN HIGHLEVEL ROAD
(WIJERAMA - CAMPUS ROAD)
A HIGHLY RESIDENTIAL AREA IN WIJERAMA, EGODAWATTA ROAD, 2ND LANE AND BETWEEN WEERA MAWATHA, FACING MUD FIELD 7.8 PERCH LAND FOE SALE.
2.3 Million per perch, only one land available. Egodawatta 2nd lane last land. All approved. Can take bank loan as well
Contact Details
0718 712 795, 0774 745 333

கம்பளை - கண்டி பிரதான வீதியில்
15.7 பேர்ச் வர்த்தகத்திற்கான கட்டிடங்கள் பிரதான வீதிக்கு முகப்பாக விற்பனைக்கு ஒரு பேர்ச் 2.6 மில்லியன்
நிபந்தனைகள் பிரயோகப்படுத்தப்படும்
078 458 14 77

ARIYARATHNE CONSTRUCTIONS
අමානෝ වහල
කාප්ප වහල
වීදුරු වහල
විනිවිද වහල
සහ කැනපි
Warehouse Construction
සියලුම ඇලුමිනියම් වැඩ
අත්තිවාරමේ සිට සියලුම නිවාස ඉදිකිරීම
Polycarbonate
අමානෝ පීලි 0.47 (mm)
නවීන විලාසිතාවේ ශීල්, ගේට්ටු, අත්වැල්
විශ්වාසයෙන්, වගකීමෙන් හා උසස් තිමාවෙන්...
0777 24 23 19 / 0711 24 23 19
ariyarathneconstruction@yahoo.com
www.ariyarathneconstruction.com
www.facebook.com/ariyarathneconstruction

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
-ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 / 011 2 429 383 / 011 2 429 347
011 2 429 342



URGENT SALE
Rs. 11 million per perch.
RESIDENTIAL, 4 BEDROOM UPSTAIR HOUSE 24.5 PERCHES. LOCATED IN CLOSE PROXIMITY TO THE ROYAL COLOMBO GOLF COURSE
Kithulwatta, walking distance to The British school of Colombo also The City school of Architecture.
0777 840 365

தீவிரமான அரசியல் பரபரப்புடன் உதயமாகியுள்ள 2014 புத்தாண்டு!

தேர்தல் குறித்த எதிர்பார்ப்புடன் 2024 ஆம் ஆண்டு பிறந்திருப்பதால் அரசியல் களம் படிப்படியாகச் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. தேர்தல் கூட்டணியை புதிதாக உருவாக்குதல், கட்சித் தாவல்கள் என்பன ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளதால், அரசியல் படிப்படியாக மேலும் சூடாகி வருகின்றது.

அரசியலமைப்புக்கு அமைய 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 18ஆம் திகதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதன் அடிப்படையில் பார்க்கும்போது, ஏறத்தாழ தேர்தலுக்கு இன்னமும் 285 நாட்களே காணப்படுகின்றன.

அதேநேரத்தில், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலொன்றுக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அரசியல் களத்தில் பேச்சுக்கள் அடிபடுகின்றபோதும், எந்தத் தேர்தலை ஜனாதிபதி முதலில் நடத்துவதற்கு விரும்புகின்றார் என்பது இன்னமும் உறுதியாகத் தெரியவில்லை.

எவ்வாறிருந்த போதிலும், அரசியல் கட்சிகள் யாவும் தம்மை ஏதாவது ஒரு தேர்தலுக்குப் பலப்படுத்தும் காரியத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

தேர்தலை இலக்கு வைத்து கூட்டணிகளை அமைக்கும் பணிகள் தீவிரமடைந்திருப்பதுடன், எதிர்கால அரசியலைக் கருத்தில்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கட்சித் தாவல்களையும் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் தாம் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

மறுபக்கத்தில், பொதுஜன பெரமுன சார்பில் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் தயாராக இருப்பதாகவும், பொருத்தமானவரைக் களமிறக்கப் போவதாகவும் அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

அதேநேரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிடுவார் எனக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற போதும், இது பற்றி அவர் இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் அவர் நிச்சயம் போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி மிகவும் உறுதியாக நிலைப்பாட்டில் உள்ளது. எனினும், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட மாட்டார்" என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச முன்னர் கூறியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரான சுனில் ஹந்துன்நெத்தியும் இதே போன்றதொரு கருத்தை முன்வைத்திருந்தார்.

எவ்வாறாயினும், நாடு மிகவும் இக்கட்டான நிலையில் இருந்த போது அதனை மீட்பதற்குத் தானாக முன்வந்து கடுமையான முயற்சியின் ஊடாக ஓரளவுக்கு உறுதியான நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டாயம் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக இருந்து வருகிறது.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலை நடத்தி, தெரிவுசெய்யப்படும் பாராளுமன்றத்தின் ஊடாக நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வரவுள்ளார் என்ற சந்தேகங்கள் முன்னர் வெளியிடப்பட்டு வந்தன. எனினும், இந்த சந்தேகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றும், அதனைத் தொடர்ந்து மிக விரைவில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த டிசம்பர் மாதம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவுசெலவுத்திட்ட விவாதத்தின் போது கூறியிருந்தார்.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்குப் பதிலாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கேபண்டார கடந்த வாரம் ஊடகங்களுக்கு உறுதியளித்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவளிக்க ஒரு பெரிய கூட்டணியை அமைக்கத் தொடங்கியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'நாங்கள் பல அரசியல் கட்சிகளுடன் பேசுகிறோம், மேலும் பலர் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேரிதலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க எங்களுடன் இணைவார்கள்' என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

அவர் இன்னும் ஒரு படி மேலே சென்று "ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச இந்தக் கட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்க்கவில்லை" என்றும் கூறியிருந்தார்.

'காலம் செல்லச் செல்ல தனக்கு ஒரு வலிமையான அணி இல்லாமல் போய்விடும் என்பதால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை' என்றார் அவர்.

இந்தக் கூற்றுக்கள் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்களை குழப்பமடையச் செய்யும் நோக்கில் முன்வைக்கப்படும் கருத்துக்களாக இருந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சி, தெரிவுசெய்யப்பட்ட ஐக்கி மக்கள் சக்தி உறுப்பினர்கள், பொதுஜனப் பெரமுன மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக ஜனாதிபதி பாரந்ததொரு கூட்டணியை உருவாக்க உத்தேசித்திருப்பதாக அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர, இந்தக் கூட்டணியின் கணிசமான அங்கமாக பொதுஜனப் பொரமுனவின் அதிருப்தியடைந்த பாராளுமன்ற உறுப்பினர்களக் கொண்ட குழு அமையவுள்ளது.

இந்தக் குழுவை ஒழுங்கமைக்கும் பணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக இருக்கும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவிடம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்தக் கூட்டணியில் தலைமைப் பொறுப்பு முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கூட்டணி அண்மையில் இராஜகிரியவில் உள்ள அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. நிமல் லான்சா, அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் பிரியங்கர ஜயரட்ன ஆகியோர் தற்போதைக்கு இதில் அங்கம் வகிக்கின்றனர்.

ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் மேலும் பலர் இதில் இணைந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா குறிப்பிடுகையில், 'பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்படும் என்பது எதிர்க்கட்சிகளின் கருத்து. ஜனாதிபதித் தேர்தலுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுப்பார் என்பதே எனது கருத்து. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தாத அக்கட்சியில் போட்டியிட்ட 71 பேர் பாராளுமன்றத்தில் உள்ளனர். அந்த 71 பேரை பிரதிநிதித்துவப்படுத்தி புதிய கூட்டணியை உருவாக்க பாராளுமன்றத்தில் புதிய பேச்சை தொடங்கினோம். பாராளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டணியையும், பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிக எண்ணிக்கையிலான கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டணியையும் எங்களால் உருவாக்க முடியும்' என்றார்.

இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள கூட்டணி பெரும்பாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும். இந்தக் கூட்டணியில் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் எதிர்காலத்தில் இணைந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கத்தில், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர். நீண்டகால சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரான காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் த சில்வா மற்றும் புத்தளம் மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறித திசேராவும் எதிர்க்கட்சியில் இணைந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி தரப்புடன் ஏராளமான எம்.பிக்கள் ஒன்றிணைந்து பாரியதொரு தேர்தல் கூட்டணியை உருவாக்கும் ஏற்பாடுகள் ஆரம்பம்!

'இன்றைய அரசியல் நிலைமையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தேர்தலில் போட்டியிடுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்க்கவில்லை' என்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கேபண்டார

வார இறுதி
அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

ஏனைய கட்சிகளில் இருப்பவர்களை தம்முடன் இணைத்துக் கொள்வதில் ஐக்கிய மக்கள் சக்தி ஆர்வம் காட்டுவதால் அக்கட்சியின் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் மத்தியில் அதிருப்தி!

இதன் தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா ஆகியோரும் தாம் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு அளிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இது பற்றிக் கருத்துத் தெரிவித்திருந்த டிலான் பெரரா, உத்தியோகபூர்வமாக தாம் அந்தக் கட்சியில் இணையவில்லையென்றும், தற்போதைய உடனடித் தேவைக்கு ஏற்ற வகையில் பாரிய கூட்டணியொன்றை அமைக்கும் நோக்கில் அக்கட்சியுடன் இணைந்து செயற்படப்போவதாகவும் கூறியிருந்தார்.

இதுபோன்று மேலும் பலர் தம்முடன் இணையவிருப்பதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஏனைய கட்சிகளில் இருப்பவர்களை இவ்வாறு இணைத்துக் கொள்வது ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் மட்டத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுவரை காலமும் கட்சிக்காகப் பாடுபட்டவர்களை விடுத்து வெளியிலிருந்து வந்த புதியவர்களுக்கு உறுப்புரிமை வழங்கி அவர்களை அமைப்பாளர்களாக நியமிப்பது குறித்து ஒரு சில உறுப்பினர்கள் கட்சித் தலைமைமீது அதிருப்தியை வெளிப்படுத்தியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது இவ்விதமிருக்க, எதிர்க்கட்சியில் முக்கியமானதொரு கட்சியாக விளக்கும் தேசிய மக்கள் சக்தி, இந்த கட்சித் தாவல்களால் இதுவரை பாதிக்கப்படவில்லை. முக்கிய நகரங்களில் தொடர்ச்சியான பேரணிகள் மற்றும் அடிமட்டத்திலான கூட்டங்களை நடத்தி தமது தேர்தல் பிரசாரங்களை முன்னெடுப்பதில் அக்கட்சி ஆர்வமாக உள்ளது என்று அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் கூறுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகியவற்றில் தாமே தனித்து நின்று போராடப் போகின்றோம் எனக் கூறிக் கொண்டு அவர்களின் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

இதுபோன்று கூட்டணி அமைப்புக்கள், கட்சித் தாவல்கள் என்பன

ஜனாதிபதித் தேர்தலா? இன்றேல் பாராளுமன்றப் பொதுத் தேர்தலா? உறுதியான முடிவு இன்னுமே வெளிவராத போதிலும், எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு அரசியல் கட்சிகள் தயாராகின்றன!

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து அதிருப்தியாளர்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதால் தேர்தலை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள முடியாமல் பலவீனமடைகிறது ஐ.ம.ச!

ஏற்ற வகையில் பாரிய கூட்டணியொன்றை அமைக்கும் நோக்கில் அக்கட்சியுடன் இணைந்து செயற்படப்போவதாகவும் கூறியிருந்தார்.

இதுபோன்று மேலும் பலர் தம்முடன் இணையவிருப்பதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஏனைய கட்சிகளில் இருப்பவர்களை இவ்வாறு இணைத்துக் கொள்வது ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் மட்டத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகவும் தகவல்கள் பரபரப்பாகியிருக்கும் சூழ்நிலையில், எந்தத் தேர்தல் முதலில் நடத்தப்படும் என்பதே தற்போது காணப்படும் பாரியதொரு கேள்வியாக உள்ளது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு விதமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எந்தவொரு தேர்தலை எதிர்கொள்வதற்காகவும் தம்மைத் தயார்ப்படுத்துவதில் அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருவதையே காண முடிகின்றது.

எவ்வாறாயினும் 2024 புத்தாண்டானது தீவிரமான அரசியல் பரபரப்புடனேயே உதயமாகியிருப்பதைக் காண முடிகின்றது.

தர்காநகர், அளுத்கம்வீதி முஸ்லிம் பெண்கள் கல்லூரியின் (தேசிய பாடசாலை) முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவிகளது Back to School ஒன்றுகூடல் நிகழ்வு கலை, கலாசாரம் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளுடன் கல்லூரி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. தற்போதைய அதிபர் பி.எம். எம். ஜாபிர், பிரதி அதிபர் ஷெருஸா ஆகியோரின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வைபவத்தில் நிகழ்வுக்கான அதிபராக முன்னாள் அதிபர் எம்.ரி.எம். ஹம்ஸா தலைமை தாங்கினார். 1400 பழைய மாணவிகள் பங்குபற்றிய இந்நிகழ்வில் இக்கல்லூரியில் கற்று 1987 இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதிய முன்னாள் மாணவிகள் எடுத்துக்கொண்ட படம் இது.

மாத்தறையில் மர்ஹூம் கலாநிதி எம்.ஏ.எம் சுக்ரி நினைவேந்தல்

ஆய்வு நூலும் வெளியீடு

(வெலிகம தினகரன் நிருபர்)

மர்ஹூம் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரிக்கான நினைவேந்தல் நிகழ்வும் "கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அறிவுத்துறைப் பங்களிப்பும் ஆய்வுப் பணிகளும் " நூல் அறிமுகமும் எதிர்வரும் 15ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1:30 மணிக்கு மாத்தறை நூபே சந்தியில் அமைந்துள்ள சனச கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தென் பிராந்திய ராபிதுன் நளீமிய்யீன் அமைப்பின் தலைவர் அஷ்ஷெய்க் எம். ஏ.எம். மஷாஹிர் (நளீமி) தலைமையில் நடைபெறவுள்ள இந்த வைபவத்தில் பிரதம அதிதியாக பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீட பரிபாலனசபைத் தலைவர் எம்.என்.எம். யாகூத் நளீம் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ அதிதியாக மர்ஹூம் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரியின் பாரியார் எப். புஷ்ரா சலாஹுத்தீன் கலந்து கொள்ளவுள்ளார்.

விசேட அதிதிகளாக பேருவளை, ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூராமித், மிஷ்காத் ஆய்வு நிலையத்தின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். மன்சூர், ராபிதுன் நளீமிய்யீன் அமைப்பின் தேசிய தலைவர் அஷ்ஷெய்க் லாபிர் மதனி, மாத்தறை மீரா ஜும்ஆப் பள்ளிவாசலின் பேஷ் இமாம் அல் ஹாபிழ் அஸ்ஸெய்யித் பஸ்மில் மௌலானா (முர்ஸி) ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

நாடக அரங்கியல் உயர் டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பம் கோரல்

புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் டவர் மண்டப அரங்க மன்றத்தின் டவர் நாடக பாடசாலை ஊடாக நடத்தப்படும் நாடக அரங்கியல் இரு வருட முழு நேர உயர் டிப்ளோமா பாடநெறிக்கான 2024/ 2025 கல்வி ஆண்டுக்கான மாணவர்களை உள்வாங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பாட நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் பின்வரும் தகைமைகளை தம் மகத்தே கொண்டிருக்கவேண்டும்.

க.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு தமிழ், கணிதம், ஆங்கிலம், அழகியல் ஆகிய பாடங்கள் அடங்கலாக 06 பாடங்களில் கட்டாயம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மேலும் க.பொ.த (உ.த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஒரே தடவையில் (03) பாடங்களிலும் ஏதாவது ஒரு பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

திருமணமாகாத 19_25 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்கும் அனைவரும் டவர் மண்டப அரங்க மன்றம் நடத்தும் நாடகமும் அரங்கியலும் சார் பரீட்சையில் பங்கு பற்றி சித்தியடைந்து அதன் பின் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகத்தேர்வின் மூலம் புள்ளிகளின் அடிப்படையில் சிறந்த தகுதியான 60 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

நாடக அரங்கியல் உயர் டிப்ளோமா (2வருடம்) க்கான முழுத்தொகை 130000.00 ஆகும். (இத்தொகை சில சந்தர்ப்பத்தில் 15.4 சதவீதத்தினால் உயர்த்தப்படும்). இத்தொகையினை 4 தவணைகளில் செலுத்தலாம். விண்ணப்பப்படிவம் சம்பந்தமான தகவல்களை டவர் மண்டப அரங்க மன்ற இணையதளமான www.towerhall.lkஇல் பார்வையிடலாம். விண்ணப்பக் கட்டணமாக 2000.00 விண்ணப்பத்தாரியின் ஊடாக ஹயிற்பார்க் www.towerhall.lk

இலங்கை வங்கிக் கிளைக் கணக்கு இலக்கம் 2327541, டவர் மண்டப அரங்க மன்றம் என்னும் பெயருக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பப் படிவங்களும் 15.02.2024 ஆம் திகதிக்கு முன்பாக பதிவுத் தபாலில் பணிப்பாளர் நாயகம், டவர் மண்டப அரங்க மன்றம், சவ்சிறிபாய, 123, விஜேராம மாவத்தை கொழும்பு 07 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "நாடக அரங்கியல் உயர் டிப்ளோமா பாடநெறி 2024 தமிழ்மொழி" எனக் குறிப்பிடல் வேண்டும். மேலதிக தொடர்புகளுக்கு பிரதிப்பணிப்பாளர் தமிழ் நாடக அபிவிருத்திப் பிரிவு கலாநிதி சண்முகசர்மா ஜெயப்பிரகாஷுடன் தொடர்பு கொள்ளவும் 0112682134, 0777911425

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விஞ்ஞானமானி (BSc) பாடநெறி

உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பொது / சிறப்பு பட்டம்

கல்வியாண்டு 2024/2025

அனுமதித் தகைமைகள்

க.பொ.த உயர்தர விஞ்ஞானத்தில் மூன்று பாடங்களில் சித்தி அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான அடிப்படை பாடநெறியில் சான்றிதழ் / விஞ்ஞானத்தில் அடிப்படை பாடநெறியில் பொருத்தமான பாடங்களைப் பூர்த்தி செய்திருத்தல்.

விஞ்ஞானப் பட்டமானி பாடநெறியைக் கற்பதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தை ஏன் தெரிவு செய்ய வேண்டும்

- இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட ஓர் பட்டம்
- தரம் வாய்ந்த கல்வித் திட்டம்
- தொழில் புரியும் போது கற்றலுக்கான நெகிழ்வுத் தன்மை
- பாடப்பரப்புக்களின் தேர்வு : தாவரவியல் / இரசாயனவியல் / கணனி விஞ்ஞானம் / தூயகணிதம் / பிரயோக கணிதம் / பௌதீகவியல் / விலங்கியல்
- கல்விக் கொடுப்பனவு வசதி, வங்கிக்கடன் மற்றும் புலமைப் பரிசில்கள் ஆகியவற்றினூடான நிதி உதவிகள்
- வெவ்வேறு கற்கைநெறிகளில் விசேட பாடநெறியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள்
- தகைமை வாய்ந்த விரிவுரையாளர்களினால் அச்சிடப்பட்ட நூல்கள் மற்றும் e-கற்றல் வளங்களுடனான கற்றலுக்கான மிகச்சிறந்த துணை ஆதாரம்
- மென்திறன்களை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்கள்
- முன்னர் பெறப்பட்ட தகைமைகளுக்கான விலக்களிப்புக்கள்
- நாடு பூராகவும் பிராந்திய நிலையங்களைக் கொண்ட ஓர் பரந்த வலைப்பின்னலின் ஊடான செயற்பாடு
- தவணை முறையில் செலுத்தக்கூடிய நியாயமான கட்டணம்
- BSc பட்டத்தை, UK இன் Essex பல்கலைக்கழகத்தின் வாயிலாக Top up செய்யப்பட்ட பட்டமாக பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை.

Open Days
Day 1 : 12th January 2024
Day 2 : 17th February 2024

Session	Dates/ Date	Medium	SessionPlan	Zoom Link
Session 01 CRC, KRC, MRC, JRC,ARC & BRC	12th January 2024 (Morning) 09.30 a.m -12.30 p.m	English/ Sinhala/ Tamil	Onsite	-
Session 02 (Repeat)	17th February 2024 (Morning) 09.30 a.m -12.30 p.m (Afternoon) 1.00 p.m - 4.00 p.m	English/ Sinhala	Online (Group 1)	Meeting ID: 960 8981 5066 Passcode: mXQz$C5Ut
			Online (Group 2)	Meeting ID: 939 0794 7063 Passcode: 3xbLd*1b
		English/ Tamil	Online (Group 3)	Meeting ID: 969 1224 9924 Passcode: ymt7!6YR
			Online (Group 4)	Meeting ID: 964 2761 6801 Passcode: 1KEzU?bb

Orientation
Day 1 : 07th March 2024
Day 2 : 16th March 2024

Session 01 All Regional Centers	07th March 2024	English	Onsite	-
Session 02 (Repeat) All Regional Centers	16th March 2024	English	Onsite	-

உதவிப் பதிவாளர் / இயற்கை விஞ்ஞானங்கள் பீடம்: 0112881226 / 0112822738 / 0706993134

Log on to **https://ou.ac.lk/nsc/**

விஞ்ஞானத்தில் தனித்த பாடக்கூறுகளிற்கு (Stand Alone Courses) மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல்

B.Sc பாடநெறிக்குப் பதிவு செய்யாமல் குறித்த பாடங்களைக் கற்றுக்கொள்ள விரும்புவோரும் அப்பாடங்களை கற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பான விபரங்களிற்கு கலாநிதி N. கார்த்திகேயன் அவர்களை தொடர்புகொள்ளலாம். **(Dr. N. Karthikeyan - Tel : 011 2881449), Email : nkart@ou.ac.lk**

Apply Online Only

https://reginfo.ou.ac.lk/applyonline/ என்ற எமது இணைய தளத்திற்குப் பிரவேசித்து நிகழ்நிலை (Online) மூலம் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பப் படிவக் கட்டணம் **ரூபா. 500/-**
விண்ணப்பங்கள் : **06.01.2024 தொடக்கம் 10.03.2024 காலப்பகுதியினுள் ஏற்றுக்கொள்ளப்படும்**

www.ou.ac.lk என்ற இணைய தளத்தில் பிரவேசித்து, குறிப்பிட்ட பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய கை நூலைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பற்று / கடன் (Debit/Credit) அட்டை / eCash மூலம் விண்ணப்பக்கட்டணங்களை செலுத்த முடியும். பற்று / கடன் அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலையில் (Online) சமர்ப்பித்த பின்னர் அருகிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் பணத்தைச் செலுத்தலாம். நிகழ்நிலை மூலமான விண்ணப்பத்தை பூர்த்தி செய்வது தொடர்பான உதவிகள் தேவைபடுவோர் அருகிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களுக்கு செல்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

நிகழ்நிலை முறை மூலமான (Online) விண்ணப்பித்தல் தொடர்பான விபரங்களை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஏதாவது பிராந்திய அல்லது கற்கை நிலையங்களுக்குச் செல்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு (நாவல), அனுராதபுரம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி (பொல்கொல்ல), மாத்தறை (நூபே), பதுளை, குருநாகல், அம்பாறை, பண்டாரவளை, கம்பஹா, காலி, அம்பலாந்தோட்டை, ஹட்டன், திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, களுத்துறை, கேகாலை, மொனராகலை, பொலன்னறுவை, புத்தளம், இரத்தினபுரி, மன்னார், மாத்தளை, அம்பலாங்கொடை மற்றும் வவுனியா.

மேலதிக விபரங்களுக்கு - பொது தகவல் அலுவலகம் (தொலைபேசி 011-2881000)

பதிவாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட

புதிய தொழில்நுட்பத்துக்கு ஏற்ற விமானப் படை

ஏனைய இரண்டு படைகளும் கட்டமைக்கப்பட வேண்டும்

பத்தரமுல்ல அக்குரேகொட பாதுகாப்புத் தலைமையக வளாகத்தில் நிறுவப்பட்ட புதிய விமானப்படை தலைமையகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய முழுமையான உரை! (01.01.2024)

விமானப்படைக்கு இன்று புதிய தலைமையகம் கிடைத்துள்ளது. இது மூன்றாவது தலைமையகமாகும். இரண்டு தலைமையகங்கள் கொழும்பில் இருந்தன. தற்போது இங்கு அமைக்கப்பட்டுள்ள தலைமையகம் 73 வருட வரலாற்றில் இலங்கையின் பாதுகாப்பை இது மேலும் பலப்படுத்திப்பட்டுத்தியுள்ளது. விமானப் படையினர், உள்நாட்டுப் போர், உள்நாட்டுக் கலவரங்கள், இயற்கை அனர்த்தங்கள் ஆகியவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க அளவற்ற அர்ப்பணிப்புகளைச் செய்திருந்தனர். வெளிநாடுகளிலும் அந்த சேவைகளை செய்துள்ளனர். அந்த வகையில் இராணுவம் தனக்கான பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளது. நாட்டின் பாதுகாப்புக்கும் முக்கியமான பிரிவாகும்.

அதன்படியே இன்று நாம் விமானப்படையின் புதிய தலைமையகத்துக்கு வந்துள்ளோம். கடற் படையினரும் இங்கு வந்த பின்னர் எதிர்காலத்தில் நாட்டின் முன்பாகவிருக்கும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகம்கொடுக்கலாம் எனச் சிந்திக்க வேண்டியது அவசியமாகும். உள்ளக பிரச்சினைகள் தொடர்பில் பார்க்கும் போது உள்ளக அமைதியை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். சிவில் சமூகத்தின் பாதுகாப்பே முதன்மையானது. அதேபோல் நாம் இந்து சமுத்திரத்தின் முக்கிய இடத்தில் இருக்கிறோம். அதனையும் நினைவில் கொண்டு செயற்பட வேண்டியது அவசியமாகும். அதேபோல் 2030 ஆம் ஆண்டளவில் எமது உள்ளக மற்றும் வெளிநாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் அறிக்கை கோரியுள்ளோம்.

முப்படையினருக்கு புதிய தொழில் நுட்ப அறிவு அதேபோல் புதிய தொழில் நுட்பத்துக்கு அமைய விமானப்படையும் ஏனைய இரு படைகளையும் கட்டமைக்க வேண்டும். அதற்கான முதல் அடி வைக்கும் வகையிலேயே நாம் இவ்விடத்திற்கு வந்துள்ளோம். விமானப்படை தலைமையகம் அமைந்திருந்த பழைய கட்டடத்தை பொலிஸ் தலைமையகமாக மாற்றுவதற்குத் தீர்மானித்துள்ளோம். பொலிஸ் தலைமையகம் அங்கு அமையும். தற்போதைய பொலிஸ் தலைமையகம், வெளிவிவகார அமைச்சு அவற்றை அண்டியுள்ள கட்டடங்கள் ஆகியவற்றை விடுவித்து சுற்றுலா வலயமாக மாற்றத் திட்டமிட்டுள்ளோம்.

தற்போதுள்ள வெளிவிவகார அமைச்சின் கட்டடத்தையும் ஜாவத்தை வீதிக்கு கொண்டுச் செல்ல எதிர்பார்க்கிறோம். முன்பிருந்த கட்டடத்தில் பொருளாதார பலன்களை அடைந்துகொள்ள எதிர்பார்க்கிறோம். அவ்வாறானதொரு பொருளாதார வளர்ச்சி அவசியம்.

நாட்டின் பொருளாதாரத்துடனேயே இன்றைய போராட்டம்!

இன்று நாம் மற்றுமொரு போராட்டத்தை எதிர்கொள்கிறோம். அந்த போராட்டம் வெளிநாட்டு எதிரிகள் அல்லது உள்நாட்டு கலவரக்காரர்களுடனானது அல்ல. மாறாக பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் போராட்டம் ஆகும். போராட்டங்களை விமானப்படையும் ஏனைய படையினரும் பார்த்துக் கொள்வர். நாட்டை பாதுகாப்பதற்கான கூட்டுப் பொறுப்பு அனைவரையும் சார்ந்துள்ளது. அது கடினமான பணியாகும். வற்வரி தொடர்பிலும் சில விடயங்களை கூற நினைக்கிறேன். இங்கு அரசியல் செய்வதா? இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்திற்காக பணியாற்றுவதா? என நேரடியாக அமைச்சரவையுடன் ஆலோசிக்க நேர்ந்தது.

கிரேக்கம், லெபனான் ஆகியவற்றின் அனுபவங்கள்!

பொருளாதார வேலைத்திட்டத்தை இரு வருடங்கள் காலம்தாழ்த்தியதால் லெபனான் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டது. மொத்ததேசிய உற்பத்தியும் 50 சதவீதமாக குன்றியுள்ளது. அதிலிருந்து மீள்வது மிகக் கடுமையான முயற்சியாகும். நிலையான கொள்கை இன்மையினால் கிரேக்கம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள 13 வருடங்கள் திண்டாடியது. அரச ஊழியர்களின் சம்பளத்தை 50 சதவீதமாக குறைக்க நேர்ந்தது. இருப்பினும் நாம் அந்த நிலைமைக்கு செல்லவில்லை.

10 சதவீதத்தினால் மாத்திரமே நமது நாட்டின் பொருளாதாரம் சரிவடைந்திருந்தது. நாம் நேரடியான தீர்மானங்களுடன் முன்னோக்கிச் சென்றோம்.

2023ஆம் ஆண்டின் இறுதியில் ஓரளவு வலுவான பொருளாதார நிலைமை உருவாகியுள்ளது. 2023இல் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 3 சதவீதமாக காணப்பட்டது. முதல் இரண்டு காலாண்டுகளிலேயே அந்த மந்த நிலைமை காணப்பட்டது. வருடத்தின் இறுதி பகுதியில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. அடுத்த வருடம் இதனை மிஞ்சிய வளர்ச்சியை நோக்கிச் செல்ல வேண்டும்.

22பக்கம் பார்க்க...

சின்னமுத்து

கொவிட் 19 தொற்றை விடவும் வேகமாகப் பரவும் நோய்

பாதிப்புகள் பயங்கரமானவை

இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் மாத்திரமல்லாமல் உலகின் பல நாடுகளிலும் பெரும் பேசுபொருளாகியுள்ளது சின்னமுத்து நோய் (Meseal). அந்நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் ஏற்பட்டுவரும் அதிகரிப்பே இதற்கு அடிப்படையாக் காரணமாகும்.

சின்னமுத்து நோய் கட்டுப்படுத்தப்பட்ட நாடு என்ற சான்றிதழை பெற்றுக்கொண்டுள்ள இலங்கை, பூட்டான், மாலைதீவு, வடகொரியா, கிழக்கு திமோர் போன்ற நாடுகளிலும் கூட இந்நோய் பதிவாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. 2019 இல் இச்சான்றிதழைப் பெற்ற இலங்கையில் 2023 மே மாதம் இந்நோய்க்குள்ளானவர் கொழும்பில் அடையாளம் காணப்பட்டார். அவர் இத்தடுப்பு மருந்தைப் பெற்றிருக்கவில்லை.

இலங்கை சமூக மருத்துவ நிபுணர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இணைய வழி கருத்தரங்கில் இவ்விடயங்களைத் தெரிவித்த தொற்று நோய்கள் தடுப்பு பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் டொக்டர் மஞ்சுள காரியவசம், இந்நோயானது கொவிட் 19 தொற்று தோற்றம் பெற்ற பின்னர் தான் மீண்டும் தீவிரமாகப் பரவும் நிலையை அடைந்திருக்கிறது. ஏனெனில் கொவிட் 19 தொற்றின் அச்சுறுத்தலின் பின்புலத்தில் சின்னமுத்து நோய்க்கான தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்வதிலும் அதனைப் பெற்றுக்கொடுப்பதிலும் பலவீனங்கள் ஏற்பட்டன. அதனைப் பயன்படுத்தியே உலகின் பல நாடுகளிலும் 2008 காலப்பகுதிக்கு முன்பு

தடுப்பு மருந்தே சிறந்த பாதுகாப்பு

அதனைத் தொடர்ந்து நாட்டின் பல பிரதேசங்களிலும் இந்நோய்க்குள்ளானவர்கள் அடையாளம் காணப்படுகின்ற போதிலும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, யாழ்ப்பாணம், காலி, மாத்தறை, நுவரெலியா உள்ளிட்ட மாவட்டங்களில் இந்நோய்க்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அந்த வகையில் கடந்த வருடம் (2023) மாத்திரம் 710 பேர் இந்நோயாளர்களாக இங்கு பதிவாகியுள்ளனர்.

அதனால் இந்நோய்க்குள்ளான ஒருவர் ஒரு இடத்தில் அடையாளம் காணப்பட்டால் அவர் வாழும் இடத்தைச் சுற்றி ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்டப் பிரதேசத்தில் வசிப்பவர்களை இந்நோய் பரீட்சிப்புக்கு உட்படுத்த சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அத்தோடு இந்நோய்க்கான தடுப்பு மருந்தை நிராகரிப்பவர்களை அணுகி அவர்களது பிள்ளைகளுக்கும் அதனைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மத்தியில் தான் இதன் தாக்கமும் பாதிப்பும் பரவுதலும் வேகமாக இருக்கும். ஒருவருக்கு இந்நோய் ஏற்பட்டால் அவரில் இருமல் முக்கிய அறிகுறியாக வெளிப்படும். அத்தோடு காய்ச்சல், மூக்கில் நீர் ஒழுகுதல், கண்கள் சிவப்பாகி கண்ணீர் வடிதல், வாயில் வெள்ளை நிறத்திலான தழும்புகள் போன்றவாறான அறிகுறிகளையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கும். அத்தோடு காய்ச்சல் ஏற்பட்டு மூன்று நாட்கள் கடந்த பின்னர் உடலில் அரிப்பு, சிவப்பு புள்ளிகள், வயிற்றோட்டம், காதுகளில் தொற்று, மூச்செடுப்பதில் சிரமம் போன்றவாறான அறிகுறிகள் வெளிப்படும்.

இந்நோய்க்கான காய்ச்சல் தீவிரமடையுமாயின் காய்ச்சல் வலிப்பு ஏற்படலாம். அது பார்வை இழப்புக்கு வித்திடலாம். குறிப்பாக விட்டமின் ஏ குறைபாடு உள்ளவர்களுக்கு இந்நோய் ஏற்பட்டால் அவர்கள் பார்வை இழப்புக்கு உள்ளாக முடியும். அதேநேரம் மூளையில் தொற்று ஏற்பட்டு மூளையில் வீக்கமும் ஏற்படலாம்.

இந்நோய்க்கு உள்ளானவர்களுக்கு கடும் வயிற்றோட்டமும் ஏற்படலாம். ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இவ்வாறு வயிற்றோட்டம் ஏற்படுமாயின் உடல் வரட்சி ஏற்பட்டு மரணமும் நேரலாம். காதின் மத்திய பகுதியில் தொற்று ஏற்பட்டு காது கேளாத தன்மையும் ஏற்படலாம்.

இது சுவாசத் தொகுதியின் ஊடாகத் தொற்றும் நோயாக இருப்பதால் நிமோனியா ஏற்படக்கூடிய அச்சுறுத்தலும் உள்ளது. அதனால் சுவாசிக்க முடியாத நிலை ஏற்பட்டு சிறு குழந்தைகள் உயிரிழக்கக்கூடிய துர்ப்பாக்கிய நிலையும் உருவாகலாம்.

அதேநேரம் கர்ப்பிணிப் பெண்களுக்கு இந்நோய் ஏற்பட்டால் கர்ப்பப்பையில் பாதிப்புக்கள் ஏற்பட்டு நிறை குறைந்த குழந்தைகள் மாத்திரமல்லாமல் குறைமாதக் குழந்தைகளும் கூட பிறக்க வாய்ப்புள்ளது.

'இவை அனைத்தையும் விடவும் மிகவும் மோசமான நெருக்கடி தான் இந்நோய் முழுமையாகக் குணமடைந்து 6 முதல் 8 வருடங்கள் கடந்த பின்னர் மீண்டும் பாதிப்புக்கள் ஏற்படுத்துவதாகும். குறிப்பாக மூளையின் சில செயற்பாடுகளில் இந்நோயின் தாக்கம், பாதிப்புக்களை ஏற்படுத்தி கோமா நிலைக்கு இட்டுச் செல்லலாம். அதுவும் மரணத்தை ஏற்படுத்த முடியும். இவ்வாறான துர்ப்பாக்கிய நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான வெற்றிகர சிகிச்சை முறை எதுவும் இற்றை வரையும் உலகில் கண்டு பிடிக்கப்படவில்லை' என்றும் குறிப்பிடுகிறார் டொக்டர் காரியவசம்.

நாட்டில் திருப்திகரமான மட்டத்தினருக்கு சின்னமுத்து நோய்க்கான தடுப்பு மருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டது.

ஆனாலும் தென்னாசிய நாடுகள் உட்பட உலகின் பல நாடுகளிலும் 2008க்கு முன்பு போன்ற நிலையை சின்னமுத்து அடைய கொவிட் 19 தொற்று பாரிய பங்களிப்பு நல்கியுள்ளது. அதனால் இந்தியா, நேபாளம், மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் கூட தற்போது இந்நோய் அதிகம் பதிவாகிறது. அதற்கு இப்பிராந்திய நாடுகளைச் சேர்ந்த 9 மில்லியன்களுக்கும் மேற்பட்ட பிள்ளைகள் 2020/ 2021 ஆண்டுகளில் இத்தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ளாமை முக்கிய காரணமாகும்.

சின்னமுத்து மீண்டும் தலைதூக்கக் காரணம் கொவிட்

1950, 60 களில் சின்னமுத்து மிக வேகமாகப் பரவக்கூடிய நோயாக இருந்தது. அந்த சூழலில் இந்நோய்கான தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டு 1963இல் புழக்கத்திற்கு வந்தது. ஆன போதிலும் இலங்கை தேசிய தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தில் 1984இல் தான் சின்னமுத்து நோய்க்கான தடுப்பு மருந்தை உள்வாங்கியது. அத்தடுப்பு மருந்து இந்நாட்டிலுள்ள எல்லா குழந்தைகளுக்கும் முற்றிலும் இலவசமாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

முதலில் சின்னமுத்து நோய்க்கான தடுப்பு மருந்து என வழங்கப்பட்டு வந்த இத்தடுப்பு மருந்து, 2001 முதல், பிறந்து 3 வருடங்கள் நிறைவடைந்த குழந்தைகளுக்கு ருபெல்லா, சின்னமுத்து நோய்க்கான தடுப்பு மருந்து என இரண்டாம் தடவையாக வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் 2011 இல் எம்.எம்.ஆர் என்ற தடுப்பு மருந்து தேசிய மருந்தேற்றத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டது.

அதன் பயனாக சின்னமுத்து நோயைக் கட்டுப்படுத்திய நாடு என்ற பெருமையை 2019இல் இலங்கை அடைந்து கொண்டது. அதன் பின்னர் இந்நோய் இலங்கையில் மாத்திரமல்லாமல் உலகிலும் பெரிதும் கட்டுப்பாட்டு நிலையில் இருந்தது. கொவிட் 19 தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் இந்நிலையில் பிராந்திய நாடுகள் மாத்திரமல்லாமல் இலங்கையும் கூட இந்நோயை மீண்டும் கட்டுப்பாட்டு நிலைக்கு கொண்டுவருவதில் கூடிய வனம் செலுத்தியுள்ளது. அந்த வகையில் முதலாம் கட்டமாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, மாத்தறை, குருநாகல், கல்முனை, யாழ்ப்பாணம் ஆகிய 09 மாவட்டங்களையும் சேர்ந்த 6 முதல் 9 மாதங்களுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு சின்னமுத்து நோய்க்கான மேலதிக தடுப்பு மருந்து (supplementary measles immunization activity SIA) நேற்று 06 ஆம் திகதி வழங்கப்பட்டது. ஏனைய வயது குழந்தைகளுக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி நாடு முழுவதும் இரண்டாம் கட்டமாக வழங்கப்பட உள்ளது. யுனிசெப், உலக சுகாதார ஸ்தாபனத்துடன் சுகாதார அமைச்சு முன்னெடுக்கும் இத்திட்டத்தின் இலக்கு இந்நோயை மீண்டும் கட்டுப்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதாகும்.

ஆகவே சின்னமுத்து நோயைத் தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும். அதற்கான தடுப்பு மருந்தை ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிய கால வேளையில் பெற்றுக்கொடுப்பது இன்றியமையாததாகும்.

மர்லின் மரிக்கார்...

தேர்தல் சூடுபிடித்துள்ள போதிலும் தமிழரசு கட்சியின் புதிய தலைவர் தெரிவில் தொடரும் இழுபறி!

இந்த வருடம் தேர்தல் ஆண்டு என்பதால் அரசியல் கட்சிகள் யாவும் தம்மை தேர்தலுக்குத் தயார்படுத்தத் தொடங்கியிருக்கும் சூழ்நிலையில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் கட்சிகள் இன்னமும் தம்மை அரசியல் ரீதியாகத் தீவிரப்படுத்தத் தொடங்கியிருப்பதாகத் தெரியவில்லை.

மாறாக தமிழ் அரசியல் தரப்பில் முக்கிய இடத்தை வகிக்கும் இலங்கை தமிழரசுக் கட்சி தனக்கான அடுத்த தலைவர் யார் என்பதைத் தீர்மானிப்பதிலேயே தற்பொழுது ஆர்வம் காட்டிவருகிறது.

ஆரம்பித்த நாள் முதல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்புக்கு வந்தவர்கள் அனைவரும் கட்சியின் ஏகோபித்த ஆதரவுடன் தெரிவானவர்களாகவே காணப்பட்டனர். இவ்வாறான நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜா வயதுமூப்புக் காரணமாக அப்பதவியிலிருந்து விலகக் கூடிய காரணத்தினால் அடுத்த தலைவர் யார் என்பதற்கான போட்டி ஆரம்பித்துள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அடுத்த தலைவருக்கான தெரிவுக்கு கட்சியின் யாப்பிற்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் சிவஞானம் சிறிதரன் ஆகியோர் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.

கட்சியின் மாநாட்டிற்கான திகதி தீர்மானிக்கப்பட்ட நிலையில் தலைவராக தெரிவு செய்ய எண்ணுபவரை கட்சியின் நிரந்தர உறுப்பினர்கள் 6 பேருக்கு குறையாதோர் ஒப்பமிட்டு முன்கூட்டியே சமர்ப்பிக்க வேண்டும். இதனால் தெரிவாக விரும்புபவர்களின் பெயரை கடந்த வருடம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்குமாறு சகல தொகுதிக் கிளைகளுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த ஏற்பாட்டிற்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பெயரை பரிந்துரைத்து 12 உறுப்பினர்கள் ஒப்பமிட்ட விண்ணப்பமும், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் பெயரை பரிந்துரைத்து 6 உறுப்பினர்கள் ஒப்பமிட்ட விண்ணப்பமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் பெயரை வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் வேழமாலிதன் உள்ளிட்ட ஆறு பேர் முன்மொழிந்துள்ள நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பெயரைக் குறிப்பிட்டு கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் சி.வி.கே.சிவஞானம், நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ். குலநாயகம், மன்னாரைச் சேர்ந்த தி. பரஞ்சோதி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ சிறல், குமாரசாமி, திருகோணமலையைச் சேர்ந்த ஜேம்ஸ் சமத்தர், கொழும்பு கிளையைச் சேர்ந்த இரட்ணவடிவேல் உட்பட 12 பேர் கையொப்பமிட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பெயரை முன்மொழிந்துள்ள 12 பேரில் வடக்கு, கிழக்கின் 8 மாவட்டங்களுடன் கொழும்புக் கிளையைச் சேர்ந்த ஒருவரும் ஒப்பமிட்டுள்ளார். கட்சியின் மூத்த தலைவராக இருக்கும் ஆர். சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோர் வயது மூப்பு காரணமாக கட்சிப் பணியிலிருந்து விலகக்கூடிய சூழலில், அடுத்த தலைமுறைத் தலைவர்கள் கட்சியை பொறுப்பேற்று எதிர்காலத்திற்கு வழிநடத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக எழுந்து வருகிறது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் தமிழரசுக் கட்சியின் 27 ஆவது மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டிலேயே அடுத்த தலைவர் யார் என்பது போன்ற பல்வேறு விடயங்கள் அறிவிக்கப்படவுள்ளன.

தலைவர் பதவிக்கு இருவர் போட்டியிடும் நிலை உருவாகியிருப்பதால் கட்சிக்குள் பிளவு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இதுவரை காலமும் தலைமைத்துவத்துக்கு ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்ட நிலையில் இம்முறை தேர்தலுக்குச் செல்வது பொருத்தமற்றது என்பது அவர்களின் நிலைப்பாடாக இருக்கின்றது.

மறுபக்கத்தில், கட்சியின் தலைமைப் பதவிக்குத் தேர்தல் மூலம் ஒருவரைத் தெரிவுசெய்வது

கட்சியின் 27 ஆவது மாநாடு இம்மாதம்; அடுத்த தலைவரை தெரிவு செய்வதில் உள்முரண்பாடுகள்!

கட்சி ஜனநாயக நடைமுறையில் சிறந்து விளங்குவதற்கான உதாரணமாகும் என மற்றுமொரு தரப்பினர் சுட்டிக்காட்டுகின்றனர். இலங்கை அரசியலில் குறிப்பாக தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் இலங்கை தமிழரசுக் கட்சி முக்கியமானதொரு பாகத்தை வகித்து வருகிறது. இவ்வாறான பின்னணியில் இதன் தலைமைத்துவம் மிகவும் பலமுடையதாகவும், ஏனைய அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்துக் கொண்டுசொல்லக் கூடியதாகவும் அமைவதே பொருத்தமானதாக இருக்கும்.

உதாரணமாக எடுத்துக் கொண்டால் மூத்த தலைவர் இரா. சம்பந்தன் அனைத்து தமிழ்க் கட்சிகளையும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகளை ஒன்றிணைத்து வழிநடத்திச் செல்லக் கூடிய தலைவராகக் காணப்பட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது உத்தியோகபூர்வமாகப் பதிவுசெய்யப்படாத கட்சியாக இருந்தாலும், அதனை ஒரு கூட்டணியாக ஒன்றிணைத்துக் கொண்டுசெல்லக்கூடிய திறன் அவரிடம் இருந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இவ்வாறான பின்னணியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பதாக கடந்த காலங்களில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. ஒரு சில விடயங்களைத் தீர்மானிக்கும்போது தமிழரசுக் கட்சி கூட்டணியாக முடிவெடுக்காமல் பங்காளிக் கட்சிகளைத் தவிர்த்து தனித்து முடிவெடுத்த சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

தமிழர்கள் சிறுபான்மையாக உள்ள நாட்டில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் தமக்கிடையே வேறுபட்டு நிற்பது அரசியல் ரீதியாக தமிழினத்தைப் பலவீனப்படுத்தும். எனவே, தமிழரசுக் கட்சியும் சரி, கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளும் சரி ஒற்றுமையாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். எனவே, தமிழரசுக் கட்சியின் தலைமை தொடர்பில் எடுக்கப்படக் கூடிய தீர்மானமும் இவ்விடயத்தில் தாக்கம் செலுத்தும் ஒன்றாக இருக்க வேண்டும் என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளைச் சர்வதேச மட்டத்துக்கு எடுத்துச் செல்லக் கூடிய வல்லமை மிக்க நபரே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்குப் பொருத்தமானவர் என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியிருந்தார்.

தலைமைத்துவம் ஜனநாயக ரீதியிலேயே தெரிவு செய்யப்படும். கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழரசுக் கட்சிக்கு அடுத்த தலைவர் யார் என்பதை மக்கள் புரிந்து வைத்துள்ளார்கள்.

கட்சியின் தலைவராக வர வேண்டியவர் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை சர்வதேச அளவுக்கு எடுத்துச் செல்லக்கூடிய சர்வதேச தொடர்புகள் உள்ள நபராக இருந்தால் மட்டுமே சாத்தியம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் ஊடாகவே அரசியல் தீர்வு காண முடியும். அதற்காகவே தமிழரசுக் கட்சி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில், அரசியல் சாசனம் தொடர்பில் அதீத அறிவு உள்ள நபரே தமிழரசுக் கட்சியின் தலைவராக வரவேண்டும் என்ற ரீதியில் அவர் தனது கருத்தை முன்வைத்திருந்தார்.

இருந்தபோதும், தலைமைத்துவம் தொடர்பில் கட்சிக்குள் மாறுபட்ட நிலைப்பாடுகள் இருப்பதாகத் தெரியவருகிறது. இரு தரப்பிலும் ஆதரவு கோரும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, இந்தத் தலைமைத்துவப் போட்டியானது பங்காளிக் கட்சிகளுக்கிடையில் பிளவை ஏற்படுத்தாது அனைவரையும் ஒன்றிணைக்கக் கூடியதாக அமைய வேண்டும் என்றே தமிழர்கள் விரும்புகின்றனர்.

பி.ஹர்ஷன்...✍

நாளையுடன் மூன்று மாதங்கள் நிறைவுறும் காஸா மீதான யுத்தம்!

வெறிச்சோடிப்போன துறைமுகங்கள்

காஸா மீது இஸ்ரேல் யுத்தத்தை ஆரம்பித்து இன்று 07 ஆம் திகதியுடன் மூன்று மாதங்கள் நிறைவடைகின்றன. இந்நிலையில், மூன்று மாதங்கள் நிறைவடைவதற்கு சில தினங்களுக்கு முன்னர், அதாவது டிசம்பர் 31 ஆம் திகதி காஸாவில் இருந்து ஐந்து படைப்பிரிவுகளை இஸ்ரேல் வாபஸ் பெற்றுள்ளது. 460 ஆவது கவசப்படை, 261 ஆவது படை, 828 ஆவது படை, 14 ஆவது ரிசர்வ் கவசப்படை, 551 ஆவது துணைப்படை ஆகியனவே வாபஸ் பெறப்பட்டுள்ள படைப்பிரிவுகளாகும்.

இஸ்ரேலின் இந்நடவடிக்கை உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. இது தொடர்பில் இஸ்ரேல் விடுத்துள்ள அறிக்கையில், '2024 இல் நீண்ட சண்டைக்கான முன்னறிகுறிகள் உள்ளன. அதனால் ரிசர்வ் படையில் இணைந்தவர்கள் தங்கள் வழமையான பணிகளுக்குத் திரும்பி, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க உதவும் வகையில் அவர்கள் அனுப்பப்படுகின்றனர்' என்று குறிப்பிட்டுள்ளது.

இதன்படி காஸா மீதான யுத்தம், இஸ்ரேலின் பொருளாதாரத்தில் எவ்வளவு தூரம் தாக்கத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்பது தெளிவாகிறது. அதன் விளைவாகவே இப்படைப்பிரிவுகள் மீளப்பெறப்பட்டு அவற்றில் இணைந்திருந்த ஆயிரக்கணக்கானவர்கள் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பணிக்கு அனுப்பப்படுகின்றனர்.

காஸா மீதான போரில் பங்குபற்றவென ரிசர்வ் படையையும் இஸ்ரேல் திரட்டியது. அதற்கு ஏற்ப 3 இலட்சத்து 60 ஆயிரம் பேர் தத்தமது தொழில்களை கைவிட்டு யுத்தத்தில் ஈடுபடச் சென்றனர்.

அதன் ஊடாக நிரந்தப் படையினர் உட்பட ரிசர்வ் படையையும் உள்ளடக்கிய மூன்று இலட்சம் படையினரைக் கொண்டு யுத்தம் முன்னெடுக்கப்பட்டது. 365 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்ட காஸாவைச் சுற்றிவளைத்து வான்வழித் தாக்குதலோடு ஆரம்பமான இப்போர் ஆகாயம், தரை, கடல் என மூன்று வழிகளின் ஊடாகவும் மூன்று மாதங்களாக முன்னெடுக்கப்படுகின்றது.

இப்போரினால் இற்றைவரையும் 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதோடு, 57 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

இப்போரில் இஸ்ரேல் காஸாவை கடுமையாகத் தாக்கியழித்து வருகின்ற அதேநேரம், ஹமாஸும் இஸ்ரேல் பகுதிகளுக்குள் ஏவுகணைகளை வீசிக்கொண்டிருக்கின்றது. அத்தோடு காஸா மீதான யுத்தத்தை நிறுத்தி அம்மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தங்குதடையின்றிச் செல்ல இடமளிக்குமாறு கோரி லெபனானின் ஹிஸ்புல்லாக்களும், யெமனின் கௌதிக்களும் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்துகின்றனர்.

இப்போரினால் காஸா சாம்பல் மேடாகி வருகின்ற அதேநேரம், இஸ்ரேலின் பொருளாதாரம் பாரிய அமுத்தங்களை எதிர்கொண்டுள்ளதாக அந்நாட்டு பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இப்போர் எதிர்பார்த்ததை விடவும் கடுமையாக அமைந்துள்ளதாக அந்நாட்டு மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இப்போரில் பங்குபற்ற இஸ்ரேல் விடுத்த அழைப்புக்கேற்ப அந்நாட்டின் 03 இலட்சத்து 60 ஆயிரம் ரிசர்வ் படையினர் யுத்தத்தில் கலந்து கொள்ள வந்தனர். இது அந்நாட்டு தொழிலாளர் படையில் 10 முதல் 15 சதவீதத்தினர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக இஸ்ரேலின் உற்பத்தி, சேவைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் 8 வீத தொழிலாளர் இழப்புக்கு முகம்கொடுத்துள்ளன. அதேநேரம் காஸா மீதான யுத்தத்திற்கு முன்னர் இஸ்ரேலில் தொழில் புரிந்து வந்த

அச்சத்தினால் இஸ்ரேலை விட்டு வெளியேறும் வெளிநாட்டுத் தொழிலாளர்கள்

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்களுக்கு இனிமேல் தொழில் வழங்குவதில்லை என நிலைப்பாட்டை இஸ்ரேல் எடுத்துள்ளது. இதனால் பாரிய தொழிலாளர் பற்றாக்குறையை இஸ்ரேல் எதிர்கொண்டுள்ளது.

02 இலட்சம் முதல் 02 இலட்சத்து 50 ஆயிரம் வரையான தொழில்கள் இன்னும் வெற்றிடமாகவே உள்ளன. இதனால் இஸ்ரேலின் சேவைகள் மற்றும் உற்பத்தித் துறையில் வீழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளதோடு வர்த்தகத் துறையிலும் பெரிதும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு பெருந்தொகை தொழிலாளர்கள் திடீரென பணிகளில் இருந்து வெளியேறுவதன் ஊடாக ஏற்படக்கூடிய வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவது என்பது சாத்தியமானதல்ல.

இப்பின்னணியில் அந்நாட்டு மத்திய வங்கியின் ஆளுநர் அமிர் யரன், இப்போர் பொருளாதாரத்திற்கு ஒரு பெரிய அதிர்ச்சி என்றும், எதிர்பார்க்கப்பட்டதை

ஆட்டம் காணத் தொடங்கியது இஸ்ரேல் பொருளாதாரம்!

விடவும் விலை அதிகம் என்றும் கூறியுள்ளதோடு, குறுகிய மற்றும் நீண்ட காலத்தில் கடுமையான விளைவுகளை இப்பொருளாதாரத் தாக்கம் ஏற்படுத்தலாம் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த யுத்தத்தினால் 58 பில்லியன் டொலர்களுக்கும் மேற்பட்ட இழப்பு இற்றைவரையும் இஸ்ரேலுக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான நிலையில் காஸாவிலிருந்து வாபஸ் பெறப்பட்ட படைப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களை அவர்களது வழமையான பணிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இஸ்ரேலிய இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

காஸா மீது யுத்தம் ஆரம்பமானது முதல் இஸ்ரேலிலும் அச்சம் நிலவி வருகின்றது. அதனால் சுமார் 5 இலட்சம் பேர் இஸ்ரேலை விட்டு வெளியேறியுள்ளதாக அந்நாட்டு சனத்தொகை மற்றும் குடிய கல்வு அதிகார சபை தெரிவித்துள்ளது. அதேநேரம் இஸ்ரேலில் பணிபுரியும் வெளிநாட்டவர்களில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அச்சம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு வெளியேறியுள்ளவர்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தாய்லாந்து நாட்டினராவர்.

மேலும் இஸ்ரேலின் சுற்றுலாத் துறையிலும் இப்போர் தொடங்கிய முதல் மாதமே 76 வீத வீழ்ச்சி ஏற்பட்டதால், 89700 உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ள அதேநேரம், நவம்பர் மாதம் வெறும் 38 ஆயிரம் உல்லாசப் பயணிகளே வந்துள்ளனர் என்று இஸ்ரேலின் புள்ளிவிபரவியல் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இஸ்ரேலுக்கு தினமும் சுமார் 500 விமானங்கள் வந்து செல்வது வழக்கம். ஆனால் இப்போர் ஆரம்பித்த பின்னர் விமான சேவைத்துறையில் 80 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதோடு, சிவில் விமான சேவை நிறுவனங்கள் பலவும் இஸ்ரேலுக்கான விமான சேவைகளை மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தியுள்ளன. தற்போது சுமார் 100 விமானங்கள் அளவில்தான் தினமும் வந்து செல்வதாக இஸ்ரேலிய விமான சேவைகள் நிறுவனங்கள் கூறுகின்றன.

இவை இவ்வாறிருக்க, யெமனின் கௌதி படையினர் காஸா மீதான யுத்தத்தை நிறுத்தக் கோரி செங்கடல் வழியாக இஸ்ரேல் செல்லும் வர்த்தக் கப்பல்களுக்கும் இஸ்ரேலியர்களுக்குச் சொந்தமான வர்த்தகக் கப்பல்களுக்கும் தாக்குதல்களை நடத்துகின்றனர். அதனால் பல கப்பல் நிறுவனங்கள் இஸ்ரேலுக்கு பயணிப்பதை மறுஅறிவித்தல் வரை நிறுத்தியுள்ளதோடு, சில கப்பல்கள் மாற்றுவழிகளையும் பயன்படுத்துகின்றன.

கௌதிக்கள் இஸ்ரேலின் ஈழட் துறைமுகத்தின் மீதும் ஏவுகணைத் தாக்குதல்களை முன்னெடுத்துள்ளனர். இதன் விளைவாக இத்துறைமுகம் பொருளாதார ரீதியில் பாரிய வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது. வருடத்திற்கு 95 பில்லியன் டொலர் வருமானம் ஈட்டும் இத்துறைமுகம், யுத்தம் ஆரம்பித்த முதல் மாதத்தில் மாத்திரம் 7 இலட்சம் கோடி ரூபா நஷ்டத்தை எதிர்கொண்டதாக துறைமுகத்தின் பணிப்பாளர் இடியோட் கோல்ட்பெக் அந்நாட்டு ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். இத்துறைமுகத்திலும் ஆயிரக்கணக்கானவர்கள் தொழில்களை இழந்துள்ளனர்.

இஸ்ரேலுக்குத் தேவையான பொருட்கள் சேவைகளில் 70 சதவீதமானவை கடல் மார்க்கமாகவே பெறப்படுகின்றன. இந்நிலையில் கௌதிகள் இஸ்ரேலுக்கு பயணிக்கும் சரக்குக் கப்பல்கள் மேற்கொள்ளும் தாக்குதல் அச்சுறுத்தல்கள் காரணமாக கப்பல் காப்புறுதிக் கட்டணங்களை கப்பல் கம்பனிகள் அதிகரித்துள்ளன. அதன் விளைவாக இஸ்ரேலில் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

சிறு தொழிலுக்கு வழங்கும் கடன்களை 8 சதவீதமாக இஸ்ரேலிய வங்கிகள் குறைத்துள்ளன. கட்டட நிர்மாணத்துறை மற்றும் உணவு வழங்கல் துறையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இப்போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள துறைகளில் தொழில்நுட்பத் துறையும் ஒன்றாகும்.

காஸா மீதான போரினால் இவ்வாறான பாரிய பொருளாதார இழப்புக்களையும் பாதிப்புக்களையும் சந்தித்து வருகின்ற இஸ்ரேல், நாளொன்றுக்கு 220 மில்லியன் அமெரிக்க டொலர்களை யுத்தத்திற்காக செலவிடுகிறது. அத்தோடு யுத்ததாங்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 14 ஆயிரம் ஷெல்களை 106 மில்லியன் டொலர்களுக்கு டிசம்பர் 09 ஆம் திகதி கொள்வனவு செய்த இஸ்ரேல், m107 155mm projectiles and related equipments ஆயுத தளவாடங்களை டிசம்பர் மாத இறுதிப்பகுதியில் 147.4 மில்லியன் டொலர்களுக்கு அமெரிக்காவிடமிருந்து அவசர தேவையின் நிமித்தம் கொள்வனவு செய்துள்ளது.

இஸ்ரேலின் யுத்த செலவில் ஏற்பட்டுள்ள அபரிமித அதிகரிப்பு அந்நாட்டு மக்கள் மத்தியில் எதிர்மறையான கருத்துக்களையும் ஏற்படுத்தியுள்ளது. இப்போர் நீடிப்பதானது இஸ்ரேலைப் பொருளாதார ரீதியில் அதல பாதாளத்தில் தள்ளிவிடக்கூடிய அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.

மர்லின் மரிக்கார்...✍

யுத்தத்துக்காக ஏற்படுகின்ற செலவினங்கள் ஒருபுறமிருக்க, பொருளாதார செயற்பாடுகளும் கடும் பாதிப்பு!

சரியான திசையில் பயணிக்கும் இலங்கையின் பொருளாதாரம்

ஆனால் அந்தப் பயணம் எளிதானதல்ல

விளக்குகின்றார் மத்திய வங்க ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சு மற்றும் திறைசேரி செயலாளர் மகிந்த சிறிவர்தன ஆகியோர் கலந்து கொண்ட "2024 மற்றும் நாட்டின் பொருளாதாரம்" என்ற விசேட கலந்துரையாடல். ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க இந்தக் கலந்துரையாடலை வழிநடத்தினார். இந்தக் கலந்துரையாடலில் எழுப்பப்பட்ட கேள்விகளும் அதற்கு அவர்கள் வழங்கிய பதில்களும்...

கேள்வி: 2022இல் தொடங்கிய பொருளாதார நெருக்கடி 2023இல் ஓரளவு தணிந்ததா? அவ்வாறு தணிந்திருந்தால், அது எப்படி நடந்தது? 2024ஆம் ஆண்டுக்கான புதிய நம்பிக்கையை, புதிய சிந்தனையை உங்களுக்கு வழங்க முடியுமா?

மத்திய வங்கியின் ஆளுநர்: 2022ஆம் ஆண்டு நமது நாட்டின் பொருளாதார வரலாற்றில் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட ஆண்டாகும். பொருளாதாரம் 8% இனால் சுருங்கியது. பணவீக்கம் 70% ஆக உயர்ந்தது. ஆண்டின் இறுதியில், கையிருப்பு அளவு சுமார் 1.9 பில்லியனாக குறைந்தது. கடனை செலுத்துவதை நிறுத்தி வைத்திருந்தோம்.

ஒரு சுயாதீன நிறுவனமாக, இலங்கையின் வலுவான பொருளாதாரத்தை உருவாக்க மத்திய வங்கி பங்களிக்கிறது.

அந்நியச் செலாவணி நெருக்கடி பூதாகரமாகியிருந்தது. வலிமிகுந்த கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் பயணத்தில் தேவையான சீர்திருத்தங்களும் கொள்கைகளும் செயல்படுத்தப்பட்ட ஆண்டாக 2023 ஆம் ஆண்டை அழைக்கலாம்.

கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தால், பெறுபேறுகளை தற்பொழுது கண்டு கொள்ளலாம். குறிப்பாக 2022 செப்டெம்பரில் 70% ஆக பணவீக்கம் உயர்ந்திருந்தது. உணவுப் பணவீக்கம் 95% ஆக உயர்ந்தது. 2023 இல் பொது பணவீக்கம் 1 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. உணவுப் பணவீக்கம் 4% ஆக நிலையாக பேணப்படுகிறது. அதே சமயம், கையிருப்பு அளவைக் குறிப்பிட்டால், அது 2022 ஆம் ஆண்டு 1.9 பில்லியன் ஆக இருந்தது. இது கடந்த 2023 ஆம் ஆண்டு இறுதியில் 4.3 பில்லியனாக அதிகரித்துள்ளது.

2022 இல் ரூபாயின் பெறுமதி நாற்பது சதவீதமாக மதிப்பிறக்கமடைந்தது. 2023ஆம் ஆண்டுக்குள், ரூபாயின் பெறுமதி 12% இனால் மதிப்பிறக்கம் அடைந்து மீள மதிப்பேற்றம் அடைந்தது. இருந்தபோதிலும், மத்திய வங்கியினால் கையிருப்புகளை உருவாக்க முடிந்தது. குறிப்பாக சந்தையின் ஊடாக மட்டும் 1.9 பில்லியன் அந்நிய கையிருப்பு உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இறுதியில் மொத்த இருப்புத் தொகைக்கு இணையான இருப்புக்களை நாங்கள் உருவாக்கியுள்ளோம். இது தவிர ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி போன்ற ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைத்த 4.3 பில்லியன் தற்போது கையிருப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

அதே சமயத்தில், ரூபாயின் பெறுமதி 12% இனால் மதிப்பேற்றம் அடைந்தது. இது ஒரு நிலையான ஒரு பரிமாற்ற வீதமாகும். ஒப்பீட்டளவில் குறைந்த பணவீக்க விகிதமாகும். தவிர, பொருளாதார வளர்ச்சியானது 2023 இன் மூன்றாம் காலாண்டில் நேர்மறையான பொருளாதாரமாக மாற்றப்பட்டுள்ளது, 2022இன் முதல் காலாண்டில் இருந்து தொடர்ந்து 6 காலாண்டுகளுக்கு எதிர்மறையான பொருளாதார வளர்ச்சியாக மாற்றப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் தரவுகளிலிருந்து பொருளாதாரம் 2023ஆம் ஆண்டில் மீண்டு வரத் தொடங்கியது என்பதை தெளிவாகக் காணலாம். 2023ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான தரவுகளில் அந்தப் போக்கு மேலும் தெளிவாகத் தெரிகிறது.

வலிமிகுந்த மற்றும் கடினமான கொள்கைகளாக இருந்தாலும், நாம் எடுத்த நடவடிக்கைகளால் இவை அனைத்தும் நிகழ்ந்துள்ளன. அதன்படி நாம் செயல்பட்டால், 2024ஆம் ஆண்டு இன்னும் சிறப்பாக இருக்கும் என்று நம்புகிறோம். அதனூடாக இந்த வருடத்தில் 3% பொருளாதார வளர்ச்சியை உருவாக்க முடியும். இதன் காரணமாகவே மக்களின் வாழ்க்கைத் தரமும் வருமான வழிகளும் உயர்கின்றன. அப்படித்தான் வறுமையை ஏதோ ஒரு வகையில் குறைக்க முடியும். 2024ஆம் ஆண்டில் பணவீக்கத்தை 5% அளவில் வைத்திருக்க முடியும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

மேலும், அந்நியச் செலாவணியை நிர்ணயம் செய்யும்போது, சந்தையை நிர்ணயிக்கும் அந்நிய செலாவணி விகிதத்தை ஒரு குறிப்பிட்ட அளவில் நிர்ணயிக்க வேண்டும், அதே நேரத்தில், ஏற்கனவே உள்ள கட்டுப்பாடுகள் மேலும் நீக்கப்பட வேண்டும், நாட்டில் வர்த்தகம் செய்யத் தேவையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மேலும் குறைக்கப்பட வேண்டும். அந்நியச் செலாவணி முதலீடுகள் தொடர்பான நடவடிக்கைகள் தளர்த்தப்பட வேண்டும். மேலும் சிறந்த வணிகப் பொருளாதார செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய சூழல் 2024ஆம் ஆண்டில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டில், அந்நிய செலாவணி விகிதத்தின் விரைவான மதிப்பிழப்பு மற்றும் வட்டி விகிதத்தை விரைவாக அதிகரிக்க வேண்டியதன் காரணமாக, வங்கிக் கட்டமைப்பும் ஒருவித ஆபத்தில் இருந்தது. வங்கிக் கட்டமைப்பு சீர்குலைந்துவிடுமோ என்ற பெரும் அச்சம் மக்களிடையே நிலவியது. அவற்றில் உள்ள நிச்சயமற்ற தன்மையை நீக்கி, வங்கி முறையின் வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டு, நிலைப்படுத்தப்பட்டு, வங்கிகளின் ஊடாக கடன் வழங்குவது அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இது மேலும் அதிகரிக்கப்பட்டு, தனியார் துறை உள்ளிட்ட அனைவருக்கும் எளிதாக தொழில் செய்வதற்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

இதனால், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் சாதகமான முடிவுகளை நாம் தெளிவாகக் காணலாம். இந்த நிலையை அடைந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் குறுகிய காலத்தில் இந்த நிலையை அடைந்த ஒரே நாடு இலங்கைதான்.

அடுத்த கட்டமாக கடன் மறுசீரமைப்பு திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 2023 ஆம் ஆண்டில், நிதியமைச்சு, அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி ஆகியவை இணைந்து இவ்விடயத்தில் பெரும் பங்காற்றின. 2022 ஏப்ரலில் கடன் மீளச் செலுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பிறகு, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு முழுமையாக நிறைவு செய்யப்பட்டது. குறிப்பாக உத்தியோகபூர்வமாக எமக்குக் கடன் வழங்கிய சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் பெரிஸ் கழகம் ஆகிய நாடுகள் தற்போதுள்ள கடன்களை நீடித்து அடுத்த 10 ஆண்டுகளுக்கு கடன் சலுகைகளை வழங்க ஒப்புக் கொண்டுள்ளன. அந்த பணியை மிகக் குறுகிய காலத்தில் முடிப்பதும் எமக்குக் கிடைத்த வெற்றிதான்.

கேள்வி : 2022/2023 ஆகிய இரண்டு ஆண்டுகளைப் பொறுத்தவரை, செயல்திறன் எந்த அளவை எட்டியது?

நிதி அமைச்சின் செயலாளர்:

2022 ஆம் ஆண்டு மிகவும் கடினமான ஆண்டாக இருந்தது. அதை மீண்டும் விளக்க வேண்டிய அவசியமில்லை. 2022ஆம் ஆண்டில், நிதி அமைச்சு பல சிரமங்களை எதிர்கொண்டது. எங்களிடம் சம்பளம் கொடுக்கப் பணம் இருக்கவில்லை. கப்பல்கள் துறைமுகத்தில் தரித்திருந்தன, ஆனால் டொலர்களைத் தேடிக் கொள்ள முடியவில்லை. ரூபாய் கூட கிடைக்காத காலங்கள் இருந்தன. இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் இருந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் வேலைத்திட்டம் என்ன என்ற கேள்வி எம்மிடம் இருந்தது. எமக்கு பல விடயங்களைச் செய்ய நேரிட்டது. ஒன்று அரசின் வருவாய் தொடர்பான பிரச்சினை. இது சுமார் 8% ஆக இருந்தது. இது உலகில் மிகக் குறைந்த அளவாகும். அரச செலவினம் 19% 20% அளவில் இருந்தது. அதில், 12% மிகப்பெரிய துண்டுவிழும் தொகை உருவானது. பொதுவாக, எங்களிடம் இருந்த மிகப்பெரிய கேள்வி என்னவென்றால், வருவாயை அதிகரிப்பது, செலவினங்களை நிர்வகிப்பது மற்றும் துண்டுவிழும் தொகையை நிலையான அளவில் பராமரிப்பது எப்படி என்பது தான்.

அந்த சவாலை எதிர்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. வருமானத் துறை தொடர்பான பல நடவடிக்கைகளை 2023 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கினோம். அதற்காக வரிக் கொள்கையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரச வருவாயை அதிகரிப்பதற்காக அதிக அளவிலான திருத்தங்களை முன்வைத்துள்ளோம். 8% ஆக இருந்த வருமானத்தை ஓரளவுக்கு உயர்த்துவதே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது.

அதேநேரத்தில் செலவை மட்டுப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரசாங்க செலவினங்கள் கடுமையான கட்டுப்பாட்டுடன் நிர்வகிக்கப்பட வேண்டும் என்று 2022 ஏப்ரல் மாதத்தில் சுற்றறிக்கை ஊடாக அறிவித்தோம்.

அதற்கு இணையாக வரிக் கொள்கையின் மூலம் எதிர்பார்த்த வருமானத்தை பெற்றுக்கொள்வதற்காக வரி நிர்வாகம் பலப்படுத்தப்பட்டது. அரச நிதி ஒழுக்கத்தை பேணுவதற்காக, அரச நிதி நிர்வாகத்தை வலுவாகவும் ஒழுக்கமாகவும் மாற்றுவதற்கான சட்டக் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக அரச நிதி முகாமைத்துவச் சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.

வருமானத்தை விட அதிகமாக செலவு செய்யும் நாடாக இருந்ததாலேயே எமது கடன் சுமை தாங்க முடியாத நிலையை எட்டியது. நாட்டில் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை காணப்பட்டது. கடன் மறுசீரமைப்பு செய்யப்படும்போது, அரச நிதி ஒழுக்கத்துக்கான வலுவான சட்ட கட்டமைப்பும் இருக்க வேண்டும். இந்த நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யவே பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களும் நிறுவப்பட்டன. இவ்வாறான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதனால் வருமானம் அதிகரிப்பதையும் கண்டோம்.

அதேபோல் நெடுந்தூரம் பயணிக்க வேண்டியிருந்தாலும், அரச நிதி நிர்வாகத்தை பலப்படுத்துவதற்கான பயணமும் வலுவடைவதை காண முடிந்தது.

நாட்டின் வருமானத்தை அதிகரிக்கவும், செலவினங்களை தாங்கக்கூடிய வகையில் பேணுவதன் மூலமும் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை நிலையான அளவில் பேணவதுமே எமது எதிர்பார்ப்பாகும். கல்வி, சுகாதாரம் மற்றும் நலன்புரி போன்ற அத்தியாவசிய சேவைகள் முன்னெடுக்கப்படும்.

நெருக்கடியிலிருந்து மீண்டு எழுச்சி பெறுவதற்காக முதலீடு செய்யப்பட்ட தொகையை விடவும் மூன்று மடங்கு அதிகமாக 205 பில்லியன் ரூபாய் அஸ்வெசும திட்டத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எந்த அளவான நிதிச் சுமைக்கு மத்தியிலிந்தும் அதற்காக முடிந்தளவு அதிக தொகை ஒதுக்கியுள்ளோம்.

2022ஆம் ஆண்டின் நடுப் பகுதியிலிருந்தே அதற்காக அடித்தளம் இடப்பட்டது. 2023ஆம் ஆண்டிலும் அந்த நடவடிக்கைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன. 2022, 2023 வரையிலான பயணத்தை விடவும் நல்ல நிலையிலேயே 2023 / 2024 வரையான பயணத்தை முன்னெடுத்திருந்தோம். அதனால் நாங்கள் முழுமையாக இயல்பு நிலைமைக்கு திரும்பிவிட்டதாக கூறவில்லை. இருப்பினும் அரச நிதிச் செயற்பாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மேலும் வரிச் சுமையை தாங்கிக்கொள்வது கடினமானது. நாம் குறிப்பிட்ட ஒரு செலவு, வருமான வட்டத்துக்குள் சிக்கியிருந்தமையே அதற்கு காரணமாகும். வரி அதிகரிக்கும் போது, அதன் தாக்கத்தை எதிர்கொள்ள நேரிடும். ஆனால் இந்த நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கு, நாம் அனைவரும் சில சுமைகளை தாங்கிகொள்ள வேண்டியது அவசியமாகிறது. மிகக் கடினமான பயணத்துக்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது. இந்தப் பயணத்தைத் தொடர்வதன் மூலமே 2024ஆம் ஆண்டில் நாம் எதிர்பார்க்கும் வகையிலான நாட்டினை கட்டியெழுப்ப முடியும்.

கேள்வி: அரச நிதி ஒழுக்கம் மற்றும் செலவு முகாமைத்துவம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு எவ்வாறானது?

பதில்: நிதி அமைச்சின் செயலாளர் அரச நிதி ஒழுக்கம் குறித்து நாங்கள் மிகவும் கவனமாக செயற்படுகிறோம். கடந்த கால தவறுகள் மீண்டும் நடக்காத வகையிலேயே அரச நிதி நிர்வாகத்தை முன்னெடுத்து வருகிறோம். இளைஞர் போராட்டத்தின் அரசியல் நோக்கம் எவ்வாறானதாக இருந்தாலும், நாட்டின் பொருளாதார முகாமைத்துவம் மற்றும் வெளிப்படைத் தன்மை மிக்கதாக நிர்வகிக்கப்பட வேண்டும் என்ற செய்தியை வழங்கியிருந்தது.

அந்த செய்தியை முழு அரச துறையும் விளங்கிக் கொள்ள வேண்டும். அரச சேவையை நம்பகத்தன்மையுடன் செய்ய வேண்டும். பழைய முறையில் இருந்து விலகி புதிய பயணத்தின் மூலம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

நிதி அமைச்சின் செயற்பாடுகளை போன்றே ஏனைய அமைச்சுகளும் அரச நிதிச் செயற்பாடுகளை நம்பகத்தன்மையுடன் மேற்கொள்ள வேண்டும்.

தற்போது, அரச நிதி ஒழுக்கம் மிகுந்த நம்பிக்கையுடன் பாதுகாக்கப்படுகிறது. வரி செலுத்துவோரின் நம்பிக்கை பாதுகாக்கப்பட வேண்டும். பொறுப்புள்ள அரசாங்கம் மற்றும் அரச அதிகாரிகள் என்ற வகையில், வரி

(24 ஆம் பக்க தொடர்ச்சி)

ஈரான் மீதான குண்டுத் தாக்குதல் இஸ்ரேல் - ஹமாஸ் போரின் ஓரங்கமா?

பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

உலகளாவிய அரசியல் போக்கானது மேற்காசியாவை மையங் கொண்டுள்ளது. ஹமாஸ், இஸ்ரேல் போர் தொடங்கியதிலிருந்து அத்தகைய நிலை வலுவானதாக மாறிவருகிறது. ஆரம்பத்தில் காஸாவை ஆக்கிரமித்த போர் தற்போது மேற்குக் கரைக்கு மட்டுமல்ல அராபியக் கடலையும் சுயஸ்கால்வாயையும் நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. அமெரிக்காவும் மேற்கும் அத்தகைய போரை மேற்காசியாவில் நிகழ்த்தவே திட்டமிடுகின்றன. ஏறக்குறைய மீண்டும் இஸ்லாமியருக்கு எதிரான ஒரு போருக்கான தயார்ப்படுத்தலை மேற்கு ஆரம்பித்துள்ளது. அதற்கான வாய்ப்பினை இஸ்லாமிய நாடுகள் தாமதப்படுத்தினாலும் அதனை நோக்கி நகர்த்த மேற்கு எடுக்கும் அனைத்து நகர்வுக்கும் பலியாகும் நிலையை நோக்கி இஸ்லாமிய நாடுகள் காணப்படுகின்றன. இக்கட்டுரையும் ஈரானில் நிகழ்ந்த குண்டுத் தாக்குதலுக்குப் பின்னாலுள்ள அரசியலின் உள்நோக்கத்தை தேடுவதாக அமையவுள்ளது.

03.01.2024 இல் முன்னாள் ஈரானிய இராணுவத் தளபதி ஹசிம் சுலைமானி நினைவு கோரலை முன்னெடுக்க இருந்த அமைவிடத்தில் இரு குண்டுகள் வெடித்துள்ளன. ஏறக்குறைய 95 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன் 100க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஈரானின் தெற்கு நகரமான ஹர்மானில் நிகழ்ந்த தாக்குதல் திட்டமிடப்பட்டதொன்றாகவே தெரிகிறது. இத்தாக்குதல் இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் பயங்கரவாதச் செயல் என ஈரானிய ஜனாதிபதி இப்ராகிம் ரைசி மற்றும் சுப்பிறீம் தலைவர் அலி ஹமாமேனி குற்றம்சாட்டியுள்ளனர். அதுமட்டுமன்றி இதற்கான விலையை யூதர்கள் கொடுக்க வேண்டி வரும் எனவும் அவர்கள் வருந்த நேரிடும் எனவும் எச்சரித்துள்ளனர். இத்தாக்குதலுக்கு துருக்கி மட்டுமன்றி அராபிய நாடுகளும் அதிருப்தி வெளியிட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்டரெஸ் அதனைக் கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அமெரிக்காவும் இஸ்ரேலும் இக்குற்றச்சாட்டை நிராகரித்துள்ள போதும் அதற்கான வாய்ப்பு அதிகமுள்ளதாகவே தெரிகிறது. ஏற்கனவே சுலைமானி மீதான ஆளில்லாத விமானத் தாக்குதலையும் ஈரானிய அணுவிஞ்ஞானி Mohsen Fakhrizadeh மீதான சற்ரலைற் ஏவுகணைத் தாக்குதலும் அமெரிக்க, இஸ்ரேல் கூட்டுத் தாக்குதலாகவே தெரிகிறது. எனவே இத்தாக்குலுக்கும் பின்னால் அத்தகைய தரப்பு இருக்கும் என்பதற்கு அதிக ஆதாரங்கள் காணப்படுகின்றன. அதனை விரிவாக நோக்குவது அவசியமானது.

ஒன்று, சுலைமானியின் நினைவுகோரும் சந்தர்ப்பத்தை இஸ்ரேல், அமெரிக்கத் தரப்பு அதிகம் பயன்படுத்தியிருக்க வாய்ப்பு அதிகமுண்டு. காரணம் சுலைமானி மற்றும் மோசின் இருவரையும் இஸ்ரேல் படுகொலை செய்வதற்கு 14 வருடங்களாக முயன்றதாகவும் அதற்கான வாய்ப்பு தற்போது கிடைத்துள்ளதாகவும் மொசாட்டின் பேச்சாளர் அண்மையில் தெரிவித்திருந்தமை நினைவுகூரத்தக்கதாகும். சுலைமானி வலுவான யூத எதிர்ப்புவாதி மட்டுமல்ல சிறப்பான தலைவராகவும் அடுத்த நிலையில் சுப்பிறீம் தலைவராக வருவதற்குமான செல்வாக்கு மிக்கவராகவும் காணப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஈரானிய மக்கள் வலுவான தலைவராக சுலைமானியைக் கருதியிருந்தனர் என்பது கவனத்திற்குரியதாகும். இன்றும் சுலைமானியால் கட்டமைக்கப்பட்ட இராணுவமும் இராணுவ ஆயுததளபாடங்களும் ஈரானின் பாதுகாப்புக்கு அடிப்படையானவையாக உள்ளன. இன்றும் ஈரானிய மக்கள் சுலைமானி மீதான நேசிப்புடனேயே காணப்படுகின்றார்கள் என்பது நினைவு கோரும் நிகழ்வின் தயார்ப்படுத்தலை அவதானிக்கும் போதே கண்டுகொள்ள முடிந்தது. இதுவே இஸ்ரேலியஅமெரிக்க தாக்குதல் எனக் கருதுவதற்கு வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது.

இரண்டு, ஹமாஸ் இஸ்ரேலியப் போரில் ஹமாஸின் எழுச்சிக்கு அடிப்படையில் ஈரான் இருப்பதாகவே இஸ்ரேல், அமெரிக்கா மட்டுமன்றி மேற்குலகமே கருதுகின்றது. ஈரான் நேரடியாக போரில் ஈடுபடாது மறைமுகமாக ஹமாஸ் தரப்புக்கான ஆயுதங்களையும் புலனாய்வு நகர்வுகளையும் மேற்கொள்வதாக மேற்கு நாடுகள் கருதுகின்றன. அதனால் ஹமாஸ் இருப்பு நிலையானதாக அமைந்திருப்பதோடு இஸ்ரேலியத் தரப்பினால் குறிப்பிட்ட காலத்துக்குள் போரை முடிவுக்குக் கொண்டுவர முடியாதுள்ளது. அதனால் இஸ்ரேல் ஈரான் மீது அதிக ஆத்திரம் கொண்டுள்ளது. அத்தகைய ஹமாஸின் வளர்ச்சியையும் எழுச்சியையும் தடுக்க வேண்டுமாயின் ஈரானைக் கட்டுப்படுத்த வேண்டும் என இஸ்ரேல் கருதுகிறது. அதனையே அமெரிக்காவும் செயல்படுத்த முயலுகிறது. ஏறக்குறைய இஸ்ரேலின் போரை அமெரிக்க உட்பட மேற்குலகமே மேற்கொண்டுவருகிறது. ஆதனால் இத்தகைய தாக்குதல் மூலம் ஈரானை போரில் இழுத்துவிடவும் அதற்கான உணர்ச்சியை தூண்டிவிடவும் இஸ்ரேல் அமெரிக்கத் தரப்பு முனைகிறது. அது மட்டுமன்றி இத்தாக்குதல் மூலம் இஸ்ரேலியர் கொல்லப்பட்டது போல் ஈரானியர்கள் கொல்லப்பட வேண்டும் என இஸ்ரேல் கருதுகிறது. கொல்லப்படும் யூதர்கள் ஒவ்வொருவருக்கும் ஈரானிய ஆயுதங்களே காரணம் என இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் பலதடவை வெளிப்படுத்தியுள்ளார். அதனால் ஈரானியர் கொல்லப்படுவதன் மூலமே அதற்கு தீர்வு காணமுடியுமென இஸ்ரேலிய தரப்பு கருதுகின்றது.

மூன்று, ஈரானிய ஆதரவு பெற்ற ஹமுத்திக் கிளர்சியாளர்களது நடவடிக்கை ஒட்டுமொத்த மேற்காசியாவில் மேற்குலகத்தின் நகர்வுகளை பாதித்து வருகிறது. கடந்த மூன்று மாதத்திற்குள்ளேயே இருபதுக்கு மேற்பட்ட தாக்குதல்களை ஹமுத்திக் கிளர்ச்சிக் குழு அராபிய மற்றும் சுயஸ்கால் வாய்க் கடற்பரப்பில் வணிகக் கப்பல்கள் மீது நிகழ்த்தியுள்ளது. அதிலும் மேற்கு நாடுகளது வணிகக் கப்பல்களே அதிகம் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. ஒருசில சந்தர்ப்பத்தில் இந்தியக் கப்பல்கள் மீது நிகழ்ந்த தாக்குதல்கள் இந்திய வெளியுறவு அமைச்சரது ரஷ்ய விஜயத்திற்கு பின்னர் முடிவுக்கு வந்துள்ளதாக தகவல்கள் உண்டு. ஏறக்குறைய கடல் பிரதேசத்தின் மீதான மேற்கு நாடுகளின் ஆதிக்கத்தை ஹமுத்தி கிளர்ச்சிக் குழு கட்டுப்படுத்தும் திறனைப் பெற்றுள்ளதாகவே தெரிகிறது. அதற்கான அடிப்படையை ஈரான் வழங்குவதாகவே மேற்கு நாடுகள் கருதுகின்றன. அதில் ஈரான், சிரியா மட்டுமல்ல ரஷ்யா, வடகொரியா மற்றும் சீனாவின் பங்கும் உண்டு என்பதை சர்வதேச அரசியலுக்குள்ளால் கண்டு கொள்ள முடியும். இந்தியக் கப்பல்கள் மீது நிகழ்ந்த தாக்குதல்கள் தற்போது கைவிடப்பட்டுள்ளமையிலிருந்து அதனை அறிந்து கொள்ள முடியும். எனவே தனித்து ஈரான் மட்டுமல்ல. மேற்குக்கு எதிரான அனைத்து வலுவான நாடுகளும் ஏதோ ஒரு அடிப்படையில் கிளர்ச்சிக் குழுக்களுக்கும் ஹமாஸ் அமைப்பு மற்றும் ஏனைய அமைப்புக்களுக்கும் ஆயுத தளபாடங்கள் வழங்குவதுடன் இஸ்ரேலுக்கு எதிரான போருக்கு அதிக பங்களிப்பும் செய்துவருகின்றன. இதில் ரஷ்யாவின் பங்கு தனித்துவமானதென கண்டுகொள்ள முடியும் மேற்கு நாடுகள் உக்ரைன் போரை கையாண்டது போன்றே இஸ்ரேல், ஹமாஸ் போரை ரஷ்யா கையாள முனைகிறது. ஏறக்குறைய கிளர்ச்சி அமைப்புக்கள் பயன்படுத்தும் ஆயுததளபாடங்கள் ரஷ்ய தயாரிப்புகள் என்பது தெரிந்த விடயமாகும். அதனால் ஈரான் மட்டுமல்ல ரஷ்யாவும் அத்தகைய அணுகுமுறையை பின்பற்றிவருவதென்பதே சர்வதேச அரசியலாகும்.

நான்கு, ஈரானின் அணுவாயுதக் கனவை எப்படியாவது தடுக்க முனையும் இஸ்ரேல் போரின் காரணமாக அத்தகைய நிகழ்வு ஏற்பட்டுவிடக் கூடாது எனக் கருதுகிறது. அதனால் எச்சரிக்கைகளை அவ்வப்போது மேற்கொள்வதில் கவனம் கொண்டு இயங்குகிறது. அதனை நோக்கி ஈரான் செயல்பட ரஷ்யா பங்காற்றும் என்பதுவும் இஸ்ரேல் தெரிந்து வைத்துள்ள விடயம். ஆதனால் ரஷ்யாவுடன் மோதுவதைக் காட்டிலும் ஈரானை எச்சரிக்கை செய்வதன் மூலம் கட்டுப்படுத்த முடியுமெனவும் இஸ்ரேல் கருதுகிறது. அதனால் தொடர்ச்சியாக அழிவுகளையும் நெருக்கடியையும் கொடுப்பதன் வாயிலாக அணுவாயுதத்திற்கான நகர்வுகளை தடுக்க முடியுமென்ற நோக்குடனேயே தாக்குதல்கள் அரங்கேற்றப்படுகின்றன. ஆனால் ஈரான் தற்போது அணுவாயுதத்தை தயார் செய்வதில் அதிக முனைப்புடன் செயல்படுவதாக தகவல்கள் உண்டு. அதற்கான மறைமுக ஆதரவை சீனா மற்றும் ரஷ்யா வழங்குவதாக தெரியவருகிறது.

ஈரான் மீதான தாக்குதல் அடையாளப்படுத்தப்பட்ட வகையில் அமெரிக்க இஸ்ரேல் கூட்டு முயற்சியாக அமைவதுடன் இஸ்ரேலிய புலனாய்வின் வலுவானது ஹமாஸ் உடனான போரில் நெருக்கடியை சந்தித்தாலும் பிராந்தியத்தில் இஸ்ரேலின் இருப்புக்கு பங்காற்றியபடியே உள்ளது. அது மட்டுமன்றி மேற்காசியாவில் அதிக நிலத்தின் வலுவைக் கொண்ட நாடுகளில் ஈரானும் ஒன்றாகும். அதுவே அதன் புவிசார் அரசியல் இருப்பாக உள்ளது. அதனால் ஈரானை, ஈராக் போன்று இஸ்ரேல் அமெரிக்க கூட்டினால் இலகுவில் கையாள முடியாதுள்ளது. அமெரிக்கா 1979 முதல் அத்தகைய நெருக்கடியை கொண்டுள்ளது. அதற்கு இன்னோர் வலுவான விடயம் அதன் மதக் கட்டமைப்பும் அதனூடான அரசியல் வலுவும் பிரதான இயங்குதிறன் கொண்டதாக அமைந்துள்ளது. அதனால் அதன் மீதான தாக்குதல்கள் சாத்தியமாகுமே அன்றி ஏனைய மேற்காசிய நாடுகளைப் போன்று கையாளுவது கடினமானதாகும். அது எப்போதும் ஈரானின் நிலப்பரப்பிலுள்ள அரசியலாகும். அத்தகைய அரசியலை சரிவரக் கையாள்வதில் அதன் அரசியல் தலைமைகள் செயல்படுகின்றன. அதுவே ஈரானின் பலமாகும். இதனை எதிர் கொள்வதிலேயே மேற்கு நாடுகள் அதிக நெருக்கடியை எதிர் கொள்கின்றன. தற்போது கூட ஈரான் நேரடியாக போரில் ஈடுபடாது. ஆனால் போரை நகர்த்துகின்றது. அதுவும் கிளர்ச்சி அமைப்புக்களை கையாளுவதன் வாயிலாக ஒரு நாட்டுக்கு எதிரான போரை நகர்த்துவதில் வெற்றி கண்டுவருகின்றன. இது அதன் அரசியல் தலைமைகளின் நகர்வாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும். இது முழுமையான வெற்றியை ஈரானுக்கு வழங்காது விடுத்தாலும் போரை நகர்துவதில் முனைப்பான செயல்பாடாகவே உள்ளது. இது சர்வதேச உறவுக்கான களமாகும். இதன் வளர்ச்சியே சர்வதேச அரசியலாகவுள்ளது.

எனவே நாடுகளை கையாளுவதும் அணி சேர்வதுவும் பிரித்து மோத வைப்பதும் அழிவுகளையும் சிதைவுகளையும் ஏற்படுத்துவதும் சர்வதேச அரசியல் என்பதை மறுக்க முடியாது. அதனிடம் நீதியோ நியாயமோ எதிர்பார்க்க முடியாது என்று ஹரேல் லக்ஸ்சி குறிப்பிட்டதே பொருத்தமானது. அது ஒன்றும் புனிதமானதல்ல. சர்வதேச அரசியல் என்பது மோதலுக்கானதும் போர்களுக்கானதும் வன்முறைக்கானதும் என்பதை புரிந்து கொள்ளுதல் வேண்டும். அதனிடம் உரிமையும் சுதந்திரமும் தராண்மைவாதமும் உண்டு என்பது ஒருபுறம் அமைய, மறுபக்கத்தில் வன்முறைமுகத்தையும் பிரதிபலிக்கிறது. அதனையே தற்போது மேற்காசியக் களத்தில் கண்டு கொள்ள முடிகிறது. அதில் ஈரான், இஸ்ரேல் முக்கிய போரிடும் சக்திகளாகவும் அவற்றுக்கான அணிகள் ஏனைய பெரு வல்லரசுகளாகவும் காணப்படுகின்றன.

மர்மம் சூழ்ந்த ஏழு தற்கொலைகள்!

மதத்தை ஆயுதமாக்கி தற்கொலைக்குத் தூண்டுவோரிடம் எச்சரிக்கையாக இருங்கள்!

நவம்பர் 18, 1978ஆம் ஆண்டு கயானாவில் நடந்த சம்பவம் இது. கயானாவின் கானக பகுதியில் சுமார் ஆயிரம் பேர் கூடியிருந்தனர். சாதாரணமானவர்கள் அல்ல. படித்தவர்கள்; பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள். அவர்கள் முன்பாக ஒரு மேடை. மேடையில் தோன்றுகிறார் ஜிம்ஜோன்ஸ். ஒரு மதபோதகர். தம்மை நோக்கி தீய சக்திகள் நெருங்கி வருவதாகவும், வேறு வழி இல்லாததால் அனைவரும் ஒரே சமயத்தில் உயிரைப் பறித்துக் கொண்டு மறு உலகில் நிம்மதியாக வாழ முடியும் என்றும் அவர் சொல்கிறார். கூட்டமும் அதை மௌனமாக அங்கீகரிக்கிறது.

அங்கு ஒரு பெரிய பாத்திரத்தில் விஷம் கலந்த பழரசம் வைக்கப்படுகிறது. முதலில் பெற்றோர் தமது குழந்தைகளுக்கு பழரசத்தை புகட்டுகின்றனர். பின்னர் அவர்களும் அருந்துகின்றனர். குடிக்க மறுக்கும் குழந்தைகளுக்கு பழரசம் ஊசி வழியாக வாய்க்குள் பீய்ச்சியடிக்கப்படுகிறது. தப்பிச் செல்ல முனைவோர் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். இச் சம்பவத்தில் 918 பேர் மரணமடைகின்றனர். இறுதியாக ஜிம் ஜோன்ஸ் தன்னைத் தானே சுட்டுக்கொண்டு இறக்கிறார். இறந்தவர்களில் 300 பேர் 17 வயதுக்குக் குறைந்தவர்கள்.

இச் சம்பவம் நிகழ்ந்து சில தினங்கள் கழிந்த பின்னரேயே வெளியுலகத்துக்கு இக்கொடிய சம்பவம் தெரிய வந்தது. பத்திரிகையாளர்களை சுமந்த ஹெலிகொப்டர் தாழ்வாக பறந்த போது பிணவாடை மூக்கைத் துளைத்ததாக பின்னர் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

ஜிம் ஜோன்ஸ் என்ற தீவிரவாத மத போதகர், அடுத்த உலகில் அமைதி காணலாம் என்றதும் நூற்றுக்கணக்கானோர் தாமே முன்வந்து இறந்து போன இச் சம்பவம், மதத் தீவிரவாதமும் மூட நம்பிக்கைகளும் மெத்தப் படித்தவர்களையும் பணிய வைக்கும் என்பதை வெளிப்படுத்தியது.

இரண்டாயிரமாம் ஆண்டின் பிறப்பு பேரழிவை ஏற்படுத்தும் என்று பலர் நம்பியிருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். சிலர் தற்கொலை செய்து கொண்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

1993ஆம் ஆண்டு அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தின் வெகோ என்ற இடத்தில் ஆசிரமம் அமைத்திருந்த டேவிட் கொரேஷி தன்னை இறைவனின் இறுதி தீர்க்கதரிசி என அழைத்துக் கொண்டார். ஆயிரக்கணக்கானோர் அவரை நம்பினர். அவர் ஒரு கோட்டையை அமைத்து குடும்பங்களை குடியேற்றினார்.

அங்கு அவர் சொல்வதுதான் சட்டம். கிறிஸ்து எப்போது வேண்டுமானாலும் திரும்பி வருவார் என்பதால் அந்நாளுக்கு தயாராக, தம்மை புனிதப்படுத்திக் கொண்டு காத்திருக்க வேண்டும் என்பது அவர் போதனையின் சாராம்சம். நிறைய ஆயுதங்களை கொரேஷ் குவித்து வைத்துள்ளார் என்ற தகவல் தெரியவரவே, பொலிசார் முற்றுகையிட்டனர். 51 நாள் முற்றுகையின் பின்னர் அக் கோட்டைதீப்பற்றிஎரியஆரம்பித்தது. மொத்தம் 86 பேர் மரணமடைந்தனர். தன்னைத்தானே சுட்டு டேவிட் கொரேஷ் தற்கொலை செய்து கொண்டார்.

மதத்தைத் தவறாகப் புரிந்து கொண்டவர்கள் ஆடிய ஆட்டத்தால் எத்தனை அப்பாவிகள் உயிரிழந்தனர் என்பதை இவ்விரு சம்பவங்களும் சொல்கின்றன. உலகின் எந்தவொரு மதமும் தற்கொலையை ஊக்கப்படுத்துவதில்லை. கடவுளை தற்கொலை மூலம் மறு உலகில் சந்திக்கலாம் மறுவருகையின்போது மக்கள் தம்மை தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் மத நூல்களில் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

எனினும், இஸ்லாத்திலும் கிறிஸ்தவத்திலும் நல்லவர்களும், பாவமன்னிப்பு பெற்றவர்களும் சுவர்க்கம் செல்வார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இந்த மறு வாழ்க்கையைப் பயன்படுத்தியே மதத்தீவிரவாதிகள் இஷ்டத்துக்கு கதைவிட்டு தமது பக்தர்களைத் தவறாக வழிநடத்த முற்படுகின்றனர். இதே சமயம் இந்து மதத்திலும் பௌத்தத்திலும் சுவர்க்க வாழ்க்கை பற்றி பெரிதாக எதுவும் இல்லை. பதிலாக, மறுபிறப்புகள் மூலம் ஆத்ம மேம்பாடு அடைந்து பரம்பொருளில் கலக்கலாம்; நிர்வாணமடையலாம் என்றே கூறப்பட்டுள்ளது. அங்கும் மூட நம்பிக்கைகளும், தவறான புரிதல்களும் மற்றும் தீவிரவாத சிந்தனைகளும் சிலரிடம் காணப்பட்டாலும் நாம் மேலே பார்த்த கோர மதம் சார்ந்த படுகொலைகள் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

இலங்கையில் மதரீதியான ஏமாற்றுவோர் தகிடுதத்தங்கள் மற்றும் நரபலி சம்பவங்கள் நிகழ்ந்திருந்தாலும் பெரிய அளவில் மத ரீதியான தற்கொலைகள் நிகழ்வதில்லை.

அருள் சத்தியநாதன்

முதல் தடவையாக இவ்வகையில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலாக 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு சம்பவத்தை சொல்லலாம். சஹ்ரான் என்பவர் மத வெறியால் இஸ்லாத்தைத் தவறாக புரிந்து கொண்டவர். ஆனால் தனது தவறான புரிதலை சரியானது என்று ஏனையோரை அவரால் நம்ப வைக்க முடிந்தது. ஜிம் ஜோன்ஸ், டேவிட் கொரேஷ் போன்றோரிடம் பொதுவாகக் காணப்பட்ட ஒரு அம்சம். அவர்களின் பேச்சுத்திறன் மற்றும் நம்பச் செய்யும் திறன். ஹிட்லர், முசோலினி ஆகியோரின் ஆக்ரோஷமான சொற்பொழிவுகளைக் கேட்போர் மறுபேச்சின்றி அவர்களை பின்பற்றத் தொடங்கியதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

மஹரகமையில் உயிரிழந்த அம்பலாங்கொடை இளைஞன்

சஹ்ரானை பின்பற்றி அவர் சொற்படி உடலில் வெடிகுண்டுகளைத் தாங்கிச் சென்றோர் படிப்பறிவற்றவர்கள் அல்ல. உயர்கல்வி கற்று, தொழிலதிபர்களாகவும், நல்ல வருவாய் பெறுபவர்களாகவும் விளங்கியவர்கள். தாம் செய்வது புண்ணிய காரியம் எனவும் மறு உலகில் கவனிப்புக்கு ஆளாவோம் என்றும் மனமாற நம்பியவர்கள்.

இதை இலங்கையில் நிகழ்ந்த முதல் மதரீதியான தற்கொலைத் தாக்குதல் என்றால் இத்தகைய இரண்டாவது தற்கொலை சம்பவங்கள் கடந்த வாரம் அரங்கேறின. இச் சம்பவங்கள் எவ்வளவு பாரதூரமானவை என்பதை மக்கள் புரிந்து வைத்திருக்கிறார்களா என்பதை மிகச் சரியாக உணர முடியவில்லை.

மஹரகமை கஹான்தொட்டை (மாலபே)யைச் சேர்ந்த 46 வயதான ருவன்பிரசன்ன குணவர்தன வாட்டசாட்டமான தோற்றம் கொண்ட ஒரு செல்வந்தர். பொலன்னறுவை பகுதியை சேர்ந்தவர். மனைவி மூன்று குழந்தைகள். வெளிநாடு செல்லும் நோக்கத்துடன் தன் சொத்துக்களை விற்று கொழும்பு வந்தவர். மாதம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வாடகைக்கு வீடமர்த்தி குடியேறியவர். இவரை மத போதகராகவே மக்களுக்கு வெளியுலகுக்கு தெரியும். கொழும்பு, காலி, குருணாகல் பகுதிகளில் மத போதனைகளை இவர் செய்து வந்துள்ளார். சமூக வலைத்தளங்களில் இவரது ஆன்மீக சொற்பொழிவுகள் சிலவற்றைக் காண முடிகிறது. அவரது பேசும் முறை வீராவேசமாகவோ ஆகர்ஷிக்கும் வகையிலோ அமைந்திருப்பதாக கருத முடியவில்லை.

இவர் தனது உரைகளில் தற்கொலை எண்ணத்தைத் தூண்டும் எண்ணங்களை விதைத்து வந்திருக்கிறார். தன் போதனைகளுக்கு இடையிடையே, இந்நாடு சீரழிந்து விட்டது. நாம் படுகுழியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். விமோசனமொன்று தென்படுவதாகவும் தோன்றவில்லை.

21ஆம் பக்கம் பார்க்க...



தினகரன் THINAKARAN | தினகரன் வாரமஞ்சரி | ஊடக அனுசரணையுடன் | SHANGKAVI FILMS

டவர் மண்டப நாடக விழா

மாற்றமுறும் உலகுக்கு ஏற்ப மாசற்ற ஊடக கலாசாரத்துடன் கடந்த 90 வருட காலமாக வாசகர்களின் நெஞ்சங்களை கவர்ந்து வரும் பத்திரிகை தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகை. கலைஞர்களை ஊக்கப்படுத்த கலைஞர்களின் பேட்டிகளையும் கலைஞர்கள் தொடர்பான செய்திகளையும் பிரசுரித்து வரும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகை, வரலாற்றில் முதற்தடவையாக அரச நாடக விழாவொன்றுக்கு ஊடக அனுசரணை வழங்கி கலைஞர்களையும் அதனை நடத்திய டவர் மண்டப அரங்க மன்றத்தையும் கல்வி அமைச்சையும் உற்சாகப் படுத்தி கடந்த 2023.12.28ஆம் திகதி கொழும்பு 10, மருதானை, எல்பின்ஸ்ட்டன் மண்டபத்தில் நடைபெற்ற டவர் மண்டப நாடக விழாவுக்கு ஊடக அனுசரணை வழங்கியது. இவ்விழாவில் வெற்றிக் கொடி கட்டிய கலைஞர்களுக்கு ஜூரி விருதுகளை வழங்க சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தினது பணிப்பாளரும் மன்னார், பேசாலை சங்கவி தியேட்டர் உரிமையாளருமான துரைராசா சுரேஸை, அனுசரணையாளராக்கிய பெருமையும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளையே சாரும்.

அதுமட்டுமன்றி, திருமதி இளங்கோவன் செல்வராணியை ஆசிரியராகக் கொண்டு இயங்கும் வத்தளை கலைத்தென்றல் நாட்டியக் கலா நிலைய மாணவிகளின் நடனத்தை இவ்விழாவில் மேடையேற்ற சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்துடன் உறுதுணையாக இருந்ததும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையே.

பயன்நிறை பணிகளால் தன் பெயர் பொறித்த 'பெரியதம்பி ரீச்சர்'

எளிமையான தோற்றம் அத்தோற்றத்துள் ஆன்றவிந்த அறிவின் துலக்கம்; அனுபவ முதிர்ச்சியால் கனிந்த கம்பீரம் அரவணைத்திடு பண்புநிறை கருணை; வழிகாட்டிடவல்ல மதிநுட்பமென நிகரில்லா ஆளுமையாய் சங்கரத்தை, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் தன் முத்திரையை வலுவாய்ப் பதித்தவர் 'பெரியதம்பி ரீச்சர்' என அனைவராலும் அறியப்பட்ட செல்வி சரஸ்வதி பெரியதம்பி. அன்னார் தனது எண்பத்தாறாவது வயதில் கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார். ஆசிரியரான 'பெரியதம்பி ரீச்சர்' கல்வி, சமய, சமூகப் பணிகளில் இளமைக்காலம் முதலே தன்னை ஈடுபடுத்தி இறுதிவரை அர்ப்பணிப்புடன் வாழ்ந்தவர். அமரர் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்', கர்மயோகியாய் வாழ்ந்தவர் என்பது மிகையானதல்ல. சங்கரத்தை, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் இவரைத் தெரியாதவர்கள் இல்லை என்னுமளவிற்கு சிறுவர் முதல் பெரியோர்வரை அனைவராலும் அறியப்பட்டவராக விளங்கியவர். அன்னாரது இழப்பு, குறித்த கிராமங்களுக்குப் பேரிழப்பாகும்.

இன்று வட்டு. மத்திய கல்லூரியாக விளங்கும் வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாசாலையில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்த செல்வி சரஸ்வதி பெரியதம்பி, ஆசிரியப் பயிற்சியை நிறைவு செய்துகொண்டு திருகோணமலையில் தனது ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார். பின்னர் 1980ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திரும்பி, வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாசாலையில் மீண்டும் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். அன்று முதல் 1997ஆம் ஆண்டில் ஓய்வு பெறும்வரை நிறைந்த பணிகளைப் பாடசாலைக்குத் தந்து பாடசாலையின் எழுச்சியில் பங்குதாரராக விளங்கினார்.

வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாசாலையைப் பொறுத்தவரையில் 1980 தொடக்கம் 2000களின் ஆரம்பம் வரையான காலப்பகுதி முக்கியத்துவம் மிக்க காலப்பகுதியாக விளங்கியது. அக்காலப் பகுதியில்தான் பாடசாலை துரிதமான வளர்ச்சியைக் கண்டது. அவ்வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் உழைத்தவர்களில் செல்வி.ச. பெரியதம்பியும் ஒருவர். பாடசாலை வரலாற்றில் தடம்பதித்த முக்கிய அதிபர்களான அமரர் சு. சிவவாகீசர், வி.சிவஞானபோதன் ஆகியோரின் காலங்களில் அவரகளுக்கு உறுதுணையாக உழைத்தவர் செல்வி பெரியதம்பி என்பது யாவரும் அறிந்ததே. பாடசாலையில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, ஆரம்பப் பிரிவின் பொறுப்பாசிரியராக, உப அதிபராக என பல நிலைகளிலும் பணியாற்றி உயர்ந்த பட்ச பங்களிப்பினை வழங்கியவர். ஞானசம்பந்தர் வீதியில் இயங்கிவந்த பாடசாலை இடப் பற்றாக்குறை காரணமாக, புதிய இடமொன்றைத் தேடியது. அவ்வேளையில், 1980களின் ஆரம்பப் பகுதியில் நவாலி வீதியில் அமைந்திருந்த 'வெங்காயச் சங்க'த்திற்குச் சொந்தமான கட்டடத்தைப் பெற்று, பாடசாலையின் ஆரம்பப் பிரிவை அங்கு மாற்றுவதற்காக உழைத்த பாடசாலைச் சமூகத்தோடு தோளொடு தோள் கொடுத்து உழைத்தவர். பின்னர் நவாலி வீதியில் சங்கக் கட்டடத்துக்கு அருகிலிருந்த காணியை பாடசாலைக்குரியதாக்கி, புதிய கட்டடமமைத்து பாடசாலையின் இடைநிலைப் பிரிவை அங்கு மாற்றி, ஆரம்பப் பிரிவை ஞானசம்பந்தர் வீதிக்குக் கொண்டுசென்ற போதும் அர்ப்பணிப்புடன் ஒத்துழைத்தார்.

பாடசாலையின் பழைய மாணவியான அன்னார் பாடசாலைப் பழைய மாணவர் சங்கத்தின் மூத்த உறுப்பினராவார். பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளராகவும் முக்கிய உறுப்பினராகவும் நீண்ட காலம் பணியாற்றிய செல்வி பெரியதம்பி தனது ஓய்வுக்குப் பின்னரும் கௌரவ உறுப்பினராக நிறைந்த பங்களிப்பை வழங்கியுள்ளார். 2000களின் ஆரம்பத்தில் பாடசாலையைக் கல்லூரியாகத் தரமுயர்த்தி, க.பொ.த உயர்தரப் பிரிவினை ஆரம்பித்து, வட்டு. மத்திய கல்லூரியாக பெயர் மாற்றம் செய்யும் முயற்சிகளின் போது, தான் ஓய்வு பெற்றபின்னரும் அர்ப்பணிப்போடு பங்காற்றியமை மறக்கவொண்ணாதது. 1986இல் பாடசாலை மணிவிழாக் கொண்டாடியபோது மணிவிழாச் சபையின் பொருளாளராகவும் 2001ஆம் ஆண்டு வட்டு. மத்திய கல்லூரியாக பவளவிழாவினைக் கொண்டாடிய போது பவள விழாச் சபையின் உப. தலைவராகவும் இருந்து பெரும்பணியாற்றியவர். பாடசாலையில் மணிவிழாக் கட்டடம், பவள விழாக் கட்டடம் உள்ளிட்ட பல கட்டடங்களின் பின்னால் அன்னாரின் வியர்வையும் இருப்பது மறுக்கமுடியாதது.

பாடசாலைக்கு வெளியிலும் தனது பெறுமதியான பணிகளை வழங்க அமரர் தவறவில்லை. கிராமங்களின் ஆலோசகர் போல தொழிற்பட்ட அம்மையார் தேவையான ஆலோசனைகளை வழங்கி இளைஞர்களையும் அல்லலுற்றோரையும் வழிப்படுத்தினார். வட்டுக்கோட்டையில் இந்து வாலிபர் சங்கம் சார்ந்தும், சங்கரத்தையில் முருகன் கோயில் சார்ந்தும் தனது சமூக, சமயப் பணிகளை முன்னெடுத்தார். முன்பள்ளி, அறநெறிப் பாடசாலைகள் முதலியவற்றுக்குத் தனது பங்களிப்பினை வழங்கினார். சங்கரத்தை ஆஞ்சநேயர் கோயில் பராமரிப்பில் அக்கறையோடு செயற்பட்டார். இவ்வாறு பலநிலைகளிலும் பணியாற்றிய அன்னாரின் மாணவர்கள் இன்று மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக, பேராசிரியர்களாக, அதிபர்களாக, ஆசிரியர்களாக எனப் பலநிலைகளிலும் உயர்ந்துள்ளனர் என்பது ஆசிரியரின் பெரும்பணிக்கு மற்றொரு சான்றாகும். அன்னாரின் மறைவு பலருக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

துணவியூர் கேசவன்

மெல்லக் கொல்லும் லன்ச் சீற்

நாம் உட்கொள்ளும் உணவை மிகவும் சுலபமாக பொதி செய்து வெளியில் எடுத்துச் செல்வதற்காக எமது நாளாந்த பாவனையில் லன்ச் சீற்களை (Lunch Sheet) அதிகளவில் பயன்படுத்தி வருகின்றோம். வாழ்க்கை நடைமுறையில் எமது வேலைகளை இலகுவாக்க முனைகின்றோமே தவிர, லன்ச் சீற் பாவனையால் ஏற்படும் பாதகம் பற்றி எவரும் எண்ணிப் பார்ப்பதில்லை. உலகில் லன்ச் சீற் பாவனை இல்லாத போதும், எமது நாட்டில் இதன் பாவனை அதிகளவில் காணப்படுவதை சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளதுடன், இதன் பாவனையை தடை செய்வதன் அவசியத்தையும் வலியுறுத்தி வருகின்றனர். அந்த வகையில், எமது நாட்டில் லன்ச் சீற் பாவனையால் ஏற்படும் தீமைகளை பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டி, லன்ச் சீற் பாவனைக்கு பதிலாக மாற்றுத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்தும் வேலைத் திட்டத்தின் ஒருபகுதியாகவே லன்ச் சீற் பாவனையை தடை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கான மாற்றுத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக 6 மாதகால அவகாசத்தை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் பரிந்துரைத்தது.

லன்ச் சீற் பாவனையால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் அதிலுள்ள தலேட் எனப்படும் புற்றுநோய்க் காரணி மனித உயிருக்கு ஏற்படுத்தும் ஆபத்து தொடர்பாக அதிகூடிய கவனம் செலுத்தப்பட்டதை தொடர்ந்தே லன்ச் சீற் பாவனையை தடை செய்வதற்கு இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறாண அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு பரிந்துரைத்தது.

இதற்கிடையில், பிளாஸ்டிக் பாவனை தொடர்பான மாநாடொன்று எதிர்வரும் மார்ச் 7ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இதன்போது மைக்ரோ பிளாஸ்டிக், பிளாஸ்டிக் பாவனையால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் சுகாதார சீர்கேடு, பிளாஸ்டிக் பாவனையால் ஏற்படும் சமூக, பொருளாதாரதாக்கம், பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம், பிளாஸ்டிக் பாவனைக்கு பதிலாக மாற்றுத் திட்டம் ஆகிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

லன்ச் சீற் பாவனையால் ஏற்படும் தீமைகள், லன்ச் சீற் பாவனைக்கு பதிலாக மாற்றுத் திட்டத்தை அறிமுகப்படுத்துவது தொடர்பாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கட்டமைப்பு பொறியியல் திணைக்களத்தின் சுற்றுச்சூழல் பொறியியல் பீட பேராசிரியரும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் கற்கைகள் மற்றும் நிலைபேண் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளருமான பந்துனி அத்தபத்து தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைக்கு கருத்து வெளியிட்ட போது,

மைக்ரோபிளாஸ்டிக்கை கொண்டமைந்த லன்ச் சீற் மிகவும் மெல்லியதாக இருப்பதுடன், பாவனைக்கு மிகவும் இலகுவாகவும் உள்ளது. அத்துடன், தற்போது லன்ச் சீற் இலகுவில் கிடைக்கக்கூடியதாகவும் உள்ளது. இதனால் பெரும்பாலானோர் தமது நாளாந்த பாவனையில் லன்ச் சீற்றை அதிகளவில் பாவித்து வருகின்றனர்.

ஆயினும் உண்மையில் லன்ச் சீற் பாவனை மனித பாவனைக்கு இன்றியமையாதென்பதுடன், இது மனித ஆரோக்கியத்துக்கு மிகவும் ஆபத்தாகும். லன்ச் சீற் பாவனை மனித வாழ்வில் உடனடி பாதிப்பை ஏற்படுத்தாவிடினும், நாளடைவில் இது பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். லன்ச் சீற் பாவனையாலும் எமது தேக ஆரோக்கியம் பாதிக்கப்படும். இது மெல்லக் கொல்லுமெனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக பேராசிரியர் மேலும் கருத்து வெளியிட்ட போது,

எமது நாட்டில் பொதுவாக, ஒரு மில்லியன் முதல் 1.5 மில்லியன்வரை பாவிக்கப்பட்ட லன்ச் சீற்கள் நாளாந்தம் வெட்டித் தாக்கப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையிலேயே எமது நாட்டில் லன்ச் சீற் பாவனையை தடை செய்து, மாற்றுத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

லன்ச் சீற் பாவனையை தடை செய்யும் போது, எமது சமுதாயத்தினர் பழைய நடைமுறைகளை கடைப்பிடிக்க முற்படுவர். முன்னர் பயன்படுத்தியது போன்று வாழைஇலை, தாமரை இலை, தேக்கம்இலை ஆகியவற்றை உணவை பொதி செய்வதற்கு பாவிக்க முற்படுவர். அத்துடன், பனை ஓலையினால் இழைக்கப்பட்ட பெட்டிகளையும் பாவிக்க முற்படுவர். மேலும், வாழைஇலையை ஒருமுறை மாத்திரமே பாவித்து வந்த நிலை போக, அதை மீண்டும் மீண்டும் கழுவிப் பாவிக்கும் முறையை சந்தையில் அறிமுகம் செய்யவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. உணவை லன்ச் சீற்றில் பொதி செய்து கொண்டு செல்வதற்கு பதிலாக எவர்சில்வர், செரமிக் பாத்திரங்கள் உள்ளிட்டவற்றையும் பாவிக்க முடியும். மேலும், உணவை பொதி செய்வதற்காக பல புதிய மாற்றுத் திட்டங்களை மக்கள் கண்டுபிடித்து, அத்திட்டங்களை கையாள முற்படுவர்.

பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கை திறந்த பல்கலைக்கழகமும் விழிப்புணர்வு திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. லன்ச் சீற் பாவனையை தடை செய்து மாற்றுத் திட்டத்தை கையாள்வதற்கு மக்களை நாம் ஊக்கப்படுத்துவதுடன், மக்கள் தமக்கு தெரிந்த மாற்றுத் திட்டங்களை எம்மிடம் முன்வைக்கலாம்.

லன்ச் சீற் பாவனையின் தீமையை உணர்ந்து, லன்ச் சீற் பாவனையை ஒழிப்பதற்கு மக்கள் எம்மோடு இணைவார்களென்று நாம் எதிர்பார்ப்பதுடன், எமது நாட்டில் பசுமை அபிவிருத்திக்கான வேலைத்திட்டத்துக்கும் மக்கள் கைகோர்ப்பார்களென்றும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். எமது நாளாந்த வாழ்க்கையில் எமது தேக ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிக்காத நடைமுறைகளைக் கடைப்பிடித்து, இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையை கடைப்பிடிப்போமாக.

ஆர்.சுகந்தினி

துயா் தாங்கும் மனையாள்

சுபஹூத் தொழுகைக்கான அதான் ஒலித்ததும் விழித்துக் கொண்டாள் சகீனா. கட்டிலிலிருந்து எழுந்து வர விருப்பமின்றிப் புரண்டு கொண்டிருந்தாள். நேரம் மெது மெதுவாக நகர்ந்து சென்றது.தொழ வேண்டும், சமைக்க வேண்டும் பரபரப்போடு எழுந்து உட்கார்ந்தாள்.

பின்னர்... வுழூச் செய்து சுபஹூத் தொழுகையைத் தொழுது முடித்துவிட்டுச் சமையலை தொடர்ந்தாள்.

என்னை விடு...என்னை விடு..! என்னைக் கொல்லாதே..! அவலக் குரலைத் தொடர்ந்து அழுகுரலும்,பெரிய தொனியில் சப்தமிட்டுப் பேசுவதைக் கேட்டு நடுநடுங்கினாள் சகீனா. என்ன நடந்தது..? காதைக் கூர்மையாக்கி உற்று நோக்கினாள். பின் ஓடிச் சென்று யன்னலைத் திறந்து பார்த்தாள். எதுவுமே நடந்ததாகத் தெரியல.

பொழுது புலர்ந்தது. மீண்டும் அதே குரல் என்னைக் கொல்லாதே..! சகீனாவின் உள்ளம் பயத்தால் ஓராயிரம் தடவைகள் டக்டக்கென அடித்துக்கொண்டது. அவளுக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. நடுக்கம்நின்றபாடில்ல. அப்போது.... சுபஹூத் தொழுகையை முடித்துக் கொண்டு மகன் டில்சாத் சமையலறையை நோக்கி வந்தான். சகீனா நடந்த விடயங்களைக் கூறினாள்.

உம்மா..! ஒரு வாரமாக உஸ்மானுக்குச்சுகமில்ல. அவர் உண்பதுமில்ல, உறங்குவதுமில்லை. இரவு பகலாகப் பேசிக் கொண்டே இருக்கிறார். இவரால வீட்டிலுள்ளவர்களுக்கு நிம்மதி இல்லையாம். சாப்பாடு கொடுத்தாலும் நஞ்சைப் போட்டுத் தருவாங்க எனக் கூறி சாப்பிடுவதையும் நிறுத்திக் கொண்டாராம். மகன் கூறுவதைக் கேட்கச் சகீனாவுக்கு வேதனையாக இருந்தது. வயசு போன காலத்தில எல்லாரையும் கஷ்டப்படுத்துகிறார். அல்லாஹ் தான் அவருக்கு நல்ல ஈமானைக் கொடுக்கணும் என்றவாறு அவசர அவசரமாகச் சமையலைத் தொடர்ந்தாள்.

இப்போதெல்லாம் இவரது கதறல் பழக்கப் பட்டுவிட்டது. ஒரு நாள் இரவு... டேய்...வாங்கடா....!

இவனக் கொல்லுவோம். இளைஞர்களை அழைத்து அவர்களிடம் முறையிட்டுக் கொண்டிருந்தார். இவன் சரியான கள்ளன். கம்பனியிலுள்ளதை எல்லாம் சுருட்டிக் கட்டி வீட்டுக்குக் கொண்டு வந்திடுவான். இவனப் பிடித்துத் தாங்க. கண்டதுண்டமாக வெட்டுறன். அப்பத்தானடா ஏன்ட மனசு ஆறும். இவரின் கதையைக் கேட்டு இளைஞர்கள் வாய் விட்டுச் சிரித்தனர். உஸ்மானின் ஒரு கையில் பெரியதொரு தடி. மறு கையில் கத்தி. வாங்கடா...இவனக் கொல்லுவோம். வாய் ஓயாமல் கூறிக் கொண்டிருந்தார். தம்பிமார்களே..! சிரிக்காதிங்கடா..! கையிலே ஆபத்தான பொருட்கள் உள்ளன. கவனம்..!முதலில் கையில உள்ளதைப் பறியுங்க. இது உஸ்மானின் காதில் விழுந்தது. நீ என்னடா கதைக்கிறாய்..? ஒனக்கு என்ன செய்றன் பாரு..! துரத்திச் சென்றார். நின்றவர் சற்றும் எதிர் பார்க்கவில்லை. தப்பினேன், பிழைத்தேன் என ஓட்டம் பிடித்தார். இளைஞர்கள் அவ்விடத்தை விட்டகன்றனர்... டேய் தம்பிமாரே.... எங்கே போறீங்க..? நானும் வாறேன்..! அவர்களின் பின்னால் சென்றார். இளைஞர்களின் பெயர்களை ஞாபகத்தில் வைத்துக் கொண்டார். ஒவ்வொருவரின் வீட்டுக்கும் சென்று நள்ளிரவில் கதவைப் பலமாகத் தட்டினார். வீட்டுக்காரர் என்னவோ.. ஏதோவெனத் திடுக்கிட்டு விழித்தார். இது தொடர்ந்தது. தாய்மார் தம் மகன்மாருக்கு ஏசத் தொடங்கினர். வீதியில் நிற்பதும், உஸ்மான் பேசுவதைக் கேட்டுச் சிரிப்பதுமே வேலை. அதனால தேடி வரத் தான் செய்வார். அவரச் சொல்லிக் குத்தமில்ல. நாம தான் யோசிக்கனும். பெற்றோர் எச்சரித்தனர். உஸ்மானின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தன. பிள்ளைகள் என்ன செய்வதென்று தெரியாது திண்டாடினர். வைத்தியசாலைக்குச் செல்வதற்கும் மறுத்தார். கடைகளுக்குச் சென்று ஏதாச்சும் தாங்க. பசி வயித்தக் கிள்ளுது. ஏன்ட பொண்டாட்டி எனக்குச் சாப்பாடு தராமல் பட்டினி போடுகிறாளென பழி கூறினார். இவரைப் பற்றிஅறியாதவர்கள்,என்ன பொண்டாட்டியிவள்.?. கணவனைப் பார்க்காதவள் வேற யாரைப் பார்க்கப் போகிறாள்..? என வாய்க்கு வந்தவாறு பேசத் தொடங்கினர். சும்மா கதைப்பவர்களுக்கு அவல் கிடைத்தால் கேட்கவும் வேண்டுமா..?

உஸ்மானின் மனைவி மிகவும் அமைதியானவள். கதைப்பது பக்கத்திலுள்ளவர்களுக்கும் கேட்காது. தானும் தன் பாடுமாக இருப்பாள். இவர்களுக்கு ஐந்து பிள்ளைகள். அவர்களைப் படிக்கவைக்க, சாப்பாட்டுக்கு, உடுப்பு வாங்க என வாழ்க்கைப் பட்டியல் நீண்டு சென்றதே தவிர, அதற்கான வருமானம் ஏதுமில்லை.

உஸ்மான் எதுவித வேலையுமின்றி வீட்டு மாப்பிள்ளையாகவே இருந்தார். சகீனா எதையும் அலட்டிக் கொள்வதில்லை." கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன்" எனும் கோட்பாட்டுக்கமையவே வாழ்ந்தாள். வீடு வீடாகச் சென்று பாத்திரம் தேய்த்து, வீடு வாசல் பெருக்கி, துணிகள் துவைத்து, சமையல் செய்து வரும் வருமானத்தில் பிள்ளைகளையும், புருஷனையும் கண்ணை இமை காப்பது போலக் காத்து வந்தாள். போதாதற்கு.... வீட்டில் அப்பம் அவித்துக் கடைகளுக்கும் கொடுத்தாள். அவள் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. எல்லாவற்றையும் பொறுமையோடு சகித்து வந்தாள். பிள்ளைகளும் கல்வியால் உயர்ந்தார்கள். வேலை வாய்ப்புகளும் தேடி வந்தன. அவர்களுக்கேற்ற தாயையும் தந்தையும் தம்மோடு சேர்ந்து கொள்ளுமாறு பிள்ளைகள் கேட்டுக் கொண்டனர். அதனை உஸ்மான் வெறுத்தார். தான் மௌத்தாகும் வரை தன்னோடிருந்து தனிக் குடித்தனம் நடாத்தவே விரும்பினார். கணவனின் விருப்புகிணங்கச் செயற்பட்டாள். வயது செல்லச் செல்ல முன்பிருந்த சுறுசுறுப்பும், உற்சாகமும் குறைந்து நோயாளியானாள். மாதம் ஒரு முறை வைத்தியசாலைக்குக் "கிளினிக்" சென்று வந்தாள். உஸ்மான்தான் நினைத்த நேரத்தில் தேத்தண்ணி கேட்டு அடம்பிடிப்பார். அவளோ...எழுந்திருக்க முடியாவிட்டாலும், தட்டுத்தடுமாறி எழுந்து சென்று தேநீர் ஊற்றிக் கொடுப்பாள். ஒரு நாள்...

முகங் குப்புறத் தள்ளி விட்டார். சகீனா அருகிலுள்ள கதவு நிலையில் அடிபட்டு இரத்தம் பீறிட்டுப் பாய்ந்ததும் மூர்ச்சையானாள். பிள்ளைகள் வாய்விட்டுக் கதறியழுதனர். அக்கம் பக்கத்திலுள்ளோர் ஓடி வந்தனர். முகத்தில் நீரைத் தெளித்தனர். சகீனா மெதுவாகக் கண் திறந்தாள். வைத்தியசாலைக் கொண்டோடினர். பிரசர் கூடிச் சென்றது அம்பாவிப் பெண்ணை அநியாயமாகக் கொல்லப் பார்க்கிறார். அவர் கண்ணில் படாமல் எங்காவது மறைந்து வாழ வையுங்கள் என உறவுகளும், சொந்தங்களும் துடித்தன. எல்லோருக்கும் அது சரியாகவே பட்டன. இனியும் தந்தையின் அட்டகாசத்தைப் பொறுக்க முடியாது. இவரில்லாத நேரம் பார்த்துத் தாயை மகள் அழைத்துச் சென்றாள். வீட்டுக்கு வந்த தந்தை, தாயைக் காணாது துடித்தார். பிள்ளைகளிடம் விசாரித்தார்.தெரியாது என்ற பதிலைத் தவிர வேறெதுவும் வரவில்லை. தன் மனைவியைச் சந்து பொந்தெல்லாம் தேடினார். என் மனைவி என்னை விட்டு எங்கோ ஓடி விட்டாள். சகீனா இல்லாமல் என்னால வாழ முடியாது. தலையிலடித்துக் கதறினார். வருவோர், போவோரிடம் என் மனைவியைக் கண்டனீங்களா..? அவள் என்னைத் தவிக்கவிட்டு யாரோடு ஓடிவிட்டாள். நான் தனித்து விட்டேன். வீதி..வீதியாகப் புலம்பத் தொடங்கினார். இவரைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமம். கையையும், காலையும் கட்டி அறைக்குள் அடைத்து வைத்தனர். என்னைக் கொல்றங்க..! காப்பாத்துங்க..! எனக் கூக்குரலிட்டார்.

நீங்க உங்க மனைவிக்குச் செய்த அநியாயத்தால கட்டிப் போட்டிருக்கிறார்கள். எல்லா ஆம்பிளைகளையும் போலிருந்தால்..ஏனிப்படிச் செய்றாங்க..? இன்னுஞ் சிலர் பாவம்..! தகப்பனல்லவா..?இவ்வாறு செய்யலாமா..? இந்தப் பொல்லாத பாவம் உங்களச் சும்மா விடாதெனத் திட்டித் தீர்த்தனர்.கொடுக்கும் சாப்பாடு எதையும் சாப்பிட மறுத்தார். உடல் பலவீனமானது. நான் மௌத்தாகும் முன்னர் என் மனைவியைப் பார்க்க வேண்டும். படுத்த படுக்கையாகப் பேச்சு மூச்சற்றுக் கிடந்தார்.

இது இவரின் இறுதி மூச்சாக இருக்குமோ..எனப் பயந்து தாயை அழைத்து வந்தனர். என்னை மறந்து எங்கே போனாய்..? என்னைத் தனிமையில் விட்டுச் செல்லாதே..! சின்னப் பிள்ளை போல அழுதார். சகீனாவுக்குத் தான் பெரியதொரு தவறு செய்ததாக உள் மனம் சுட்டிக் காட்டியது. இனிமேல் உங்கள விட்டு எங்கேயும் போக மாட்டேன். எனக்கு ஒண்ணுமில்லடி. ஒன்ன வரவழைக்கவே இவ்வாறு நடிச்சேன். ஹஹ்..ஹா..எனக் குலுங்கிக் குலுங்கி சிரித்தார். அருகில் நின்றவர்களுக்குக் கன்னத்தில் ஓங்கி அறையணும் போலிருந்தது. இவரை நம்பித் தாயை எவ்வாறு விட்டுச் செல்வது..? பிள்ளைகளிடத்தில் கேள்வி மேல் கேள்வி எழுந்தது.

இதற்குப் பிறகும் உம்மாவைக் கொடுமைப் படுத்தினீங்கன்னா.. நாங்க சும்மா இருக்க மாட்டோம். உங்கள முதியோர் இல்லத்தில் சேர்த்திட்டுத் திரும்பியும் பார்க்கமாட்டோம்.

நான் அவள ஒன்னும் செய்ய மாட்டேன். தந்தையின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து தாயை விட்டுச் சென்றனர். தாயின் வீட்டுக்கருகில் ஒரு மகளிருப்பதால் பார்த்துக் கொள்வாள் எனும் தைரியம் மற்றச் சகோதரர்களின் உள்ளத்திலிருந்தது. ஏதும் விபரீதம் நடந்தால், உடனடியாகத் தகவலனுப்புங்க. நாம் உம்மாவை அழைத்துச் செல்கிறோம் என்றனர். ஒரு வாரமாக எவ்விதப் பிரச்சினையுமில்லை.

மனைவி வந்ததும் அடங்கி விட்டாரெனச் சந்தோசப்பட்டனர். அது நீடிக்கவில்லை. மறு வாரமே பழைய குருடி கதவைத் திறவடி. மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவளின் கால்களைப் பிடித்துச் சரசரவென இழுத்துச் சென்றார். என்னை விடுங்க. என்ன வேணும்..? சமைத்துத்தாடி..! நீங்க கேட்பதைச் சமைத்துத் தாரேன். என்னை விடுங்க. அவர் விடுவதாக இல்லை.

அவளால் அழுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியல. இறைவா..! என்ன சோதனை..? யாருக்கு என்ன பாவம் செய்தேன்..! ஏன் இப்படித் தண்டிக்கிறாய்..? மனைவியின் வார்த்தைகள் அவர் மனதை உருக்கியதோ என்னவோ..? அழுங்குப் பிடியாகப் பிடித்திருந்த கைகளை மெதுவாக எடுத்தார். நான் சந்திப் பக்கம் போய் வருவதற்குள் தேத்தண்ணி ஊத்தி பிஸ்கட்டையும் எடுத்து வை என்றவாறு திரும்பிச் சென்றார். தேநீரை ஊற்றுவதற்குள், அசுர வேகத்தில் வந்தவரின் தலையை தடி பதம் பார்த்தது. என்ர அல்லாஹ்..! என்றவாறு நிலத்தில் சாய்ந்தாள். இரத்தம் குபீர்..குபீரெனப் பாய்ந்து தரையைச் செந்நிற மாக்கியது.

மகள் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தாள். தாயின் நிலையைப் பார்த்து வாய் விட்டுக் கதறினாள்.

அக்கம் பக்கத்தவர், உற்றார் உறவினர் ஓடோடி வந்தனர். வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர். அதிக இரத்தம் வெளியானதால் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். அதிக ஓய்வு கொடுத்து மனசை ஆறுதல்படுத்துமாறு வைத்தியர் கேட்டுக் கொண்டார். அவரை உடனடியாக மனநல ஆஸ்பத்திரியில் சேர்க்குமாறு ஆலோசனை வழங்கினார். உஸ்மானோ எதற்கும் கட்டுப்படுபவராக இல்லை. யாராலும் மடக்கிப் பிடிக்க முடியவில்லை. பாய்ந்து.. பாய்ந்து ஓடினார். இவர் சும்மா நடிக்கிறார். இவருக்கு ஒன்னுமில்ல. அப்பாவி மனைவியை படாதபாடுபடுத்துகிறார். எல்லோரும் வெறுக்கத் தொடங்கினர். இவரது அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்தது. இது ஆண்டவனுக்கும் பொறுக்கவில்லை போலும். திடீரென ஏற்பட்ட காய்ச்சலால் எழுந்து நடக்கவோ, மனைவியைத் தண்டிக்கவோ முடியாது படுத்த படுக்கையானார்.

ஆயினும்.. மனைவி சகீனா அருகிலிருந்து சோறு ஊட்டுவது, மலசலம் கழிப்பதற்கு அழைத்துச் செல்வது, குளிப்பாட்டுவது போன்ற கடமைகளை மனங் கோணாது செய்து வந்தாள். இவரது அட்டகாசத்தையும், முரட்டுத் தனத்தையும் சகீனாவால் மட்டுமே ஏற்றுக் கொள்ள முடிந்தது'. பொறுமையின் சிகரம்..! அடக்கத்தின் பிறப்பிடம்..! அவளது சகிப்புத் தன்மைக்கு அல்லாஹ் சுவனத்தைக் கொடுப்பான் என மக்கள் பேசத் தொடங்கினர். ஆயினும்... தனது கணவனின் பாவங்களை மன்னித்துப் பூரண சுகம் பெறக் கண்ணீர் மல்க இறைவனிடம் இருகரமேந்திப் பிரார்த்தித்தாள்.

> மனைவி வந்ததும் அடங்கி விட்டாரெனச் சந்தோசப்பட்டனர். அது நீடிக்கவில்லை. மறு வாரமே பழைய குருடி கதவைத் திறவடி. மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவளின் கால்களைப் பிடித்துச் சரசரவென இழுத்துச் சென்றார். என்னை விடுங்க. என்ன வேணும்..? சமைத்துத்தாடி..! நீங்க கேட்பதைச் சமைத்துத் தாரேன். என்னை விடுங்க. அவர் விடுவதாக இல்லை.

இல்லற வாழ்க்கையும் சிறப்பாக அமைந்தது. தாயின் அர்ப்பணிப்பே எல்லாவற்றுக்கும் காரண மென ஊரே மெச்சியது. ஐந்து பிள்ளைகளையும் திருமணம் முடித்துக் கொடுத்து நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் சகீனா.

கிண்ணியா ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான்

யாவும் கற்பனை

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 103



திரு/திருமதி.செல்வி .....
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி .....
.....
.....
....
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 103
த.பெ.இல.834. கொழும்பு

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 103

இடமிருந்து வலம்

1. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று
5. இரவு
7. சினேகிதன் குழம்பிவிட்டான்
9. பணிவு
10. சூடு
13. ஆகாரம் (திரும்பியுள்ளது)
15. நெருப்பில்லாமல் இது வராது
17. சில ஆண்களின் முகத்தில் இதனைக் காணலாம்
19. இன்று அல்ல, மறுதினம்
20. ஒரு தமிழ் மாதம்
22. ஒளிப்பிழம்பு
24. வழமைநிலையிலிருந்து வேறுபட்டு அமைவது
25. வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி மேற்கொள்ளும் பயணம் (திரும்பியுள்ளது)
27. உயரம் குறைந்த சிறு மலை (குழம்பியுள்ளது)
28. நிலத்தின் கீழ் வைத்திருப்பதாகச் சொல்லப்படும் நகைகள், நாணயங்கள் போன்றவை (குழம்பியுள்ளது)

மேலிருந்து கீழ்

1. இதுவும் பட்டாசு வகையைச் சேர்ந்தது
2. சிறப்பு அல்லது உயர்வு நிலை
3. ஓர் உறுப்பு
4. ஆதரவற்ற பெண் (தலைகீழ்)
6. பச்சிளங் குழந்தை
8. மெய்மை நிகழ்வு
11. ஒருவகைப் புல் (தலைகீழ்)
12. இதுவும் ஒரு நிறம்
14. உடல் ரீதியாக ஏற்படும் ஒருவித வலி அல்லது வேதனை
16. ஒருவரிடமிருந்து உடனடித் தேவைக்குப் பெற்றுக் கொள்ளும் வட்டியில்லா சிறுதொகை
18. இணைந்திருக்கும் இருவர் அல்லது இருபொருள் (தலைகீழ்)
21. இறக்கை
23. ஒரு விடயத்தின் மாற்று வடிவம்
24. ஒரு காட்டு விலங்கு
26. உடலில் மட்டுமல்ல மனதிலும் ஏற்படும் வேதனை

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 102

விடைகள்

இடமிருந்து வலம்

1. விருது
4. புத்திரி
7. சிங்களம்
9. பானை
10. கள்வன்
11. பகை
13. அவா
15. ரவை
16. திரு
18. வலி
20. குசினி
22. தும்பிக்கை
24. அதிரடி
25. விடுதி

மேலிருந்து கீழ்

1. விளம்பரம்
2. ருசி
3. துகள்
4. வம்பு
5. தினை
6. பாரி
8. கங்காரு
12. வைகை
13. அவனி
14. வாலி
17. திக்கு
19. வீரம்
21. சிவிகை
22. துதி
23. பிடி

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 102

பரிசு பெறுவோர் விபரம்

முதலாம் பரிசு ரூ 500.00	இரண்டாம் பரிசு ரூ 350.00	மூன்றாம் பரிசு ரூ 150.00
ஈ. ஆரணி, இல 09, ராஸ வீதி, நல்லூர்	**எம்.ஐ.ஏ லத்தீப்,** 174/1 அல் முனவ்வரா வீதி, அக்கரைப்பற்று 04	**சாஹிரா பானு லியாவுத்தீன்,** இல 12/6 புனித பீற்றர் வீதி. புத்தளம்

பாராட்டு பெறுவோர்

1. **கே. புண்ணியநேசன்** காரைதீவு
2. **எம்.எம்.சஷாத்,** மருதமுனை
3. **எஸ். சந்திரிக்கா,** களுவாஞ்சிக்குடி
4. **எம்.ஆர்.எப். அய்ஸா,** தம்பரதெனிய
5. **ஏ.கே.எப். ஹுஸ்னியா,** காலி
6. **ஜீ . துவாரகன்,** பெரியநீலாவணை,
7. **ஆர். அப்னான் அஹமட்,** கிண்ணியா
8. **நப்ஸார் நுஸ்பா செரீன்,** புல்மோட்டை
9. **வி. பாலேந்திரா** கொழும்பு 06
10. **ரஜினி சிவஞானம்** மட்டக்களப்பு

மேஷம்

(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

எதிலும் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். வீண்செலவு ஏற்படும். மனோதைரியம் கூடும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். முயற்சிகள் சாதகமான பலன் தரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமடைய பாடுபடுவீர்கள். எதிர்பார்த்த ஆர்டர்கள் வரலாம். சரக்குகளை அனுப்பும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணி நிமித்தமாக அலைய வேண்டி இருக்கும். குடும்பத்தில் நிம்மதி குறையும்படியான சூழ்நிலை வரலாம். கணவன், மனைவிக்கிடையே விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளிடம் அன்பாக நடந்து கொள்வது அவர்களின் வெற்றிக்கு உதவும். பெண்களுக்கு மனோதைரியம் கூடினாலும் பழைய சம்பவங்களின் நினைவால் மனமகிழ்ச்சி குறையும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் அக்கறை தேவை. திட்டமிட்டபடி செயல்பட முடியாதபடி தடங்கல்கள் ஏற்படலாம்.

ரிஷபம்

(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)

மனக்கவலை நீங்கும். சாமர்த்தியமான பேச்சு இக்கட்டான நேரங்களில் கைகொடுக்கும். எதிலும் கவனம் தேவை. புதிய நண்பர்களின் சேர்க்கையும், அவர்களால் உதவியும் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகள் தடையின்றி நடக்கும். புதிய ஆர்டர் தொடர்பான காரியங்கள் சாதகமான பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணிசுமை குறைந்து மன நிம்மதி அடைவர். குடும்பத்தினரிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் வழியில் நிம்மதி கிடைக்கும். பெண்களுக்கு காரியங்களில் ஏற்பட்ட தடை நீங்கி திருப்தியாக நடந்து முடியும். சாதூரியமான பேச்சின் மூலம் பிரச்சினைகள் தீரும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்களில் இருந்த போட்டிகள் குறையும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

மிதுனம்

(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

வீண்செலவுகள் அதிகரிக்கும். விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, வாய்க்கு ருசியாக உணவு உண்பீர்கள். காரிய தாமதம், உடல் சோர்வு ஏற்படலாம். உங்களை கண்டு அடுத்தவர் பொறாமைப் படக்கூடும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களுக்காக அலைய வேண்டி இருக்கும். வாடிக்கையாளர்களிடம் அனுசரித்துப் பேசுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வதன் மூலம் நன்மை கிடைக்கும். குடும்பத்தினரின் செயல்களால் டென்ஷன் உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையே கோபமான பேச்சை விடுத்து அமைதியாக எதையும் எடுத்து சொல்வது நல்லது. பிள்ளைகளின் நலனுக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். பெண்களுக்கு மனஅமைதி பாதிக்கும் படியான சூழ்நிலை இருக்கும். மாணவர்கள் பாடங்களை மிகவும் கவனமாக படிப்பது கூடுதல் மதிப்பெண் பெற உதவும்.

கடகம்

(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

எல்லாவற்றிலும் இலாபம் கிடைக்கும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதன் மூலம் நன்மதிப்பு பெறுவீர்கள். உங்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டு பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளை சிரமமின்றி செய்து முடிப்பர். கணவன், மனைவிக்கிடையே சுமுக உறவு இருக்கும். பிள்ளைகளுக்கு தேவையான ஆடை அணிகலன்கள் வாங்கிக் கொடுப்பீர்கள். பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான செலவு கூடும். கல்வியில் முன்னேற வேண்டும் என்பதை குறிக்கோளாக கொண்டு பாடங்களை படிப்பர்.

சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

தன்னம்பிக்கை அதிகரிக்கும். துணிச்சலுடன் செயல்பட்டு எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்றப் பாதையில் செல்லும். அரசு தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கட்டளை இடுகின்ற பதவி கிடைக்கும். புதிய வேலைக்கு முயற்சி செய்கிறவர்களுக்கு வேலை கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். யாரிடமும் எதிர்த்து பேசி விரோதத்தை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நன்மை தரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் எதிர்காலம் பற்றிய எண்ணம் மேலோங்கும். பெண்கள் எந்த செயலையும் தைரியமாக செய்து முடிப்பர். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கஷ்டமான பாடங்களையும் மனம் துவளாமல் படிப்பர்.

கன்னி

(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)

நற்பெயரும் புகழும் உண்டாகும். வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பங்களை சந்திக்க நேரலாம். எப்படிப்பட்ட பிரச்சினை வந்தாலும் சமாளித்துவிடும் திறமை இருக்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் வியாபார வளர்ச்சிக்காக துணிச்சலுடன் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற வாய்ப்புகள் வந்து சேரும். சக ஊழியர்கள் மேலதிகாரிகளின் ஆதரவுடன் பணிகளை திறமையாக செய்து முடிப்பர். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருக்கும். மனவருத்தத்துடன் சென்ற உறவினர்கள் வருத்தம் நீங்கி மீண்டும் வந்து சேருவார்கள். பெண்களுக்கு எந்த பிரச்சினை வந்தாலும் அதை சமாளிக்கும் திறமை உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காணப்படும். விளையாட்டு போட்டிகளில் வெற்றி வாய்ப்பு உண்டாகும்.

துலாம்

(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)

விருப்பத்துக்கு மாறாக காரியங்கள் நடக்கும். மனக்குழப்பம் உண்டாகலாம். பொருட்களை கவனமாக பார்த்துக் கொள்வது நல்லது. அடுத்தவருடன் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். வயிறு தொடர்பான நோய் ஏற்படலாம். பயணங்கள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். எதிர்பார்த்தபடி பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தினரின் செயல்பாடுகள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் முன்னேற்றத்திற்காக பாடுபடுவீர்கள். பெண்களுக்கு காரிய தடையால் மனகுழப்பம், டென்ஷன் உண்டாகலாம். மாணவர்கள் யாரிடமும் வாக்குவாதம் செய்யாமல் அனுசரித்து செல்வது நல்லது.

விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

எதிலும் கவனமாக இருப்பது நல்லது. அக்கம் பக்கத்தினரிடம் சில்லறை சண்டைகள் உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் சிறு தடங்கல்கள் உண்டாகலாம். பார்ட்னர் மூலம் நன்மை உண்டாகும். நிதி உதவி எதிர்பார்த்தபடி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைத்து அலுவலக பணிகளை முடிக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வதன் மூலம் நல்ல பலன் கிடைக்கும். பிள்ளைகள் உங்களது கருத்துக்களை கேட்டு அதன்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சியை தரும். பெண்கள் சாமர்த்தியமான பேச்சின் மூலமும் சூழ்நிலையை புரிந்து கொண்டு நடப்பதன் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் எதிர்பார்த்த முன்னேற்றமடைய கூடுதலாக நேரம் எடுத்துக்கொண்டு கவனத்தை சிதற விடாமல் படிப்பது அவசியம்.

தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

எதிர்ப்புகள் நீங்கும். பணவரத்து எதிர்பார்த்ததை விட அதிகரிப்பது மனமகிழ்ச்சியை தரும். எதிரிகளால் இருந்து வந்த பிரச்சினை தீரும். நண்பர்கள் மூலம் தேவையான உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான பயணங்கள் மேற்கொள்ள வேண்டி இருக்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலக பணி தொடர்பான அலைச்சல் இருக்கும். குடும்பத்தில் உங்களது பேச்சுக்கு எதிர்ப்பேச்சு பேசியவர்கள் அடங்கி விடுவார்கள். கணவன், மனைவிக்கிடையில் மகிழ்ச்சி நீடிக்கும். பிள்ளைகள் தொடர்பான காரியங்களை செய்து முடிக்க அலைய வேண்டி இருக்கும். பெண்களது செயல்களுக்கு இருந்த முட்டுகட்டைகள் விலகும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் திறமை வெளிப்படும். கல்வியில் வெற்றி பெற தேவையான உதவிகள் கிடைக்கும்.

மகரம்

(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)

மனக்கவலை ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத செலவு ஏற்படும். மற்றவர்களுடன் வாக்குவாதங்களை தவிர்ப்பதால் பகை ஏற்படாமல் இருக்கும். சிலரது எதிர்பாராத பேச்சு மனவருத்தத்தை தரலாம், கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கும் போது தீர ஆலோசித்த பின் முடிவு எடுப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள், சக ஊழியர்களின் கருத்துக்கு மாற்று கருத்து சொல்லாமல் இருப்பது நன்மை தரும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கருத்து மோதல் உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையே இருந்த பூசல்கள் சரியாகும். பெண்களது கருத்துக்கு சிலர் மாற்று கருத்து கூறலாம். எதிர்த்து பேசாமல் அமைதியாக இருப்பது நல்லது. மாணவர்கள் எவ்வளவு திறமையாக படித்தாலும் பாடங்கள் கடினமானவை போல தோன்றும்.

கும்பம்

(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)

அடுத்தவருடன் ஏற்படும் பிரச்சினைகளிலும், வாக்குவாதத்திலும் வெற்றியே கிடைக்கும். எந்த காரியத்தில் ஈடுபட்டாலும் அடுத்தவரை நம்புவதிலும் எச்சரிக்கை தேவை. உங்களுக்கு மிகவும் வேண்டியவர் உங்களை விட்டு விலகிச் செல்லலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு இருக்கும். போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செய்யும் பணிகள் திருப்திகரமாக நடந்து முடியும். எதிர்பார்த்த இடமாற்றம் வரலாம். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்களை அனுசரித்து செல்வது மனதுக்கு இதமாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையே சிறிய வாக்குவாதம் ஏற்படலாம். பெண்கள் அடுத்தவரை நம்பி பொறுப்புகளை ஒப்படைப்பதில் கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டிகள் விலகும். பாடங்களை படிப்பதில் இருந்த இடையூறுகள் நீங்கும்.

மீனம்

(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)

துன்பம் வருவது போல் இருக்குமே தவிர, வராது. மனதில் ஏதேனும் கவலை, பயம் அவ்வப்போது ஏற்படும். உங்களது பேச்சே உங்களுக்கு எதிர்ப்பை உண்டாக்கலாம். ஆன்மிக எண்ணம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் மூலம் வர வேண்டிய லாபம் தாமதப்படும். எதிர்பார்த்த நிதியுதவி ஓரளவு கிடைக்கும். ஆர்டர்களுக்காக இருந்த அலைச்சல் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு விருப்பம் இல்லாத மாற்றம் வரலாம். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் ஏற்படும். பிள்ளைகள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள், நண்பர்களிடம் கவனமாக பழகுவது நல்லது. பெண்களுக்கு எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்கும் வரை அந்த காரியம் முடியுமோ, முடியாதோ என்ற மனக் கவலை இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெறுவது பற்றிய மனக்கவலை இருக்கும்.

தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 20

மலேசிய தேசிய பண் "நெகாராகூ" உருவாக்கத்தின் பின்னணி

பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளில் மாநாட்டு கீதம் உருவாக்கம் பற்றி கவனம் முக்கியத்துவத்துக்குரியதாகும். மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவின் செயலர் நந்தன் மாசிலாமணி ஊடாக இக் கீதத்தை புனைவதற்கும், இசையமைப்பதற்கும் ஆர்வம் உள்ளவர்களுக்கு திறந்த அழைப்பு விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மாநாட்டில் தமிழ் மொழி வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து போன்ற கீதங்கள் இசைக்கப்பட்டன. மலேசிய நாட்டின் தேசிய கீதம் மலாய் மொழியில் இசைக்கப்பட்டது. அரங்கில் சூழ்ந்திருந்த மலேசியத் தமிழர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இணைந்து மலாய் மொழியிலேயே பாடலை இசைத்ததையும் அறிய முடிந்தது. மலேசிய தேசிய பண் "நெகாராகூ" என அழைக்கப்படுகிறது. இந் "நெகாராகூ" வின் உருவாக்கத்தின் பின்னணியில் முக்கிய வரலாற்று சம்பவங்கள் கவனத்திற்குரியதாகும்.

பேராக் மாநிலத்தின் 26வது அரசராக சுல்தான் அப்துல்லா முகமட்ஷா விளங்கினார். 1875இல் ஜேம்ஸ் பர்ச் கொலையுடன் தொடர்புபட்டவர் என்றதன் அடிப்படையில் சீசலஸ் தீவுக்கு நாடு கடத்தப்படுகிறார். சீசல்ஸ் தீவில் வாழ்கின்ற நிலையில் "லாரோசலி" எனும் பாடல் பிரெஞ்சு நாட்டு கவிஞரான பியர் ஜீன் பு பெருஞரின் வரிகளால் உருவாக்கப்படுகிறது. அப் பாடல் வரிகளால் அரசர் கவரப்படுகிறார். இதன் மீதான ஆத்மார்த்த ஈடுபாடு தொடர்கின்ற நிலையில் 1983இல் விடுதலை அறிவிப்புடன் மீளவும் தாயகம் திரும்புகிறார். "இறைவன் சுல்தானின் ஆயுளை நீடிப்பாராக!" எனும் தலைப்பில் மலாய் மொழியில் மொழிப்பெயர்ப்பு செய்கிறார். பின்னர் அதுவே பேராக் மாநிலத்தின் கீதமாகவும் அமையப்பெறுகிறது. 1957இல் மலாயா சுதந்திரம் அடைந்த போது பதினொரு மாநிலங்களுக்கும் தனித் தனியே கீதங்கள் இருந்த நிலையில் மலாயாவிற்கான பொதுவானதும் தனித்துவமானதுமான பண் இன்மை உணரப்பட்டது. இந் நிலையில் மலாயாவின் முதல்வராக துங்கு அப்துல் ரஹ்மான் பதவியில் இருந்த நிலையில் உலகலாவிய ரீதியில் மலாயாவிற்கான "தேசிய கீதம்"; எழுதும் போட்டி நடத்தப்பட்டது. போட்டிக்காக 514 பாடல்கள் கிடைக்கப்பெற்ற நிலையில் எதுவும் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யாததாகவே அமைந்திருந்தது. இந் நிலையில் பேராக் மாநிலத்தின் இனிமையான இசையுடன் கூடிய இப் பாடலை ஏற்றுக்கொள்வது என முடிவு செய்யப்பட்டது. 1957இல் இருந்து பிரயோகத்தில் இருந்த இப் பாடல் குறித்து இந்தோனேசியா புதியதொரு சர்ச்சையைக் கிளப்பியது. தனது நாட்டின் கீதமான "தெராங் புலான்" அமைப்பைத் தழுவியது என்ற குற்றச்சாட்டை முனவைத்தமை குறிப்பிடத்தக்கது. பின்னர் மலாயாவின் வரலாற்று சான்றுகளை முன்வைத்த நிலையில் அக் குற்றச்சாட்டு வலுவிழந்து போனது.

மலேசியாவின் தேசிய பண்ணான "நெகாராகு" வின் வரிகளை மலாய் மொழியில் அமைத்தவர் சைபுல் பகாரி எலியாஸ் என்பவராவார். இதற்காக 1957ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05ம் திகதி இப் பாடலாசிரியர் 1000 மலாயா டொலரை பரிசாக பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத் தேசிய கீதத்தின் வரிகள் பின்வருமாறு அமைகின்றது.

நெகாராகூ தானா தும்பாஞா டாராகூ
ராக்யாட் ஹீடுப், பெர்சத்து டான் மாஜீ
ராஹ்மாட் பாஹ்கியா,
துஹான் குர்னியாகான்
ராஜா கீத்தா செலாமாட் பெர்தாக்தா,
ராஹ்மாட் பாஹ்கியா, துஹான் குர்னியாகான்,
ராஜா கீத்தா, செலாமாட் பெர்தாக்தா.

ஆங்கிலம், தமிழ், சீனம் ஆகிய மொழிப்பெயர்ப்புகளிலான பரீட்சார்த்தம் இடம்பெற்றாலும் பொதுவாக மலாய் மொழியிலேயே தேசிய கீதத்தை இசைக்கின்ற போக்கு காணப்படுகின்றமை கவனிக்கத்தக்கது. இவ்வாறு பொதுத் தன்மை வாய்ந்த தேசிய கீதத்தின் உள்ளடக்கத்தை விளங்கிக்கொள்ளும் வகையில் தமிழ் மொழியில் அவதானிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எந்தன் நாடே எந்தன் குருதி
சிந்திய மண்ணே மக்கள் வாழ்கிறார்கள்
ஒன்றுபட்டும் முன்னேறியும்
அன்பும் மகிழ்வும் இறைமையின்
அருளால் நம்பேரரசர்
நலத்தோடு அரசாள்க

என்பதாகவே இப் பாடலின் உள்ளடக்கம் சாராம்சமாக தெளிவுறுத்துவதையும் அறியலாம்.

பொதுவான ஒருமைப்பாட்டு எண்ணத்தோடு தேசியத்தை கட்டியெழுப்பும் முனைப்போடு செயல்படும் மலேசியர்களை அவதானிக்க முடிகிறது. ஆங்கில மொழி அறிவோடும், மலாய் மொழி மீதான பற்றுதலோடும் தமிழ் மொழி மீதான நேசிப்பையும் மலேசியத் தமிழர்களிடம் உணர முடிகிறது. பொதுவாக தமிழர்களின் வாகனங்களில் வாகனம் ஓட்டுதலுக்கான அறிவுறுத்தல் ஒளிப்பதிவுகளை தமிழிலே இயக்கி வைத்திருப்பதையும் காணலாம். தமிழர்களின் நிகழ்வுகளில் தமிழ் மொழி வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து பாக்கள் இசைக்கப்படுவது இன்றியமையாததாக காணப்படுகின்றமை கவனிக்கத்தக்கது. அவ்வாறே மலேசிய தமிழ் வாழ்த்து தனித்துவமாக உருவாக்கப்பட்டு அப் பாடலும் நிகழ்வுகளில் கட்டாயமாக இசைக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

நிலைபெறநீ வாழியவே காப்பியனை ஈன்றவளே!
காப்பியங்கள் கண்டவளே! கலை வளர்த்த தமிழகத்தின்
தலைநிலத்தில் ஆள்பவளே! தாய்ப்புலமை யாற்புவியில்
தனிப்பெருமை கொண்டவளே! தமிழரொடு புலம்பெயர்ந்து
தரணியெங்கும் வாழ்பவளே!
எங்களெழில் மலைசியத்தில்
சிங்கைதனில் ஈழமண்ணில்
இலக்கியமாய் வழக்கியலாய்;
இனக்காவல் தருபவளே!
பொங்கிவளர் அறிவியலின்
புத்தாக்கம் அத்தனைக்கும்
பொருந்தியின்று மின்னுலகில்
புரட்சிவலம் வருபவளே!
செவ்வியலின் இலக்கியங்கள்
செழித்திருந்த பொற்காலம்
சேர்த்துவைத்த செயுள்வளத்தில்
செம்மாந்த பழையவளே!
அவ்வியலில் வேரூன்றி
அறிவுயர்ந்த தற்காலம்
அழகழகாய் உரைநடையும்
ஆளுகின்ற புதியவளே!
குலங்கடந்து நெறிகடந்து
நிலவரம்பின் தடைகடந்து
கோமகளாய்த் தமிழர்மனம்

என்ற பாடலின் வரிகளை புனைந்தவர் கவிஞர் சீனி நைனா முகம்மது ஆவார். தமிழ் மொழி நேசிப்பின் முக்கிய சான்றாக பாடலின் வரிகள் சித்தரித்து நிற்கின்றமையும் கவனிக்கத்தக்கது.

தமிழ் நேசிப்பிற்குரிய மலேசிய மண்ணில் தமிழுக்காய், தமிழ் மொழியின் சிறப்பிற்காய் பதினோராவது தமிழ் ஆராய்ச்சி மாநாடு தொடக்க தினத்தில் உத்தியோகபூர்வமாக வெளியிட்ட பாடலின் வரிகள் முக்கியத்துவம் பெறுகிறது. கவிஞர் சுகதேவினால் புனையப்பட்ட கவி வரிகள் இசையமைப்பாளர் சிம்மம்குமாரினால் இசையமைக்கப்பட்டு சத்தியப்பிரகாஸால் பாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பின்னணி காட்சியமைப்பு உட்பட பாடல் தயாரிப்பில் நந்தன் மாசிலாமணியின் வசிபங்கு போற்றுதற்குரியதாகவுள்ளது. கவிஞர் சுகதேவின் வரிகள் பின்வருமாறு அமைகின்றன.

தமிழே தமிழே உலகின் மூத்த மொழியே
தமிழே தமிழே உந்தன் கீர்த்தி பெரிது
தமிழே தமிழே தமிழே நீதானே
தங்கத் தமிழும் நீதானே சங்கத் தமிழும் நீதானே
உலகில் நீதானே மூத்த மொழியும் ஆனாயே
முத்தமிழ் மிளிரும் முகமும் நீயே
நற்றமிழ் ஊட்டும் நாவின் சுவையே
கற்றவர் நாடும் கனிமொழி நீயே
காலத் தடத்தில் ஓவியம் நீயே
தமிழே நீதானே தங்கத் தமிழும் நீதானே
சங்கத் தமிழும் நீதானே உலகில் நீதானே
மூத்த மொழியும் ஆனாயே தேடிடும் திசையில்
எனது ஒலி காதினில் இனிக்கும்
பாடிடும் மனதில் உனது சுவை தேனென இனிக்கும்
உனது வளம் நாளும் செழிக்கும்
உனது புகழ் ஓங்கி ஒலிக்கும்
உலகம் புகழ் பாக்கள் என்னும்
உந்தன் சந்தம் சுவையானது அகிலம் எங்கும்
உந்தன் பெருமை தமிழர் இதயம் கொண்டாடுது
அகரமாய் தொடங்கி நீ; ஜொலிக்கிறாய்

மேற்குறித்த வரிகள் சிம்மமக்குமாரின் இசையமைப்பில் உருவான போது பேராளர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழின் மேன்மை பற்றிய பாடல்களில் செம்மொழி மாநாட்டில் கலைஞர் கருணாநிதியின் வரிகளில் உருவாகி ஏ.ஆர்.ரஹ்மானின் இசையமைப்பில் பிரபலமான "செம்மொழியான நம் தமிழ் மொழியாம்." பாடலைத் தொடர்ந்து உருவான வரிசையில் இப் பாடலும் அதீத கவனத்தை பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது. இவ்வாறே பிரயோகத்தில் இருக்கும் ஈழத்து தமிழ்த் தாய் வாழ்த்து குறித்த அவதானமும் கவனிக்கப்பட வேண்டியதாகும். அவ் வாழ்த்துப் பாவில் எடுத்துக்காட்டாக அமைந்த வரிகள்,

ஓங்களிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் ஆங்கவற்றுள்
மின்னோர் தனியாழி வெங்கதிரோன் ஏனையது
தன்னேர் இல்லாத தமிழ்!

இது 16ம் நூற்றாண்டில் தோன்றிய தண்டியலங்கார உரையாகும். இதனை ஈழத்தில் அறிமுகம் செய்தவர் சுவாமி விபுலானந்தர் ஆவார். சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கற்கை நிறுவகத்தில் பிரயோகத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. கடும் சொற் பிரயோகத்திலுள்ள இப் பாடல் சுமந்த உள்ளடக்கம் கவனத்திற்குரியதாகும். " உயர்ந்த மலைகளிடையே தோன்றி உயர்ந்தவர்கள் தொழும்படியாக பிரகாசித்து எப்பொழுதும் ஒளியெழுப்பிக்கொண்டேயிருக்கும் கடல் சூழ்ந்த உலகத்தின் இருளை அகற்றிக் கொண்டிருக்கும் ஒப்பற்ற இரண்டு உள்ளன. அவை என்ன தெரியுமா? ஒன்று ஒப்பற்ற சக்கரம் போல் சுழலும் சூரியன். இன்னொன்று தனக்கு நிகர் இல்லாத தமிழ்." என பொருள்படும். கலாநிதி பிரியதர்ஷினி ஜதீஸ்வரன் இசையமைப்பில் உருவான இப் பாடல் சுகிர்தாவின் குரலில் சாம் பிரதீபனால் வீடியோ வடிவில் உருவாக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இப் பாடலை அவதானிக்கின்ற போது பின் எழுந்த தமிழுணர்வு பாடல்களுக்கு முன்னோடியாக இப் பாடல் அமைவதும் கவனிக்கத்தக்கது.

பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு பாடலுக்கு பின்னணி இசையை வழங்கிய சிம்மம் குமார் இசைத்துறையின் முக்கிய ஆளுமை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இப் பாடல் ஊடாக மாத்திரம் அன்றி பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் இசைப்பற்றிய சிறப்பு பேச்சினூடாகவும் தன் ஆளுமையை சிறப்பாக வெளிப்படுத்தினார். அவருடனான உரையாடல் மிக ஆக்கபூர்வமாக அமைந்தது. அவ்வாறே நிகழ்வில் அவர் ஆற்றிய உரை மிகுந்த கவனத்தை பெற்றதாகவும் விளங்குகிறது.

பயணம் தொடரும்...

மர்மம் சூழ்ந்த...

(17ஆம் பக்கத் தொடர்)

எனவே வளமான வாழ்வை எங்கு எப்படி பெற்றுக் கொள்வது? அதற்கான ஒரே வழி தற்கொலை மட்டுமே. நம் உயிரை நாம் தியாகம் செய்து மறு உலகில் அமைதியாக வாழலாம்; அடுத்த பிறவியில் பணக்காரர்களாக, வசதியான வாழ்க்கையைத் தொடரலாம். தற்போது இக் கஷ்ட ஜீவனத்தைத் தொடர்வதில் அர்த்தமில்லை என்ற சாராம்சம் கொண்ட கருத்துக்களை எடுத்துச் சொல்லி வந்துள்ளார்.

கடந்த டிசம்பர் 28ஆம் திகதி கொட்டாவ மஹாகும்புர பகுதியில் தான் தங்கியிருந்த வீட்டில் குணரத்ன நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார். இவர் மிக தீவிரமான நஞ்சை அருந்தியே உயிரை மாய்த்துக் கொண்டதாக பொலிசார் கருதுகின்றனர். நாட்டில் நடக்கும் குற்றச் சம்பவங்களில் ஒன்றாக இத்தற்கொலை அமையவிருந்த தருணத்தில் மாலபேயில் வசித்துவந்த ஒரு பெண்ணும் அவரது மூன்று குழந்தைகளும் நஞ்சு அருந்தி தற்கொலை செய்த சம்பவம் நிகழ்ந்தது. மூன்று தினங்களுக்கு முன்னர் தற்கொலை செய்துகொண்ட போதகர் குணரத்னவின் மனைவியும் குழந்தைகளுமே தற்கொலை செய்து கொண்டவர்கள் என்பது தெரியவந்தது, வறுமை, குடும்பத் தகராறு அல்லது கணவரின் மறைவால் ஏற்பட்ட சோகம் காரணமாக இத் தற்கொலைகள் நடைபெற்றிருக்கலாம் என ஆரம்பத்தில் பொலிசார் நினைத்தனர். ஆனால் குணரத்ன உபயோகித்த அந்த நஞ்சே இவர்களின் தற்கொலைக்கும் காரணமாக இருந்திருக்கிறது என்பது சந்தேகத்தை ஏற்படுத்தியது.

ஒரே குடும்பத்தில் ஐவர் வெவ்வேறு தினங்களில் ஒரே மாதிரி நஞ்சருந்தி தற்கொலை செய்திருப்பதன் பின்னணியை பொலிசார் துலக்கிக் கொண்டிருந்தபோது கடந்த 3ஆம் திகதி மஹரகமை பழைய வீதியில் உள்ள ஒரு வாடகை விடுதியில் இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து மரணமடைந்த சம்பவம் தெரியவந்தது. இவர் 34 வயதுடைய அம்பலாங்கொடை வத்துகெதரவை வசிப்பிடமாகக் கொண்டவர். மூன்றாம் திகதி அறை எடுத்துத் தங்கியவர் அன்றுமாலை புறப்பட வேண்டும் எனக் கூறியிருக்கிறார். இரவு ஏழு மணியாகியும் வெளிக் கிளம்பியதற்கான எந்த அடையாளமும் இல்லாததால் விடுதி பணியாளர்கள் அறைக்கு சென்று பார்த்திருக்கிறார்கள். இறந்த உடலைக் கண்டு பொலிசாருக்கு அறிவிக்க, அவர்கள் வந்து விசாரணை செய்தனர். இரண்டு கைபேசிகள், தண்ணீர் போத்தல் மற்றும் நஞ்சு வைக்கப்பட்டிருந்த பை என்பன கைப்பற்றப்பட்டன.

இச் சம்பவத்தையடுத்து யக்கல ராசல் வத்தையில் இருந்து மற்றொரு தற்கொலை சம்பவம் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பெண்மணியின் வயது 21 பல்கலைக்கழக மாணவி. நஞ்சருந்தி உடலை மாய்த்துக் கொண்டிருக்கிறார். தற்கொலை செய்யும் அளவுக்கு இவருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்கிறார்கள் இவரது குடும்பத்தினர்.

இந்த இளைஞனும் யுவதியும் போதகர் குணரத்னவைத் தமது ஆன்மீகக் குருவாக ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் என்பதோடு இவர்கள் நண்பர்களும் கூட. தமது குரு குணரத்னவின் இறுதிக் கிரியைகளில் இவ்விருவரும் கலந்து கொண்டிருப்பதோடு கூடியிருந்தவர்களிடம் குணரத்னவை தாம் குருவாக ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள்.

தற்போது பொலிசாரின் அச்சமெல்லாம், இவ்விரண்டு சீடர்களைப் பின்பற்றி குணரத்னவை குருவாகக் கருதும் ஏனைய மூளைச்சலவை செய்யப்பட்டவர்களும் தற்கொலைக்கு முயற்சிக்கலாம் என்பதுதான்! குணரத்னவை குருவாகக் கொண்டிருக்கக் கூடியவர்கள், அவரது பிரசங்க கூட்டங்களுக்கு சென்று வந்தவர்கள் குறித்து விழிப்பாக இருக்கும்படி பொலிசார் அக்குடும்பங்களை கேட்டுள்ளனர்.

இம் மரணங்கள் ஒரே மாதிரியாக நடைபெற்றிருப்பதால், ஒரு சமயத்தில் இரசாயன பகுப்பாய்வாளராக பணியாற்றியிருக்கக் கூடிய குணரத்னவே தமக்கான நச்சுத் திராவகத்தை அல்லது பொடியை தாமே தயாரித்திருக்க வேண்டும் என்றும் அவரிடமிருந்தே நச்சு ஏனையோருக்கு பகிரப்பட்டிருக்க வேண்டும் என சந்தேகிக்கப்படுகிறது. இந்த நஞ்சு இன்னும் எத்தனைபேரிடம் உள்ளது என்பதும் தெரியவில்லை. இதை இவர்கள் பயன்படுத்துவார்களா இல்லையா என்பதும் தெரியாது என்பதும் கவலை அளிக்கும் ஒரு சூழல்.

எனவே, மதங்களில் தற்கொலைக்கும், தற்கொலை மூலம் சிறப்பான ஒரு வாழ்க்கையை அடைய முடியும் என்ற சிந்தனைக்கும் எந்த இடமும் கிடையாது என்பதை மதகுருமார் ஊடகங்கள் வழியாக ஓங்கி ஒலிக்க வேண்டியது அவசியம். குணரத்னவின் சொற்பொழிவுகளைத் தொடர்ந்து கேட்டதால் அவர்களிடம் ஏற்பட்டிருக்கும் தவறான எண்ணங்களும் தற்கொலை உணர்வும் களைந்தெறியப்பட வேண்டுமானால் ஊடகங்கள் வாயிலாக மாற்று எண்ணங்கள் வெளிப்படுத்தப்படுவது அவசியம். தற்கொலை உணர்ச்சி கொண்டவர்கள் அல்லது அத்தகைய உணர்வு இருக்கக் கூடியவர்களாகக் கருதப்படுபவர்கள் 1926 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பேசலாம். இது அங்கொட தேசிய மனநல நிலையத்துக்கான விரைவு தொலைபேசி இலக்கமாகும். ஏனெனில் கையில் விஷத்துடன் திரிபவர்களை காப்பாற்ற வேண்டும்.

மதங்கள் கருணையை முதன்மையாகக் கொண்டவை.

எனவே குணரட்னவின் பேத்தல் போதனைகள் வலிமையுடன் மறுத்துரைக்கப்பட வேண்டும். இதுதான் மதம். இப்படி எல்லாம் சொல்லிக் கொண்டு வருபவர்களை நம்ப வேண்டாம் என்பது வலிமையாக சொல்லப்பட வேண்டும்.

சமயத்துக்கு தமிழில் மதம் என்ற பெயர் சூட்டப்பட்டது. பெரும்பாலும், காரண அடிப்படையில், அனுபவ ரீதியாக சூட்டப்பட்ட பெயராக இருக்கலாம். கார்ல்ஸ்மாக்சும் அபின் போன்றது என்றுதான் குறிப்பிடுகிறார். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது மத நம்பிக்கைக்கும் பொருந்தும்.

மதம் அடிப்படையில் அன்பை, சகோதரத்துவத்தை, சகவாழ்வை, சகிப்புத் தன்மையை மற்றும் உதவும் தன்மையைக் கொண்டது. நம் கல்வி மேம்பாடு அடையவும் சுகாதாரம் சகலருக்குமாக விஸ்தரிக்கப்படவும் மதம் ஆற்றியிருக்கும் பணி மகத்தானது. ஆனால் மத போதனைகளையும் வழிமுறைகளையும் தமது வசதிக்காக திரிவுபடுத்தப்படும் போதும், குணரத்ன, ஜிம் ஜோன்ஸ் போன்ற மனோவியாதிக்காரர்களிடம் மதம் சிக்கும்போது அவர்கள் அதனை ஆயுதங்களாக்குகின்றனர்.

வறுமைக் கோட்டுக்கு...

(10ஆம் பக்கத் தொடர்)

இலங்கை பொறுப்புக்கூறல் விடயத்தில் துரிதகதியில் செயற்பட வேண்டுமென ஜெனிவா தெரிவித்துள்ளது. இது தொடர்பில் உங்களின் கருத்து?

ப. : பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசாங்கம் காத்திரமான முறையில் செயற்பட வேண்டியது அவசியம். ஒரு சமூகம் தமது உறவுகளை தொலைத்து, அடையாளத்தை இழந்து உரிமைகளுக்காக போராடி வருவதென்பது சாதாரண விடயமல்ல. மக்களின் நிலையறிந்து இந்த விடயத்தில் அரசாங்கம் துரிதகதியில் செயற்பட வேண்டும். உலக நாடுகளின் உதவி மற்றும் ஆதரவு என்பன இலங்கை போன்ற வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வரும் நாடுகளுக்கு மிகமிக அவசியமானது. இந்த நிலையில் சர்வதேசம் இலங்கை மீது பிரயோகித்துள்ள அழுத்தத்தை உரியவாறு எதிர்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

இலங்கையில் வேரூன்றிவரும் இனப்பிரச்சினை தொடர்பில் தங்களின் நிலைப்பாடு என்ன?

ப. : இலங்கையில் அண்மைக் காலமாக இனப்பிரச்சினை தலைவிரித்தாடுகிறது. இதற்கு அரசியல் பின்புலங்களே காரணமாக அமைகின்றது. இதனால் பாதிக்கப்படப் போவது சாதாரண பொதுமக்களே தவிர அரசியல்வாதிகளோ அல்லது மதத் தலைவர்களோ அல்ல. குடும்ப அரசியலால் இலங்கை பொருளாதார ரீதியில் பலமிழந்து வங்குரோத்து அடைந்தவொரு நாடாக மாறியிருக்கிறது. பொருளாதார நெருக்கடி காரணமாக வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்கள் 3 வேளை உணவு உண்பதைக் கூட நிறுத்தியுள்ளனர். நாட்டு மக்களின் நிலைமை இவ்வாறிருக்க அநாவசியமான பிரச்சினைகளை தோற்றுவித்து மக்களை திசைத்திருப்பி தங்களின் தேவைகளுக்கு அப்பாவி மக்களை பகடைக்காய்களாக்க முற்படக்கூடாது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
கலசார அலுவல்கள் திணைக்களம்

அரச நடனக் குழுவில் நடனக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்) பதவிக்கான ஆட்சேர்ப்பு

01. கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அரச நடனக் குழுவில் உள்ள வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

02. 02 விண்ணப்பங்கள் 2024.02.07ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பெறப்படும் வகையில் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08வது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அந்த திகதிக்குப் பிறகு கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03. வேலை வாய்ப்பு மற்றும் சேவை நிபந்தனைகள்:
   i. இந்த நியமனம் 03 வருட ஒப்பந்த காலத்திற்கானது மற்றும் நிரந்தர நியமனம் அல்லது நிரந்தர உத்தியோகத்தர்களின் சிறப்புரிமைகள் இல்லாத பதவியாகும்.
   ii. சம்பளம் மாத கொடுப்பனவாக ரூபா 33,600/- வழங்கப்படுகிறது.

04. **வயது எல்லை:**
விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசி திகதியின்படி வயது 18 வயதுக்கு குறையாமலும் 25 வயதுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

05. ஆட்சேர்ப்புத் தகுதி மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை www.culturaldept.gov.lk என்ற திணைக்கள இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

06. தகுதியான விண்ணப்பதாரர்கள் தகுதி மதிப்பீட்டு நேர்காணல் மற்றும் தொழில்முறை செயன்முறை முடிவுகளின் அடிப்படையில் பணியமர்த்தப்படுவார்கள்.

பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்,
08ஆவது மாடி, செத்சிறிபாய,
பத்தரமுல்லை.
2024.01.07

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தின் வாகன நிறுத்துமிடங்களை குத்தகைக்கு விடல்

கீழ்க்காணும் 04 வாகன நிறுத்துமிடங்களை குத்தகைக்கு விடுவதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன. குத்தகைக்கு விடுவதற்கு உத்தேசித்துள்ள 04 வாகன நிறுத்துமிடங்கள் பற்றிய விபரம்.

வாகன நிறுத்துமிட இலக்கம்	திட்டமிடல் இலக்கம்	துண்டு இலக்கம்	அளவு (பேர்ச்)	அமைவிடம்	குறைந்த பட்ச மாதாந்த குத்தகை மதிப்பீடு (ரூபா)
A	COM/A/104	25	20-19	பீ23,பீ34 மற்றும் பீ35 கட்டிடங்களுக்கு இடையில்	100,000.00
B	COM/A/104	34	21.25	பீ24,பீ25 மற்றும் பீ26 கட்டிடங்களுக்கு இடையில்	115,000.00
D	COM/A/104A	16	66.60	D கட்டிடத்திற்கு வலது பக்கமாக	400,000.00
பிரதீபா மாவத்தை	COM/A/112	01A	66.9	மாளிகாவத்தையில் அமைந்துள்ள பிரதீபா மாவத்த காணி	225,000.00

விண்ணப்பிக்க வேண்டிய முறை
விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும்போது ரூ. 5000.00 தொகையைச் செலுத்தி குறித்த விண்ணப்பத்தை கொழும்பு -02 ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தலைமையகத்தில் சொத்து முகாமைத்துவ பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். 2024.01.07 முதல் 2024.01.28 வரை விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும்.

குத்தகைதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படும் விதம்
தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள் 04 பேருக்கு வாகன நிறுத்துமிடத்தை நடத்திச் செல்வதற்காக மாதாந்த வரித்தொகை அடிப்படையில் ஒதுக்கப்படும். மேற்படி விலைமனுக்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரி சேர்ந்தெடுக்கப்படுவர். இறுதித்தேர்வு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு உரியது.

காசு செலுத்த வேண்டிய முறை:
விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட தினம் முதல் 14 நாட்களுக்குள் 03 மாத குத்தகை தொகை மற்றும் 03 மாத வாடகையுடன் சம்பந்தப்பட்ட தொகை வைப்பாக ஒரே முறையில் செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம்
2024.01.28 பி.ப. 2.30 இற்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவுறும் அன்றே பி.ப. 3.00 இற்கு கொழும்பு -02, சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தலைமையகத்தில் சொத்து முகாமைத்துவ பிரிவில் கேள்வி திறக்கப்படும்.

கவனிக்கவும்:
- விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைப்பதாயின் அவ்அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும்.
- குறித்த தினம் குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக தரகர்கள் நியமிக்கக் கூடாது அத்துடன் சகல தொடர்புகளும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தலைமையகத்தின் (சொத்து முகாமைத்துவப்) பிரிவில் இருந்து மாத்திரம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தொடர்புகள் 011 2446861 (பிரதி) முகாமையாளர் சொத்து முகாமைத்துவம்) 011 2430702 (முகாமையாளர் - விற்பனை)

தலைவர்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
சேர் சிற்றம்பலல் ஏ கார்டினர் மாவத்தை,
கொழும்பு -02.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விலைமனுக் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களுக்கு தனியார் பாதுகாப்பு சேவை வழங்கல் (2024/2025)

(ஒப்பந்த இலக்கம் - VV/1/4/2024/25 S.S-1)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சார்பாக தலைவர், திணைக்கள பெறுகை குழு அவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களுக்கு தனியார் பாதுகாப்பு சேவை (2024/2025) வழங்குவதற்காக புகழ்பூத்த நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தற்போது அழைக்கிறார். உத்தேசிக்கப்பட்டுள்ள ஒப்பந்த காலம் ஒரு வருடமாகும்.
ஆர்வமுள்ள மனுதாரர்கள் 08.01.2024 முதல் 29.01.2024 வரையிலான வேலைநாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணிவரை, மீளச்செலுத்தமுடியாத வைப்புத் தொகையான ரூ. **12,500.00** இனை பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பொது நிர்வாகப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் இடமிருந்து ஆங்கில மொழியில் காணப்படும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அனைத்து விலைமனு ஆவணங்களும் 105 நாட்களுக்கு (13.05.2024 வரை) செல்லுபடியாகக்கூடிய ரூ.500,000.00 பெறுமதியான வங்கிப் பிணைகளை கொண்டிருத்தல் வேண்டும். வங்கிப் பிணை இலங்கை மத்திய வங்கியின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்கும் வணிக வங்கியொன்றில் இருந்து ‘‘உபவேந்தர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்’’ எனும் பெயரிற்கு வைப்புச் செய்வதன் மூலம் அல்லது பல்கலைக்கழக காசாளரிற்கு பணமாக செலுத்துவதன் மூலம் பெறப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் இருந்து 91 நாட்களுக்கு விலைமணுக்கள் செல்லுபடியாகும்.

17 ஜனவரி 2024 அன்று மு.ப. 10.00 மணிக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தின் சபாமண்டபத்தில் முன் விலைமனுக் கோரல் கூட்டம் இடம்பெறும்.

ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைமனுப்பத்திரங்கள் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டு (கடித உறை 1- தகைமை மற்றும் அனுபவ தகவல்கள் மற்றும் கடித உறை 2 - நிதியியல் விலை மனு கடித உறையானது கடித உறை 1 மற்றும் கடித உறை 2 என சரியாக குறிப்பிடப்பட்டு) அவற்றினை தனித்தனி கடித உறைகளில் இட்டு பின்னர் ஒரே கடித உறைகளில் இட்டு அக்கடித உறையில் முத்திரையிடப்பட்டு இடதுபக்க மேல் மூலையில் ‘‘இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களுக்கு தனியார் பாதுகாப்பு சேவை வழங்கல் (2024/2025) (ஒப்பந்த இலக்கம் - **VV/1/4/2024/25 S.S-1)** எனக்குறிப்பிட்டு 30 ஜனவரி 2024 அன்று பி.ப. 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழே கொடுக்கப்பட்டிருக்கும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய கல்விச் சேவைகள் பிரிவின் விலைமனுக்கோரல் பெட்டியில் இடப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் எக்காரணத்திற்காகவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் வருகையுடன் இலங்கை திறந்த பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தின் சபா மண்டபத்தில் 30 ஜனவரி 2024 அன்று பி.ப.2.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் கேள்விகள் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பொது நிர்வாகப் பிரிவு (தொலைபேசி இலக்கம். 0112881209) இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
திணைக்கள பெறுகை குழு,
பொது நிர்வாகப் பிரிவு,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
நாவல, நுகேகொட.
07.01.2024

கெனோவின் ஹொடேல்ஸ் என்ட் ஸ்பாஸ் (பிரைவட்) லிமிட்டட்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முழுமையான இணைந்த நிறுவனமான கொனோவின் ஹொடேல்ஸ் என்ட் ஸ்பாஸ் (பிரைவட்) லிமிட்டட் இற்கு சொந்தமான தெற்கு அதிவேக வீதியில் வெலிபென்ன கெனோவின் சேவை நிலையத்தில்

சில விற்பனைத் கூடங்கள் வெற்றிடமாக உள்ளன

உங்களது வியாபாரத்தை கொனோவின் சேவையின் கீழ் நடத்திச் செல்வதற்கு எதிர்பார்ப்பின் கீழ்க்காணும் தகவல்களுடன் உங்களது விண்ணப்பங்களை 2024 ஜனவரி 28ம் திகதிக்கு முன்பு எமக்கு அனுப்புங்கள்.

- வியாபாரத்தின் தன்மை
- வியாபாரத்தைப் பதிவு செய்யும் சான்றிதழ்

கெனோவின் ஹொடேல்ஸ் என்ட் ஸ்பாஸ் (பிரைவட்) லிமிடட்
இல. 46/46, மூன்றாம் மாடி, ஸ்ரீன் லங்கா கட்டிடம்,
நவம் மாவத்தை, கொழும்பு -02.
தொடர்புகள்: உதவி முகாமையாளர்,

தொ.பே. இல. 011 7024085, 077 1386261

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

விலைமனுக்களுக்கான அழைப்பு

சுத்திகரிப்பு, சுகாதார சுத்திகரிப்பு மற்றும் தோட்ட பராமரிப்பு சேவைகள் - 2024/2025

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

சுத்திகரிப்பு, சுகாதார சுத்திகரிப்பு, குப்பைகளை அகற்றுதல் மற்றும் தோட்ட சேவைகளுக்கு தகைமையும் தகுதியும் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சார்பாக பெறுகைக்குழுவின் தலைவர் அழைக்கின்றார். கீழ்க்காணும் நிபந்தனைகளை திருப்திகரமாக நிறைவேற்றக்கூடிய விலைமனுதாரர்கள் தமது விலைமனுக்களுடன் விண்ணப்பிக்க முடியும்.

01. தேசிய போட்டி கேள்விகோரல் (NCB) இன் ஊடாக விலைமனுக்கோரல் நடத்தப்படும்.
02. ஒப்பந்த காலம் ஒரு வருடமாகும் (365 நாட்கள்)
03. தகைமையான விலைமனுதாரர்கள் எந்தவொரு பல்கலைக்கழகத்தினாலும் ஏனைய பொது நிறுவனங்களினாலும் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்க கூடாது.
04. விலைமனுதாரர்கள் சுத்திகரிப்பு மற்றும் சுகாதார சுத்திகரிப்பு டீசேவைகளை வழங்குவதற்கு ஒரு நிறுவனம் அல்லது தனிப்பட்ட நிறுவனமாக பதிவு செய்ததற்கான சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
05. நிறுவனத்தின் கீழ் குறைந்தபட்சம் 75 தொழிலாளர்களுக்கு குறையாத ஓர் தொழிலாளர் அணியை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
06. கடந்த ஒரு வருடத்திற்கான EPF மற்றும் ETF உடன் சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகளின் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். (2023 ஜனவரியிலிருந்து 2023 டிசம்பர் வரையிலானது)
07. ஒரு வருடத்திற்கு குறையாத, பொதுத்துறைகளில் அல்லது ஏதாவது ஏனைய பொதுக் கூட்டுத்தாபனங்களில் திருப்திகரமான சுத்திகரிப்பு சேவை ஒப்பந்த அறிக்கையை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
பேட்டரி தொழில்நுட்பத்தில் முன்னோடியாக விளங்கும் லீடர் குழுமம், நேஷனல் இன்டஸ்ட்ரி எக்ஸலன்ஸ் அவார்ட்ஸ் 2023 மற்றும் தெற்காசிய பிசினஸ் எக்ஸலன்ஸ் விருதுகள் 2023 ஆகியவற்றில் வென்ற அதன் சமீபத்திய விருதுகளுடன் தொழில்துறையில் புதிய வரையறைகளை அமைத்துள்ளது. நிறுவனம் தேசிய தொழில்துறை சிறப்பு விருதுகளில் நடுத்தர பிரிவில் தங்க விருது மற்றும் தெற்காசிய வணிக சிறப்பு விருதுகளில் பெரிய பிரிவில் ஆண்டின் சிறந்த உற்பத்தியாளர் என்ற பட்டத்தை வென்றது.

இந்தச் சாதனையைப் பற்றிப் பேசிய லீடர் கைஜி பேட்டரி பிரைவேட் லிமிடெட்டின் நிர்வாக இயக்குநர் துஷாந்தி குரே, நிறுவனத்தின் பயணத்தையும் புதுமை மற்றும் தொழில்நுட்பத்திற்கான அவர்களின் அர்ப்பணிப்பையும் எடுத்துரைத்தார். "எங்களுக்கு முன்னால் ஒரு சவாலான, ஆனால் வெற்றிகரமான பயணம் உள்ளது. தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளில் மிகுந்த ஆர்வத்துடன் பேட்டரி உற்பத்தியின் முக்கிய சவால்களைச் சமாளிக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்."

அதன் சிறப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், நிறுவனம் தொடர்ந்து இரண்டாவது முறையாக தேசிய தொழில்துறை சிறப்பு விருதுகளில் தங்க விருதையும் வென்றது. 'லீடர் குழுமம்' பிரதம நிறைவேற்று அதிகாரி மிதுல ரத்நாயக்க நன்றி தெரிவித்தார்: "தொடர்ந்து இரண்டாவது முறையாக தங்க விருதை வென்றது எங்களுக்கு ஒரு தனித்துவமான சாதனையாகும். இது எங்கள் ஊழியர்களின் அயராத உழைப்பையும் அவர்களின் சிறந்த அர்ப்பணிப்பையும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது. பேட்டரி துறையில் எங்கள் உறுதிப்பாட்டை இந்த விருது வலுப்படுத்துகிறது.

புதிய ஆண்டுக்கான வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தது ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ்

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் (SLIC) 2024 ஆம் ஆண்டுக்கான வணிகச் செயற்பாட்டை ஜனவரி 1 ஆம் திகதி இலங்கை காப்புறுதித் தலைமை அலுவலகத்தில் ஆரம்பித்து வைத்தது. 2024ஆம் ஆண்டின் வணிக செயற்பாட்டுக்கான கருப்பொருளாக 'கவனிக்கப்பட்ட நிபுணத்துவத்தின் மூலம் வாடிக்கையாளர் மையப்படுத்தல்' அறிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் SLIC இன் பணிப்பாளர் குழு, கூட்டாண்மை முகாமைத்துவம் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர். தலைமையகத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்விற்கு இணையாக கிளை மட்டத்தில் வர்த்தகங்களும் ஆரம்பிக்கப்பட்டன. கிளை ஊழியர்கள் நேரடி ஒளிபரப்பு மூலம் தலைமை அலுவலக நிகழ்வில் இணைந்தனர்.

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் மிகப் பெரிய மற்றும் வலிமையான அரச காப்புறுதி நிறுவனமாக 62 வருடங்களின் புகழ்பெற்ற சேவையைக் கொண்டாடுகிறது. இந்த அமைப்பு காப்பீட்டுத் துறையின் தலைமைப் பொறுப்பில் உள்ளது மற்றும் சோதனை நேரங்களிலும் கூட, தொழில் துறை அளவிலான வளர்ச்சி மற்றும் சமபங்குகளை பராமரிக்க உதவியுள்ளது. 2023ஆம் ஆண்டு வணிக சமூகத்திற்கு ஒட்டுமொத்தமாக ஒரு சவாலான ஆண்டாக இருந்தது, இருப்பினும் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் அந்தச் சந்தர்ப்பத்தில் உயர்ந்துள்ளது மற்றும் அது அவர்களின் விதிவிலக்கான செயல்திறன் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

சுப்பர் யூரியா பயன்பாட்டுடன் நிலைபேறான நைதரசன் முகாமைத்துவத்துக்கு வழிகோலியுள்ள பவர்

ஐக்கிய நாடுகள் சூழல் நிகழ்ச்சித் திட்டத்துடன் 2019 ஒக்டோபர் மாதம் இலங்கை ஏற்படுத்திக் கொண்ட பங்காண்மையின் பிரகாரம், வாழ்க்கைக்கான நைதரசன் எனும் கொழும்பு பிரகடனத்தை பின்பற்ற ஆரம்பித்தது.

2030ஆம் ஆண்டளவில் நைதரசன் கழிவை அரை மடங்காக குறைக்கும் வழிமுறையை 15 அங்கத்துவ நாடுகள் பின்பற்றுவது தொடர்பில் இந்த பங்காண்மையில் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாவது ஐக்கிய நாடுகள் சூழல் ஒன்றுகூடலில், புவியில் நிலைபேறான வகையில் நைதரசன் பயன்பாட்டை மேற்கொள்வது தொடர்பான "நிலைபேறான நைதரசன் முகாமைத்துவத்துக்கான உறுதிமொழி" எனும் சர்வதேச நைதரசன் நிர்வாக கட்டமைப்பு (INMS) இன் ஆதரவுடன் இலங்கை இந்த நிலைப்பாட்டை மேலும் உறுதி செய்திருந்தது.

உலகளாவிய பொருளாதார ரீதியில் நைதரசன் பாவனை என்பது சிக்கனமற்றதாக அமைந்துள்ளது. பெருமளவான பகுதி சூழலில் வெளியிடப்படுகின்றது.

தற்போதைய தவறான முகாமைத்துவம் மற்றும் அளவுக்கதிகமாக நைதரசன் பயன்பாடு ஆகியன பூமி, நீர், உயிரியல் பரம்பல், மனித சுகாதாரம் மற்றும் வளி ஆகியவற்றில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதுடன், மோசமான காலநிலை மாற்றங்களையும் தோற்றுவிக்கும்.

வெற்றிகரமாக இடம்பெற்ற SLT Training Centre பட்டமளிப்பு விழா

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL இன் கல்விப் பிரிவான SLT Training Centre (SLTTC), அண்மையில் தனது நான்காவது வருடாந்த பட்டமளிப்பு வைபவத்தை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் முன்னெடுத்திருந்தது. ஐக்கிய இராஜ்ஜியத்தின் Hertfordshire பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் BEng (Hons) பட்டப்படிப்பு மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் Pearson இனால் வழங்கப்படும் BTEC HND Electrical and Electronic Engineering மற்றும் Pearson BTEC HND Computing ஆகிய பட்டப்படிப்புகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்த SLTTC பட்டதாரிகள் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

கல்வி மற்றும் திறன் விருத்தி ஆகியவற்றில் கல்வியகம் காண்பிக்கும் அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில் மாணவர்கள் உலகத் தரம் வாய்ந்த தகைமைகளை பூர்த்தி செய்திருந்தமையால் இந்த பட்டமளிப்பு வைபவம் SLTTC க்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அமைந்திருந்தது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஐக்கிய இராஜ்ஜியத்தின் Hertfordshire பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல், பொறியியல் மற்றும் கணனி விஞ்ஞான பாடசாலையின் பீடாதிபதி பேராசிரியர் டேனியல் மெக்கிளவுஸ்கி கலந்து கொண்டார்.

அந்நிய வலி

தப்பிய சந்ததிகள்
சிந்திக்கும் தானியங்கி நுட்பம்
நில ஆக்கிரமிப்பு
சிலந்தி வலை எச்சில் முத்தம்
சிந்திய நிர்வாணச் சிற்பம் வரைபடத்தில்
குருதி படியும் தடம்
மயானச் சந்தி சிரிக்கும்
சுத்தமற்றவர்களின் சத்தமான
யுத்தம் சிதைந்து போகும் சமாதானச் சிலை
பாரெங்கும் நிகழ் சமூக நிலை

மீளாச் சாவடையும் மூளை மனிதம்
உறவுப் பெறுபேறுகள் எல்லாமே
சாப்பேறுகள் என்ற முடிவுகள்
சமரசமற்ற சமர் அங்கே புனிதம்
இணைப்புகள் இன்னும் இறவாமல்
நிழல் தொடர் முடிவிலி புகார்கள்
விடியாத மனுக்கள் அடைத்திருக்கும்
அகற்ற முடியாத பாவக் கணுக்கள்

திறந்தவெளி முகாமில்
நெஞ்சை பிளந்தும்
கிழித்து திறந்தும் சுவாசிக்க
விடாத அகோரக் கரங்களால்
நின்றபடி மடியும் சுதந்திரச் சிறார்கள்
பொறி வைத்த மரண தண்டனை
தாராளமாக வையுங்கள்
குஞ்சு வெண்புறாவை

வெட்டிப் புதையுங்கள்
போரெனும் போலி முகங்களை
எம் சுயத்தையும் சேர்த்தே
கட்டியிழுத்து குட்டிச் சிதையுங்கள்
முகமூடிக்கு ஏன் முகக் கவசம்
நீ உன் தோற்றுப்போன
நுண்ணறிவு உலகின்
தொற்றுக் கிருமிகளின் தோற்றுவாய்
நாளை அதை உணர்வாய்

உளம் உருக்குலைந்த
வெற்று உணர்ச்சி
நொதியங்கள் கொதிக்கும்
கணக்குத் தப்பிய மத்திய கிழக்கு
துருப்பிடித்த நரம்புகளில்
நகராத ஆதரவுக் கணத்தாக்கம்

சமர்ச் சளியில் துடிக்கும்
ஆட்கொல்லி நுண்கிருமிகள்
குடித்து வாழ்கிறார்கள்
இளசுகளின் இதயத் துடிப்பு
இடையில் அடைபட்டுக் கிடக்கும்
குறுஞ்செய்திகள் அகால
மரணச் செய்திகளாய்
நெடுங்கதைகள் சொல்லும்
எம்மை துண்டுகளாய்

துளைகள் இட்டு தூரமாக்கி
தோற்றுப் போன எறிகணைகள்
சிவந்த மண்ணில் தள்ளி வைப்பதாக
துள்ளித் திரியும் இராஜதந்திரம்

எம் கண்களை
தோண்டியவர்கள்
ஊடக வாயைத் தைத்தவர்கள்
பூர்வீக இருப்பின் முழங்கால்
இரண்டும் வெட்டிய போர்
சேதிகளின் செவிப்பறைகள்
கிழிந்து துளை விழுந்த
மனமே இல்லாதவனுக்கு மனநோயா
என்னை சங்கிலி கொண்டு
என் நிலத்தின் நிழலில் நிறுத்துங்கள்
என் இடப்பெயர்ச்சி விசாலமானது
மேற்குக்கரை மேற்குலக குருதியால்
மிதி பாதங்கள்
பள்ளத்தாக்கு தாக்குதலால்
நிரம்பிய சிசுக் குளங்கள்

சிறு குழந்தைகளின்
பிணம் தின்பவர்களை யாரும்
மனிதகுலமென்று அழைக்க வேண்டாம்
அதிகார வெறியில்
வெந்து வெட்கித்து கிடக்கிறது
அழிவைத் தேடும்
அசிங்கமான அகிலம்

அஸாத் எம் ஹனிபா

வருந்திக் கொள்ளாதே

வேலியின் முட்டுக் கட்டை அல்ல
சோதனைகளும் வேதனைகளும்
வேதாந்தம் பேசிடும் காலம் இது
வேஷங்களோ ஆயிரம்

கஷ்டமோ நஷ்டமோ
கண்காணிப்பு இல்லையென்றால்
காரணம் கூறுவதில் பயன் இல்லை
கல்லாய்ப் போன மனிதர்களால்

விதி என்று தலையாட்டினால்
சதி செய்யத்துடிப்போருக்கு
சந்தர்ப்பமகாலாம். ஆனால்...
உன் மதியைக் கொண்டு முன்னேறு

எல்லாவற்றிக்கும் எல்லோரிடமும்
மௌனியாகவே இருக்காதே...
பேசு மனம் திறந்து
கவலைகளை மறந்து

சிறகு விரித்த பறவை
தேடிய தன் உறவை
காத்திருந்தால் உன் வரவை
எத்தனையோ தடவை

அறிவுரை சொல்வதும் பிடிக்காது
குறி வைப்பதும் தவறாது
தறி கெட்டுப் போவதும்
பறி கொடுத்த மன வேதனையோ

ஆழ்ந்த சிந்தனை
அசைந்தாடும் முந்தானை
உன்மடியோ தலையணை
ஆறுதல் சொல்லும் அன்னை

வறுமையும் ஒரு கொடுமைதான்
பொறுமையும் பொக்கிஷம் தான்
திறமையோ தீர்வைத் தரும்
பொறாமை இல்லாத பட்சத்தில்

வரையறை மீறாத போது
நிறை குடம் தளம்பாது
இறையருள் இருப்பதால்
காலமும்இப்படியே இருக்காது

உன்பாரமோ குறைந்து போகும்
எதற்கும் துணிந்து நில்
உன்னை நீயே உனக்குள்ளே
வருத்திக் கொள்ளாதே.

மர்சூக்கா ஜெமில்,
ஏறாவூர்.

அவளென் அழகிய கவிதை

வசனங்களைப் பிரித்து அவளைத்
துண்டு துண்டாக்கியது மில்லை

பல்வகை இதழ்களிலிருந்து அவளைப்
பக்குவமாய்ப் பிரித்தெடுக்கவுமில்லை

பழைய புதிய நூல்களைத்
தேடித்தேடி பிரதிபண்ணியது மில்லை

வேற்று மொழிகள் பலவற்றிலிருந்து
மொழி பெயர்க்கவுமில்லை

இணைய வலைத் தளங்களிலிருந்து
இரவல் வாங்கவுமில்லை

அவள் என் உருவாக்கத்தில்
உற்பத்தியான உயிருக்கு உயிரானவள்

எனக்கு மட்டுமே சொந்தமான
அவளென் அழகிய கவிதை.

எஸ். ஏ. கப்பார்.

கரையைத் தொடாத அலையின் பாடல்

தெரியுமா?
இயற்கையின் குருதி நீல நிறத்தினது.
எட்ட நின்று அதன் மென்மையையும், குளிர்ச்சியையும்
ரசிப்பவர் நீங்கள் நாள்தோறும் அதன் நாளங்களுக்குள்
புகுந்து பயணிக்கிற பயணிகள் யாம்
ஒவ்வொரு மீனவப் பாடலுக்குள்ளும்
கடலோடியின் வாய்மொழிக் கதைக்குள்ளும்
உயிர்ப்போடு துடித்துக்கிடக்கிறதெங்கள் பெருங்கதை.
உவர்ப்புக் காற்றைக் குடித்தபடியே
முட்களாலும் செதில்களாலுமான அமிழ்தம் தேடி
உங்கள் நாவின் சுவைமொட்டுகளின் ஏக்கத்தை
நிகர்செய்கிறபடியான ஒரு பயணமது.
மோதியெழுந்து ஆர்ப்பரிக்கும்
ஒவ்வொரு எழுச்சியில் இயற்கையின் வெற்றியும்
அலைவாய் வெளியேறும் ஒவ்வொரு மீளலிலும்
எமது வெற்றியும் எழுதப்படுகிறது.
அலைக்கும் கரைக்குமான உயிர்விளையாட்டு
வாழ்க்கை
கடலின் பாடலைப் பாடுகிற ஒவ்வொரு அலையும்
மீதமாய் வைத்திருக்கும் எமது ஏதேனுமொரு
கரையைத் தொடாத பாடலை.

வருணன்

சுனாமி எனும் ஆழிப் பேரலை!

"கடல் எழுந்து வருகிறதாம்"
காட்டுத்தீ போல் செய்திகள்
கடிவாளமின்றியே கலந்திட
நாட்டு நடப்புக்களுமிங்கு பீதியில்
நடமாடத் தொடங்குகின்றன

மூக்கின் மேலே விரலை வைத்து
முன்னூறு கேள்வி கேட்டோரும்
நாக்குத் தடுமாறி பயத்தில்
நாலு வார்த்தை பேசிடத்
திணறியோரும்

சிக்கலை அறியாமல்
நக்கலாய் கலாய்த்தோரும்
விபரீதம் புரியாமல்
விளையாட்டாய் கருதியோரும்

புதுமையாய் நினைத்து அதை
புதினம் பார்க்க வந்தோரும்
பூரிப்பையிழந்தே மண்ணில்
புதையுண்டு போயினரே

கண்ணிமைக்கும் நேரத்தில்
காவுகொள்ளப்பட்ட உயிர்களால்
காசினியெங்கும் களேபரம் நிலவிட
கதிகலங்களும் கண்ணீரும்
கரைபுரண்டதே

உக்கிரமாய் கடலலையின் எழுச்சியினால்
உலகமே நிலைகுலைந்து போயிட
உயிரிழப்பு உடைமையிழப்பென
ஓராயிரம் இழப்புக்கள் உருவானதே

அவலங்களும் ஓலங்களும்
அவனியை ஆக்கிரமிக்க
இன்னல்களும் இடர்களும்
இரட்டிப்பாய் ஆனதே

ஆண்டுகள் நீண்டாலும்
ஆறாத வடுக்களால்
மீண்டிட முடியாத சோகங்களைத்
தந்த சுனாமியே
மீண்டும் இவ்வையகத்துக்கு வந்திடாதே

உலகாளும் இறைவா
உயிர்நீத்த ஆத்மாக்களுக்கு
உன்னத சாந்தியைக் கொடுத்திடு
உலக மக்களைக் காத்திடு

உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்.

நிகர் செய்திடாத நியாயங்கள்

வாய்விட்டழும்
இவ்வேளையில்
வடித்த கண்ணீருக்கு
மதிப்பற்று கழிந்த
நாட்கள் அவை.
நீங்கள் விரிந்து
நாங்கள் சுருங்கிய நரகமது.
சமன் செய்திடாத அசுரத்தன
வீக்கத்தின் புரையோடிய
அவலம்.
விட்டு
வெருண்டோடிய
புலம்பெயர்தலின்
ரண ஓலம்
இதயம் எட்டவில்லை
ஒருபோதும்.
கூடிய நெருக்கடி கூத்தின்
மீளாய்வு செய்திடாத
ஒட்டத்தில்
இதயம் தொலைத்த

இயந்திரங்களின்
சிதில பொழுதில்
மகிழலவில்லைதான்
சேர்மானமாகி இருப்பதால்.
காடும் மலையும்
காணக் கிடைக்காத ஏரியும்.
ஓடியாடிய நதிகளும்
அதில்
ஒட்டுறவாக இருந்த
உயிர்களையும்
கொன்றழித்த
கொடூரத்திற்கு முன்
இவ்வழுகையும்
அவலமும்
குறைவுதான்
தனக்கு
மட்டுமென
இவ்வுலகை
நினைக்கும் வரை

ரவி

ஒரு நிமிடம் முந்தவோ

ஒரு நிமிடம் முந்தவோ
பிந்தவோ மாட்டாது
மலக்குகள் ஏடு
கொண்டு வந்து
நிற்கும் நேரம் போல

உனக்கான அவகாசம்
முடிந்ததென
உரத்துச் சொல்லும்
சேதி போல

வானவர்கள் வந்து
நிற்கையில்
லப்டப் ஒலி
இரட்டிப்பாவதைப் போல

இன்னும் கொஞ்சம்
அவகாசம் தாருங்கள்
என கெஞ்சுவதைப்போல

இனியும் இதற்கு மேலும்
என்ன இருக்கிறது
இத்தோடு முடிகிறது
உனக்கான நேரம்
என உயிரை பறிப்பது போல

இறுதியாக உயிரை
பறிக்கும் போது
வலிப்பதைப் போல இருக்கும்
பரீட்சைத்தாளுக்கான
நேரம் முடிந்தால்
ஒரு நிமிடம்
முந்தப்படவும் மாட்டாது
பிந்தப் படவும் மாட்டாது

நிஸா இஸ்மாயீல்

போதை ஏறு போதை

கோடியாய் பிடிபடும்
போதைப் பொருள்
தேடிப் பிடிக்கும் கஞ்சா
சிந்தை மாற்றும் சாராயம்
கட்டுக்கடங்காமல்
சென்றதனால்
தேசமெங்கும் பாவச்சுமைகள்!

மாணவர் இளைஞர்
யுவதி என
மாநிலத்தில் நடத்தும்
இச்செயற்பாடு
நஷ்டம் தான் இதில்
பொய்யில்லை
நாயிலும் கேடாய்
நடைபயில்கிறான்!

ஆரம்பம்
மகிழ்ச்சியாய் திகழ
மணவறை வாழ்வும்
சிதைந்து போக
இகழ்ச்சி செய்யும்
இவர்களுக்கு வைத்த பெயர்
பேதை என்னும்
போதைக்காரன்!

மார்க்கப்பணி
வாராந்த பயான்
அறநெறி விழிப்புணர்வு
நடந்தும்
இந்நோய் இன்னுமேன்
தீரவில்லை !

கன்னிப் பெண்ணும்
கம்பி நீட்ட
காவோலைகளும்
இதில் தடம் பதிக்க
பெற்ற மகளும்
பாழாகி
சந்திக்குவருகுது
சமாச்சாரம்

முற்றிய நோய்க்கு
மருந்து குணமாகுமா
தானாக திருந்தாத
மனித ஜென்மங்களை
தட்டித்திருத்தலாமா!

தோப்பூர் எஸ் சிராஜுதீன்

இப்படிக்கு நான்

வெற்றி பெறுவேனோ
என்று எண்ணாதீர்கள்
நான் தனியாக போராடுவதே
எனக்கான வெற்றிதான்

என்னை ஏமாற்றி
வெற்றியடைந்ததாக நீங்கள்
நினைக்கலாம்
உங்களால்
ஏமாற்றப்பட்டேன்
என்பதை அறிந்தது தான்
என்னுடைய வெற்றி

என்னை ஒதுக்கி வைத்ததாக
பெருமைப்படலாம்
ஒதுக்கப்பட்ட இடங்களில்
எல்லாம்
எனக்கான
ஆசனங்களிலிலேயே
உங்கள் இருப்பு என்பது
எனக்கான வெற்றிதான்

இணுவில் வாகீசன்

கனவுகள் பல விதம்...!

கடந்த
காலத்தில்
கழிவிரக்கம்
கொண்டு
இழந்ததற்கு
ஏங்குவதே
உருப்படாதோர்
கனவு...!

நிகழ்கால
நினைவுகளில்
மனக்கானல்
மந்தைகளாய்
கடமை தவறுவதே
கடைத்தேறார் கனவு...!

எதிர்காலப் புதிர்
வென்று
எண்ணியவை
நிறைவேற
ஏற்ற வழி காண்பதே
வெற்றியாளர் கனவு...!

இரா.ஜெயக்குமார்

நுளம்புத் தொல்லை..!

நுளம்புத் தொல்லை..!
ஓடி வந்து ஒளிகின்றது..
தேடி வந்து குத்துகிறது.!
பாடிப் பாடி
சுத்துகின்றது..
காது வலிக்க கத்துகிறது.!

இரத்தத்தை
உறிஞ்சிக் குடிக்கின்றது
உறக்கத்தை உடைத்து
நொருக்கிறது
நெருக்கத்தால் எழுந்து
பார்க்கிறேன்
இரத்த காயங்கள்
தழும்புகளும்..!

சந்தன குச்சியாய் மாறி
வந்தது
நுளம்பை துரத்தும் குச்சு..!
எதற்கும் அடங்காமல்
என் வீட்டு
வானில் சுத்துது ..!

முகத்தை மூடி
படுத்தாலும்
போர்வைக்குள்
முணுமுணுக்குது
அதை கேட்டாலே
நடுச் சாமத்திலே
வாய் விட்டுக்
கத்தனும் போல எனக்கு.!

சூழலை சுத்தமா
வெச்சாலும்
சூழ்நிலை
குற்றம் சொல்லுதே.!
விரட்டி அடிச்சாலும்
இஸ்ரேலா நிக்கிறானே
பக்கத்து வீட்டிலே..!

டி. எல் நஸீம்
கிண்ணியா 01

குறுக்கெழுத்துப் போட்டி இல. 96

01	02	03	04	05	06
07			08		09
	10	11	12	13	
14	15			16	17
18		19	20	21	22
23	24	25		26	27

பெயர் .....
வகுப்பு .....
தொலைபேசி இல .....
பாடசாலை பெயர் .....
வதிவிட முகவரி .....
.....
....
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

இடமிருந்து வலம்

(1) குறித்த திணிவும், இடத்தை அடைக்கும் இயல்பும் கொண்டவை இப்பெயரால் குறிப்பிடப்படும்.
(10) குறித்த தலைப்பு ஒன்றின் கீழ் மாணவர்களாகிய நீங்கள் எழுதுகின்ற ஆக்கம் இது.
(14) தமிழ் மாதங்களில் ஒன்று.
(16) அம்புலி, திங்கள், நிலா, சந்திரன் ஆகிய ஒத்தபொருட் சொற்களில் இதுவும் ஒன்று. (தலைகீழான சொல்)
(19) வெண்டி, தக்காளி, பூசணி, புடோல் ஆகியவை போன்று இதுவும் நாம் உணவுக்குப் பயன்படுத்துகின்ற காய்கறிகளில் ஒன்று. (தலைகீழான சொல்)
(23) கவிஞர்கள் தங்கள் கற்பனையில் படைக்கின்ற இலக்கிய ஆக்கம் இது. (தலைகீழான சொல்)
(26) தோடை, எலுமிச்சை, கள்ளி, நெருஞ்சி போன்ற பல்வேறு தாவரங்களில் இதனைக் காணலாம். அலட்சியமாக இருந்தால் எம்மைக் குத்திக் காயப்படுத்தி விடும்.

மேலிருந்து கீழ்

(1) சூரியக் குடும்பத்திலுள்ள கோள்களில் ஒன்று.
(4) பெண்கள் நெற்றியில் இட்டுக் கொள்வது.
(6) அக்காலத்தில் யுத்தம் புரிவதற்காக பயன்படுத்தப்பட்ட கத்தி போன்ற கூரிய இரும்பு ஆயுதம். (தலைகீழான சொல்)
(10) காய் கனிந்த பின்னர் இப்பெயர் பெறும்.
(13) கடிதம் அனுப்புவதானால் இது அவசியம். கடித உறையின் மீது உரிய பெறுமதிக்கேற்ப ஒட்டப்பட வேண்டும். (தலைகீழான சொல்)
(14) இரவில் உணவு தேடும் பறவை. இதன் கண்களும், ஒலியும் அச்சம் தருவன.
(17) பெற்றோரின் அன்புக்குரியவள் இவள்.
(19) யானையின் ஒத்தபொருள் சொல். (தலைகீழான சொல்)

குறுக்கெழுத்துப் போட்டி இல. 95

விடைகள்

இடமிருந்து வலம்

01. நடிகை 06. கல்வி 09. கண்ணீர்
14. கலை 16. வயது 21. பாகன் 24. பால்

மேலிருந்து கீழ்

02. கண்ணாடி 04. கால் 06. கர்வம்
08. வித்து 09. கலைஞன்

குறுக்கெழுத்துப் போட்டி இல. 94

பாராட்டு பெறுவோர்

1. ஆலா பயாஸ்
தரம் 05, வீதியாவல, நாகொல்லாகொட.

2. துவாரகன்
தரம் 06C, கமு/ கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சருவோதய வீதி, பெரியநீலாவணை 01.

3. ஏ.ஏ.எம். அர்சான்
தரம் 07, தி/ கிண்ணியா மு.ம. வித்தியாலயம்,
குறிஞ்சாக்கேணி, கிண்ணியா.

04. அப்லல் அஹமத்
தரம் 04, நாங்கல்ல மு.ம.வி,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

5. தி. சயந்தவி
தரம் 06, வின்சன்ட் ம.உ. பாடசாலை
இல. 07, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

6. ஸாலிஹா
தரம் 04B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி.

7. ர. ஹஸ்விந்த்
தரம் 04A, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை,
மீசாலை கிழக்கு.

8. ஏ. அப்துர் ரஹ்மான்
தரம் 05D, வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலை,
இல. 27, மொஹமட் ஒழுங்கை, வெலிகம.

9. பஹ்மா
தரம் 09A, பென்ஹில் கல்லூரி, கம்பளை,
இல. 12/22A, இளவதுறை, கம்பளை.

10. எம்.ஏ. ஆக்கியா ஸைனப்
தரம் 07, தர்காநகர் அலிப் தேசிய பாடசாலை,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

11. நாதிர் நூரி
தரம் 10, அல் அஸ்ஹா மத்திய கல்லூரி,
திஹாரிய.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 96
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.
தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

அறன் வலியுறுத்தல் : அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம் புறத்த புகழும் இல.

தெளிவுரை : அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை.

கஜகஸ்தானில் அதிசய ஏரி

கஜகஸ்தான் நாட்டிலிருக்கும் கெய்ண்டி (Kaindy Lake) வாவியில் காடு வளர்ந்திருப்பதை காணலாம். வாவியை சுற்றிகாடு வளர்ந்திருப்பதையே நம் நாட்டில் கண்டிருக்கிறோம்.

ஆனால், இங்கு இப்படி ஒரு அதிசயம் ஒளிந்திருக்கிறது. 300 மீற்றர் அகலமும் 30 மீற்றர் ஆழமும் உடைய இந்த ஏரியின் வெளியிலிருந்து பார்த்தால் ஏரிக்குள் மரங்கள் நட்டுவைத்ததைப் போல் ஆங்காங்கே குச்சிகள் வெளியில் நீட்டிக்கொண்டிருக்கும். ஒவ்வொரு குச்சியும் ஒரு பெரிய மரமென்பது ஏரிக்குள் சென்று பார்க்கும்போது மட்டுமே புரியும்.

1911ஆம் ஆண்டு கெய்ண்டி இருக்கும் பகுதியில் வந்த பூகம்பம், 700க்கும் மேற்பட்ட கட்டடங்களை அழித்தது மட்டுமில்லாமல், சுண்ணாம்புக் கற்களினாலான ஒரு பெரிய மலை போன்ற தடுப்பை உருவாக்கியது. பெரும் பள்ளத்துடன் மரங்கள் நிறைந்த காடாக மாறிய இப்பகுதி, நாளடைவில் மழை நீரை உள்வாங்கி ஏரியாக மாறத் துவங்கியது. ஏரியின் வெப்பநிலை காரணமாகவும் (6 டிகிரி செல்சியஸ்), அங்கிருக்கும் மண்ணின் தன்மையாலும் நீரில் மூழ்கிய மரங்கள் அழுகிப்போகாமல், இன்றுவரை இருக்கின்றன. பல வருடங்களாக நீருக்குள் இருப்பதால் மரங்கள் கொஞ்சம் அழுக்கேறியது போலிருக்கின்றன. அது மட்டுமில்லாமல், சுண்ணாம்புக் கற்களின் காரணமாக மற்ற ஏரிகளைக் போலல்லாமல் இந்த ஏரியிலிருக்கும் நீர், நீலம் கலந்த பச்சை நிறத்தில் இருக்கிறது.

இவ்வார மழலை

உஸ்மான்
அஸ்வர் – சபானா

சத்ய ஜோதி
தரம் 12, (கலைப்பிரிவு) ஸாஹிரா கல்லூரி, கிந்தோட்டை காலி.

மொஹமட் யூனுஸ் பர்ஹான்
தரம் 05, அல் ஹிக்மா கல்லூரி, கொழும்பு 12.

குச்சி ஐஸ்கிரீமை கண்டுபிடித்த சிறுவன்

கோடை காலமும் ஆரம்பித்து விட்டது. இனி ஐஸ்கிரீம்களுக்கு பஞ்சம் இருக்காது. ஐஸ்கிரீம் என்றால் யாருக்குத் தான் பிடிக்காது. இன்று குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி இரசித்து சாப்பிடக் கூடிய ஒன்று தான் இந்த ஐஸ்கிரீம். இந்த ஐஸ்கிரீம்களில் பல்வேறு வகைகள் உள்ளன. அதில் சாதாரண மக்களுக்கு பழக்கப்பட்டுப் போனது தான் குச்சி ஐஸ்கிரீம். அந்த குச்சி ஐஸை கண்டுபிடித்ததும் ஒரு சிறுவன் தான்.

1905ஆம் ஆண்டு சான்பிரான்சிஸ்கோ நகரில் வசித்த Frank Epperson என்ற 11 வயது சிறுவன் தான் அந்த விஞ்ஞானி. ஒரு குளிர்கால மாலை நேரத்தில், Frank தன் வீட்டுக்கு வெளியில் ஜுஸ் டம்ளரை மறந்து வைத்து விட்டுச் சென்றுவிட, மறுநாள் காலையில் மொத்த ஜுஸும் ஐசாக மாறியிருந்தது. இது நடந்து 17 வருடங்களுக்குப் பிறகு Frank, தான் எதிர்பாராத விதமாக கண்டுபிடித்த குச்சி ஐஸை நண்பர்களுக்குச் செய்துதர, இது மிக பிரபலமாகிபோய் விட்டது. 1924ஆம் ஆண்டு குச்சி ஐஸை கண்டுபிடித்ததற்கான உரிமையைப் பெற்ற Frank, அதற்குப்பின் குச்சிஐஸ் செய்யும் கம்பெனி ஒன்றை ஆரம்பித்து புகழ்பெற்றார்.

பிரச்சினையில்லாத வாழ்க்கை எது?

புத்தர் ஒரு கிராமத்தில் தங்கியிருந்தார். அப்போது அவரைப் பார்ப்பதற்கு ஒரு இளைஞன் வந்தான். வெகு தொலைவில் இருந்து நடந்து வந்த அவன், புத்தரைப் பார்த்த அக்கணமே கதறி அழுதான். அவன் அழுது முடிக்கும் வரை பொறுத்திருந்த புத்தர் கனிவாகக் கேட்டார்: சகோதரா, ஏன் இப்படிக் கண்ணீர் சிந்துகிறாய்? உனக்கு ஏற்பட்ட பிரச்சினையை என்னிடம் சொல். "பகவானே! என் வாழ்க்கையில் நான் எல்லையற்ற துன்பங்களை அனுபவித்து வருகிறேன். எடுத்த எதிலும் தோல்வி. தாங்க முடியாத துயரம். ஆதரவுக்கென்று எனக்கு யாருமில்லை. என் மனது மிகவும் பலவீனமாகப் போய்விட்டது. எனக்கு ஒரு வழி சொல்லுங்கள். புத்தர் அன்புடன் அவன் கையில் தண்ணீர்க் குவளையைக் கொடுத்தார். பிறகு உப்பையும் கொடுத்து விட்டுச் சொன்னார்: "சகோதரா, இந்தச் குவளையில் உப்பிட்டுக் கலக்கி அருந்து." அவன் உப்பைக் குவளையில் இட்டுக் கலக்கி அருந்திப் பார்த்தான். இரண்டு மிடறு குடிப்பதற்குள் அவன் முகம் கோணியது. மேற்கொண்டு குடிக்க முடியாமல் அப்படியே கீழே வைத்து விட்டுச் சொன்னான், என்னால் இந்த தண்ணீரைக் குடிக்க முடியவில்லை பகவானே மிகவும் கரிக்கிறது. "புத்தர் மீண்டும் இதோ இப்போதும் அதே அளவு உப்பைத் தருகிறேன். இதை நீ எதிரில் இருக்கும் அதோ அந்தக் குளத்தில் கரைத்துவிடு" புத்தர் சொன்னபடியே அவன் அந்த உப்பை எதிரிலிருந்த குளத்தில் கரைத்தான். இப்போது அந்தக் குளத்து நீரைக் குடித்துப் பார்." உப்புக் கரைக்கப்பட்ட போதும் குளத்து நீரில் உப்பின் சுவை கொஞ்சம் கூடத் தெரியவில்லை. அந்த இளைஞன் போதுமான அளவு நீர் குடித்து விட்டு கரைக்கு வந்தான்.

நீ சிறிய குவளையில் இருந்த நீரிலும், பிறகு இந்தக் குளத்து நீரிலும் கரைத்தது ஒரே அளவான உப்புதான்.

ஆனால், சிறிய குவளையில் தண்ணீர் கொஞ்சம் தான் இருந்தது. அதனால் தான் கரிப்புச் சுவை அதிகமாக இருந்தது. எனவே உன்னால் தண்ணீரைக் குடிக்க முடியவில்லை. ஆனால், இதே உப்பு குளத்து நீரில் கரைக்கப்பட்டிருந்தாலும், அந்த நீரில் உப்பின் சுவை கொஞ்சம் கூடத் தெரியவில்லை. நம் துன்ப துயரங்கள் என்பவை உப்பைப் போலத் தான். இவை வாழ்க்கை நெடுகிலும் வந்து கொண்டே இருக்கும். இவற்றைத் தவிர்க்கவே முடியாது. ஆனால், நம்மால் நம் மனதை விசாலமாக்க முடியும். இப்போது உன் மனது அந்தச் சிறிய குவளையைப் போல் தான் இருக்கிறது. அதனால் தான் வாழ்க்கை சிரமங்கள் உனக்கு இந்தளவு துயரமளிக்கின்றன என்றார் புத்தர்.

பூக்கட்டும் புது இலங்கை!

சாதியில் வந்தது பாதியிலே
பெரும் பீதியைத் தந்தது வீதியிலே
பாரதி எழுதினார் ஏட்டினிலே
பெரும் பகட்டாய் படித்தோம்
வீட்டினிலே!

மானிடர் பிறந்த பூமியிலே
ஏனிந்த பாவங்கள் நாட்டினிலே
சண்டை சச்சரவை அழித்திடலாம்
அமைதி காக்க மண்ணிலே
ஏன் நீர்த்துளிகள் கண்ணிலே
பூக்கட்டும் ஒரு புது இலங்கை!

கல்லொளுவை பாரிஸ்...✍

கண்டுபிடிப்பாளர்கள்

காலச்சக்கரம்

காலச்சக்கரம் ஒரு புறம் வேகமாகச் சுழன்றுகொண்டிருந்தாலும், மற்றொரு புறம் உலகமும் மனித வாழ்க்கையும் சுற்றிச் சுழன்றுகொண்டிருப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பது சக்கரம்.

சக்கரத்தைக் கண்டுபிடித்தது ஒரு அறிவியல் வெளிப்பாடா, ஒரு விபத்தா அல்லது எண்ணற்ற பயன்களைத் தரக்கூடிய ஒற்றை மந்திரமா? இந்தக் கேள்விகளுக்கு உறுதியான பதில் கிடைக்காமல் போகலாம். தீயை உருவாக்குவது எப்படி என்பதைக் கண்டுபிடித்த பிறகு, மனிதனின் மிகப் பெரிய அறிவியல் கண்டுபிடிப்பு சக்கரம் தான். சக்கரத்திற்குக் கண்டுபிடிப்புகளின் தொட்டில் என்றொரு பெயரும் உண்டு.

உலகின் எந்த மூலையிலோ இருந்த ஒரு குகை மனிதன் ஒருவன்தான் முதன் முதலில் சக்கரத்தைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். அல்லது ஏற்கனவே பானை செய்யப் பயன்பட்ட சக்கரத்தை மேட்டிலிருந்து அந்த நபர் கீழே உருட்டி விட்டிருக்க வேண்டும். அது உருண்டு ஓடிய அந்தத் தருணம், ஒரு மாபெரும் கண்டுபிடிப்பு உருக்கொண்டது. அது அளவிட முடியாத வகையில் இந்த உலகைப் புரட்டிப் போட்டிருக்கிறது. சக்கரம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் பொருள்களை உருட்டி விடுவதற்கு உருளையான மரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த உருளைகளுக்குப் பதிலாக, அச்சு இல்லாத சக்கரங்கள் வந்தன. பிறகு ஒரு அச்சில் சுழலும் சக்கரங்கள் வந்தன. உலகின் பண்டைய நாகரிகங்களான மெசபடோமியா நாகரிகத்தில் கி.மு. 3,500ஆவது ஆண்டில் சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஏர், சூரிய விளக்கு போன்ற கண்டுபிடிப்புகள் இயற்கையில் உள்ள பொருட்கள் அளித்த உத்வேகத்தின் அடிப்படையில் உருவானவை. ஆனால், சக்கரம் இயற்கையின் எந்த முன் மாதிரியையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படவில்லை. சக்கரம் உருவான காலம் குறித்துத் தொல்லியல் ஆராய்ச்சியாளர்களிடையே விவாதம் இருந்தது. அமெரிக்காவில் உள்ள ஸ்மித்சோனியன் பல்கலைக்கழகம் மேற்கண்ட காலத்தைக் குறிப்பிட்டுள்ளது.

சக்கரம் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுவதற்கு முன்னதாக, மண்ணைக் குழைத்துப் பானை செய்வதற்குப் பயன்பட்டிருக்கிறது. ஆரம்ப கால மண் பாத்திரங்கள் கையால் வனையப்பட்டுக்கொண்டிருந்த போது, அவற்றைத் தெளிவான வட்ட வடிவத்தில் உருவாக்க முடியவில்லை. இந்த நிலையில்தான் மண்பாண்டக் கலைக்கு அடிப்படையான சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டது. சுழலும் சக்கரம் மூலம் பாத்திரத்தின் அனைத்துப் பகுதிகளையும், ஒரு மண் பாண்டக் கலைஞர் இருந்த இடத்திலேயே சமமான அளவில் வடிக்க முடிந்தது.

அந்த வகையில் நாகரிக வளர்ச்சியில் சமையலுக்கான மண்பாத்திரங்களின் உருவாக்கத்திலும் சக்கரங்கள் பெரும் பங்காற்றியிருக்கின்றன. பண்டைய நாகரிகங்களில் சக்கரங்கள் மூலம் மண் பாத்திரங்கள் செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் புதைபடிமங்களாகக் கிடைத்துள்ளன. மண்பாண்டங்கள் செய்ய ஆரம்பித்துக் கிட்டத்தட்ட 300 ஆண்டுகளுக்குப் பிறகு, மெசபடோமியர்கள் சக்கரங்களைக் கொண்டு ஒரு பொருளை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்குக் கொண்டுசெல்லவும் பயன்படுத்த முடியும் என்பதைக் கண்டுகொண்டனர்.

அந்தக் காலத்தில் சக்கரங்கள் மரத்தினாலேயே செய்யப்பட்டன. இன்றைக்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட பழைய சக்கரங்களில் பல ஐரோப்பாவின் அடர்ந்த காட்டுப் பகுதிகளுக்குள் கிடைத்துள்ளன.

கிட்டத்தட்ட கி.மு. 2000 ஆம் ஆண்டில் பண்டைய எகிப்தில் சக்கரங்கள் கொண்ட தேர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதற்கான தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

அந்தக் காலத்தில்தான் சக்கரங்களில் ஆரங்கள் சேர்க்கப்பட்டுச் சக்கரங்களின் வலு அதிகரித்தது, எடையும் குறைந்தது. உலகில் இதுவரையிலான இயந்திரவியல் கண்டுபிடிப்புகளில் சக்கரமே மிகப் பெரிய கண்டுபிடிப்பு.

அன்றைய தேர் தொடங்கி, இன்றைய கார், பஸ், சைக்கிள், தொழிற்சாலை இயந்திரங்கள், கைக்கடிகாரங்கள், திரைப்பட புரொஜெக்டர்கள், ஏன் கீ கொடுக்கும் பொம்மைகள் வரை சக்கரங்கள் இன்றி எதுவும் அசையாது. அன்று முதல் இன்று வரை மண்பாண்ட உருவாக்கத்திலும், பொதியைச் சுமந்து செல்லும் வண்டிகளிலும் சக்கரங்கள் பயன்பட்டு வருகின்றன.

மஞ்சரி விளையாட்டு

இலங்கை கிரிக்கெட் அணிக்கு டயலொக் அனுசரணை

இலங்கையின் முன்னணி தொலை தொடர்பு நிறுவனமான டயலொக் ஆசியாட்டா (Dialog Axiata), இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்களாக தமது ஆதரவினை இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டுக்காக விரிவுபடுத்தியுள்ளது .

கடந்த ஒரு தசாப்தமாக இலங்கையின் விளையாட்டுத்துறைக்கு பல்வேறு வகைகளில் பங்களிப்புச் செய்துவருகின்ற டயலொக் ஆசியாட்டா நிறுவனம் மீண்டும் ஒருதடவை தேசிய கிரிக்கெட் அணிக்கு அனுசரணையாளர்களாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

டயலொக் ஆசியாட்டா நிறுவனமானது இலங்கை கிரிக்கெட் அணியின் அனுசரணையாளர்களாக மாறிய விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட இலங்கையின் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டுக்கு இந்த ஆதரவானது எண்ணற்ற வாய்ப்புக்கள் உருவாக வழிவகுக்கும் எனக் குறிப்பிட்டதோடு, டயலொக் நிறுவனம் கடந்த காலங்களில் இலங்கையின் விளையாட்டு வளர்ச்சியடைய பல்வேறு வழிகளில் உதவியிருந்ததையும் நினைவு கூர்ந்திருந்தார். டயலொக் ஆசியாட்டா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) காணப்படும் சுபு வீரசிங்க புதிய அனுசரணை குறித்து கருத்து வெளியிட்டிருந்தபோது, இலங்கை கிரிக்கெட்டுக்கு தாம் வழங்கும் இந்த ஆதரவு மூலம் நீண்டகாலமாக இலங்கை கிரிக்கெட்டுக்கு பங்களிப்புச் செய்திருந்தமையை பெருமையாக கருதுவதாக கூறியிருந்தார்.

டயலொக் ஆசியாட்டா பிஎல்சியி வர்த்தக நாமம் மற்றும் ஊடக துணைத்தலைவர் ஹர்ஷ சமரநாயக்க, டயலொக் ஆசியாட்டா பிஎல்சியி குழும சந்தைப்படுத்தல் அதிகாரி அமலி நாணயக்கார, டயலொக் ஆசியாட்டா பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க, இலங்கை கிரிக்கெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்லி டீ சில்வா, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார கௌரவ அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார செயலாளர் கே. மஹேசன், இலங்கை கிரிக்கெட்டின் சந்தைப்படுத்தல் தலைவர் உபுல் நவரத்ன ஆகியோரை காணலாம்.

டயலொக் நிறுவனமானது இலங்கை கிரிக்கெட் அணி மாத்திரமின்றி இலங்கை வலைப்பந்து, கரப்பந்து மற்றும் ஈ–ஸ்போர்ட்ஸ் (E Sports) ஆகிய அணிகளுக்கும் அனுசரணையாளர்களாக செயற்பட்டுவருவதோடு தேசிய அளவில் நடைபெறுகின்ற பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளுக்கும் தங்களது பங்களிப்பினை வழங்கியிருந்ததும் சுட்டிக்காட்டத்தக்கது.

2024 எப்படி ?

புத்தாண்டில் சர்வதேச விளையாட்டு அரங்கில் இலங்கைக்கு மிகவும் எதிர்பார்ப்புக் கொண்டு இரு போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. ஒன்று அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் டி20 உலகக் கிண்ணப் போட்டி நடைபெறவிருப்பதோடு மற்றது பாரிஸ் ஒலிம்பிக் போட்டி இடம்பெறவுள்ளது.

டி20 உலகக் கிண்ணத்தைப் பொறுத்தவரை இலங்கை கிண்ணத்தை வெல்வது தொடர்பில் ஓரளவுக்கேனும் எதிர்பார்க்க முடியும் என்ற போதும் ஒலிம்பிக் போட்டி என்று வரும்போது இலங்கை பதக்கம் ஒன்றை வெல்வதென்பது கனவு தான். கடந்த 24 ஆண்டுகளில் சுசந்திகா ஜயசிங்கவுக்குப் பின் யாரும் பாதக்கம் ஒன்றை வென்றதில்லை.

கிரிக்கெட்டைப் பொறுத்தவரை 2023 ஆம் ஆண்டு சாதகங்களை விடவும் பாதகங்கள் தான் அதிகமாக இருந்தன. போட்டிகளில் தோல்வி, மைதானத்திற்கு வெளியில் தடை என்று ஆண்டு நீடித்தது. அதுவே 2024 ஆம் ஆண்டில் அதிரடி மாற்றங்களுடன் இலங்கை அணி களமிறங்கும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

புதிய தேர்வுக் குழு, பயிற்சிக் குழாத்தில் மாற்றம், புதிய ஆலோசகர் என்று கட்டமைப்பே மாறிவிட்டது. ஒருநாள் அணிக்கு குசல் மெண்டிஸும், டி20 அணிக்கு வனிந்து ஹசரங்கம் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். சற்றுத் தாமதமாக டெஸ்ட் அணியின் புதிய தலைவராக தனஞ்சய டி சில்வா நிமிக்கப்பட்டார்.

எப்போதும் போல், இந்த ஆண்டும் இலங்கை அணிக்கு அதிக வேலைப்பளு கொண்ட ஆண்டாகவே இருக்கிறது. மொத்தம் 10 டெஸ்ட் போட்டிகள், 21 ஒருநாள் சர்வதேச போட்டிகள் மற்றும் 21க்கும் மேற்பட்ட டி20 சர்வதேச போட்டிகளில் இலங்கை அணி இந்த ஆண்டில் ஆடவுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இலங்கை அணி உள்நாடு மற்றும் வெளிநாட்டு தொடர்களில் ஆடுகின்றபோதும் அனைத்துப் போட்டிகளும் 2023–2025 டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதால் ஒவ்வொரு போட்டியும் முக்கியமானது. அதன் புள்ளிகள் அடிப்படையிலேயே 2025 ஜூன் மாதத்தில் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெறும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற முடியும்.

இலங்கை அணி டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப்பட்டியலில் இதுவரை ஆடிய இரண்டு போட்டிகளிலும் தோற்று புள்ளிகள் இன்றி கடைசி இடமான ஒன்பதாவது இடத்திலேயே உள்ளது.

இதில் எதிர்வரும் ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் இங்கிலாந்து சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடுவது இந்த ஆண்டில் இலங்கை அணி முகம்கொடுக்கும் முக்கிய டெஸ்ட் தொடராகக் கருதலாம்.

இலங்கை டெஸ்ட் அணி ஸ்திரமானது என்றபோதும் புதிய தேர்வாளர்களின் வருகை மற்றும் புதிய அணித் தலைவரின் நியமனம் அணியில் எவ்வாறான தாக்கத்தை செலுத்தும் என்று உடன் கணிக்க முடியாது.

வரும் பெப்ரவரியில் இலங்கை வரும் ஆப்கானிஸ்தான் அணி இலங்கையுடன் ஆடவுள்ள ஒரு டெஸ்ட் போட்டியே இலங்கை இந்த ஆண்டில் ஆடும் முதல் டெஸ்ட் போட்டியாக அமையும். அப்போதே இலங்கையின் புதிய டெஸ்ட் அணித் தலைவரின் கீழ், அணியின் கட்டமைப்பு எவ்வாறு இருக்கும் என்று முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும். டெஸ்ட் அணியின் உப தலைவராக குசல் மெண்டிஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஒருநாள் கிரிக்கெட்டை பொறுத்தவரை இந்த ஆண்டு பெரிதாக முக்கியமான ஆண்டாக இல்லை. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இரு

தரப்பு ஒருநாள் தொடர்களிலேயே இலங்கை அணி ஆடப்போகிறது.

இதில் வரும் ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் இந்திய அணி இலங்கை வரப்போவது முக்கியமானது. அப்போது இலங்கை மற்றும் இந்திய அணிகள் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடவுள்ளன.

அண்மைக் காலத்தில் வேறு எந்த அணியை விடவும் இந்தியாவுக்கு முன் இலங்கை அணி கூனிக் குறுகுவதை பார்க்க முடிகிறது. ஒருநாள் போட்டி ஒன்றில் கடைசியாக இந்தியாவை வீழ்த்தி இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. கடைசியாக ஆடிய ஆறு போட்டிகளிலும் தோல்விகளே மிச்சம். அதிலும் கடந்த இரண்டு போட்டிகளிலும் இலங்கை அணி 100 ஓட்டங்களைக் கூட பெறாமல் படு தோல்வியை சந்தித்தது.

எனவே இந்தியாவுடனான இந்த ஒருநாள் தொடர் இலங்கை அணிகயின் தரத்தை மதிப்பிடுவதற்கான ஓர் அளவுகோலாகப் பார்க்கலாம்.

இந்த ஆண்டு டி20 உலகக் கிண்ணப் போட்டி நடைபெறவிருப்பதால் டி20 கிரிக்கெட் முக்கியமானது. எதிர்வரும் ஜூன் 4 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 30 ஆம் திகதி வரை அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் டி20 உலகக் கிண்ணப் போட்டி நடைபெறப்போகிறது.

அதற்கு முன்னர் இலங்கை அணி சிம்பாப்வே, ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளுடன் மொத்தமாக 6 டி20 போட்டிகளில் ஆடும். புதிய அணித் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் வனிந்து ஹசரங்கவின் தலைமையின் கீழ் இலங்கை அணியின் செயற்பாட்டை மதிப்பிட இந்த ஆறு போட்டிகளைத் தான் பார்க்க வேண்டும்.

ஒருநாள் போட்டி போலன்றி டி20 கிரிக்கெட் என்பது அதிரடி மாற்றங்களைத் தரக் கூடியது. எனவே, இலங்கை அணிக்கும் உலகக் கிண்ணத்தை வெல்வதற்கான வாய்ப்பு மற்ற அணிகளைப் போன்றே சாதகமாக உள்ளது.

பங்களாதேஷுக்கு எதிராக இலங்கை அணி இந்த ஆண்டில் முழுமையான கிரிக்கெட் தொடர் ஒன்றில் ஆடப்போகிறது. எதிர்வரும் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பங்களாதேஷ் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி 2 டெஸ்ட் மற்றும் தலா 3 ஒருநாள், டி20 போட்டிகளில் ஆடும். இதுவே இந்த ஆண்டில் இலங்கை அணி ஆடும் ஒரே ஒரு முழுமையான சுற்றுத் தொடராக இருக்கும்

மறுபுறம் 2023 ஆம் ஆண்டில் தடகள போட்டிகளில் இலங்கை அணி ஓரளவுக்கு சோபித்த நிலையில் இந்த ஆண்டிலும் பதக்கங்களை குவிக்கும் என்று எதிர்பார்க்கலாம். குறிப்பாக இளம் ஓட்ட வீராங்கனை தருஷி கருணாரத்ன மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

பாரிஸ் ஒலிம்பிக் உட்பட இலங்கை மெய்வல்லுனர்கள் இந்த ஆண்டில் மொத்தம் 28 சர்வதேச போட்டிகளில் பங்கேற்கலாம். என்றாலும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்பது என்பது போட்டிகளின் முக்கியத்துவம் மற்றும் பதக்கம் வெல்வதற்காக சாத்தியம் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் ஜூலை 26 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 11 ஆம் திகதி வரை நடைபெறும். கடந்த ஆண்டு சீனாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியின் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் இளம் வீராங்கனை தருஷி தங்கம் வென்றபோதும் ஒலிம்பிக் மட்டத்தை எட்டுவதற்கு அது போதுமானதா? என்ற கேள்வி இருக்கிறது.

என்றாலும் அவருக்கு இன்னும் வயது இருப்பதால் தருஷி மீதான எதிர்கால எதிர்பார்ப்பே அதிகம் உள்ளது.

எனினும் இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீரர் யுபுன் அபேகோன் மீதான எதிர்பார்ப்பு அதிகம் உள்ளது. தெற்காசியாவின் அதிவேக வீரரான யுபுனுக்கு 2023 ஆம் ஆண்டு பெரும் பின்னடைவை சந்தித்த ஆண்டாக மாறிவிட்டது.

கடந்த ஆண்டில் அவர் பிளோரன்ஸ் டயமன்ட் லீக், சவோனா கிராண்ட் பிரிக்ஸ், பாங்கொக் ஆசிய சம்பியன்சிப், புடபெஸ்ட் உலக சம்பியன்சிப் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டி என்று காயத்தால் முக்கிய போட்டிகளை இழந்துவிட்டார். இது அவரின் ஓட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது மாத்திரமல்ல ஒலிம்பிக் தகுதிக்கு முட்டுக்கட்டையை ஏற்படுத்தும்.

அதாவது பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு நேரடி தகுதியை பெறுவதற்கு உலக தரநிலையில் அபேகோன் 10.00 விநாடி அல்லது அதற்கு குறைவான காலத்தில் 100 மீற்றர் ஓட்டத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும். என்றாலும் இந்தப் புள்ளியை எட்டுவதற்கு இந்த ஆண்டில் அவருக்கு இன்னும் ஒன்று அல்லது இரண்டு போட்டிகளில் தான் பங்கேற்க முடியுமாக இருக்கிறது.

என்றாலும் ஒலிம்பிக்கின் ஆடவருக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டி என்பது ஒட்டுமொத்த ஒலிம்பிக் விளையாட்டினதும் உச்சம். அதில் உலக அரங்கில் அதிக திறமையை வெளிப்படுத்தும் வீரர்களுக்கே இடமுண்டு. ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஆசிய வீரர்கள் ஒரு சிலர் தான் அதுவரை முன்னேறுவார்கள். எனவே அபேகோன் முன்னிருக்கும் சவால் என்பது இலகுவானதல்ல.

அதேபோன்று இலங்கையின் ஆடவர் மற்றும் கலப்பு 400 மீற்றர் அஞ்சலோட்ட அணிகளையும் ஒலிம்பிக்கில் பங்கேற்கச் செய்யவும் எதிர்பார்ப்பு உள்ளது. அதற்காக இந்த அணிகளை எதிர்வரும் மே 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் பஹாமாஸில் நடைபெறும் உலக அஞ்சலோட்ட சம்பியன்சிப் போட்டிகளில் பங்கேற்கச் செய்ய இலங்கை தடகள சம்மேளனம் திட்டமிடுகிறது.

அதாவது ஒலிம்பிக் தகுதிப் புள்ளியை பெறும் நோக்கத்திற்காகவே இந்த இரு அணிகளும் பஹாமாஸ் செல்லவுள்ளன. ஒலிம்பிக் நுழைவதற்கான தரத்தை காண்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் ஜூலை 31 உடன் முடிகிறது. அதேபோன்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் பெரு நாட்டில் நடைபெறவுள்ள உலக இளையோர் மெய்வல்லுனர் போட்டி மற்றும் லஹூரில் நடத்த திட்டமிடப்பட்டிருக்கும் சாஃப் விளையாட்டுப் போட்டியும் இந்த ஆண்டில் இலங்கைக்கு முக்கியமானது. இதில் 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடத்த முடியாமல் போயிருக்கும் சாஃப் விளையாட்டுப் போட்டி இந்த ஆண்டிலும் 2025 வரை பிற்போடப்படுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது.

சர்வதேச போட்டிகளுக்கு தயார்படுத்தும் வகையில் உள்நாட்டில் இந்த ஆண்டில் 11 மெய்வல்லுனர் போட்டிகளை நடத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. எதிர்வரும் பெப்ரவரி 18 ஆம் திகதி நடைபெறும் தேசிய நடைப்போட்டியுடன் இந்த ஆண்டின் உள்ளூர் மெய்வல்லுனர் போட்டிகள் ஆரம்பமாகிறது.

இதில் 102 ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டி ஜூன் மாதத்திலும், 48ஆவது தேசிய விளையாட்டுப் போட்டி ஓகஸ்ட் மாதத்திலும் நடைபெறவுள்ளன.

ஆசிய இளையோர் (20 வயதுக்கு உட்பட்டது) மெய்வல்லுனர் போட்டியை இலக்கு வைத்து மார்ச் 1 ஆம் திகதி தொடக்கம் 3 ஆம் திகதி வரை தியகம மஹிந்த ராஜபக்ஷ அரங்கிலும், உலக இளையோர் மெய்வல்லுனர் போட்டியை இலக்கு வைத்து ஜூன் 7 தொடக்கம் 9 ஆம் திகதி வரை கொழும்பு, சுகததாச மைதானத்திலும் இறுதித் தேர்வுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

2024 மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி கால அட்டவணையில் இந்திய, ஐரோப்பிய மற்றும் ஜப்பான் கிரோன் பிரீ போட்டிகள் பலதும் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டு கடைசியாக நடைபெற்ற தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி இந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

2023 ஆம் ஆண்டு இலங்கை கால்பந்து தடையுடனேயே முடிந்தது. தடைகளும், தேர்தல்களும் என்று நீண்ட கடந்த ஆண்டில் இலங்கை தேசிய அணி இரண்டே இரண்டு சர்வதேச போட்டியில் யெமனுக்கு எதிராக ஆடி ஒன்றில் தோற்று மற்றதை சமன் செய்தது.

எனவே, 2024 ஆம் ஆண்டை இலங்கை கால்பந்தின் மீட்சிக்கான ஆண்டாக குறிப்பிடலாம். இலங்கை கால்பந்து அணியின் 2024 ஆம் ஆண்டுக்கான போட்டி அட்டவணை இன்னும் வெளியிடப்படவில்லை. எனினும் இந்த ஆண்டில் இலங்கை கால்பந்து அணி மொத்தம் 6 சர்வதேச போட்டிகளில் ஆடவிருப்பதாக இலங்கை கால்பந்து சம்மேளம் கூறியது.

தவிர, வரும் ஓகஸ்ட் மாதத்தில் 20 வயதுக்கு உட்பட்ட தெற்காசிய கால்பந்து தொடர் இலங்கையில் நடத்தப்படவுள்ளது முக்கிய அம்சமாகும். எதிர்வரும் ஜூனில் நான்கு அணிகள் பங்கேற்கும் கால்பந்து தொடர் ஒன்றையும் நடத்த திட்டமிடப்படுகிறது. வழக்கம்போல உள்ளூர் கால்பந்து தொடர்களும் நடைபெறும்.

எது எப்படியோ தற்போது பெரும் வீழ்ச்சியை சந்தித்திருக்கும் இலங்கை கால்பந்து அணி பயணிக்க வேண்டி தூரம் நெடியது. அதற்கு 2024 ஆரம்பப் புள்ளியாக இருந்தால் நல்லது.

எஸ்.பிர்தௌஸ்...✍

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2024 ஜனவரி 7 ஞாயிற்றுக்கிழமை

Harshini

சொக்லெட் நிறுவனம் மீது பெண் விசித்திர வழக்கு

அமெரிக்காவில் சொக்லெட் பொட்டலத்தில் உள்ள படத்தைப் போன்று உள்ளிருக்கும் சொக்லெட் இல்லை என்று ஒரு பெண் 'தி ஹெர்ஷி' நிறுவனம் மீது வழக்குத் தொடுத்துள்ளார்.

புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த சிந்தியா கெல்லி 5 மில்லியன் டொலர் இழப்பீடு கேட்டிருக்கிறார்.

இந்த சர்ச்சையில் சிக்கியிருப்பது 'தி ஹெர்ஷி' நிறுவனத்தின் ரீஸ் வகை சொக்லெட். பரங்கிக்காய் வடிவத்தில் இருக்கும் சொக்லெட்டின் பொட்டலத்தில் கண்களும் மூக்கும் உள்ளன. ஆனால் உண்மையான சொக்லெட்டில் கண்களோ மூக்கோ இல்லை.

வாடிக்கையாளர்கள் பலரும் பொட்டலத்தைப் பார்த்து ஏமாந்து விட்டதாக வழக்குத் தொடர்பான ஆவணங்கள் குறிப்பிட்டன.

சொக்லெட்டில் முகம் இல்லை என்று தெரிந்திருந்தால் அதை வாங்கியே இருக்கமாட்டேன் என்று கெல்லி கூறுகிறார். அதை அவர் சுமார் 5 டொலருக்கு வாங்கியதாக கூறியிருக்கிறார்.

இராட்சத கட்டத்தையே நகர்த்திய சீனா

பஸ் தரிப்பிடத்தை ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மாற்ற வேண்டும். அதனை உடைத்து விட்டு புதிய இடத்தில் கட்டுவதுதான் வழக்கம். ஆனால் சீன பொறியியலாளர்களை சொல்ல வேண்டுமா! உலகில் இதுவரை முயற்சிக்காத ஒன்றாக 945 அடி உயரம், அதாவது ஐந்து மாடிகள், 110 அடி அகலம், 30,000 தொன்கள் எடை கொண்ட அந்த பஸ் நிலையத்தை லாவகமாக புதிய இடத்திற்கு நகர்த்தினார்கள். என்ன ஆச்சரியம் என்றால் கண்ணாடித் துண்டு கூட உடையவில்லை.

அதாவது பாரிஸ் நகரில் இருக்கும் ஈபிள் கோபுரத்தின் எடையில் நான்கு மடங்கு எடையுடைய அந்த கட்டத்தை புல்லட் ரயில் பாதை அமைப்பதற்காக 40 நாட்களுக்குள் நகர்த்த வேண்டி ஏற்பட்டது.

சீனாவின் துறைமுக நகரான ஷியாமனிலேயே இந்த பஸ் தரிப்பிட கட்டடம் இருக்கிறது. ஐந்து ஆண்டு காலப்பகுதியில் 260 மில்லியன் யுவான் செலவிட்டு பிரமாண்டமாக கட்டப்பட்ட இந்தக் கட்டம் 2015 ஆம் ஆண்டே திறக்கப்பட்டது. அதற்குள் திட்டமே மாறிவிட்டது.

புதிய போக்குவரத்து திட்டத்தின்படி இந்த பஸ் நிலையம் இருக்கும் இடத்தின் வழியாகவே அதிவேக ரயில்பாதை செல்லும், பஸ் தரிப்பிடக் கட்டடம் அருகில் இருக்கும் வீதிக்கு நகர்த்தப்பட வேண்டும்.

உண்மையிலேயே அந்த கட்டடத்தை நகர்த்த முடிவெடுத்தார்கள். சரியாக 90 பாகை நகர்த்த வேண்டும்.

முதலில் கட்டடத்தின் அடிவாரத்தை தோண்டினார்கள். அங்கு நகர்த்த வேண்டிய இடத்தை நோக்கி தண்டவாளம் இட்டார்கள். கட்டடத்தை தரையில் இருந்து மேலே துக்கி கீழ் பக்கமாக தானாக நகரும் ஹைட்ரோலிக் ஜக் கருவிகளை பொருத்தினார்கள்.

கணினியால் இயக்கப்பட்ட அந்தக் கருவிகள் நாளொன்றுக்கு 10 தொடக்கம் 20 மீற்றர் என மெல்ல மெல்ல கட்டடத்தை புதிய இடத்திற்கு நகர்த்தியது. இப்படி கிட்டத்தட்ட ஒரு மாதத்தில் அந்தக் கட்டடம் திட்டமிட்ட இடத்திற்கு நகர்த்தப்பட்டது.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

பெண்களுக்கு இப்படியும் பயப்படுவார்களா!

ருவண்டாவில் பெண்களுக்கு பயந்து 55 ஆண்டுகளாக தனிமையில் ஓர் ஆடவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

71 வயதான கலிக்ஸ்டே நிசவிட்டா, கடந்த 55 ஆண்டுகளாக தனது வீட்டை சுற்றி பெண்களை எதிர்கொள்ள முடியாத அளவுக்கு பெரிய தடுப்பு வேலிகளை அமைத்து அதற்குள்ளேயே வாழ்ந்து வருகிறார்.

இப்படி 16 வயதிலேயே வீட்டுக்குள் அடங்கிய அவர் உண்பது, குடிப்பது, படுப்பது எல்லாம் அங்கேதான்.

நிசவிட்டா பெண்களுக்கு பயப்படும் 'பெமினோபோஃபியா' நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக சொல்கிறார்கள். மருத்துவ உலகம் இப்படியான ஒரு நோய் இருப்பதை இன்னும் முழுமையாக அங்கீகரிக்கவில்லை. என்றாலும் பெண்களைப் பார்த்து பயப்படும் உளரீதியில் பாதிக்கப்பட்ட ஆண்கள் எக்கச்சக்கமாக இருந்தாலும் அதற்கென்று இப்படியா?

"பெண்கள் என்னை நெருங்காமல் இருப்பதை தவிர்ப்பதற்கே நான் இப்படி எனது வீட்டைச் சுற்றி வேலிகள் அமைத்திருக்கிறேன்" என்று நிசவிட்டா யூடியுப் சேனல் ஒன்றுக்கு குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தனைக்கும் அவருக்கு உணவு மற்றும் உதவிகளை வழங்குவது அக்கம் பக்கத்தில் இருக்கும் பெண்கள்தான். "நாம் அவருக்கு உதவ முயன்றாலும் அவருக்கு அருகில் செல்லவோ அல்லது பேசுவதையே அவர் விரும்பவில்லை. இத்தனைக்கும் நாம் அவரின் வீட்டுக்குள் தேவையானவற்றை வீசிவிடுவோம்" என்று அண்டை வீட்டு பெண் ஒருவர் கூறுகிறார்.

"அவர் எம்மை பக்கத்தில் நெருங்க விடமாட்டார், ஆனால் நாம் தூரத்தில் இருந்து கொடுப்பதை அவர் பெற்றுக் கொள்வார்" என்றும் அந்தப் பெண் கூறுகிறார்.

அழுக்கான உடையோடு, மெலிந்த உருவாத்தில் இருக்கும் நிசவிட்டா தொடர்ந்து தனது வாழ்க்கையை கொண்டு செல்கிறார்.

"எனது வாழ்க்கை முறைக்கு இது போதுமானது. பெண் ஒருவர் வேண்டும் என்ற எண்ணமே எனக்கு இல்லை, அது பற்றி எனக்கு பிரச்சினை இல்லை. பெண்கள் எனக்கு அருகில் வருவதை நான் விரும்பவில்லை. அது என்னை மிகவும் பயமுறுத்துகிறது" என்கிறார் நிசவிட்டா.

நடுவானில் மின்சாரத்தை துண்டித்த விமானி

நேபாளத்தில் கடந்த ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி தலை நகர் காத்மண்டுவில் இருந்து சுற்றுலா தளமான பொகாராவுக்கு பயணித்துக் கொண்டிருந்த விமானம் விபத்துக்குள்ளாகி 72 பேர் கொல்லப்பட்டார்கள். விபத்துக்கான காரணம் பற்றி தீவிர விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை முடிவில் கண்டறியப்பட்ட உண்மை அதிர்ச்சியளித்தது.

அதாவது நடுவானில் வைத்து விமானி தவறுதலாக விமானத்தின் ஆற்றலை துண்டித்திருப்பதாக தெரியவருகிறது. இதனால் எஞ்சின் செயலிழந்து விபத்து நிகழ்ந்திருக்கிறது. விபத்துக்கு முன் தாழ்வாகப் பறந்த விமானம் பல தடவைகள் சுழன்று மலை ஒன்றில் மோதி இருக்கிறது. விமானத்தில் இருந்த எவரும் உயிர் தப்பவில்லை.

விமானிக்கு போதிய விழிப்புணர்வு இல்லாதது மற்றும் போதிய செயற்பாட்டு நடைமுறைகள் இல்லாததே விபத்து நேரக் காரணம் என்கிறார்கள் விசாரணையாளர்கள்.

கோபு : டேய் பாபு எனக்கு லைப்பே ஒரு பிடிப்பு இல்லே தற்கொலை பண்ணிக்கலாம்னு தோணுதுடா

பாபு : அட அசடு அதுக்காகத் தற்கொலை பண்ணிக் காதே. கல்யாணம் பண்ணிக்கோ. அது போதும்.

பஸ்ஸில் ஒருவன், இன்னொருவன் தோளைத் தட்டி:

ஒருவர் : இது இராயப்போட்டையா?

மற்றொருவர் : இல்லை தோள்பட்டை.

வேலு : அதான் டி.வியில் நியூஸ் போடுறானேன்னு நியூஸ் பேப்பரை நிறுத்தினது தப்பாபோச்சு..

பாக்கி : ஏன்... என்னாச்சு?

வேலு : இப்பப் பாருங்க.. ஓசி பேப்பர் வாங்க வரும் பக்கத்து வீட்டுக்காரரு, கொஞ்சம் டி.வி இருந்தாக் கொடுங்க.. நியூஸ் பார்த்துட்டு தர்றேன்னு சொல்றாரு

சித்ரா : ஏழு வருஷமா லவ் பண்றோம். இன்னும் நீங்க கல்யாணப் பேச்சையே எடுக்கலையே?

கோபு : சரி சித்ரா, இப்ப கேட்கறேன்.. எப்போ உன் கல்யாணம்?

ஆசிரியர் : பூமி தன்னைத்தானே சுத்தி சூரியனைச் சுத்துமா? இல்ல சூரியன் தன்னைத்தானே சுத்தி பூமியைச் சுத்துமா?

மாணவன் : எனக்குத் தலையைச் சுத்துது சார்.

பாக்கி : 22 ம் நம்பர் பஸ் எங்கே வரும்?

வேலு : ரோட்ல தான்!

ரமனன் : பால் வியாபாரம் செய்கிறீர்களே! கட்டுபடியாகிறதா?

முராரி : மாட்டின் சொந்தக்காரர்கள் கண்களில் அகப்பட்டுக் கொள்ளாதவரை பரவாயில்லை.

ஒருவர் : நீங்க இந்த கிளினிக்கை ஆரம்பிச்சதுலேர்ந்து இதுவரைக்கும் நான் உங்களைத் தவிர, வேற எந்த டாக்டர்கிட்டேயும் போனதில்லை

மற்றொருவர் : நானும் அப்படித்தான் இந்த கிளினிக்கை ஆரம்பிச்சதுலேர்ந்து இதுவரைக்கும் உங்களைத் தவிர, வேற எந்த பேஷண்ட்டுக்கும் ட்ரீட்மெண்ட் கொடுத்ததில்லை

ஒருவர் : சார்... ஆறு வருஷத்துல டெபாசிட் பணம் டபுள் ஆகும்னு சொன்னீங்களே... என்ன ஆச்சு?

அதிகாரி : டபுள் ஆகும்னுதானே சொன்னோம்.. திருப்பித் தர்றதா சொல்லலையே

முட்டாள் 1 : என்னங்க... செருப்பு காலை கடிக்குது

முட்டாள் 2 : அப்ப மாலை லபோட்டுக் கங்க

ரமனன் : தாத்தா ஐம்பத்தைந்து வயதில் மரணமடைந்தார். எனக்கு அறுபத்தைந்து வயது. இன்னும் உயிருடன் இருக்கிறேன்.

பாக்கி : இரண்டுமே வருத்தப்பட வேண்டிய விஷயந்தான்.

முட்டாள் 1 : சார்... என் பேரு கந்தசாமி.... சொந்த ஊரு பழனி...

முட்டாள் 2 : அதுக்கென்ன இப்போ..

முட்டாள் 1 : ஆயிரம் ரூபா கடன் வேணும். ஊர் பேர் தெரியாதவனுக்கு எல்லாம் கடன் குடுக்க முடியாதுன்னு சொன்னீங்களே.. அதான் அறிமுகப் படுத்திக்கிட்டேன்.

வேனி : இன்னும் முப்பது வருஷம் இளமையா இருக்க வழி இருக்கா?

ரானி : எதுக்கு?

வேனி : ஒரு மெகா சீரியல்ல கதாநாயகி வாய்ப்பு கிடைச்சிருக்கு

ரமேஷ் : எத்தனை பெரிய ஆபத்து வந்தாலும் யானை, குதிரை எல்லாம் கத்தாது.

சுரேஷ் : ஏன்?

ரமேஷ் : யானை பிளிறும்! குதிரை கனைக்குமே!

கோபு : அந்த ஆள் ரொம்ப சிக்கனப் பேர்வழி... எப்ப மார்க்கெட்டுக்குப் போனாலும் வாழைப்பழம்தான் வாங்கு வாரு..

பாபு : ஏன்...

கோபு : அதான் சீப்பா கிடைக்குதாம்

ரானி : நேற்றைய பார்ட்டில, உன் கணவர் குடிச்சிருப்பதை எப்படி கண்டுபிடிச்சே?

வேனி : ஜன கண மன விற்குக் கைதட்டினாரே

"கீத் ராத்" கடந்த காலப் பதிவுகள் சில....

எதிர்வரும் 13 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு ஜே.ஆர். மண்டபத்தில் "கீத் 60"

இதயம் திறந்து பேசுகிறார் கலைஞர் கலைக்கமல்

எனக்கென்று தலைமைதுவமான அடையாள மேடைக்களம் தேவை என உணர்ந்ததன் உதயமே... கீத்ராத். முப்பது ஆண்டுகளாக மூச்செடுத்துக் கோர்த்த முத்தாரம். இந்தப் பாட்டு நிகழ்ச்சிக்காக ஓயாத ஓட்டம்.... இதில் வியர்வை, வெற்றி.... ஏற்றம், ஏமாற்றம் இரண்டறக் கலந்துள்ளன.

இசைமுரசு பாடலோடு நுழைந்த இந்த நந்தவனத்தில் ரி.எம்.எஸ், எஸ்.பி.பி., ஜேசுதாஸ், முஹம்மது ராபி வளர்த்த வாடா வசந்தப் பூக்களையும் சொந்தம் கொண்டாடிக் கொண்டேன். இதனால் எனது பந்திக்குப் பலர் முந்திக்கொண்டார்கள்.

பன்முகக் கலைஞர்கள், சமூக சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள், கவிஞர்கள், பாடலாசிரியர்கள், நாடகத்துறையினர், வர்த்தக வள்ளல்கள் கீத்ராத் மேடையில் கௌரவம் பெற்றனர். சினிமாப் பாடல்களுடன் நம் நாட்டுக் கவிஞர்களின் பாடல் வரிகளும் (11) இசை வரம் பெற்று ரசிகர் முன்னிலையில் வசீகரம் பெற்றன.

பல நூற்றுக்கணக்கான மாணவச் செல்வங்கள் இலவசப் புத்தகப் பரிசுகளால் பரவசம் அடைந்தனர். ஆதரவற்ற கலையரசிகள் இருவர் பொற்கிழி பெற்று குதூகலித்தனர்.

6,000 நிகழ்ச்சிகளுக்கு மேல் பாடி விட்டேன். 20 வயதுக்காரனைப் போல பாடமுடிந்தாலும் "60" ஓய்வு நிலையை சுட்டி நிற்கிறது. ஏகப்பட்ட நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து வந்துகொண்டிருக்கும் இந்த "அடை மழை" காலத்தில் வெகு விரைவில் விடைபெறவேண்டுமென்பதே எண்ணம். "கீத் ராத் 60" அன்புள்ள மக்கள் அனைவரையும் அழைக்கிறது.

கிரீன் லீப் பவுன்டேசன் ஏற்பாட்டில் மலையகம் 200

கிரீன் லீப் பவுன்டேசன் ஏற்பாட்டில் மலையக சமூக மாற்றமும் இனத்துவ அடையாளத்தின் நீட்சியும் நினைவு கூரும் வகையில் மலையகம் 200 தொடர்பாக தினகரனில் 27122023 வெளியான செய்தியில் மலையக கலை கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது என்பது தவறுதலான செய்தியாகும். கிரீன் லீப் பவுன்டேசன் ஏற்பாட்டில் நடைபெற்றமை என்பது குறிப்பிடத்தக்கது.

மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரனின் அனுசரணையுடன் கிரீன் லீப் பவுன்டேசன் ஏற்பாட்டில் மலையக சமூக மாற்றமும் இனத்துவ அடையாளத்தின் நீட்சியும் நினைவு கூரும் நிகழ்வும் கண்டி விவேகானந்தா கல்லூரி மண்டபத்தில் முன்னாள் தமிழ்மொழி பாட இணைப்பாளர், சங்கத்தின் தலைவர் ஆர். பார்த்தீபன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியற் துறை பேராசிரியர் எஸ். விஜயச்சந்திரன், பேராதனை பல்கலைக்கழக பிரதம நூலகர் கலாநிதி ஆர். மகேஸ்வரன், பேராதனை பல்கலைக்கழக அரசறிவியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர். ரமேஷ், கல்விசார் இதழாசிரியர், ஆய்வாளர் தெ. மதுசூதனன், மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், சர்வதேச விவசாயத் தொழிலாளர் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம், முன்னாள் பாராமன்ற உறுப்பினர் எழுத்தாளர் மல்லிகைப்பூ திலகர், எழுத்தாளர், கவிஞர் ரா. நித்தியானந்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் மலையகம் தொடர்பான கைநூலொன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன் முதல் பிரதியை மலையக கலை கலாசார சங்கத்தின் எஸ். பரமேஸ்வரன், தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் பி. குமாரதாஸ், கண்டி விவேகானந்தா கல்லூரி அதிபர் எஸ். சிவஞான சுந்தரம், கண்டி இந்து சீனியர் கல்லூரி அதிபர் சிவகுமார் மற்றும் எம். முத்துசாமி உள்ளிட்டவர்களுடன் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இக்பால் அலி

அகிலேஷ்

தனுர்ஷன் - தயாழனி

Nelanthi Priyadarshani

S. vijay

singer murali

சிறுகதைப் போட்டியில் மாணவன் ஹனீப் ஹாயிஸ் முதலிடம்

கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் கர்நாடக இசைச்சங்கம் இசைவிழாவை முன்னிட்டு அண்மையில் நடத்திய சிறுகதைப் போட்டியில் றோயல் கல்லூரி மாணவன் ஹனீப் ஹாயிஸ் முதலாமிடத்தை சுவீகரித்துக் கொண்டார். கொழும்பு நவரங்கல மண்டபத்தில் நடைபெற்ற இசை விழாவின் போது ஹனீப் ஹாயிஸ் தனக்குரிய சான்றிதழை பிரதம அதிதியாக கலந்து கொண்ட சிரேஷ்ட சட்டத்தரணியும் பட்டயக்கணக்காளருமான வீரப்பன் சிவகுருநாதனிடமிருந்து பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம். கொழும்பு றோயல் கல்லூரி தமிழ்ப் பிரிவின் உதவி அதிபர் திருமதி ந. நந்தகுமாரும் அருகில் காணப்படுகிறார்.

V. K. Arasi

Shanthi Banusha

Theepan Uma

Wishwakeerthi Udaya

கவிஞராக கதாசிரியராக வலம் வரும் ஒரு பெண் விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலட்சுமி

உதயகுமார். இவர் செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர். இவரது கணவர் வீரசிங்கம் உதயகுமார் (B SC) கணித ஆசிரியர். இவருக்கு இரண்டு பிள்ளைகள். மகள் மருத்துவத் துறையில் படிப்பை முடித்தவர். மகன்(B SC in computer science) வெளிநாட்டில்

வசிக்கின்றார்.

விரிவுரையாளர் தொழில் எப்போது , எப்படிக் கிடைத்தது ?

17.8.1988 ஆசிரிய நியமனம் போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் கிடைத்தது. விரிவுரையாளராக 2002 நேர்முகப் பரீட்சை மூலம் கிடைத்தது.

உங்களுடைய சேவைக் காலமும் அதன் அனுபவங்களும் பற்றிக் கூறலாமே...?

சேவைக்காலம் 33 வருடங்கள். ஒவ்வொரு பதவியிலும் வித்தியாசமான அனுபவங்கள் உண்டு. ஆசிரியராக இருக்கும் போது இளம் வயதில் எந்த வித பொறுப்புமின்றிச் சிட்டாகப் பவனி வந்தேன். கற்பித்தல் எனக்கு விருப்பமான கலை. முன் ஆயத்தத்தோடு மகிழ்ச்சியான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி கற்பித்தலில் ஈடுபடுவேன். அதனால் மாணவர்கள் என்மீது பாசம் நிறைந்தவர்களாய் இருப்பார்கள். கல்வியியற் கல்லூரியில் வித்தியாசமான அனுபவம் ஏற்பட்டது. வாழ்க்கை என்னும் நூலின் புதிய அத்தியாயத்தைப் படிக்கத் துடிக்கும் வயதினர்.

ஒவ்வொருவரும் நாட்டின் வெவ்வேறு மாவட்டத்தில் இருந்து வருபவர்கள். அவர்களின் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அதற்கேற்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட வேண்டும். அதுகூட ஒரு வித்தியாசமான அனுபவம்.

நான் விடுதி மேற்பார்வையாளராகவும் செயற்படுவதால் பெண் ஆசிரிய மாணவர்களுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைக்கும். அன்பைப் பொறுத்த மட்டில் அவர்கள் சிறு பிள்ளைகளே...! ஒரு தாயாக இருந்து அவர்கள் இன்ப துன்பங்களில் பங்கெடுப்பேன்.

அதனால் என்னை என்றும் மனதால் இளையவளாக நினைப்பேன். ஒரு ஆசிரியர் மனம் எப்பவும் இளைமையாக இருக்க வேண்டும். நான் என்றும் 16 வயதுதான் என்பேன். ஒருமுறை ஆசிரிய மாணவர்கள் எனது பிறந்த நாளுக்கு 16வது பிறந்தநாள் என எழுதிக் கேக்குடன் எனது வீட்டிற்கு வந்தார்கள். "மேடம் நீங்கள் தானே என்றும் பதினாறு என்பீர்கள் எனக்கூறி கேக் வெட்டிக் கொண்டாடினார்கள்.

இது எனக்கு இன்னும் மறக்க முடியாத ஓர் அனுபவமே....!

வகுப்பறையில் மாணவர்களுடன் செலவிடும் நேரத்தைப் பெறுமதியானதாக எண்ணுவேன்.

தாங்கள் கவிஞராக, கதாசிரியராக வலம் வருகிறீர்கள். அதைப்பற்றிக் கூறலாமே....?

கவிதை எனக்குச் சிறுவயது முதலே பிடிக்கும். வாசிப்புப் பழக்கம் உடையவள். சிறுவயது முதல் கடையில் பொருட்கள் சுற்றி வரும் பத்திரிகையைக் கூட வாசிப்பேன். அந்தப் பழக்கமே எனது எழுத்தாற்றலுக்குக் காரணம். மற்றவர்களுடன் கதைப்பதைவிட புத்தகத்துடன் அதிகம் கதைப்பேன்.

எனது இளமைக்காலம் போராட்ட சூழ்நிலை நிறைந்த காலம். அந்த நேரத்தில் எழுதத் தொடங்கினேன்.

ஆரம்பத்தில் விடுதலை தொடர்பாக எழுதத் தொடங்கிப் பின் காதல், சமூகம் என எழுதி இன்று மரபுக் கவிதை உட்பட எல்லாவிதமான கவிதைகளும் எழுதுகிறேன்.

கவியரங்கம், பட்டிமன்றம் என்பனவற்றிற்குத் தலைமை தாங்குவேன். கவியுலகம் வித்தியாசமானது. கவிதைகளில் மூழ்கினால் என்னையே மறந்து விடுவேன்.

கவலையின்றி மகிழ்வுடன் வாழலாம். மன ஆதங்கத்தை, உள்ளக் கிடக்கைகளை கவிதைகளாக எழுதும் போது ஒரு திருப்தி, ஒரு விடுதலை, ஒரு ஆறுதலுணர்வு ஏற்படும். கவிதை உளவியல் ரீதியாக ஒருவரை ஆற்றுப்படுத்தும். வாழ்வில் எந்தத் துன்பம் வந்தாலும் அதுவும் கடந்து போய்விடும். மனம் இலேசாகி விடும்.

(07 ஆம் பக்க தொடர்ச்சி)

திருமதி வாசுகி பி வாசு

55 வருங்களாக கலைத்துறைக்குள் தன் திறனை வெளிப்படுத்திய ஒரு கலைஞன்

கலாபூஷணம் ஜோபு நஸீர்

கலைஞர் கலாபூஷணம் ஜோபு நஸீர் கலைத்துறைக்குள் பிரவேசித்து 55 வருடங்களாகின்றன. பொன் விழா கண்ட ஒரு உன்னதமான கலைஞன். நாம் பிறப்பதற்கு முன்பே மேடை நாடகத்துறைக்குள் பிரவேசித்தவர் இவர். 1969ஆம் ஆண்டு நெஞ்சில் ஓர் நினைவு என்ற நாடகத்தின் மூலம் தமிழ் மேடை துறைக்கு அறிமுகமானவர் நடிப்புச் செல்வன் ஜோபு நஸீர். இவர் இதுவரை 100க்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார். மேடை நாடகங்கள் மட்டுமன்றி வானொலி நாடகங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், தமிழ், சிங்களத் திரைப்படங்கள் என அனைத்து துறைகளுக்குள்ளும் தன் கலைத்திறனைக் காட்டி கலைத்துறையில் கொடி கட்டி பறக்கும் அளவுக்கு முன்னேறி வந்தவர் இவர். பழகுவதில் பண்பானவர்.

இவர் நெஞ்சில் ஓர் நினைவு, தேடித் தேடி திரிகிறோமே, பேசும் விழிகள், மௌனராகங்கள், ஆகிய நாடகங்களை எழுதியும் இயக்கியும் நடித்தும் உள்ளார்.

இலங்கையின் முதலாவது தொலைக்காட்சி நாடகமான ஆகாயப்பந்தல் நாடகத்தில் கதாநாயகனாக நடித்தவர். அதிர்ச்சி வைத்தியம், விடிவு, அவர்களுக்கு புரியாது ஆகிய தமிழ் தொலைக்காட்சி நாடகங்களிலும் இவர் நடித்துள்ளார்.

மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் மட்டுமா திரைப்படங்களிலும் இவர் நடித்துள்ளார். அதுவும் இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ் நாடகங்களிலும் இவர் நடித்துள்ளார். புதிய காற்று, தென்றலும் புயலும், நெஞ்சுக்கு நீதி, ஷர்மிளாவின் இதயராகம் ஆகிய இலங்கையில் தயாரிக்கப்பட்டதமிழ்த் திரைப்படங்களிலும் இவர் நடித்துள்ளார். இவற்றில் பேராதனை ஏ. ஜுனைதீன் தயாரித்த ஷர்மிளாவின் இதயராகம் திரைப்படம் இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது வர்ணத் திரைப்படமாகும். அந்தத் திரைப்படத்திலும் நடித்து வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். இலங்கை, இந்திய கூட்டுத் தயாரிப்பில் உருவான தீ திரைப்படத்திலும் இவர் தனது நடிப்புத்திறனை காட்டியுள்ளார்.

2000 ஆம் ஆண்டு தேசிய நாடக விழாவில் சிறந்த நடிகருக்கான விருதை இவர் சுவீகரித்துக் கொண்டவர். பொன்விழா கலைஞர் கே. செல்வராஜின் மௌனத்திரை என்ற நாடகத்தில் தன் நடிப்புத் திறனை வெளிப்படுத்தியதற்காக இவருக்கு சிறந்த நடிகர் விருது கிடைத்தது. இவர் சிங்களத் திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

இவர் தான் இயக்கிய நாடகங்களுடன் பிரபல நாடக நெறியாளர் சுஹைர் ஹமிட், கலைச்செல்வன், ஏ. சீ. எம் ஹுசைன் பாரூக், லடீஸ் வீரமணி, மானா மக்கீன், கே. செல்வராஜன், கே. மோகன்குமார், ராஜசேகரன் ஹெலன்குமாரி ஆகியோர் தயாரித்த நாடகங்களிலும் இவர் நடித்துள்ளார்.

இவ்வாறு விருதுகள் பல வென்ற இவர், பல பட்டங்களையும் தன்வசமாக்கிக் கொண்டார்.

கவிஞராக கதாசிரியராக ... (06 ஆம் பக்க தொடர்ச்சி)

நான் ஆசிரியராக இருந்த போது சிறுவர் கையெழுத்து சஞ்சிகைகைப் (கவிதை)போட்டியில் முதலிடம் பெற்றேன். ஒரு கவிதையாவது ஒரு நாளைக்கு எழுதா விட்டால் எனக்கு நித்திரை வராது. வெயில் அதிகமானாலும் ஒரு கவிதை நிச்சயம் எழுதுவேன்.

தங்களின் கல்லூரியின் வளர்ச்சி அதாவது தாங்கள் கடமை ஏற்றபின் நடந்தவை பற்றி கேட்கலாமா?

நிச்சயமாக....! நான் விரிவுரையாளராக 2002 யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் இணைந்து கொண்டேன். அதற்கு முன் நான் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பகுதிநேர விரிவுரையாளராக இருந்தேன்.

2003 ஆம் ஆண்டு பீடாதிபதி கமலநாதன் கல்லூரியின் சஞ்சிகையான "கலா சுரபி" யின் நூலாசிரியராக என்னை நியமித்தார். அவரின் மாணவி நான். எழுத்துத் துறையில் எனக்குள்ள ஆற்றல் அவருக்குத் தெரிந்தமையால் அப்பொறுப்பை என்னிடம் தந்தார். 2016 வரை மிகச் சிறப்பாகச் செயற்படுத்தினேன்.

ஆரம்பக்கல்வி மன்றத்திற்குப் பொறுப்பாக இருந்தேன். ஆசிரிய மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புமுன் மாதிரி வகுப்பு நடத்துவோம். அதற்குப் பொறுப்பாக இருந்து இன்றுவரை செயற்படுத்துகிறேன். "அனர்த்த முகாமைத்துவம்" உயர்மட்டப் பயிற்சிகள் பெற்று அனர்த்த முகாமைத்துவ உப இணைப்பாளராக இருந்து இன்றுவரை செயற்படுகிறேன்.

கல்லூரியின் அனைத்துச் செயற்பாடுகளிலும் பங்கேற்றுச்செயற்படுவதுடன் விடுதிக் காப்பாளராகவும் இருந்து வருகின்றேன். கல்லூரியின் இன்றைய வளர்ச்சிக்கு என்னாலான பங்களிப்பும் காத்திரமானது.

லயன்ஸ் கிளப்பில் பெரும் பதவி வகிக்கிறீர்கள். அந்த அனுபவம் எப்படி என்பதைப் பகிர்ந்து கொள்ளலாமா?

நான் நல்லூர் அரிமா கழகத்தில் 2021 ஆண்டுத் தலைவராக இருந்தேன். 2022 வலயத் தலைவராக இருந்து இவ் வருடம் 2023 பிராந்திய இணைப்பாளராக இருக்கின்றேன். நொந்த மனதினை மகிழ்விப்போனாக...! ஆதரவற்றோருக்கு இன்னருள் அளிப்போனாக....! ஒரு சோகக் கண்ணீரைத் துடைப்போனாக....! எனத் தொடங்கும் அர்ப்பணப் பிரார்த்தனையைத் தாரக மந்திரமாக ஏற்றுச் செயற்படும் அரிமா கழகம் மூலம் மக்களுக்குச் சேவை செய்வதே மகிழ்வான அனுபவம் தான்.

தேவையறிந்து அவர்களுக்கு உதவுதல், நான் தலைவராக இருந்த காலத்தில் சிறந்த அரிமா தலைவர் என்ற விருதும் கிடைத்தது. (outstanding president).

அரிமா கழக்கத்தில் இணைந்து செயல்படுவது மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. நேர்மை, அன்பு , தியாகம், அர்ப்பணிப்பு, கொடை, மனிதத்துவம் என்பதனை புரிய வைத்ததுடன் சேவை செய்யும் மனப் பான்மையையும் மேலும் வளர்த்தது.

Senthooram செந்தூரம்

சிரோவில் கதாநாயகியாக நடிக்கும் பைலட்

மில்லியன் ஸ்டுடியோஸ் சார்பில் எம். எஸ். மன்சூர் தயாரிக்கும் படம், 'சிரோ'. ஃபேன்டஸி கதையை கொண்ட இதில், 'பதினெட்டாம் படி', 'வாலாட்டி' ஆகிய மலையாளப் படங்களில் நடித்த அக் ஷய் ராதாகிருஷ்ணன் ஹீரோவாக நடிக்கிறார்.

கமர்ஷியல் பைலட்டான பிரார்த்தனா சாப்ரியா, கதாநாயகியாக நடிக்கிறார். ரோகினி, 'போர் தோழில்' லிஷா சின்னு, நோபல் உட்பட பலர் இதில் நடிக்கின்றனர். விவேக் ராஜாராம் இயக்குகிறார். அஸ்வின் ஆர்யன் இசையமைத்துள்ளார்.

படம் பற்றி தயாரிப்பாளர் எம்.எஸ்.மன்சூர் கூறும்போது, "'சிரோ' படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துவிட்டது. 45 நாட்களில் படத்தை முடித்துள்ளோம். தற்போது, போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடந்து வருகின்றன. பெப்ரவரி மாதம் வெளியிட திட்டமிட்டுள்ளோம்" என்றார்.

தமிழில், சசியின் 'பூ' படத்தில் அறிமுகம் ஆனவர் மலையாள நடிகை பார்வதி. தொடர்ந்து, சென்னையில் ஒரு நாள், மரியான், உத்தம வில்லன், பெங்களூர் நாட்கள், சிவரஞ்சினியும் இன்னும் சில பெண்களும் உட்பட பல படங்களில் நடித்துள்ளார்.

இப்போது பா.ரஞ்சித் இயக்கியுள்ள தங்கலான் படத்தில் நடித்துள்ளார். அவர் நடித்து துருவ நட்சத்திரம், கடக்சிங் ஆகிய வெப் தொடர்கள் சமீபத்தில் வெளியாகியுள்ளன. இந்நிலையில் அவர் அடுத்து துல்கர் சல்மான் தயாரிக்கும் சூப்பர் ஹீரோ கதையில் நடிக்க இருப்பதாகச் செய்திகள் வெளியாயின. இதை அவர் மறுத்துள்ளார்.

"நான் எந்த சூப்பர் ஹீரோ படத்திலும் நடிக்கவில்லை. தவறானத் தகவல்கள் பரவிக்கொண்டிருக்கின்றன" என்று தெரிவித்துள்ளார்.

சூப்பர் ஹீரோ கதையில் நடிக்கிறாரா பார்வதி?

'பராசக்தி' சூப்பர் ஹிட்டாகி சிவாஜி கணேசன் என்ற மகாநடிகன் தமிழ் சினிமாவுக்கு கிடைத்த பிறகு அவருக்கு வாய்ப்புகள் தொடர்ந்து குவிந்தன. அவர் முதலில் ஒப்பந்தமான 'பூங்கோதை' நான்காவது படமாக வெளியான நிலையில் அவரது இரண்டாவது படமாக வெளிவந்தது 'பணம்'.

பராசக்தியும், பணமும் ஒரே நேரத்தில் தயாரான படங்கள். என்றாலும் அது முந்திக்கொண்டது. பராசக்தி கொஞ்சம் தாமதமாகியிருந்தால், சிவாஜியின் முதல் படமாக 'பணம்' ஆகியிருக்கும். இந்தப் படத்தைத் தனது மதராஸ் பிக்சர்ஸ் சார்பில் தயாரித்தவர் ஏ.எல்.சீனிவாசன். அவருடைய முதல் தயாரிப்பு இது. என்.வி.பாபுவின் மூலக் கதைக்குத் திரைக் கதை, வசனம் எழுதியவர் கருணாநிதி. என்.எஸ்.கிருஷ்ணன் இயக்கிய இந்தப் படத்தில், ஒரே ஒரு பாரதிதாசன் பாடலைத் தவிர மற்றப் பாடல்களை ஏ.எல்.சீனிவாசனின் சகோதரர் கண்ணதாசன் எழுதினார்.

சிவாஜி கணேசன், பத்மினி ஜோடியாக நடித்தனர். இருவரும் இணைந்து நடித்த முதல் படம் இது. பிறகு சுமார் 60 படங்களுக்கு மேல் அவர்கள் ஜோடியாக நடித்தனர். சிவாஜியும் என்.எஸ்.கிருஷ்ணனும் இணைந்து பணியாற்றிய முதல் படமும் இதுதான். இந்தப் படத்தின் டைட்டிலில் முதலில் தயாரிப்பு, டெக்னீஷியன்கள் பெயர் போட்ட பிறகு நடிகைகள் பெயர் வரும். அடுத்ததுதான் நடிகர்கள் பெயர்கள்.

சிவாஜி, பத்மினியுடன் எஸ்.எஸ்.ராஜேந்திரன், டி.கே.ராமச்சந்திரன், வி.கே.ராமசாமி, சி.எஸ்.பாண்டியன், பி.ஆர்.பந்துலு, டி.ஏ.மதுரம், தங்கவேலு உட்பட பலர் நடித்தனர். அப்போது வளர்ந்து வரும் இசை அமைப்பாளர்களாக இருந்த விஸ்வநாதன் ராமமூர்த்தி இசை அமைத்தனர். இருவரும் முதன் முதலில் சேர்ந்து இசை அமைத்த திரைப்படமும் இதுதான். இந்தப் படத்தில் திமுக பற்றி ஒரு பாடல் வரவேண்டும் என்று நினைத்தது படக்குழு. ஆனால், தணிக்கைக்குழு அனுமதிக்காது என்பதால் திமுக என்று வருமாறு, 'தினா முனா கனா' என்ற பாடலை எழுதினார் கண்ணதாசன். அதாவது 'திருக்குறள் முன்னணி கழகம்' என்ற இந்தப் பாடலில்,'பகுத்தறிவோடு நாட்டினர் வாழ திருக்குறள் தந்தார் பெரியார் வள்ளுவப் பெரியார்' என்பது உட்பட திமுகவின் கருத்துகளைப் பேசியது இந்தப் பாடல்.

என்.எஸ்.கிருஷ்ணன் குரலில் வந்த இந்தப் பாடல், வரவேற்பைப் பெற்றது. அவர் பாடிய மற்றொரு பாடலான, 'எங்கே தேடுவேன், பணத்தை எங்கே தேடுவேன்' பாடலும் அப்போது சூப்பர் ஹிட். கையில் பணம் இல்லாத ஒருவர் பாடும் இந்தப் பாடலில், கண்ணதாசன் எழுதிய வரிகள் இப்போதும் ரசிக்கும்படியாகவே இருக்கின்றன. இந்தப் படத்திலும் கருணாநிதியின் வசனம் பேசப்பட்டது. 1952 ம் ஆண்டு இதே தேதியில் வெளியானது 'பணம்'.

பணம்: சிவாஜி– பத்மினி ஜோடியாக நடித்த முதல் படம்!

கவின் ஜோடியாக பிரீத்தி அஸ்ரானி

சசிகுமார் நடித்த 'அயோத்தி' படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் பிரீத்தி அஸ்ரானி. தெலுங்கில் சில படங்களில் நடித்துள்ள இவர், சன் டிவியில் ஒளிபரப்பான 'மின்னலே' தொடரிலும் நடித்திருந்தார்.

இவர் அடுத்து கவின் ஜோடியாக புதிய படம் ஒன்றில் நாயகியாக நடிக்கிறார். 'டாடா' படத்தை அடுத்து கவின், 'ஸ்டார்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இதையடுத்து அவர் சதீஷ் கிருஷ்ணன் இயக்கும் படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்துக்கு 'கிஸ்' என்று தலைப்பு வைத்துள்ளனர். இதில் பிரீத்தி அஸ்ரானி நாயகியாக நடிக்கிறார். இது தொடர்பான அதிகாரப்பூர அறிவிப்பு விரைவில் வெளியாகும் என் தெரிகிறது.

வெளிநாடு-சென்றார்-பிரியா-பவானி சங்கர்

நடிகை பிரியா பவானி சங்கர், அருள் நிதியுடன் நடித்துள்ள 'டிமான்டி காலனி 2' விரைவில் வெளியாக இருக்கிறது. ஹரி இயக்கத்தில் விஷால் ஜோடியாக நடிக்கும் 'ரத்னம்' படத்தில் நடித்துள்ளார். தெலுங்கில் சத்யதேவின் 26 வது படத்தில் நடித்து வருகிறார். அடுத்து கோபிசந்த் நடிக்கும் 'பீமா' படத்திலும் நாயகியாக நடித்து வருகிறார்.

இந்நிலையில் சத்யதேவுடன் நடிக்கும் படத்துக்காக அவர் வெளிநாடு சென்றுள்ளார். இத்தாலி அருகில் உள்ள பதானியாவில் இந்தப் படத்தின் படப்பிடிப்பு நடந்து வருகிறது. அடுத்த மாதம் 15ம் திகதி வரை அங்கு படப்பிடிப்பு நடப்பதாகக் கூறப்படுகிறது.

'செவப்பி'

கிராமத்தில் வசிக்கும் ஐந்து வயது சிறுவனைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளை வைத்து உருவாகி இருக்கும் படம், 'செவப்பி'. இதை ராஜேஷ்வர் காளிசாமி, பிரசன்னா பாலச்சந்திரன் தயாரித்துள்ளனர். எம்.எஸ்.ராஜா எழுதி இயக்கியிருக்கிறார். பூர்ணிமா ரவி, ரிஷிகாந்த், ராஜாமணி பாட்டி, ஷ்ரவன் அத்வேதன், டில்லி, செபாஸ்டியன் ஆண்டனி உட்பட பலர் நடித்துள்ளனர். மனோகரன் எம் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்துக்கு ஏ.பிரவீன் குமார் இசை அமைக்கிறார்.

ஒரு கோழியை நேசத்தோடு வளர்க்கிறான் சிறுவன். ஒரு கட்டத்தில் அதைப் பிரிய நேரிடுகிறது. இதனால் ஒன்றாக வாழும் அந்தக் கிராமம் இரண்டாகப் பிரிந்து மோதிக்கொள்கிறது. இறுதியில் அந்தச் சிறுவனும் கோழியும் ஒன்று சேர்ந்தார்களா? என்பது கதை. கேரளாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே உள்ள மத்திபாளையம் என்ற கிராமத்தில் இதன் படப்பிடிப்பு நடந்துள்ளது. ஜன. 12ம் தேதி ஆஹா தமிழ் ஓடிடி தளத்தில் இந்தப் படம் நேரடியாக வெளியாகிறது.

கருணாநிதியின் சினிமா வாழ்க்கை: விஜய் இயக்கும் ஆவணப்படம்

திமுகவின் முன்னாள் தலைவரும் தமிழக முன்னாள் முதல்வருமான கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை தமிழக அரசும் திமுகவும் கொண்டாடி வருகிறது. அதன்படி, தமிழ் சினிமாவில் கருணாநிதியின் பங்களிப்பைப் போற்றும் விதமாக 'கலைஞர் 100' என்ற விழாவை தமிழ்த் திரையுலகம் ஜன.6ம் தேதி நடத்த இருக்கிறது. கிண்டி ரேஸ் கோர்ஸில் இந்த விழா நடக்க இருக்கிறது.

இதில் கருணாநிதியின் திரை வாழ்க்கை பற்றிய பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற இருக்கின்றன. இந்நிலையில் கருணாநிதியின் திரை

வாழ்க்கை பற்றிய முழு ஆவணப் படத்தை இயக்குநர் விஜய் இயக்க இருக்கிறார். அதற்கான பணிகளில் அவர் இப்போது ஈடுபட்டுள்ளார். இந்த ஆவணப் படம் இந்த விழாவில் திரையிடப்பட இருக்கிறது. இவர் ஜெயலலிதாவின் 'தலைவி' உட்பட பல படங்களை இயக்கியவர்.

நடிகர் விஜய், லியோ படத்தை அடுத்து வெங்கட் பிரபு இயக்கத்தில் நடித்து வருகிறார். விஜய்யின் 68வது படமான இதை ஏ.ஜி.எஸ் நிறுவனம் தயாரிக்கிறது. படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். இதில் ஜெயராம், பிரபுதேவா, மோகன், பிரசாந்த், சினேகா, லைலா, மீனாட்சி சவுத்ரி உட்பட பலர் நடிக்கின்றனர். இதில் அப்பா, மகன் என இரண்டு வேடங்களில் விஜய் நடிப்பதாகக் கூறப்படுகிறது. இதன் படப்பிடிப்பு ஹைதராபாத்தில் நடந்து வந்தது. அடுத்து துருக்கியில் நடைபெற இருக்கிறது. இந்நிலையில், இந்தப் படத்தில் ரம்யா கிருஷ்ணன் இணைந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

'விஜய் 68' படத்தில் ரம்யா கிருஷ்ணன்

தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக இருந்த த்ரிஷா, தெலுங்கில் கடந்த சில வருடங்களாக நடிக்காமல் இருந்தார். 'பொன்னியின் செல்வன்' படத்துக்குப் பிறகு அவருக்கு தமிழில் அதிக வாய்ப்புகள் வந்துள்ளன. விஜய்யுடன் 'லியோ' படத்தில் நடித்த அவர், அஜித்துடன் 'விடாமுயற்சி' படத்தில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் அவருக்கு தெலுங்கிலும் வாய்ப்புகள் வந்துள்ளன. அவர் கடைசியாக தெலுங்கில், 'நாயகி' என்ற படத்தில் நடித்திருந்தார். இது தமிழ், தெலுங்கில் உருவான படம்.

இந்நிலையில் ஏழு வருடங்களுக்கு பிறகு அவர் தெலுங்கில் மீண்டும் நடிக்கிறார். சிரஞ்சீவியின் 'விஷ்வம்பரா' என்ற படத்தில் நாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதை வசிஷ்டா இயக்குகிறார். இதையடுத்து நாகர்ஜுனாவின் 100வது படமான 'லவ் ஆக்ஷன் ரொமான்ஸ்' படத்திலும் நடிக்க இருக்கிறார்.

7 வருடத்துக்கு பிறகு தெலுங்கில் மீண்டும் த்ரிஷா

பெண்கள் விரும்பும் நெகிழி (plastic) அழகானது ஆனால் ஆபத்தானது

நெகிழி சொல்லுகின்றப் போதே மனசு நெகிழுகிறது. அதனால் தான் என்னவோ நெகிழியின் பாவனை இன்று உலகத்தில் பாரிய உயரத்தை தொட்டுக் கொண்டு இருக்கிறது . அதிலும் பெண்கள் வீட்டு உபயோகப் பொருட்களை அழகாக அலங்கரிக்க நெகிழிப் பொருட்களை வாங்கி குவிக்கின்றனர். அதற்கு தகுந்தாற்போலவே உற்பத்தியாளர்களும் கண்ணும் மனமும் கவரும் விதத்தில் தினமும் புதிய உற்பத்தியை சந்தைக்கு கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

ஊடகமோ, சமூக வலைத்தளமோ நெகிழியின் பாதிப்பை சொல்லி சென்றாலும் யாரும் கேட்பதாக இல்லை. காரணம் நெகிழியின் பயன் மக்களிடம் இரண்டறக் கலந்து விட்டது.

நெகிழி முதன் முதலில் 1862 ல் லண்டனைச் சேர்ந்த அலெக்சாண்டர் பார்க்ஸ் என்பவரால் செல்லுலோஸ் என்ற பொருளில் இருந்து தயாரிக்கப்பட்டது. பின் லண்டன் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டது.

அவர் இதற்கு "பார்க்ஸ் டைன்" என்ற பெயரிட்டார்.

முற்காலத்தில் மக்கள் விலங்குகளின் நகங்கள், குளம்புகள், ஆமை ஓடுகள் என்பவற்றைக் கொண்டு "செராடின்" என்ற நெகிழியும், சில வண்டு, பூச்சிகளில் இருந்து "ஷெல்லாக்" வார்னிஷும் என்கிற ஒன்றும் செய்யப்பட்டன. பில்லியார்ட்ஸ் பந்துகள் செய்ய தந்தங்களுக்காக யானைகள் கொல்லப்படுவதைத் தடுக்க 1869 ல் ஜான் ஹயாத் என்பவர் செல்லுலோஸ் என்ற மாற்றுப் பொருள் ஒன்றை உருவாக்கினார். பிறகு மரப்பட்டை, நைட்ரிக் அமிலம், கற்பூரம், பசை ஆகியவை கொண்டு செல்லுலாய்டு என்ற நெகிழி உருவானது. 1907ல் லியோ பேக்லாண்டு என்பவர் மின் சுவிச்சுகள் செய்ய செயற்கை வேதிப் பொருள்கள் கொண்டு பேக்லைட் என்ற பொருளை உருவாக்கினார். முதல் உலகப் போரில், 'டுபாண்ட் அமெரிக்க நிறுவனம், 'வெடி பொருள் நெகிழித் தொழிற்சாலையைத் தொடங்கி மேலும் வளர்ந்து பல நெகிழிப் பொருள்களை உருவாக்கியது. 1913ல் கட்டுவதற்கான நெகிழி உருவானது. 1933ல் பாசெட் மற்றும் கிப்ரான் ஆகியோர் உருவாக்கிய பொலிதீன் அதாவது பாலி எத்திலீன், இரண்டாம் உலகப் போரில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி இன்று வரை மிக அதிகமாகப் பயன்படுத்தும் பொருளாகவும் பல சிக்கல்களை உருவாக்கும் பொருளாகவும் இருந்து வருகிறது.

நெகிழியின் பிறப்பு இப்படி இருப்பினும் மக்களுக்கு குறைத்த விலையில் இலாபகரமாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதியை நெகிழி கொண்டுள்ளது. அத்துடன் கண்ணைக்கவரும் நிறங்கள், நிறைக் குறைவு, விலை குறைவு மற்றும் வேண்டிய இடங்களில் அனைவராலும் பாரபட்சம் இன்றி பெற்றுக்கொள்ள கூடிய நிலையில் உள்ளது. இதுவே இதன் உற்பத்திப் பெருக்கத்திற்குக் காரணம் .

வீடுகள், அலுவலகம், பொது இடங்கள் என்று எல்லா இடங்களிலும் மக்கள் நெகிழியில் உருவானப் பொருட்களைப் பாவிக்கக் கூடிய வசதியை கொண்டுள்ளனர்.

இதனால் மக்கள் பாவனையை அதிகம் பெறுகிறது. ஆனால் பாவனையின் பின்னரான தீமையையே சிந்திக்க தவறுகின்றனர்.

நாம் பாவிக்கும் நெகிழிப் பொருட்கள் உக்கும் தன்மை அற்றவை அல்லது உக்க நீண்ட காலங்கள் எடுக்கும். அதனால் பூமிக்குள் புகுந்து உக்காமல் விளை நிலங்களை மலடாக மாற்றுகிறது.

கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...✍

அழகுக்கு அழகூட்டும் எம்பிராய்டரி டிசைன்கள்

எம்பிராய்டரி ட்யூனிக்ஸ் என்பது தனித்துவமான மேற்கத்திய அமைப்புடன் விதவிதமான இந்திய எம்பிராய்டரி டிசைன்களை ஆடைகளில் கொண்டுவரும் அதாவது, சுருக்கமாக சொல்வதென்றால் எம்பிராய்டரி செய்யப்பட்ட குர்த்திகள், டாப்புகள் என்றும் சொல்லலாம். பழமையான இந்திய கலைகளில் ஒன்றான இந்த எம்பிராய்டரி வேலைப்படானது இந்தியாவின் பல பகுதிகளிலும் அங்கு வாழும் மக்களால் அவர்களின் தனிச்சிறப்புகளோடு செய்யப்பட்டு வருகிறது.

எம்பிராய்டரி ட்யூனிக் மேலாடைகள் (டாப்ஸ்) : எம்பிராய்டரியானது பொதுவாக டாப்புகளில் கழுத்திற்கு அருகிலிருந்து மெல்லியதாகவோ அல்லது பெரிய பேட்ச் வேலை போல் மார்பு முழுவதும் மறைப்பது போலவோ பரவியிருக்கும். எம்பிராய்டரி டிசைன்கள் கம்பீரமான தோற்றத்தை தருவதாக இருக்கும். அதிக முறையான அல்லது ஆடம்பரமான ஆடைகளிலும் கூட முழுத்துணியிலும் எம்பிராய்டரி வேலைப்பாடுகள் செய்யப்படுகின்றன. சிக்கன்காரி, காந்த்தா, பூல்காரி, ஜர்தோசி, ராஜஸ்தானி பேட்ச் வேலைப்பாடு, கஷிதாகாரி, ஆரி, கோட்டா, கசூத்தி, கட்ச் அல்லது அரி பாரத், சிந்தி தையல், கஷ்மீரி, முகேஷ், பிச்வாய், பிப்லி, ராபரி சிக்வின், குரோஷா மற்றும் தோடா என பலவகையான எம்பிராய்டரி வேலைப்பாடுகள் துணிகளில் செய்யப்படுகின்றன. எளிமையான எம்பிராய்டரி முதல் மிகவும் கடினமான எம்பிராய்டரிகளுடன் குர்த்திகளும், டாப்புகளும் கிடைக்கின்றன.

Legend Priyaashanker at Maatru Modhiram Premier Bridal Show Colombo 2023

MUA : Priyaashanker
Official Photography : 3AD's Photography
Organized By: Arunthathee (Pvt) Ltd

துபாயில் நந்தவனம் இலங்கை சிறப்பிதழின் அறிமுக விழா

இனிய நந்தவனம் இலங்கை சிறப்பிதழின் அறிமுக விழா துபாய் லெவேன்டர் நட்சத்திர ஹோட்டலில் சனிக்கிழமை (30) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் தலைமையில் நடைபெற்றது. இதில் முனைவர் ரோகிணி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த மேலும் சிலரையும் படங்களில் காணலாம்.

சிறந்த பெறுபேறினால் ஆசிரியரோடு அதிபருக்கும் பெருமை

(எம்.எஸ்.எம்.ஸாகிர், நதீரா வசூக்)

தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 2022/23 க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக் குத் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும் புலமைப்பரிசில் பரீட் சையில் சித்தியடைந்த மாணவர்களையும், அவர்களை வழிநடாத்திய அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் அத்தோடு, கிராமத்துக்கே பெருமை தேடிக் கொடுத்த எழுத்தாளரும் கவிதாயினியும் ஆசிரியையுமான திருமதி நதீரா வசூக் ஆகியோருக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 26ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது அஷ்ஷேஹ் தும்ரி சலா ஹியின் கிராத் ஓதலுடன் ஆரம்பமானது. அதைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப் பட்டதோடு, சரியாக மு.ப 9.26 இற்கு இலங் கையில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு19 ஆவது வருட நினைவாக ஒரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த அன்றைய சனசமூக நிலையத்தின் ஸ்தாபகரும் மூத்த ஊடகவியலாளருமான என். எம்.அமீன் உரையாற்றுகையில்,

இன்று பாராட்டப்பட இருக்கின்ற மாணவர்க ளது பெறுபேறானது எமது கிராமத்திற்கும் நாட் டுக்கும் பெருமை சேர்ப்பதோடு, அவர்களுக்கான எதிர்காலம் மிகச் சிறப்பானதாக அமைந்திருப்ப தாகவும் குறிப்பிட்டார்.

இச்சிறப்பான நிலையைப் பெறுவதற்காக அயராது உழைத்த அதிபர் ஆசிரியர்கள் இன்னும் பலபேர் இணைந்தே சிறப்பாக இச்சாதனையை நிலைநாட்டி இருப்பதாகவும் இக்கிராமத்து மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்தே இயங்குவதாகவும் குறிப்பிட்டார்.

ஆரம்ப காலங்களில் மிகவும் சிரமப்பட்டே கற் றதாகவும் இன்றுபோல் எந்த வசதிகளும் இருக்க வில்லை என்றும்

குறிப்பிட்டதோடு, இன்று எமது கிராமம் சகல வசதிகளையும் கொண்ட கிராமமாகத் திகழ்வதாக வும் குறிப்பிட்டார்.

இன்று இயங்குகின்ற தாஜ்மஹால் நலபுரி சங்கம் 1969 இல் சனசமூக நிலையம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட போது பள்ளிப் பரிபா லன சபையைத் தவிர வேறு எந்த இயக்கமும் இருந்ததில்லை என்றும் தாங்கள் துரிதமாக இயங்கியதன் காரணமாக அரநாயக கிராம சபையில் முதலாவது முஸ்லிம் சனசமூக நிலையமாக தாஜ்மஹால் சனசமூக நிலையம் காணப்பட்டது என்றும் அதன் மூலம் ஒரு கரம் போட் கிடைக்க அது கிராமத்துப் பிள்ளைகளுக்கு விளையாட வாய்ப்பைக் கொடுக்க இன்னும் விளையாட்டுக்களைப் பயிற்றுவிக்க வாய்ப்பாக இருந்ததாகவும் குறிப்பிட்டார்.

இன்று 54 வருடங்களில் அப்பெயர் தாஜ் மஹால் நலன்புரிச் சங்கமாக பெயர்மாற்றம் பெற்று பல வெற்றிகளைக் கண்டுள்ளது. இந்த வெற்றிகளில் ஒன்றே இன்றைய பாராட்டு விழா மகிழ்ச்சியடைகின்றேன் என்றும் 54 ஆண்டுக ளுக்கு முன்னிருந்த நிலையிலிருந்து இன்று முற்றாக வேறுபட்டு ஒரு அபிவி ருத்தி கண்ட கிராமமாக திகழ்வதாக வும் அந்த வகையில் இந்த விழா வெற்றிபெற வாழ்த்துக்க ளைத் தெரி வித்துக் கொண்டார்

ஆரம்ப ஸ்தாபகர் என்ற வகையில் நானும் மர்ஹூம் எம்.ஐ.எம் தாஹா ஜேபி மற்றும் பலரும் ஆரம்பித்த இச்சங்கம் அன்று முதல் இன்று வரை சீராக இயங்கி வருவதாகவும் (தாஜ் மஹால் நலம்புரிச் சங்கத்திற்கும்) அதனைக் கொண்டு நடாத்தும் இளைய தலைமுறையின ருக்கும் பாராட்டினைத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து பிரபல வர்த்தகரும் அகில இலங்கை மனித உரிமைகள் சாசன அமைப்பின் தலைவர் அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ. மௌசூம் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன் ஸ்தாப கப் பொருளாளர் ஜே.எம்.அன் வர்தீன் மற்றும் ஓய்வு பெற்ற அதிபர் மஹ்பூப் ஆகியோர் இந் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். இதேவேளை மாணவர்கள், ஆசி ரியர்கள், அதிபர் என விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மூதூர் கல்வி வலயத்தில் கௌரவிக்கும் விழா

(எஸ். சினீஸ் கான்)

மூதூர் அனர்த்த சமூகசேவைகள் நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மூதூர் கல்வி வலயத்தில் 2022 மற்றும் 2023 ஆண்டு களில் சிறந்த க. பொ. த. உயர் தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகளுக் கான விருதுகள் வழங்கும் கௌரவிப்பு விழா சனிக்கிழமை (30) நடைபெற்றது. இவ்விழா வில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் மற்றும் திருகோண மலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ் தௌபீக் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கிண்ணியா, மூதூர் பிரதேச செயலாளர்கள் முகம்மது கணி, முன்னாள் மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் அரூஸ், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், திடீர் மரண விசாரணை அதிகாரிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

புத்தளம் மாவட்டத்தில் இலக்கிய செந்நெறியில் வளர்ந்து வரும் ஆளுமை சித்தி பரீதா

புத்தளம் மாவட்டத்தில் சீர் பெற்ற சிலாபம் நகரில் கலை, இலக்கிய செந் நெறியில் தனக்கென்ற பாதை அமைத்து முதிர்ந்து நிற்கும் ஆளுமை சித்தி பரீதா. எழுத்துலகில் அகலக்கால் பதித்து வருகின்றார். கவிதை, கட்டுரை மற்றும் நேர்காணல் போன்ற துறைகளில் முதிர்ச்சி வாய்ந்த எழுத்தாளராக திகழ்கின்றார்.

ஒரு ஆணின் வெற்றிக்கு பெண் இருப்பது போல இவரின் எழுத்து வான்மைக்கு தனது குடும்ப அங்கத்தவர்கள் துணையாக இருப்பதாக தெரிவிக்கின்றார். தங்கத்தின் விளக்கிலுள்ள துளி தங்கமாக இருந்தாலும் அது சுடர் விட்டு பிரகாசிக்க தூண்டுதல் வேண்டும். அந்தத் தூண்டுதலை அவ்வப்போது தூண்டி என் எழுத்து ஆர்வம் வளர முயற்சி தந்தவர் உடப்பூர் வீரசொக்கன். அவரை நான் குருவாக நினைத்து எழுதுகின்றேன் என்றார்.

இவரின் ஆக்கங்கள் வீரகேசரி, தினகரன், விடிவெள்ளி, தமிழன் போன்ற முன்னணி பத்திரிகைகளிலும் தென்றல் போன்ற சஞ்சீவிகளிலும் பிரசுரமாகி இருக்கின்றன. தம்பி சாஹிப் சித்தி பரீதா எனும் இயற்பெயரைக் கொண்ட இவர் பரீதா, சித்தி, சிலாபம் நங்கை போன்ற புனைப் பெயரில் எழுதுவதும் ஆன்மீக கட்டுரைகளை அவ்வப்போது தீட்டி முத்து பதித்து வருகின்றார் என்றால் மிகையில்லை. கடந்த பல வருட காலமாக எழுத்து உலகில் பிரகாசித்து முத்திரை பதித்து வரும் சித்தி பரீதா வயது முதிர்ச்சி அடைந்தவரும் எழுத்தை நேசிப்பவருமாக எழுத வேண்டும் என்ற எண்ணம் கொண்ட வேட்கையில் தொடர்ந்து எழுதிவருகின்றார்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஒரு ஊரே சிலாபம். இது வளமும் பெறுமதியும் பெற்ற சீர் கொண்ட நகரம். இந்த சிலாபம் நகரை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட சித்தி பரீதா 1949.03.13 ஆம் திகதி பிறந்தவர். இவர் ஐந்து பிள்ளை செல்வங்களின் மூத்தவளே ஆவார்.

கல்விச் செல்வத்தை நன்றாக கற்று முன்னேற வேண்டும் என்ற நோக்குடன் கல்வியைக் கற்று பயன்பெற தனது இளமைக்கால வறுமையின் பின்புலனே காரணம் என்று கூறும் சித்தி பரீதா , தனது ஆரம்பக் கல்வி சிலாபம் சென். பேணதேத் பாடசாலை. இவர் இங்கு ஐந்தாம் வகுப்பு வரையும் கற்றார். தனது இரண்டாம் நிலை கல்வியை சிலாபம் நஸ்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கற்றுள்ளார்.

எனது எழுத்து உலக பயணத்திற்கு முக்கிய மூல வேராக இருந்தவர் தனது தகப்பனாராகிய தம்பி சாஹிப் ஆவார். அக்காலங்களில் தனது தகப்பனார் தென்னிந்தியா சென்று வரும் போதெல்லாம் தமிழக நூல்களான குமுதம், ராணி, ஆனந்த விகடன், கலைமகள் போன்ற நூல்களை வாங்கி வருவார். புத்தகங்களை படிக்கச் சொல்லித் தூண்டுவார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் மேற்படி நூல்களை படிப்பேன். நல்ல கருத்துக்களை உள் வாங்கிக் கொள்வேன்.

எனது தகப்பனார் தம்பி சாஹிப் லெப்பே தென்னிந்தியா கீழக்கரை மேல்நாட்டைச் சேர்ந்தவர். தாயார் சிலாபம் அம்பகந்தவில என்ற இடத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். அன்பு என்ற காதல் வயப்பட்டு கருத்தொருமித்து கரம் பிடித்துக் கொண்டார். எனது குடும்பம் ஐந்து பெண் செல்வங்களைக் கொண்டது. இதில் நான் மூத்தவள் என அன்பு நகைப்புடன் தெரிவித்தார்.

இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் வழித் தோன்றலாகிய சித்தி பரீதா ஐந்து நூல்களை கீழக்கரை காசிம் பீபீ கல்லூரியில் வெளியிட்டார். கல்லூரி முதல்வரான என் சுமையா தலைமையில் வெளியீட்டு விழா நிகழ்வு இடம் பெற்றது. பின்னர் எங்கள் பூட்டனாராகிய அப்துல் கலாமின் மூத்த சகோதரனான ஏ.பி.ஜே முகமது முத்து மீரா மறைக்காயரின் ஆசீர்வாதத்துடன் நூலை வெளியிட்டு வைத்துள்ளதாக தெரிவித்தார்.

எழுத்து துறையில் ஏன் கால்பதிக்க காரணம் எனக் கேட்ட போது, இயல்பாகவே எழுத வேண்டுமென மனம் துள்ளியது. அப்போது எழுதிவிடுவேன், எழுதிய ஆக்கங்களை பிரசுரிக்க முயற்சி செய்வேன். எனது நண்பி தெய்வா இராமச்சந்திரனின் உதவி கிடைத்தது. அவரின் மூலம் உடப்பூர் வீர சொக்கனின் அறிமுகம் கிடைத்தது. அவரின் முயற்சியினால் முதன்முதலாக வீரகேசரியில் எனது கட்டுரையான "குர்ஆனின் சுருக்கத்தின் கண்ணோட்டம்" என்ற கட்டிரை வெளியானது. இந்த எழுத்து வீரகேசரியில் பிரசுரமானதும் தொடர்ந்து மேலும் எழுதத் தூண்டியது. அதைத் தொடர்ந்து எனது படைப்புக்கள் தேசிய நாளிதழ்களிலும் முன்னணி சஞ்சிகைகளிலும் பிரசுரமாகின. குறிப்பாக எனது கட்டுரை வீரகேசரியில் வெளிவர துணை நின்றவர் வார வெளியீட்டின் இணையாசிரியர் ரேணுகா பிரபாகரன். அவருக்கு என்றென்றும் கடமைப்பட்டவளாக இருக்கின்றேன் என்றார்.

வயது முதிர்ச்சி அடைந்த காலத்தில் எழுத்து உலகில் பிரகாசிக்க வேண்டும் என்ற நோக்கம் ஏன்? என்று கேட்டபோது, அன்று எனது தகப்பனே எனக்கு வழிகாட்டியவர். இவர் நூல்களை வாசிக்கத் தூண்டுவார். அப்போது தென்னிந்திய சஞ்சிகைகள் கிடைப்பது அரிதாகி விட்டது. அப்போதெல்லாம் தெருவில் கிடைக்கும் பத்திரிகை துண்டுகள் அதில் நுணுக்குகளை எல்லாம் எடுத்து வாசிப்பேன். குறிப்புக்களை எடுப்பேன் இப்படியாகத்தான் எனது எழுத்து பணி ஆரம்பமானது என தெரிவித்தார்.

இதுவரை எத்தனை நூல்களை வெளியிட்டுள்ளீர்கள் என வினவிய போது, இஸ்லாமிய தத்துவ முத்துக்கள், தித்திக்கும் திருமறையின் மகிமைகள், வாழ்க்கையை நெறியை போதிக்கும் இஸ்லாம், அண்ணலாரின் அருள் மொழிகள், தூறலின் துளிர்கள், தீன் சுவை, மறை கூறும் மகிமைகள, ; மல்லிகைப் பூ வாசம், கனவு சாரளம், இயற்கையுடன் அமைந்த இஸ்லாம், மலராத மொட்டுக்கள் வெளியிட்டேன். இப் புத்தகங்கள் இஸ்லாமிய சகோதரிகளிடத்தில் நல்ல மதிப்பை பெற்று வருகின்றது எனக் கூறலாம்.

எழுத்து உலக பயணத்தை கௌரவிக்கும் முகமாக முன்னணி எழுத்தாளரான நூருல் ஆயின் நஜீமுல் ஹுசைன் எழுதிய மின்னும் தாரகை என்ற மகுடம் கீழ் முஸ்லிம் பெண்கள் எழுத்தாளர் ஆய்வு நூலில் என்னையும் அறிமுகப்படுத்தி கௌரவப்படுத்தியமை என்பதை வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவம் ஆகும்.

அதே போல கிழக்கிலங்கையில் இருந்து வெளிவரும் தென்றல் சஞ்சிகையில் மட்டக்களப்பு மகஜென கல்லூரியில் வீசும் தென்றல் பட்டம் சூட்டி சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் மறக்க முடியாத தினங்களாகும் என்றார்.

சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில் இருக்கும் சாகித்திய விழா குழுவில் அங்கத்தவர்களாக உள்ளேன். சென்ற ஆண்டு (2022) சாகித்திய விழாவில் கலாச்சார அமைச்சர் விருது விதுர விக்ரமநாயக்கவினால் நினைவுச் சின்னம் வழங்கிய கௌரவிக்கப்பட்டேன். புத்தளம் மாவட்ட கலாச்சார பிரிவினால் நடத்தப்பட்ட புத்தளம் சாகித்திய இலக்கிய விழாவில் பாடல் போட்டி, தேசியமட்ட சிறுகதை ஆக்கத்தில் முதலிடத்தையும் சிலாபம் பிரதேச செயலாளர் மட்டத்தில் நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் முதல் பரிசையும் பெற்றுள்ளதுடன் சிலாபம் நகர சபையினால் நடாத்தப்பட்ட எழுத்து வான்மை போட்டியில் கவிதைக்கு முதலிடத்தையும் பெற்றுள்ளார். சித்தி பரீதாவின் எழுத்துக்களை பாராட்டும் முகமாக சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட விழாவில் "கலாவிபூஷணம்" வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

உடப்பூர் வீர சொக்கன்

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

பனுவல்களால் நிறையும் கண்காட்சி

புத்தகங்களை உயிர்ப்பிக்கும் வாசிப்பாற்றுப்படையாக புதிய பனுவல்களைப் பூக்கும் புத்தகக்கண்காட்சிகள் அமைகின்றன. இலங்கையில் நாலாதிசையிலும் இத்தகைய புத்தகக்காட்சிக்கூடங்கள் அமைவுறுவதைக் காணலாம்.

தமிழகத்தில் தொடர்ந்தேர்ச்சியாக புத்தகக் கண்காட்சிகள் இடம்பெறுவது வழமை. இவற்றுள் சென்னைப் புத்தகத் திருவிழாவும் முக்கியமானதே. இதற்கென வெளியீட்டகங்கள் புதிய பனுவல்களின் வெளியீட்டுக்காக முயன்று வருகின்றன. ஈழத்தை மையப்படுத்திய புத்தகங்களும் கடந்த சில

வருடங்களாக முக்கிய அவதானிப்பு பெற்றுள்ளன.

இவ்வாண்டு வேரல் புக்ஸ் ஈழத்திலிருந்துமூன்று கவிதை நூல்களைக் கண்காட்சியரங்கில் ஜனவரி பத்தாம் திகதி வெளியிடவுள்ளது. இயல்வாணனின் 'யாரும் பாடலாம் என்னை'

முல்லை முஸ்ரிபாவின் 'மௌனத்தின் நூற்றாண்டுக்கு முற்பட்ட நாவு 'முஜாமலாவின் 'நீதம்' என்பன அவை.

தவிரவும் வேறு பல வெளியீட்டாளர்களும் புதிய நூல்களைக் கொண்டு வருகின்றனர்.

ஜனவரி மூன்றாம் திகதி முதல் இருபத்தோராம் திகதி வரை பனுவல்களைக் கொண்டாடும் புத்தகக் கண்காட்சி வாசிப்பாளர்களின் கூடமாக விரிகிறது. பனுவல்களால் நிறையும் கண்காட்சி

மாற்று மொழிக்கவிதை

பலஸ்தீனக் கவிதை வெளியை நிரப்பம் செய்தவர்களில் குறிப்பிடும்படியானவர் சமீஹ் அல் காசிம் (Samih Al Qasim) 1939இல் பிறந்தவர். தீவிர அரசியல் காரர்;வீட்டுக் காவலிலையும்,சிறையையும் அனுபவித்தவர்.

அறபுலகில் விரும்பிப்படிக்கப்பட்ட கவிதைகளின் சொந்தக்காரன். பல திரட்டுகளைத் தந்தவர். சுயசரிதை வடிவிலான நாவல், நாடகம், நாட்குறிப்பென இவரது படைப்புவெளி நீண்டது. பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் மொழிபெயர்த்த பலஸ்தீனக் கவிதைகள் திரட்டிலிருந்து சமீஹ் அல் காஸிமின்

சுவர்க்கடிகாரம் கவிதை அதன் வெளிப்படு முறையின் எளிமைக்குள் சொல்லும் செய்தியின் அழுத்தம் மிக்கது.

எனது நகரம் எதிரியிடம் வீழ்ந்தது /
எனினும் கடிகாரம் இன்னும் / சுவரில் ஓடிக்கொண்டிருந்தது /
எனது சுற்றாடல் வீழ்ந்தது / எனது பாதையும் வீழ்ந்தது/எனினும் கடிகாரம் இன்னும் / சுவரில் ஓடிக் கொண்டே இருந்தது /
எனது வீடும் வீழ்ந்து நொறுங்கிற்று / எனினும் கடிகாரம் இன்னும் / சுவரில் ஓடிக் கொண்டே இருந்தது /
பின்னர் சுவரும் வீழ்ந்தது /
ஆயினும் கடிகாரம் தொடர்ந்தும் / டிக் டிக் என்று ஓடிக்கொண்டே இருந்தது /

இன்றைக்குமான பலஸ்தீனை தன் கவிதைக்குள் படம்பிடிக்கிறார் சமீஹ். சுவர்க்கடிகாரம் பலஸ்தீனரின் இதயமாக உருமாறுகிறது. நகரம், சூழல், பாதை, வீடு எல்லாம் அழிக்கப்பட்டபின்னும் நம்பிக்கையை மட்டும் எதிரியால் அழித்திட முடியவில்லை. உடல்களைக்கூட அழித்தனர். 'ஆயினும் கடிகாரம் தொடர்ந்தும் டிக் டிக் என்று ஓடிக்கொண்டே இருந்தது' என்று கவிதை முடிகிற இடத்தில் போரின் அத்தனை கோரங்களையும் உடைத்துக்கொண்டு கேட்கிறது இதயத்தின் டிக் டிக் டிக் நம்பிக்கையின் சப்தம். மாற்று மொழிக்கவிதை

நெடுங்கவிதை

முல்லை முஸ்ரிபா முன்னீடு:
நுழைவாயிலில் ஒரு பிஞ்சுப்பாதம் முளைக்கிறது

வலது கை விரலிடுக்குகளில்
விதையிட்டெழுந்த பென்சில்
பாடசாலை நுழைவாயிலில் ஒரு
பிஞ்சுப்பாதமாய் முளைக்கிறது
எழுத்தின் வழித்தடத்தில்
பரவுகிறது
ஒரு பறவையின்
இறகென நினைவுகள்
வெளுறிய சட்டை சாம்பலப்பிய
ஒட்டுப் போட்ட கால் சட்டை
தேய்ந்த செருப்பின்
இளங்காலடி
யூரியா பேக்கில் ஒரு
புத்தகப்பை நிறைய
சுமையுமொரு சுவையேந்தி
அலையுமொரு பறவையின்
இறகு
நான்
ஐந்து தசாப்தம் பாடசாலை
நுழைவாயிலில்
முதிரும் காலடித் தடம்
பாடசாலையொரு தர்மவிதிப்
புத்தகம்
பதின்மூன்று பக்கத்தில்
அடிக்குறிப்பெழுதும்
கூர்முனைப் பேனா
இது
பாடசாலையொரு
பெரும் புத்தகம்
மனப்பையில் நிரப்பி நடந்த
கால்களின் வழித்தடத்தில் வழிந்
ததென் வியர்வைத் துளி;
கண்ணீர்த் துளி; ரத்தத்தின் துளி
யெனக் காலம்
பாடசாலையொரு புத்தகம்
விரிக்கத்தொடங்கினேன்
பக்கங்களின் அரிச்சுவடியாய்
என் காலடிகள்
என் கனவுகள்
என் மூச்சுக்காற்று
முழுதும் பரவிய இறகுத்துண்
டென அடரும் காற்று நான்

அவையடங்கல்:
இறகுத் துண்டென
அலையும் காற்று நான்
இறகுத் துண்டெனினும்
சிறகின் பாதி
பறத்தலின் மீதி
ஒரு சிறு பறவை
எஞ்சியிருக்கும்
சிறகுகளால் உந்தும் பறவை
பாடசாலைத் தோப்பெங்கும்
அலையும் பறவையின் நினைவு
களில் தொங்குகிறது
ஐந்து தசாப்தக் காலம்
காலத்தின் கதையை
பாடசாலை தர்ம விதிப்
புத்தகத்தில் வாசிக்கலாம்
வாருங்கள்

அரிச்சுவடி:
பாடசாலையென்பது
பக்கங்கள் முடியா நெடும்
புத்தகம்
தர்மத்தின் விதிகளால்
எழுதப்பட்ட மகா புத்தகம்
அரிச்சுவடியாலான
சுவடிக்கூடம்
அட்ஷரங்களாலான
பெரும் வனம்
பாடசாலையென்பதொரு
புத்தகம் தான்
பாடசாலை அன்பின் புத்தகம்
அறிவின் புத்தகம் ஆற்றலின்
புத்தகம் பண்பாட்டின் புத்தகம்
பாடசாலையென்பது
மனப்பாங்கின் புத்தகம்
மனப்பக்குவத்தின் புத்தகம்
பாடசாலையென்பது
தலைமுறையின் புத்தகம்
தலைவியின் புத்தகம்
பாடசாலையென்பது தர்ம
விதிப் புத்தகம்

தொடரும்...

வாசிப்பின் குறியீடும் குறியீட்டு வாசிப்பும்

குறியீடு இலக்கியப்படைப்பாக்கத்தின் முக்கிய உத்தியாக அல்லது படைப்பு முறையாக வளர்ந்த நிலையை தமிழ் படைப்பு வெளியிலும் காணுகிறோம். கவிதைகளில் மட்டுமன்றி காவியங்களிலும்,கதைகளிலும்,நாடகங்களிலும் என் குறியீட்டுக் கையாட்சி பெருகி நிற்கிறது. இந்தப்பின்னணியில் வாசிப்பாளர் குறியீட்டு வாசிப்பு முறைமையொன்றுக்குள் வசப்படும் தேவை நமது வாசிப்புப்பரப்பில் மேலெழுகிறது. படைப்பாளனின் குறியீட்டு அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுதல் அல்லது தேடிக் கண்டடைதல் என்பது வாசிப்பனுபவத்தில் வெளிப்பட வேண்டும். இங்கு வாசக நிலை குறியீட்டு அர்த்தத்தை இரண்டு நிலையில் புரியவேண்டி உள்ளது.

1. வாசித்து செல்லும் போது படைப்பாளி உள் நிறுத்திய குறியீட்டு அர்த்தத்தைப் புரிந்து கொண்டு அதன் வழி வாசிப்பைச் செலுத்துதல்.
2. வாசகன் தன் வாசிப்பனுபவத்தின் வழி புதிய குறியீட்டைத்தானாக நிறுவுதல்.

இங்கு வாசிப்பு பொறிமுறையின் போது குறியீட்டை முன்வைத்து வாசிப்பதும், வாசிப்பின் வழி புதிய குறியீட்டைக் கண்டடைவதும் சாத்தியமாகிறது.

இந்தவாறு படைப்பாளியின் குறியீட்டு நிலையோடு ஒத்தும், வேறுபட்டும் வாசகக் குறியீட்டு அர்த்தம் செயற்படுவதால் "வாசிப்பின் குறியீடும் குறியீட்டு வாசிப்பும்" வாசிப்புத்தளத்தில் பெறுமானம் பெறுகிறது.

இந்தத்தொடரில் மஹாகவியின் பாநாடகம் 'கோடை' அணுகப்படுகிறது.

கோடை ஈழத்தில் ஆங்கில ஆட்சிக் காலத்தில் நிலவிய கிராமிய சமுதாய மனோபாவத்தின் வெளிப்பாடு.

ஏகாதிபத்தியவாதிகளின் காலனித்துவத்தின் கீழ் மனித வாழ்வில் அவர்தம் மனோபாவத்தில் எத்தகைய பாதிப்புகளை தோற்றுவிக்கும் என்பதன் யதார்த்தச் சித்திரம் கோடை.

கோடை என்கிற தலைப்பே ஒரு குறியீடு. மஹாகவியே சொல்லுகிறார். 'இதுவோ கடுங்கோடை வெயிலினால் அல்ல வெளியார் அரசாட்சி செய்யும் கொடுமைச்

சிறப்பே இந்தக்குறியீட்டைக்கொண்டு கோடையை வாசிப்புச்செய்யும் போது ஒரு காலத்து யாழ்ப்பாண கிராமிய வாழ்வில் கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, ஆன்மீகம், பழக்கவழக்கம், சமூக அந்தஸ்து, மனநிலை என்பனவற்றில் ஏற்பட்ட வரட்சியை கோடையை உணரமுடிகிறது.

மேலும் கோடையூடாக ஏகாதிபத்திய பிடிக்கு எதிரான உணர்வைத்தூண்டுவதே மஹாகவியின் நோக்கமென்பதனை நாடக வாசிப்பு உணர்த்துகிறது.

இந்த எதிர்ப்பு நிலை சாதாரண நாயனகாரர் வீடொன்றின் ஒருநாள் நிகழ்வுகளூடாக கட்டமைகிறது.

கோடையின் பாத்திர அசைவியக்கங்களும் குறியீட்டுத்தன்மை கொண்டதே யாகும். செல்லமும்,முருகப்பும் ஆங்கில மோகத்தின் மொத்த உருவங்கள் என்றால் மாணிக்கம், பஞ்சையரும், தமிழ்ப்பண்பாட்டின் ஞாபகச் சின்னங்கள்.கமலியும்,சோமுவும் விடுதலையின் குறியீடாக அமைகின்றன.

கோடையை வாசிப்புச்செய்யும் போது வெளிப்படும் சம்பவங்கள், கதையாடல்கள், நிகழ்வுகளூடே குறியீட்டைச் செலுத்த வேண்டிய தேவை வாசகனுக்குண்டு. இதற்கான எடுத்துக்காட்டுகள் பலவற்றைக் கோடையில் காணலாம்.

கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா

அரண்மனை வாழ்வில் ஊறியிருந்த மண்டேலாவுக்கு தன் குடும்பத்தினரின் நினைவுகள் வருவது அரிதாகவே இருந்தன. அவ்வப்போது அம்மாவும் சகோதரிகளும் அரண்மனைக்கு வந்து செல்வார்கள். அவர்களுடன் உற்சாகத்துடன் பேசி மகிழ்வான் மண்டேலா. அவர்களின் வாழ்க்கைத் தரம் இவனுடையதை விட பல மடங்கு கீழ் நிலையில் இருந்ததை அவன் உணரவில்லை. அரண்மனை வசதிகள் மண்டேலாவை ஒரு வித மயக்கத்தில் ஆழ்த்தியிருந்தன. மாலை நேரங்களில் அரண்மனைக்கு ஜோங்கிந்தாபா அரசரின் நண்பர்கள், ஊர்ப் பெரியவர்கள் வந்து அரசருடன் பொழுதைக் கழித்து விட்டு செல்வது வழக்கம். குழு விவாதங்ககள், பட்டிமன்றங்கள் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெறும். மண்டேலாவும் காது கொடுத்து சுவாரஸ்யமாக கேட்டு கொண்டிருப்பான். பெரும்பாலும் அவனுக்குப் புரியாது. ஆனால் புரியக் கூடிய விடயங்கள் சுவையாக இருந்தன. சோஸா மக்களின் வரலாறு, வெள்ளைக்காரனின் அட்டூழியங்கள், பண்டைய ஆபிரிக்க வீரர்களின் கதைகள் போன்ற பல ஆச்சரியமான விடயங்களை தெரிந்து கொண்டான். “தெம்பு, போண்டா, சோஸா, ஜூலு என அத்தனை மக்களும் ஒற்றுமையாக சகோதரர் போல் வாழ்ந்து வந்தனர். அனைவரின் தந்தையும் ஒருவரே. எனவே அனைவரும் உறவினர்கள்.

இந்த ஒற்றுமையைக் குலைத்தவன் வெள்ளைக்காரன். அவன் வன்முறையைப் பிரயோகித்து, குழு மோதல்களைத் தூண்டி ஆபிரிக்கர்களைப் பிரித்து விட்டான்” என்ற வரலாற்று உண்மையைக் கேட்ட மண்டேலாவின் இரத்தம் கொதித்தது. அவனை அறியாமலேயே கை முஷ்டிகளை இறுக்கி பற்களை நறும்பினான்.

இதிலிருந்து சிறுவயதிலிருந்தே அவனுக்கு நாட்டுப்பற்று இரத்தத்தில் ஊறியிருந்தது என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது. (விளையும் பயிரை முளையிலேயே தெரியும் என்பதற்கு இவன் ஒரு சான்று)நாட்டுப்பற்றுடனே அவன் வளரத் தொடங்கினான். அவனுக்கு பதினாறு வயதாகிவிட்டது.

கோஸா மக்களின் வழக்கப்படி ஓர் ஆண்மகனுக்கு பதினாறு வயதானதும் தூய்மைப்படுத்தும்

தொடர் 04

சடங்கு அதாவது விருத்த சேதனம் செய்யவேண்டும். அந்த சடங்கு நடைபெற்ற பிறகே ஒரு வன் இளைஞனாகிறான்.

தொடரும்...

கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

கலைஞன் "உபாலி" எஸ். செல்வசேகரன்

எஸ். செல்வசேகரனின் 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி தினம் 28.12.2023...!

இறப்பு: டிசம்பர் 28, 2012, அகவை: 64 கொழும்பு. இவர் கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட புகழ் பெற்ற மேடை, வானொலி, திரைப்பட நடிகர் எஸ். செல்வசேகரன். அகில இலங்கை புகழ் பெற்ற "கோமாளிகள்" நாடகத் தொடரில் சிங்கள மொழியில் பேசும் 'உபாலி' பாத்திரத்தில் நடித்து புகழ் பெற்றதை அடுத்து "உபாலி செல்வசேகரன்" எனவும் அழைக்கப்பட்டார். நகைச்சுவையோடு குணசித்திர பாத்திரங்களிலும் திறமையாக நடித்தவர் இவர்.

பாணந்துறையில் பிறந்தவர். இவர் வானொலி, மேடை, திரைப்பட நடிகராவார். இவரது பெற்றோர்: முத்தையா, அந்தோனியம்மா. தந்தை பானந்துறையில் ஒரு உடுப்புத் தைக்கும் கடை வைத்திருந்தார். பின்னர் கொட்டாஞ்சேனைக்குக் குடிபெயர்ந்தார்கள். கொழும்பு கொச்சிக்கடை சென் பெனடிக்ட் கல்லூரியில் கல்வி பயின்றார் செல்வசேகரன். இலங்கை வானொலியின் வர்த்தக சேவையில் எஸ். ராம்தாசின் "கோமாளிகள் கும்மாளம்' தொடரிலும், எஸ். எஸ். கணேச பிள்ளையின் 'இரை தேடும் பறவைகள்' தொடரிலும் கே. எஸ். பாலச்சந்திரனின் 'கிராமத்துக் கனவுகள்' தொடரிலும் முக்கிய பாத்திரங்களில் நடித்தார். ரூபவாஹினியில் 'எதிர்பாராதது' முதலிய தொலைக்காட்சி நாடகங்களில் நடித்தார். கோமாளிகள், ஏமாளிகள், நாடு போற்ற வாழ்க போன்ற இலங்கைத் திரைப்படங்களில் நடித்தார். நடிகர் வி. பி. கணேசனுக்கு புதிய காற்று, நான் உங்கள் தோழன், நாடு போற்ற வாழ்க போன்ற படங்களில் பின்னணிக் குரல் கொடுத்தவர் இவரே. இதனால் இவர் நாடு போற்ற வாழ்க படத்தில் நடித்தபோது இவருக்கு எஸ். என். தனரத்தினம் குரல் கொடுக்க நேர்ந்தது. புஞ்சி சுரங்கனாவ, மச்சான், மாபா, சூரிய ஹரன ஆகிய சிங்களத் திரைப்படங்களிலும் இவர் நடித்திருக்கிறார். 'புஞ்சி சுரங்கனாவி' என்ற படத்தில் நடித்ததற்காக இவருக்கு சிறந்த துணை நடிகருக்கான விருதும் வழங்கப்பட்டது.

கே. எம். வாசகரின் 'சுமதி', எஸ். ராம்தாசின் 'காதல் ஜாக்கிரதை', 'கலாட்டாக் காதல்' உட்பட பல மேடை நாடகங்களில் நடித்திருந்தார். மரிக்கார் ராம்தாஸ், பி.எச்.அப்துல் ஹமீத், கமலினி செல்வராஜா, சிலோன் மனோகர், வி.பி.கணேசன், கணேச பிள்ளை,

எஸ். பாலச்சந்திரன், பரீனாலை, சில்லையூர் செல்வராஜா மற்றும் சிங்கள சினிமாவின் உச்ச நட்சத்திரங்கள் என அனைத்து கலைஞர்களுடன் கலைப் பங்களிப்பு நல்கியவர் செல்வசேகரன். "கோபாலின் புன்னகைப்பந்தல்"என்ற நகைச்சுவை துணுக்குகள் கொண்ட வானொலித் தொடரில் இவரது நகைச்சுவை ஒலிநயம் ஜனரஞ்சகமானது. இலங்கையில் வெற்றியுடன் ஓடி சாதனை படைத்த "கோமாளிகள்"படத்தில் ஹிட்லர் மீசையுடன் அமைந்த இவரது ஒப்பனை அருமை. தமிழ் பேசும் சிங்களவராக "உபாலி"என்ற பாத்திரம் இவருக்கு நல்ல வரவேற்பைப் பெற்றுத் தந்தது.

எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

நகைச்சுவை நடிகர் எஸ்.வி. சேகர்

நகைச்சுவை நடிகர் எஸ்.வி. சேகர் நாடக நடிகர், திரைப்பட நடிகர், இயக்குநர், அரசியல்வாதி என பலமுகம் கொண்டவர். ஒரு ஒலிப்பதிவாளராகத்தான் [Sound Engineer] தன் வாழ்க்கையைத் தொடங்கினார். அதற்குப்பிறகு நாடக மேடையில் அ.தி.மு.கவின் சார்பில் தேர்ந் தெடுக்கப் பட்டிருக்கிறார், பின்பு அக்கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.

இவருடைய நாடக வசனங்கள் நகைச்சுவைக்காக அறியப்பட்டாலும், அவற்றில் தொனிக்கும் நெருடலான இரட்டை அர்த்தங்களுக்காக விமர்சிக்கப்படுவதும் உண்டு. 1974 இல் முதல் இவர் தன்னுடைய கலைப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

சினிமாவில், விஜயா வாகினி, 'லெப்'பில், 50 ரூபாய் சம்பளத்தில் வாழ்க்கையை துவங்கியவர். ரோஜா படத்தில், வெள்ளைப் பணியாரம் கேட்டு நடித்தார். அவர் அந்தக் காலத்து அவ்வை சண்முகி; நிறைய நாடகங்களில், பெண் வேடங்களில் நடித்துள்ளார். அதன்பின் நாடகங்களை இயக்கினார்.

எஸ்.வி. சங்கரன். சோவின், விவேகா பைன் ஆர்ட்ஸில், மேடை இயக்குனர். அம்மா, அலமேலு வெங்கட்ராமன். பள்ளி ஆசிரியர் மகள். அந்த காலத்து, எஸ்.எஸ்.எல்.சி., அவருக்கு தெரிந்த ஆங்கில வார்த்தைகள் கூட நமக்குத் தெரியாது. ஒரு தங்கை, கணவருடன் துபாயில் இருக்கிறார். தம்பிகள் ராஜா, எஸ்.வி.கிருஷ்ணமூர்த்தி. சேகருக்கு 10 வயதில் துப்பறியும் சாம்பு நாடகத்தில் நடிக்கவும், 11 வயதில் போட்டோ எடுக்கவும், 12 வயதில் ஸ்கூட்டர் ஓட்டவும் கற்றுக்கொடுத்தார்.

13ம் வயதில் மேஜர் சுந்தர்ராஜனின் கே சரா சரா நாடகத்தில் ஸ்பெஷல் ஒலியமைப்பு செய்ய அனுமதித்தார். வாழ்க்கையில் படிப்பைவிட ஒழுக்கம் முக்கியம் என்பதை வலியுறுத்தியவர். 1968இல் கற்பகம் கலா மந்திர் என்ற நாடகக் கம்பெனியைத் தொடங்கினார். இவரது தந்தை வெங்கட்ராமன். இக்கம்பெனி நடத்தும் நாடகங்களில் ‘ஸ்டேஜ்’ உதவியாளராக சேகர் பணிபுரிந்தார். அப்போது அப்பாவிடமிருந்து புகைப்பட கலையையும் கற்றுத் தேர்ந்தார். இந்த சமயத்தில் இவரது தந்தை இலங்கை வானொலியின் வர்த்தக சேவையின் சென்னை கிளைக்குப் பொறுப்பாளராக இருந்தார். மூன்று மணி நேரம் ஓடும் திரைப்படத்தை வானொலியில் ஒரு மணி நேரம் ஒலிபரப்பக் கூடிய விதத்தில் “ஒலிச்சித்திரம்” ஆக்கி அனுப்புவது இந்த நிறுவனத்தின் முக்கிய வேலை. இந்த முக்கியமான பணியை அப்பாவிடமிருந்து பெற்று இவர் செய்து வந்தார்.

அவ்வாறு இவர் செய்த முதல் படம் எம்.ஜி.ஆர். நடித்த ‘நம்நாடு’. 3 மணி நேரம் திரையில் ஓடுவதை அதன் விறுவிறுப்பு குறையாமல் ஒரு மணி நேர ஒலிச்சித்திரமாக்கினார் சேகர்.

அடியெடுத்து வைத்தார்.

சட்டநாதபுரம் வெங்கட்ராமன் சேகர் அல்லது எஸ். வி. சேகர் (பிறப்பு: 26 டிசம்பர் 1950) தமிழ்நாட்டைச் சேர்ந்த மேடை நாடக மற்றும் திரைப்பட நடிகர் ஆவார். 2006 தமிழ்நாடு மாநில சட்டமன்றத் தேர்தலில், மைலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக

இலண்டனில் வித்தியாலக்சுமி வயலின் பள்ளியின் மார்கழி உற்சவம்

இலண்டனில் கடந்த 22 டிசம்பர் 2023 இல் வயலின் ஆசிரியை ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கத்தின் மாணவர்களால் வருடாந்த இசை ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வானது " அருணோதயமே " என்ற வர்ணத்துடனும் விநாயகர் கிருத்தியுடனும் இனிதே ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து வந்தே மீனாட்சி, ரம்ய நர்த்தனா", ஜதீஸ்வரம் , வர்ணம் , தில்லானா என மாணவர்களின் வாசிப்பால் மண்டபமே மகிழ்வில் திளைத்திருந்தது. நின்னுக்கோரி, பாதிமம் பார்வதி, காக்கைச் சிறகினிலே, ஒளி படைத்த கண்ணினை போன்ற பல பாடல்களை மாணவர்கள் அதி அற்புதமாக வாசித்து அவையோரின் பலத்த கரகோசத்தைப் பெற்றனர்.

இந் நிகழ்விற்கு பக்கவாத்திய இசைக் கலைஞர்களான சதீஸ் கௌண்தமால் மிருதங்கமும், தயாபரன் தனபாலன் கடமும் , ஜெயகீர்த்தன் ஜெயதேவன் கஞ்சீராவும் , சர்ஜுன் சிற்பரன் சுரத்தட்டு இசையையும், சேயோன் சிவலீலன் புல்லாங்குழல் இசையினையும் வழங்கி மேலும் மெருகேற்றியிருந்தனர்.

நிறைவாக பஞ்சரத்தினம் இடம் பெற்றது. இதில் ஸ்ரீமதி திலகசக்தி ஆராமுதனின் மாணவர்கள் வாய்ப்பாட்டினையும் , ஜெசிக்கா நித்தியானந்தா வீணை இசையினையும் ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கத்தின் மாணவர்கள் வயலின் இசையினையும் இணைந்து வழங்கியிருந்தனர். அதுமட்டுமன்றி ஆசிரியர்களான திலகசத்தி ஆராமுதன், சிவதர்சிகாவும் வாய்ப்பாட்டில் இணைந்திருந்தனர். வித்தியால ஆசிரியை ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கத்தின் புதல்வன் சைந்தவன், புதல்வி லக்ஷிமியும் இணைந்து வயலின் இசையை வழங்கியிருந்தனர். மேடை நிறைந்த இசைக் கலைஞர் கண்ணுக்கும் காதுக்கும் இனிய விருந்தினை வழங்கி பஞ்சரத்தினத்தில் நனைய வைத்தனர்.

ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கம் அவர்களின் அன்பான இனிமையான கனிவு நிறைந்த பயிற்றுவிப்பை இந்நிகழ்வில் நன்கு உணரமுடிந்தது. வித்தியாலக்ஷ்மி என்ற பெயருக்கேற்றாற் போல வயலின் இசையில் மாணவர்கள் வித்தையைக் காட்டி அவையோரை அகங் குளிர வைத்தனர். வருடந்தோறும் நடைபெற்று வரும் மார்கழி உற்சவமானது வருடங்கள் ஏற ஏற மேலும் மேலும் மெருகேறி நல்லதொரு தரமான நிகழ்வாக மிளிர்ந்து கொண்டே செல்வதில் பள்ளியின் ஆசிரியைக்கு மட்டுமன்றி கணவர் சத்தியலிங்கத்திற்கும் பெரும் பங்கு உண்டு என்பதை அறியமுடிந்தது. வருட நிறைவில் நல்லொதொரு இசையால் மனம் நிறைந்து வித்தியாலக்ஷ்மி பள்ளி மேலும் மேன்மையுற இறைவனை வேண்டுகிறேன்.

அகல்யா நித்தியலிங்கம்

இப்பத்திரிகை அஸோஸியேட்ட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.